# இந்து நாகரிகம்

( RESOURCE BOOK -HINDU CIVILIZATION GRADE-12 )

## தரம் - 12

## வளநூல்

(2018 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

(Draft Copy)


**சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,**

**மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,**

**தேசிய கல்வி நிறுவகம்,**

**மகரகம.**


(வளநூல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தேவை கருதியே இணையத்தளத்தில் பதிவிட்டுள்ளோம். இது முழுமையாக பூரணமாக்கப்படாத நூல் என்பதை கவனத்தில்கொள்ளவும்)

# இந்து நாகரிகம்

## தரம் - 12

## வளநூல்

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2018

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய வளநூல்கள் நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வளநூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வளநூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய வளநூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய வளநூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், வளநூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி . திருமதி . ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வளநூல்கள் வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ் வளநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது வளநூல்கள் பயன்படுத்துவதற்குரிவை. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள வளநூல்கள் ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான வளநூல் என்பதை அறிந்து பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ் வளநூல் அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**வண கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளநூலைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.

தேசிய கல்வி நிறுவக இந்து சமயத் துறையின் ஊடாக தரம் - 12 இந்து நாகரிக புதியபாடத்திட்டத்திற்கான முதல் முறையாக வளநூல் ஒன்றைப் பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

பாடசாலைகளில் சமய பாடம் கலைத்துறைப் பாடமாகக் கொள்ளப்பட்டாலும், வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுக்கும் விடயங்கள் பல அதில் உள்ளன. அதனாற் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாத் துறையினரும் இந்து நாகரிக பாடத்தைக் கற்க முன்வர வேண்டும். இதற்கு இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களின், கற்கும் மாணவர்களின் அர்ப்பண சிந்தனை, முயற்சி என்பன தேவை. அவ்வகையில் இப்பாடத்தை மாணவர் விருப்புடன் பயிலக்கூடியதாக ஆசிரியரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படு கின்றது. இப்பாடம் பரீட்சைக்குரியது மட்டுமன்றி முழுவாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இவ் வளநூல் அமைகின்றது. இவை யாவும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவையான வழிகாட்டலை வழங்குகின்றன. எனவே, ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைக்கும் ஏற்றதான கற்றல் - செயற்பாட்டை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பூரண உரிமை உண்டு.

இவ் வளநூல் வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரிவதுடன், கற்றல் செயற்பாடுகள், ஆய்வுகள் என்பவற்றுக்கும் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் என்பவற்றின் விருத்திக்கும் இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.

**திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும் :** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு :**

- **கலாநிதி . திருமதி . ஜயந்தி குணசேகர**
  பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

- **வண. கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
  பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
  மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
  தேசிய கல்வி நிறுவகம்,

**இணைப்பாக்கம் :** **திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை :**

- **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**
  (ஓய்வு) தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

- **பேராசிரியர். பி. கோபாலகிருஷ்ண ஐயர்,**
  வாழ்நாள் பேராசிரியர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **பேராசிரியர். எம்.வேதநாதன்**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **திருமதி. சாந்தி கேசவன்,**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

- **திருமதி நாச்சியார் செல்வநாயகம்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு), இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**
  கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

- **கலாநிதி (திருமதி) எஸ். ஸ்ரீமுரளிதரன்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **கலாநிதி (திருமதி) வி. பவநேசன்.**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **திரு.எஸ். முகுந்தன்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **திரு. எஸ். ரமணராஜா,**
  விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.

- **திரு. என். சுபராஜ்,**
  விரிவுரையாளர், இந்துநாகரிகம்,
  தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

- **திரு.என். வாமன்,**
  விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம்.

## எழுத்தாளர் குழு

**உள்வாரி** : - **திரு. பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**வெளிவாரி** - **திரு. பெ. பேரின்பராசா**
ஓய்வுபெற்ற ஆசிரியர், மட்டக்களப்பு.

- **திருமதி எம். சண்முகதாஸ்,**
ஆசிரியர், தி/ இ.கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருகோணமலை

- **திரு. எஸ். கமலநாதன்**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு மேற்கு.

- **திருமதி. கௌசல்யா காந்தரூபன்**
ஆசிரியர், யாழ்/சண்டிலிப்பாய் இநதுக் கல்லூரி,
யாழ்பாணம்.

- **திருமதி . எம். பேரருள்செல்வி**
ஆசிரியர், மத்/ஹட்/ஏன்பீல்ட் தமிழ் மகா வித்தியாலயம்,
டிக்கோயா, ஹட்டன்.

. - **திரு. எஸ். கோபிநாத்,**
ஆசிரியர், தி/கந்/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்,
கந்தளாய்.

- **திருமதி . ஆர்.ருஷாந்தன்**
ஆசிரியர், கொ/ பாமன்கடை இராமகிருஷ்ணா வித்தியாலயம்
கொழும்பு-06

- **திருமதி . எம். சிவகுமாரன்**
ஆசிரியர், கல்/ வாகரை தமிழ் மகா வித்தியாலயம், வாகரை
.

**கணனி வடிவமைப்பு** - **திரு. பொன் ஜெயரூபன்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**அட்டைப்படம்** - திரு. சதுர மதுசங்க

**காரியாலய உதவி** - திருமதி எஸ்.சி.பிரியதர்சனி
- திருமதி மங்கலிகா விஜயரதன
- திரு..டயஸ் அமரசிங்க

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள்

# 1.0 : இந்து நாகரிகம், இந்துப் பண்பாடு

இந்துப் பண்பாடும் நாகரிகமும் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குப் பழைமை வாய்ந்தவையாகும். இதன் பழமைக்குச் சிந்துவெளி நாகரிகம் சான்றாகிறது. இப்பண்பாடும் நாகரிகமும் இன்றுவரையில் இந்து மக்கள் ஒருமைப்பாட்டுடனும் ஒற்றுமை உணர்வுடனும் வாழ்வதற்கு வழிவகுப்பனவாக விளங்குகின்றன. உலகிலுள்ள பல்வேறு மக்களின் அருமை பெருமைகளையும் சிறப்புக்களையும் அளவிட்டு எடைபோட்டுப் பார்ப்பதற்கு இரண்டு அளவைகளை வைத்துள்ளனர். அவற்றில் ஒன்று **பண்பாடு** (Culture) மற்றது **நாகரிகம்.** (Civilization)

## பண்பாடு

பண்பாடு என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தும் ஒரு சொல். இது **'Culture'** என ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. இவ்வாங்கிலச் சொல்லுக்குச் சமமானதாகவே**'பண்பாடு'** எனும் தமிழ்ச் சொல் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலே உருவானது. இதனை தமிழுக்குத் தந்தவர் **'ரசிகமணி. D.K.சிதம்பரநாதன்'** அவர்கள். ஆனாலும் பண்பாடு என்பது தமிழுக்குப் புதிய சொல்லன்று. இது தொன்று தொட்டு வழங்கிவரும் சொல். இதனை சங்க இலக்கியங்கள் "சால்பு" என்ற பதத்தால் சுட்டுகின்றன. மேலும், பண்பு, பண்புடைமை, சான்றாண்மை முதலிய சொற்களாலும் பண்பாடு என்பது தமிழர் மரபில் சுட்டப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது. இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பொருள்களைக் குறித்தாலும், பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது.

**"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்"**–(கலித்தொகை),

**"பண்புடையார் பட்டுண்டு உலகம்"**– (திருக்குறள்)

என வருவதாற் காணலாம்.

**'Culture'**எனும் ஆங்கிலச் சொல்லில் வரும் **'cult'** என்பது வழிபாடு என்றும் அருத்தப்படும். இதன்படி வழிபாடே பண்பாட்டின் மூலம் என்பர். மற்றுமொரு வகையில்,'culture' என்ற ஆங்கிலச் சொல் **'Cultura Agri'** என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது என்பர். இதன் அருத்தம் **"நிலத்தைப் பண்படுத்தல்"** என்பதாகும். இதன்படி பண்பாடு என்பது **"மனதையும் மக்களையும் பண்படுத்துவது"**எனக் கொள்ளலாம்.

**'பண்பாடு'** எனும் தமிழ்ச் சொல் அமைந்திருக்கும் முறையின்படி நோக்கினால்,**"பண்"** என்ற வினையடியையும் **"பாடு"** என்ற தொழிற்பெயர் விகுதியையும் கொண்டு உருவான சொல்லே இது. "பண்ணு"– என்பது செய்தல் என்பதைக் குறிக்கும். இவ்வழி,**"குறித்த ஓர் இனமோ சமுதாயமோ தனது அறிவாலும் அனுபவத்தாலும் சிந்தனைத் திறத்தாலும் தனக்கென வகுத்துப் பேணிவரும் செயற்பாடே பண்பாடு"** எனலாம்.

**'Agriculture'**என்ற ஆங்கிலப் பதத்தின் ஊடாக உருவான ஒரு சொல்லே culture/பண்பாடு. அதாவது,மண்ணைப் பண்படுத்தல் விவசாயம் எனப்படுவது போல் மனிதனைப் பண்படுத்துவது பண்பாடு. மண்ணை விவசாயத்துக்கு ஏற்றதாகப் பண்படுத்தல் போன்று வாழ்வியலுக்கு மனிதனைப் பண்படுத்துவது பண்பாடு எனவும் கூறப்படுகிறது.

## நாகரிகம்

நாகரிகம் என்பது ஆங்கிலத்தில் **'Civilization'** எனப்படுகிறது. இது **'Civitas'**எனும் இலத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது. இது **"நகரம்"** எனும் பொருள் கொண்டது. இச்சொல் civil(civilis),city(civitas), citizen(civis) போன்ற சொற்களுடன் தொடர்பு கொண்டது. இதன்படி நாகரிகம் என்பது நகரத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

**'நாகரிகம்'** எனும் தமிழ்ச் சொல், நகர்+அகம் எனப் பகுத்துப் பொருள் கொள்ளத்தக்கது. இதன்படி,**"நகரத்தோடு தொடர்புடையது"** எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அதன்படி,நாகரிகம் என்பது **"நகர மக்களின் திருந்திய வாழ்க்கை"**எனப்படுகிறது.
நகரிகம் என்ற சொல் **'நகரம்'** என்ற சொல்லின் திரிபு. நகர் + அகம் = நகரம் என்றும் நகரிகம் என்றும் நாகரிகம் எனவும் திரிபடைந்து வந்ததாக அறிஞர் பாவாணர் குறிப்பிட்டுள்ளார். இவரின் கருத்துப்படி, எல்லா நாட்டிலும் மாந்தர் முதன்முதலில் நகர நிலையிலேயே நாகரிகம் அடைந்துள்ளனர். இதனால், நகரப் பெயரில் இருந்து நாகரிகப் பெயர் தோன்றியுள்ளது என்கிறார்.

நாகரிகம் என்பது தமிழுக்குப் புதிய சொல்லன்று. இது ஏறக்குறைய 2000 ஆண்டுகள் பழைமையுடையது. சங்க இலக்கியமான நற்றிணையில் **'நாகரிகம்'** எனும் சொல் காணப்படுகின்றது. இதனை,**"முன்னை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் கனி நாகரிகர்"**என வருவதால் அறியலாம். இக்கருத்தினை பின் வந்த வள்ளுவரும்,**"பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுவர்"** (குறள்-580) என நாகரிகம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.

**பண்பாடு என்பது யாது?**

பண்பாடு என்பது குறித்த இனம் அல்லது சமுதாயம் தனக்கென வகுத்துப் பேணிவரும் செயற்பாடு. இதனடிப்படையில் இதன் பரிணாம வளர்ச்சியாக; சமயநெறி, தத்துவநோக்கு, அழகியல் உணர்வு, குறிக்கோள் என்ற பலவும் வெளித் தோன்றுகின்றன. இவற்றை அவதானிப்போர் குறித்த இனமோ சமுதாயமோ உயர்ந்த பண்பாடு உடையது என்ற முடிவுக்கு வருகின்றனர்.

பண்பாடு என்பது மனிதனின் அக உணர்வு வளர்ச்சியின் சீர்மையைக் குறிக்கிறது. அதாவது, மனிதன் தன் சிந்தனை அறிவுத் திறத்தாலும் உள் உணர்வுத் திறத்தாலும் உள்ளத்தைப் பண்படுத்தி, அன்புடையவன், அருள் உடையவன், இரக்கம் உடையவன், வீரம் உடையவன், மனம் உடையவன், ஊக்கம் உடையவன், மரியாதை உடையவன், பிறர் நலம் பேணுபவன், பணிவுடையவன் எனப் பெயர் எடுப்பது என்பன இதிலடங்கும் அதாவது, அகத் தோற்றப்பாட்டின் பண்பினை உணர்த்தும் செயற்பாடுகள் அனைத்தும் பண்பாட்டின் பாற்பட்டவை. இவை மனித உள்ளுணர்வால் புரிந்து கொள்ளத்தக்கனவன்றி, காட்சியாகக் காணத்தக்கன அன்று. பிறிதொரு வகையில், பண்பாடு என்பது சமய நிகழ்ச்சிகள், ஆசாரங்கள் சாதனைகள் என்பவற்றிலிருந்து தோன்றியதாகக் கருத முடியும். இந்துசமய வரலாற்றிலும் பண்பாட்டு வரலாறே ஏனைய வரலாறுகளையும்விட மேலோங்கி நிற்பதனைக் காணலாம். பண்பாடு என்பதனை விளங்கிக் கொள்ள பொதுவாக மூன்று மூலகங்கள் துணைபுரிகின்றன. அவை,

- பெறுமானம் (எண்ணங்கள்) –வாழ்வில் முக்கியமானது எது என்பது பற்றிய எண்ணங்களே பெறுமானம். அவை பண்பாட்டின் ஏனைய அம்சங்களை வழி நடத்துகின்றன.
- நெறிமுறைகள் - வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இது. ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவும் இப்பொது வழக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளன.
- பொருள் - பண்பாட்டின் "பெறுமானம்","நெறிமுறை" என்பவற்றில் இருந்து இது பெறப்படுகிறது.என்பன.

பண்பாடு என்பது யாது? என்பது தொடர்பில் திட்டமான வரைவிலக்கணத்தை முன்வைப்பது கடினம். மாறும் நிலையுடைய மனிதனை அடிப்படையாகக் கொண்டது பண்பாடு என்பதால், திட்டமான வரைவிலக்கணத்தை முன்வைப்பதில் சிக்கல் நிலவுகிறது. ஆயினும் அறிஞர் பெருமக்கள் தம் அறிவு நிலைக்கு ஏற்ப பண்பாடு என்பதற்குப் பல வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் பண்பாடு எனும் எண்ணக்கருவை நாம் ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

- சமூக அறிஞர்களின் (Social Scientists) கருத்துப்படி,"பண்பாடு என்பது வாழ்க்கை முறை" (way of life)
- S.வையாபுரிப்பிள்ளை –culture என்பது ஆங்கிலத்தில் இரண்டு பொருள்களில் வழங்கப்படுகிறது. என்றார் ஒன்று
  மக்களின் ஆதி வரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன வெளிப்படுத்தும் அறிவு நிலை. மற்றயது Culture என்பது ஒரு பொதுப் பொருள். மக்களின் அறிவு நலம், கருத்து நலம், குண நலம், ஒழுக்க நலம் முதலியன மென்மேலும் திருந்துகின்ற நிலை.
- E.P. Tylor–குறித்த ஓர் இனமக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், நடத்தைகள் என்பவற்றை உள்ளடக்கியதே பண்பாடு.
- Malinowsky– பண்பாடு என்பது ஓர் இனத்தின் பாரம்பரியமான பயன்பாட்டுக் கருவிகள், பொருள்கள், தொழில்நுட்பத் திறன்கள் என்பவற்றின் கூட்டு மொத்தமே ஆகும். இது மக்களால் ஆக்கப்பட்ட கருவி எனக் குறிப்பிடுகிறார்.
- வள்ளுவர் - பிறர் மேல் அன்புடைமை, உலகத்தோடு இணைந்த குடியிலே பிறத்தல் ஆகிய இவ்விரண்டும் ஒத்து வருதலே பண்புடைமை என உலகத்தார் சொல்லுவர் என்கிறார்.

  **"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
  **பண்புடைமை என்னும் வழக்கு"** (குறள்-)

- தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் - "பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாடே பண்பாடு ஆகும்."என்றார்.
- எட்வாட் பர்னாட் டைலர் - "பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்க வழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுதியாகும்." என்கிறார்.

இவற்றின் அடிப்படையில் பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்று அறியப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றது. அகத் தோற்றப்பாட்டின் பண்பினை வளர்க்கும் செயற்பாடுகள் அனைத்தும் பண்பாடு எனும் எண்ணக்கருக்குள்ளேயே அடங்குகின்றன எனலாம்.

## நாகரிகம் என்பது யாது?

நாகரிகம் என்பது மாந்தனது புறத் தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறித்து நிற்கும். அதாவது, மனிதன் தன் அறிவுத் திறத்தாலும் ஆற்றலாலும் உள்ளுணர்வுத் திறத்தாலும் பேணி வளர்த்து வரும் சுவையான உணவு, அழகான உடை, வசதியான உறையுள், வாய்ப்பான போக்குவரத்து சாதனங்கள்,வளம் மிகுந்த நாடு, நலம் மிகுந்த நகரங்கள், கல்விச் சாலைகள், கலைக் கூடங்கள், வனப்பான பூஞ்சோலைகள், விளையாட்டு, இசை, நாடகம், கூத்து, நாட்டியம் ஓவியம், சிற்பம் போன்ற கலையம்சங்கள் முதலியவைகள் எல்லாம் மனிதனது புறத்தோற்றப்பாட்டுக் கொள்கையைக் குறித்து நிற்கும். இவை நாகரிகத்தின் பாற்பட்டவை. இவ்வாறான நாகரிகக் கூறுகளை நாம் கண்ணால் காண முடியும். தொட்டு உணரமுடியும்.

நாகரிகம் என்பது **"நகரத்தோடு இணைந்தது"** என்ற அடிப்படையில், பண்பாட்டு அம்சங்களுடனான உணவு, உடை, வீடு என்பவற்றை வசதியோடும் அழகுணர்வோடும் ஆக்கிப் பயன்படுத்தல், நகர அமைப்பைத் தேவைக்கு ஏற்பவும் சுவை உணர்வுக்குப் பொருத்தமாகவும் அமைத்தல், பிறரோடு நல்ல முறையில் பழகுதல், உள்ளத்தோடு உடலையும் தூய்மையாக வைத்திருத்தல், சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளல்,போக்குவரத்துக்கான ஊர்திகளை அமைத்தல், பொருளாதாரம். அரசியல் நீதி நிருவாகச் செயற்பாடுகளை செம்மையாக அமைத்துக் கொள்ளல் எனப் பல்வேறு விடயங்கள் நாகரிகத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன.

**நாகரிகம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்.**

- டாக்டர் இராதாகிருஷ்ணன் - நாகரிகம் என்பது "ஒரு நாட்டின் விழுமியக் கருத்துக்களை வழிவழியாகப் பேணிப் பாதுகாக்கும் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெற்றதே ஆகும்" என்றார்.
- ஆடம் /பெர்கூஸன் (Adam Ferguson) An Essay on the History of Civil Society (1767) – நாகரிகம் என்றால்,"தனிமனிதன் குழந்தைப் பருவத்திலிருந்து மனிதத் தன்மை உடையவனாக வளர்ச்சி அடைவது மட்டுமல்லாது, மனித இனமே முரட்டுத்தனத்திலிருந்து பண்பாட்டுக்கு முன்னேறுவது ஆகும்." என்றார்.
- ஆல்பர்ட் ஸ்விட்சர் (Albert Schweitzer) –"நாகரிகம் என்பது எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் எந்தச் செயல்கள் மனித ஆன்மாவைச் செம்மைப்படுத்துகின்றனவோ அவற்றின் ஒட்டு மொத்த முன்னேற்றம் ஆகும்." என்றார்.

## பண்பாடும் நாகரிகமும் ஒப்பீடு

அகவயமாகத் திகழும் பண்பாட்டையும் புறத் தோற்றப்பாடான நாகரிகத்தையும் அறிஞர் பலர் இரண்டும் ஒன்று எனவும் சிலர் வேறானது என்றும் பார்க்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இவ்விரு அம்சங்களையும் ஒன்றாக நோக்கும் அறிஞர்கள், அக வளர்ச்சியின் வெளிப்பாடாகப் புற வளர்ச்சி அமைவது போல பண்பாட்டின் வளர்ச்சி நாகரிகம் என்கின்றனர். இதனால் இவ்விரு அம்சங்களையும் ஒன்றென நோக்க வேண்டியுள்ளது. ஆனாலும் உண்மையில் இவை இரண்டும் ஒற்றுமையில் வேற்றுமை கொண்ட இரு எண்ணக்கருக்கள் என்றே கூறவேண்டும். இவ்விரண்டும் ஒன்றில் ஒன்று தொடர்பு கொண்டவையாயினும் வேற்றுமையும் உள. இது நுணுகி ஆராயும் போது நன்கு புலப்படும்.

| பண்பாடு | நாகரிகம் |
|---|---|
| • குறித்த நாட்டவர் நாகரிகத்தைத் தேர்ந்தெடுப்பது பண்பாடு. | • நாகரிகம் நாட்டுக்கு நாடு வேறுபடும். (உ-ம் : சிந்துவெளி,எகிப்து, கிரேக்கம்). |
| • இயங்கிக் கொண்டிருக்கும் சமூகத்தை மாற்றியமைப்பது பண்பாடு. | • சமூகத்தை இயக்குவது. |
| • பண்பாடு மெதுவாக வளரும். | • வேகமாக வளரும் தன்மையது |
| • பண்பாட்டின் முதிர்ச்சி நிலையே நாகரிகம். | • பண்பாட்டைத் தொடர்வது நாகரிகம் |
| • பண்பாட்டை இலகுவாக பின்பற்றவோ கடைப்பிடிக்கவோ முடியாது. | • நாகரிகத்தை இலகுவாகப் பின்பற்றலாம், கடைப்பிடிக்கலாம் |
| • மனிதரின் அகவய நடத்தையே பண்பாடு. | • மனிதரின் வெளிப்புற நடத்தையே நாகரிகம். |
| • செயலுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு பயனுக்கு முதன்மை அளிக்காது. | • விளைவுப் பயனை நோக்காகக் கொண்டது. |
| • பண்பாடு மனிதனைச் செதுக்கும். | • நாகரிகம் மனதைச் செதுக்கும். |
| • மனிதனுக்கு நாகரிகத்தையும் விட பண்பாடு இன்றியமையாதது. | • நாகரிகம் இல்லாமலும் மனிதனால் வாழ இயலும். |

## 1.2 உலக நாகரிகங்களில் இந்து நாகரிகம்

இந்துப்பண்பாட்டின் ஆரம்ப நிலையை அவதானிக்கும் போது உலகின் பழைமையான நாகரிகங்களில் இந்துமத அடையாளம் இருந்தமைக்கான பல சான்றாதாரங்களை அறிய முடிகின்றது. பாபிலோனியா நாகரிக காலத்தில் பாபிலோனியாவிற்கு மேற்கே காணப்பட்ட பகுதிகளில் ஆரிய மதக் கொள்கையும் சமஸ்கிருத மொழியும் இருந்தமைக்கான சான்றுகள் கூறப்பட்டுள்ளன. பாபிலோனியா நாகரிகம் மீது படையெடுத்த அரசர் வரிசையில் பாரசீகத்தினை ஆட்சி செய்த சைறஸ் என்பதை விபுலானந்தர் தனது “மேற்றிசைச் செல்வம்” என்னும் நூல் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு பாரசீக நாட்டிற்கும் பாபிலோனியா பிரதேசத்திற்கும் இடையில் இரண்டரை யோசனை தூரம் உள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார். பாபிலோனியாவில் வாழ்ந்த மக்கள் வேல, வேல் என்றழைக்கப்படும் தெய்வமொன்றை வழிபட்டதாக அறிய முடிகின்றது. அத்தோடு சூரிய வழிபாடும் பாபிலோனியா மக்களிடம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பாபிலோனியாவில் சின், ஷாமஸ், உல் என்னும் திரிமூர்த்திக் கொள்கை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளதோடு திரிமூர்த்திகளுக்கான கோயில்களும் காணப்படுகின்றன. சிவன் என்னும் பெயர் பாபிலோனியா மக்களால் பயன்படுத்தப்பட்டது. ஒருவருடத்தின் மூன்றாம் மாதம் சிவன் என அழைக்கப்பட்டது. தற்போதைய இந்து பஞ்சாங்க முறைப்படி மூன்றாம் மாதம் பங்குனி என்றும், இந்து தெய்வமாகிய சிவபெருமானுக்குரிய நட்சத்திரமாக பங்குனி உத்தரம் விளங்குவதும் கவனிக்கத்தக்கது. அங்கு வழிபடப்பட்ட திரிமூர்த்திக் கடவுளுக்குரிய வருணனைகளை குறிப்பிடும் போது இளம்பிறைச் சந்திரனை தலையில் சூடியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழிபாடு சிவவழிபாட்டுடன் தொடர்புபட்டதாக அமைகின்றது.

கிரேக்க யவன நாகரிகத்திற்கும் இந்திய நாகரிகத்திற்கும் இடையில் மொழியியல் ரீதியான, பண்பாடு ரீதியான தொடர்பு இருப்பது ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பாபிலோனியா நாகரிகமானது இந்து தெய்வ வழிபாட்டின் மூலாதாரங்களை உடையதாக இருக்க பாரசீக நாகரிகமும் இன்றைய இந்துப் பண்பாட்டிற்கான நினைவுச் சின்னங்களை உடையதாக விளங்குகின்றது என “மஜாம்தார்” குறிப்பிட்டுள்ளார். பாரசீகம் என்பது சின்னாசியா எனக் குறிப்பிடப்பட்டு வட இந்தியாவின் மேற்குப் பகுதியைக் குறிப்பிடுவது என கூறப்பட்டுள்ளது. ஆரிய கலாசாரத்தினது வைதீக நெறியினது தோற்றுவாயாகவும் மூலாதாரமாகவும் பாரசீக நாகரிகம் விளங்குகின்றது.

மேற்படி பாபிலோனிய பாரசீக நாகரிகக் கருத்துக்கள் இந்திய நாகரிகத்துடன் தொடர்பு பட்டிருப்பதனை நோக்க முடிகின்றது. அதனால் உலக நாகரிக வரலாற்றில் இந்திய நாகரிகமும் முதன்மை பெறுகின்றது. இந்திய நாகரிகத்தின் ஆரம்ப கட்டமைப்பு சிந்து கங்கைச் சமவெளியுடன் தொடர்புடையது. இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன் சிந்து கங்கைச் சமவெளி நாகரிகங்கள் செல்வாக்கு பெற்றிருந்தன. வேதநெறி இந்தியாவில் பரவி வைதீக மார்க்கமாகப் பரவுமுன்பே இந்து நாகரிக மரபு பரவி இருந்தமை அறியப்பட்டது. சிவ வழிபாட்டிற்கும் அம்மன் வழிபாட்டிற்குமான மூலங்களை இங்கு காண முடியும் தொல்பொருட் சின்னங்களைக் கொண்டு இந்துப் பண்பாடு பற்றிய விடயங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்திய நாகரிகம் சிந்துவெளி தொல்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றாலும் தொடர்ந்து இலங்கை தென்கிழக்காசியா மக்களிடையேயும் இந்துப்பண்பாடு பரவும் நிலையை ஏற்படுத்தியது.

இந்திய நாட்டைப் பொறுத்தவரை சிந்து வெளி நாகரிகம் வேத நாகரிகம், புராண இதிகாச கதை மரபுகள், வடஇந்திய வரலாறு, மத்திய இந்திய வரலாறு, தென்னிந்திய வரலாறு தென்னிந்தியாவில் கர்நாடகம், ஆந்திரா, கேரளா தமிழ்நாடு என விரிவு பட்டதாக இந்து நாகரிகத்தின் பல்பரிணாம வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்நாட்டு வரலாற்றை அவதானிக்கும் போது சங்க கால தமிழக நாகரிகம் சமஸ்கிருத தமிழ் கலாசாரக் கலப்புக்கள் அதற்கான இலக்கியச் சான்றுகள் என்பவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வட இந்திய ஆட்சியாளர் காலத்தில் தோன்றிய கோவில்கள் கல்வெட்டுக்கள் நாணயங்கள், சின்னங்கள், உருவங்கள் என்பவை இந்திய நாகரிகத்தின் பழைமையைப் பின்பற்றுவனவாக உள்ளன.

இந்து நாகரிக **கூடுகள்** சங்ககாலம் தொடக்கம் இலங்கைப் பண்பாட்டுடன் தொடர்பு பட்டிருப்பதும் அறிய முடிகின்றது. பௌத்தம் இலங்கையில் வருகை தந்ததைத் தொடர்ந்து இந்தியத் தொடர்புகள் வலுவடைந்தன. இலங்கைப் பூர்வீகக் குடிகள் மீது இந்திய நாகரிக தொடர்புகள் வளர்ச்சியடைந்தன. இலங்கையின் பொலநறுவைக் காலம் தமிழக தொடர்புக்காலம் இலங்கை 9ஆம் மண்டலமாகவும் ஜனநாத மங்கலம் என்னும் பெயருடனும் விளங்கியது.

சோழராட்சியிலே இலங்கை மட்டுமல்லாது தென்கிழக்காசிய நாகரிகங்களிலும் இந்துப் பண்பாட்டுப் பரவலை அவதானிக்க முடிகின்றது. அதன் மூலமாக இந்து பௌத்த பண்பாட்டுக் கலப்பு மேம்பட்டது. சிவ - புத்த வழிபாடும் முதன்மையடைந்தது. கட்டட சிற்பங்களில் இந்து பௌத்த உறவுகள் விரிவடைந்தன. தென்கிழக்காசியாவில் மலேசியா, கம்போடியா, பர்மா, தாய்லாந்து, யாவா, சுமத்திரா, போர்ணியோ முதலிய தீவுகளில் இந்துப் பண்பாடு பரவியமையை அவதானிக்கலாம்.

அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாகரிகம் குடியேற்ற வாதமாகப் பரவலாயிற்று. அவ்வேளையில் ஐரோப்பிய நாடுகளுக்கும் இலங்கை இந்திய நாடுகளுக்குமிடையில் பண்பாட்டுத் தொடர்புகள் விரிவடைந்தன. கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக பொருளாதர அபிவிருத்திக் கால கட்டத்தை அடியொற்றி மேலை நாடுகளில் இந்திய இலங்கை கலாச்சாரப் பரவல் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

மக்கள் இனங்கள் கலாசாரங்கள், மதங்கள் என்பவற்றின் சேர்க்கையும் இணைப்பு பண்பாடு, நாகரிக வளர்ச்சியை புலப்படுத்தும் கண்ணாடிகளாக விளங்குகின்றன. அண்மைக்காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் உலக மயமாதல் என்பவற்றுக்கான அடிப்படையும் மனித விழுமியங்கள் பற்றிய சிந்தனையும் வளர்ச்சியடைந்து வந்திருப்பதனை அவதானிக்கலாம்.

1893இல் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ மகாநாட்டில் கலந்து கொண்டதைத் தொடாந்தும் அமெரிக்க மக்களை சகோதர சகோதரிகளே என விழித்து அழைத்ததைத் தொடர்ந்தும் மேலை நாட்டவருக்கு இந்துப் பண்பாட்டை அறியும் ஆர்வம் ஏற்பட்டது. 1895ல் இலண்டன் மாநகரில் சுவாமி விவேகானந்தர் ஞானயோக பிரசங்கங்களை மேற்கொண்டார். இதனாலும் மேலைத்தேய மக்களிடம் இந்து சமயப் பண்பாடு பற்றிய விளக்கம் ஏற்படத் தொடங்கியது.

யோகமார்க்கம் பற்றிய உபதேசங்களே மேலைநாட்டவரால் விரும்பப்பட்டது. இதன் மூலம் மேலை நாட்டவர்கள் இந்து சமயநெறிக்கு யோகமார்க்கம், வாழும்கலை மார்க்கம், தியான மார்க்கம் எனப் புதிய விளக்கம் கொடுத்தனர். மக்ஸ்முல்லர் இதனை முதன்மைப்படுத்தினார். போல் டியுசன் என்பவர் உலக வேதாந்த மரபைப் பரப்புவதற்குப் பணிசெய்தார். ஜீ.யு.போப் அவர்கள் சைவசித்தாந்த தத்துவத்தைப் பரப்புவதில் பங்களிப்புச் செய்தனர்.

1950களுக்குப் பிற்பட்ட காலத்தில் தென்னாசிய நாடுகளின் உள்நாட்டுப் போர் காரணமாக இலங்கையர் இந்தியர்கள் மேற்கு நாடுகளுக்குக் குடிபெயரும் நிலை ஏற்பட்டது. இதனால் மேலை நாடுகளில் வழிபாட்டுத் தலங்களை அமைக்கும் முயற்சிகள் இடம் பெற்றன. பல்லின கலாசாரத்தில் இந்து மதப் பண்பாடுகளின் சிறப்புப் பற்றிய விடயம் பரவலாயிற்று. ஆத்மீக விடயங்களில் காழ்ப்புணர்வைக் கைவிட்டு நல்ல விடயங்களில் கவனம் செலுத்தும் நிலை ஏற்பட்டது.

கனடா பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி முதலிய நாடுகளில் இந்துக் கோவில்கள், இந்து கிரியைகள் செல்வாக்கு பெறும் நிலை ஏற்பட்டது. இந்திய இலங்கை நாடுகளைப் போலவே திருக்கோவில் வழிபாடுகள் திருக்கோயில் பூசை முறைகளும் விருத்தியடைந்தன.

கனடா நாட்டில் கந்தபுராண கலாசாரம் செல்வாக்குப் பெறுகின்றது. இலங்கை, இந்திய சமய அறிஞர்கள் கந்த புராண கலாசாரத்தைப் புராண படனம் மூலம் பரப்பி வருகின்றனர். ரொறன்ரோ, மொன்றியல் முதலிய நாகரிக வளர்ச்சி கண்ட நகரங்களிலும் இந்து நாகரிக அம்சங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. வடஅமெரிக்கா வரை மேலைத்தேய கலாசாரங்களில் இந்துப் பண்பாடு வளர்ச்சி பெற்றுள்ளது.

# 1.3 இந்து நாகரிகத்தின் மூலங்கள்

## சிந்துவெளிக் காலம்

உலகின் பல பாகங்களிலும் பல்வேறு நதிக்கரை நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. அவ்வாறு தோன்றிய ஏனைய நதிக்கரை நாகரிகங்களுக்கு ஒப்பான சிறப்புடையதாக சிந்துவெளி நாகரிகமும் அமைகின்றது. இந்து நாகரிகம் கி.மு. 3250 தொடக்கம் கி.மு. 2750 வரையான காலப் பகுதியில் சிறப்புடன் விளங்கி இருக்கலாம் என்பதை ஆய்வாளர்கள் துணிகின்றனர். சிந்துவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்து சமய நம்பிக்கைகளைக் கடைப் பிடித்தனர் என்பது வரலாற்று ஆதாரங்கள் தரும் உண்மை. இந்துசமயம் இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழைமை உடையதெனக் கொள்ள இடமுண்டு.

சிந்து நதி பாயும் பகுதி 1922 தொடக்கம் 1930 வரையான காலத்தில் சேர். ஜோன் மார்ஷலின் தலைமையில் அலெக்ஸ்சாண்டர், கன்னிங்காம், வில்லியம் ஜோன்ஸ் முதலான புதைபொருளாய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அவர்களால் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பல நகர அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்திலும், மொகஞ்சதாரோ பாகிஸ்தானிலும் உள்ளன. அந்நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்கள், கற்சிலைகள், இலிங்க வடிவங்கள், களிமண் பொம்மைகள், சித்திர வடிவ எழுத்துக்கள் முதலிய புதைபொருட்களைக் கொண்டு சிந்து வெளி மக்களின் சமயநிலை, வாழ்க்கை முறை என்பனவற்றை அறிய முடியும்.

## சமய நிலை

சிந்துவெளிப் பிரதேச புதைபொருட்கள் இந்து சமயச் சார்புடையனவாகவே உள்ளன. இப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட் சின்னங்கள் வாயிலாக இம்மக்கள் இந்துத் தெய்வங்களை வழிபட்டனர் என்பதை அறியமுடிகின்றது. சைவத்தின் பரம்பொருளாகிய சிவனை அக்கால மக்கள் முக்கியமான தெய்வமாக வழிபட்டனர். முத்திரைகள், இலிங்க வடிவங்கள் என்பன அக்கால சிவ வழிபாட்டை அறிய உதவுகின்றன. முத்திரை ஒன்றில் யோக நிலையில் அமர்ந்த ஒரு வடிவம் காணப்படுகிறது. இவ் வடிவம் தலை மீது வளைந்த கொம்புகள், இடுப்பில் இரட்டைப் பட்டையாக அரைக்கச்சை என்ற அங்க இலட்சணங்களுடன் காட்சியளிக்கிறது. யோகி வடிவத்தின் கீழ்ப் புறத்தில் யானை, புலி, எருது, காண்டாமிருகம் போன்ற அம்சங்களைக் காணலாம். அவ்வடிவத்தினை சேர். ஜோன் மார்ஷல் போன்றவர்கள் சிவ வடிவத்துடன் இனங்காண்கின்றனர்.

தற்காலச் சக்தி வழிபாட்டுடன் இனங்காணத்தக்கதாக சிந்து வெளி மக்களிடையே நிலவிய தரைப்பெண் வழிபாடு அமைகிறது. ஒரு பெண்ணின் கருப்பையில் இருந்து செடி ஒன்று முளைப்பது போன்று பொறிக்கப்பட்டுள்ள முத்திரையை இதற்கு ஆதாரமாகக் காட்டுவர். உற்பத்திக்குக் காரணமான பூமாதேவியை (பூமியை) இம்மக்கள் தாயாக வழிபட்டனர் எனக் கொள்வர். ஆய்வாளர்கள் இத்தெய்வத்தை தரைப்பெண் வழிபாடு அல்லது தாய்த் தெய்வ வழிபாடு என்று குறிப்பிட்டுள்ளனர்.

சுடுமண் தாயத்தொன்றில் முக்காலி ஒன்றின்மேல் பாற் கிண்ணம் காணப்படுகின்றது. அருகில் பாம்பு தனது படத்தை விரித்தபடி உள்ளது. இன்றும் எமது சமயத்தில் நாகத்திற்கு பால், பழம் படைத்து வழிபடும் மரபு இருந்து வருகின்றது. சில முத்திரைகளில் மரங்களும், அம்மரங்களில் உறையும் பெண் தேவதைகளின் வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு முத்திரையில் மரங்களுக்கு இடையில் பெண் உருவம் காணப்பட அதன் கீழ் ஒரு பெண் அவ்வடிவத்தினை வழிபடும் வகையில் காட்சியளிக்கின்றது. எனவே அம்மக்கள் விருட்சங்களை அல்லது அவற்றில் உறையும் தெய்வங்களை வழிபட்டிருக்க வேண்டும் என்று கொள்வர்.

சூரிய வழிபாட்டுடன் தொடர்புடைய ஆதாரங்களும் சிந்துவெளிப் பகுதியில் காணப்படுகின்றன. இன்றைய இந்து மதத்தில் காணப்படும் வழிபாடுகளுக்கு ஒப்பான சமயச் சடங்குகள் அக்கால மக்களிடையே நிலவியதை உணரலாம். உயரமான கோயில்களை அமைத்த சுமேரிய மக்களோடு வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்த சிந்துவெளி மக்கள், நிலையான கோவில்களை அமைத்திருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. இப்பிரதேசத்தில் கோவில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படும் இடம் இதுவரை அகழ்வாய்வு செய்யப்படவில்லை. இங்குள்ள செய்குளத்திற்கருகே எட்டு அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வெட்டு அறைகளும் மேலே ஏறுவதற்குப் படிக்கட்டுக்களைக் கொண்டுள்ளன.

கட்டிடத்தின் அமைப்பை அவதானித்த ஆய்வாளர்கள் இங்கு வாழ்ந்தவர்கள் சைவசமயச் சார்புடையவர்களாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதுவர். முத்திரைகளில் இறைவனின் முன் ஆட்டைப் பிடித்திருப்பதனைப் போலவும், ஒரு பெண் மண்டியிட்ட வண்ணம் இருக்க, ஒருவன் வாளை ஓங்குவது போலவும் காணப்படுவது. இம்மக்களிடையே பலியிடுதல் முக்கியமான சடங்காக இடம்பெற்றமைக்குரிய சான்றாக அமைகிறது. இன்றைய இந்து சமயத்தில் நிலவும் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடையதாகவுள்ள நிவேதன வழிபாட்டினை வெளிப்படுத்தும் ஆதாரங்களையும் காணமுடிகின்றது. முத்திரையொன்றில் பெண்கள் படைக்கும் தட்டுக்களை ஏந்தியவாறு காணப்படுகின்றனர். பூசைத் தட்டுகள் கிடைக்கப் பெற்றமையினைக் கொண்டு, தெய்வங்களுக்கு பூசைப் பொருட்களை நிவேதனமாகப் படைத்து வழிபட்டிருக்க வேண்டுமெனக் கருதுவர். முத்திரைகளில் உள்ள எழுத்து வடிவங்கள் "பசுபதி" என்னும் பெயரைச் சுட்டுவதாக சேர் ஜோன் மார்சல் குறிப்பிட்டுள்ளார்.

**நுண்கலைகள்**

சிந்துவெளிப் பிரதேசத்தில் கலைகளின் வளர்ச்சியை காணமுடிகின்றது. மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடத்துக் கட்டடங்களும் அக்காலக் கட்டடக்கலையின் வளர்ச்சியை அறிவதற்கு உதவுகின்றன. இப்பிரதேசத்தில் மாளிகை போன்ற கட்டட அமைப்புகள், களஞ்சிய அறை, நீராடுகின்ற குளம், மாடி வீடுகள், வீடுகள் என்று பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கட்டடம் ஒன்று 242 அடி நீளமும் 112 அடி அகலமும் கொண்டதாக உள்ளது. மழை நீருக்குத் தாக்குப் பிடிக்கும் வண்ணம் வெளிப்புறச் சுவர்களுக்குச் சுட்ட செங்கற்களைப் பயன்படுத்தியுள்ளனர். உட்புறச்சுவர்களுக்கு சூளையிடப்படாத செங்கற்களைப் பயன்படுத்தியுள்ளனர். அடுக்கு மாடிவீடுகளுக்கு அதன் பாரத்தைத் தாங்கும் வகையில் நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

மொஹஞ்சதரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு சிற்ப வடிவங்களும் அக்கால சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவன. சிந்துவெளிக் காலம் சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவதாக ஆய்வாளர் பலர் கருதுவர். சேர். ஜோன். மார்ஷல் 'இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது' என்று கூறுவதனையும் காணலாம். சிந்துவெளி மக்கள் சிற்பங்களுக்கு வெண்கலம், பழுப்பு நிறக் கற்கள், சுண்ணக் கற்கள் முதலியவற்றினை மூலப்பொருள்களாகப் பயன்படுத்தினர். சிந்துவெளி பிரதேசத்தில் வெளிப்படுத்தப்பட்ட சிற்பங்களுள் வெண்கலத்தினாலான நடனமாதின் வடிவம், ஆடவர் வடிவங்கள் போன்றவற்றைக் கூறலாம். வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ள நடன மாதின் வடிவம் வழுவழுப்பாகவும் ஒழுங்கான நடனத்திற்குத் தோற்றுவாய் ஆகலாம்' என்று மா. இராசமாணிக்கனார் கருதுகின்றார்.

துளைகளை உடையதாகக் காணப்பட்ட ஊதுகுழல் வாசிக்கும் நிலையில் இருந்ததாக அறிஞர் மாக்கே குறிப்பிடுகிறார். இங்கு கிடைக்கப் பெற்ற மட்பாண்டங்கள் மீது பாம்புகள், மீன்கள், வட்டங்கள்,சதுரங்கள், இலைகள் என்று பல உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. மட்பாண்டங்களில் காணப்படும் வடிவங்கள் அக்கால ஓவியக்கலை பற்றி அறிய உதவுகின்றன. முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள மிருதங்கம், தவில் போன்ற சான்றுகள் அக்கால இசைக் கலை பற்றி அறிய உதவுவன.

## வாழ்க்கை முறை

சிந்துவெளிப் பிரதேச மக்கள் நாகரிகம் உடைய வாழ்க்கையை வாழ்ந்தமைக்குக் குறித்த பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபொருட் சின்னங்களே சான்றாக அமைகின்றன. சிந்து வெளிப் பிரதேச மக்களின் முக்கியமான தொழிலாக வாணிபமே காணப்பட்டது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகள், மட்பாண்டங்கள், கருவிகள் போன்றவை சுமேரியா, மொசப்பதேமியா, எகிப்து முதலிய நாடுகளில் கிடைக்கப் பெறுகின்றமையைக் கொண்டு சிந்துவெளி மக்கள் மேற்கூறிய நாட்டு மக்களுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருந்தனர் எனக் கொள்வதற்கு இடமுண்டு. கப்பல் கட்டுதல், தச்சுத் தொழில், சிற்பத் தொழில், கைவினைத் தொழில் என்பன போன்ற தொழில்களிலும் அம்மக்கள் ஈடுபட்டனர். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மதகுருவின் ஆடையில் பூவேலைப்பாட்டுடன் கூடிய சித்திரத்தைக் காணமுடிகின்றது. ஆண்கள் மேலாடைகளை அணியும் அளவிற்கு அக்கால மக்கள் நாகரிகமுடையவர்களாக வாழ்ந்தனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது. மிகப் பெரிய நகர அமைப்பையும் பாதுகாப்பான சுற்றாடலையும் உடைய நாகரிக வாழ்வையும் பின்பற்றினர். நெருக்கமான வீட்டு அமைப்பால் ஒருமைப்பாடான சமூக அமைப்பு வெளிக்காட்டப்படுகிறது.

# தொல்லியற் சின்னங்கள்

பண்பாட்டு அம்சங்கள் சமுதாய வாழ்வியலுடன் நெருக்கமான தொடர்புடையவை. பண்பாட்டு அம்சங்களாக சமயம், கலை, வாழ்வியல், கிரியை, இலக்கியம், அரசு, இறைநம்பிக்கை ஆகியன அமையும் மேற்படி பண்பாட்டு அம்சங்கள் இந்து நாகரிக வரலாற்றினை உறுதிப்படுத்தும் சான்றுகளாக விளங்குகின்றன. வரலாற்று மூலங்களை உறுதிப்படுத்தக்கூடிய வரலாற்று மூலங்களாகவும், ஊகமான பண்பாட்டுக் கூறுகளையும் அண்மைக் காலத்திலே விஞ்ஞான பூர்வமானதாக அவதானிக்கும் முறையியலையும் காணலாம். வரண்முறையான விஞ்ஞானம் என்னும் நிலையில் இக்கொள்கை முன்வைக்கப்படுகின்றது.

தொல்பொருள் சான்றுகள் இந்துப் பண்பாட்டின் வரலாற்றுத் தடயங்களை அறிவதற்கான மூலச்சான்றுகளாக உள்ளன. தொல்பொருள் சான்றுகளை புலமையாளர்கள் வாசித்து அறியும் போது பண்பாட்டு வேர்களை அடையாளம் காணமுடியும். இந்துப் பண்பாட்டில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களையும் மரபுகளின் வளர்ச்சியையும் அறிவதற்கு இது பெரிதும் உதவுகின்றது. தொல்பொருள் சான்றுகளில் பூர்வீக கட்டடங்கள், சிற்பங்கள், சின்னங்கள், உலோக படிமங்கள், கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள், நாணயங்கள் பொறிப்புக்கள் ஆகியன உள்ளடங்கும் அழியாது காலம் காலமாக நிலைத்து நிற்கும் தொல்பொருள் சின்னங்கள் உறுதியான சான்றாதாரங்கள் என்பதில் ஐயமில்லை. தொல்பொருள் சான்றுகளில் அடங்கும் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சாசனங்கள் ஆகியன அழியாச் சான்றுகளாகவே கொள்ளப்படும். இத்தகைய தொல்பொருள் எழுத்துக்கள் ஆரம்பத்தில் இலக்கிய வடிவங்களாகவே கூறப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களில் "**ஸ்வஸ்திஸ்ரீ**" என்றும் சொல் மங்கலமுண்டாகுக என்னும் கருத்தைக் குறிப்பிடுவதாக அமைகின்றது. கல்வெட்டுக்களில் அவை எழுதப்பட்ட காலம், அதன் நோக்கம் என்பன கூறப்பட்டு அந்த நோக்கத்திற்குத் தடையாக இருப்பவர்கள் அடைந்து கொள்ளும் துன்பங்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. கல்வெட்டின் இறுதிப் பகுதியில் படைக்கிளவி எனும் வாசகப் பகுதியில் கல்வெட்டில் கூறப்பட்டவற்றுக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் அடையும் துன்பம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக திருக்கேதீச்சர திருத்தலம் பற்றிய கல்வெட்டினைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டில் பாடல் பெற்ற தலங்கள் தமது மூர்த்தி தல தீர்த்த பெருமையையும் கோவில் பண்பாடுகளையும் கல்வெட்டுக்கள் என்னும் தொல்பொருள் சான்றுகளூடாகவே எடுத்துக்காட்டுகின்றன. பல்லவர், சோழர், நாயக்கர் பண்டியர் விஜயநகரா் முதலான அரசர்களது பண்பாடுகளையும் வெளிப்படுத்தும் தனித்தனிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இந்துப் பண்பாட்டு மரபுக்கான சாசன வடிவங்களில் கூடுதலானவை கோயிற் சாசனங்களாகும். ஆலயத்திற்கு அரசர்கள் வழங்கிய ஆதரவுகளை அவை சுட்டிக் காட்டுகின்றன. ஆலய நிபந்தனைகள் ஆலய வழிபாடுகளை சுட்டிக் காட்டியால் இத்தொல் பொருட் சின்னங்கள் இந்து சமயச் சார்பானவையாக அமைந்துள்ளன. ஆலய வழிபாடுகள் ஆலய சமுதாய தொடர்புகள் என்பவை இக்கல்வெட்டுச் சான்றுகள் மூலம் வெளிப்படுகின்றன.

கல்வெட்டுப் பொறிப்புக்களைப் போலவே சின்னங்கள் பொறிப்புக்களும் இந்து நாகரிக வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கின்றன. மட்பாண்டம், ஜாடிகள் எழுத்துக்கள் பாவனைக் கருவிகள் என்பவையும் பண்பாட்டுச் சந்தர்ப்பங்களாக விளங்குகின்றன. தொல்பொருட் சின்னங்களின் அமைப்பு, வடிவம், மூலம், வெளிப்படுத்தும் கருத்து என்பவற்றைக் கொண்ட இந்துப்பண்பாட்டின் ககட்டடக்கலை வளர்ச்சியை அடையாளப் படுத்தலாம். மன்னர்களது பெருமைகளைக் கூறும் தூண்கள், ஸ்தம்பங்கள் எழுத்துக்கள் மட்டுமல்லாது சிற்ப குறியீடுகளையும் அலங்காரச் சின்னங்களையும் கொண்டுள்ளன.

தொல்பொருட்சின்னங்களில் அடங்கும் கட்டட மரபும் அதனுடன் இணைந்த அலங்கார வடிவங்களும் இந்து நாகரிகப் பண்பாட்டின் பல்வகை அடையாளங்களையும் வெளிப்படுத்து வனவாக அமைந்துள்ளன. ஒவ்வொரு அரசர் மரபினர் பின்பற்றிய தனித்துவமான கலை வடிவங்கள் தொல்பொருட் சின்னங்களூடாக வெளிப்படும் ஒவ்வொரு காலத்துக்குமான கலை வடிவங்களை நிருணயிப்பதில் தொல்பொருட் சின்னங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன. சிந்துவெளிப் பிரதேசத்தில் அகழ்வாய்வு செய்யப்பட்ட கட்டடங்கள் இந்தியக் கட்டடக் கலைக்கு ஆதாரமானவை. பெருமண்டபம், வீட்டு அறைகள், நீராடும் சாலைகள், வீதிகள் முதலியன கட்டடக்கலைக்கான ஆதாரங்களாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வடஇந்தியாவின் கோவில் கட்டிடங்கள் அக்கால கோவில் அமையும் சூழலை விபரிப்பதுடன், நாகர்பாணியிலான மழை நீர்த்தேக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்கான உயர் கூம்பு வடிவினதாக காணப்படுகின்றது. மலைப் பாங்கான பகுதியில் நாற்சதுரமான தளத்தை உடையதான கட்டடங்களும் சமநிலப் பரப்பிலே வட்ட வடிவமான கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையை காணமுடிகின்றன. கோவிலின் அடிப்பாகம் வட்ட வடிவமாக அமைந்து காணப்படும் தூபி வேடர்பாணிக் கலையாகும். தமிழ் நாட்டில் திராவிடமாணிக்க கலைவடிவக் கோவில்கள் இந்துக் கோவில் கலாசாரத்தின் தொல்பொருள் எச்சங்களாக விளங்குகின்றன.

தொல்பொருள் பொறிப்புகளில் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட நாணயங்கள் பிரதான ஆதாரங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை காசுகள் எனவும் குறிப்பிடுவர் நாணயப்படங்கள், நாணய எழுத்துக்கள், நாணயங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலம் என்பவை இந்து நாகரிக மரபின் உறுதியான வரலாற்றுத் தரவுகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

நாணயங்களைப் போலவே சிற்பங்கள் விக்கிரகங்கள் முதலியனவும் சாகாவரம் பெற்ற வரலாற்று ஆவணங்களாகும். கல், மரம், உலோகம் என்பவற்றை மூலமாகக் கொண்டு இச்சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சிற்ப எழுத்துக்கள் சிற்பசித்திரங்கள் என்பன பேசும் வரலாறுகளாகவே உள்ளன. வரலாற்றுத் தடயமாக மட்டுமன்றி கலை ஆளுமை, கலைரசனை, இலக்கியத் தொடர்புகளை வெளிப்படுத்தக் கூடியவாறு தொல் சிற்ப வடிவங்கள் விளங்குகின்றன. தெய்வீக சிற்பம், ஆடல் சிற்பம், அடியார் சிற்பம் அலங்கார சிற்பம் என சிற்பக்கலை மரபு பல்வகைப் பரிணாமம் பெற்றுள்ளது எனக் கூறமுடியும். தொன்மையான சிற்பங்களே உலகளாவிய நிலையில் இந்துப்பண்பாட்டு வடிவங்களைப் பறை சாற்றுகின்றன. வெளிநாட்டவர்கள் இந்துப் பண்பாட்டில் ஆர்வம் கொள்வதில் சிற்பக்கலை பெரும்பங்கு வகிக்கின்றது.

# இந்து இலக்கியங்கள்

உலகளாவிய இலக்கியங்களிலே தெய்வீக பூர்வமானதும் இறைநம்பிக்கை சார்ந்ததும் பக்தி பூர்வமானதுமான இலக்கியங்களாக விளங்குபவை இந்து சமய இலக்கியங்களே. இந்து சமய இலக்கியங்கள் இந்தியா, இலங்கை தென்கிழக்காசியா ஆகிய நாடுகளின் மொழிகளுடன் தொடர்பானவையாகக் காணப்படுகின்றன. தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகள் பல்கலாசார, பன்மத, பல மொழிபேசும் பிரதேசங்களாகக் காணப்படுவதால் பல மொழி இலக்கியச் செல்வாக்குக்கு உட்பட்ட கலாசாரச் செல்வாக்கினை இப்பிரதேசங்களிலே அவதானிக்க முடிகின்றது.

இந்துமத மூலநூல்கள் என்னும் வகையில் நோக்கும் போது வடமொழி நூல்களும் தமிழ் நூல்களும் பெரும் பங்களிப்புச் செய்வதை அவதானிக்க முடிகின்றது. வடமொழி நூல்களிலே வேத இலக்கியங்களும் ஆகமங்களும் முதன்மை பெறுகின்றன. **“வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்”** என்பது திருமந்திரப்பாடல்வரி ஆகும். இந்துப் பண்பாட்டில் அறிவுக்கால மூலப்பிரமாணங்களாக காட்சி, கருத்து, உரை என்னும் மூன்றும் முதன்மை பெறுகின்றன. இதில் உரை என்பது ஆப்த வாக்கியத்தைக் குறிக்கும் ஆப்த வாக்கியம் என்பது சான்றோர் உரையாக விளங்கும் இந்து இலக்கியங்கள். வரலாற்று ரீதியான இலக்கியங்கள் பிரமாண நூல்கள் என்று கூறப்படும் வேதம் ஆகமம் என்பவற்றைத் தொடர்ந்து காவியம் ( இராமயணம், மகாபரதம்) (வடமொழிப்புராணம், தமிழ்ப்புராணம் தலபுராணம்) தர்மசாத்திரம், பதிகம், திருமுறைகள் திவ்ய பிரபந்தம், கன்னட, தெலுங்கு நூல்கள் நாடக இலக்கியம், சிற்றிலக்கியம் என்பவற்றுடன் பழங்கதைகள், வாய்மொழிக்கதைகள் என்பனவும் இலக்கிய வடிவங்களே. சமயம், கலை, அரசு, தத்துவம், பக்தி ஆகிய பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவனவாக இந்து சமய இலக்கியங்கள் அமைகின்றன. சிற்பசாத்திரங்கள், நாட்டிய சாத்திரம், அர்த்தசாத்திரம், இசைநூல்கள் என்பனவும் இந்துப் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கான மூலஇலக்கியங்களாக மிளிர்கின்றன. நடனம், நாடகம், அரங்கு இசை நாட்டிய கலைஞன் ஆகிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய பெரும் சாத்திரமாக பரதமுனிவரது நாட்டிய சாத்திரம் அமைகின்றது.

மூலப் பிரமாண நூல்களைத் தொடர்ந்து வழிநூல் சார்புநூல் மரபுகளும் தோற்றம் பெற்றுள்ளன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் முதல்நூல், வழிநூல், சார்புநூல், மரபைப் பின்பற்றுவன. வழிநூல், சார்பு நூல் வரிசையில் உரைநூல்கள் தலபுராணங்கள் என்பனவும் இந்துப்பண்பாட்டை விளக்கும் இலக்கிய வடிவங்களாக விளங்குகின்றன. இலங்கையின் இந்துப் பண்பாட்டம்சங்களைப் பற்றி மகாவம்சம், சூளவம்சம், தடாவம்சம் முதலிய நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

தத்துவார்த்த இலக்கியங்களின் எழுச்சி இந்து தத்துவ வரலாற்றை மேலும் எடுத்தியம்புகின்றது. உபநிடதம் பிரமசூத்திரம், பகவத்கீதை என்னும் பிரஸ்தான திரய நூல்கள் முக்கியமானவை. இதனைத் தொடர்ந்து பிரஸ்தான திரய நூல்களுக்கான உரைகளும் தோற்றம் பெற்றன. இராமனுசர் உரை ஸ்ரீபாஷியம் என அழைக்கப்பட்டது.

மேற்படி இலக்கியங்கள் இந்துப்பண்பாட்டம்சங்களின் மூலக்கருத்துக்கள். இவை மாற்றத்தையும் வளர்ச்சியையும் சுட்டிக்காட்டுவனவாக அமைந்துள்ளன. இந்து நாகரிக வளர்ச்சியை ஒப்பீட்டு நிலையில் நோக்க இவை மேலும் உதவும். வடநாட்டின் இந்துப் பண்பாட்டு நிலை, தமிழக இந்துப் பண்பாட்டு நிலை என்பவற்றுக்கு இவ்விலக்கியங்கள் சான்று பகருகின்றன. பக்தி இலக்கிய மரபு உன்னதமானது சைவப் பக்தி இலக்கியம் வைணவப் பக்கதி இலக்கியம் எனப் பக்தி இலக்கிய மரபு வளர்ச்சி பெற்றது.

வரலாற்றுக் சம்பவங்களை எடுத்துக்கூறும் தலபுராணங்களும் இந்துப்பண்பாட்டை அறிய உதவும் இலக்கிய ஆதாரங்களே இலங்கையிலும் ஸ்ரீ தஷிண கைலாச புராணம் கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசலபுராணம் ஆகியன இந்துப் பண்பாட்டின் புராதன வளர்ச்சியை சுட்டிக்காட்டுவனவாக உள்ளன.

# வேதங்கள்

இந்து இலக்கியங்களுள் வேதம், ஆகமம் என்பன முதல் நூல்கள் எனவும் பிரமாண நூல்கள் எனவும் கொள்ளப்படுகின்றன. வேதம் என்ற சொல் ஷவித்' என்னும் வினையடியிலிருந்து தோன்றியது. அது அறிவு என்னும் பொருள் தரும். அதனால் வேதங்களை அறிவு நூல் எனக் கொள்வர். வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது மேலோர் மரபு.

வேதங்களை வகுத்தவர் அல்லது தொகுத்தவர் வியாசர். வியாசர் என்பது ஒரு காரணப்பெயர். அதற்குத் தொகுப்பாசிரியர் எனப் பொருள் கொள்வர்.வரலாற்று அடிப்படையில் வேத இலக்கியங்கள் கி.மு. 1500 - கி.பி. 600 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது. வேதங்களை எழுதாமறை, எழுதாக்கிளவி, சுருதி, மறை, அபௌருசேயம், சுயம்பு, ஆம்நயம் முதலான பல பெயர் கொண்டு அழைப்பர்.

**வேதங்களின் வகை**

ஆரம்பத்தில் வேதங்கள் **"திரயீ வித்யா"** என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு, யசுர், சாமம் என்பன. பின்னர் வழக்கில் இருந்த அதர்வ வேதமும் இணைக்கப்பட்டு, நான்காகக் கூறப்பட்டன. வேதங்கள் நான்கு என்பதனால் அவை சதுர்மறை, சதுர்வேதம் என அழைக்கப்படுகின்றன. நால் வெதங்களுள் மிகவும் முக்கியத்துவம் பெறும் இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது. 101 சாகைகளைக் கொண்ட யசூர் வேதம் கிருஷ்ண யசூர், சுக்கில யசூர் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. சாம வேதம் 1549 பாடல்களைக் கொண்டுள்ளதுடன் பூர்வ ஆர்சிகம், உத்தர ஆர்சிகம் என்னும் இரு பிரிவுகளையும் கொண்டுள்ளது. அதர்வண வேதம் 20 காண்டங்களையும், 731 சூக்தங்களையும், 6000 பாடல்களையும் கொண்டுள்ளது.

நான்கு வேதங்களும் இரண்டு காண்டங்களையும் நான்கு பகுதிகளையும் உடையன. சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்பன நான்கு பகுதிகளாக உள்ளன. அவற்றுள் சங்கிதை என்பது மந்திரங்களின் தொகுப்பு. பிராமணம் என்பது வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறுகின்றது. ஆரணியகம் என்பது வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்களைக் கூறியுள்ளது. உபநிடதம் என்பது உண்மைப்பொருள் பற்றிய விசாரணைகளைக் கொண்டது. சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்டப் பகுதியைச் சார்ந்தவை. ஆரணியகம், உபநிடதம் என்பன வேதத்தின் ஞான காண்டப் பகுதியைச் சார்ந்தவை. இவை தவிர ஆரணியகம் என்ற பகுதியை உபாசனை காண்டம் என்று அழைக்கும் வழக்கமும் உள்ளது.

**வேதகால சமயநிலை**

வேத இலக்கியங்கள் அக்காலத்தில் நிலவிய சமய நிலை பற்றி அறிய உதவுகின்றன. வேத கால மக்களிடையே காணப்பட்ட இயற்கை வழிபாடு பற்றி இவை விபரிக்கின்றன. இயற்கை அம்சங்களே நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றன. வேதங்களில் கூறப்படும் 33 தெய்வங்களையும் அவை வாழும் இடங்களின் அடிப்படையில் விண்ணுலகத் தெய்வங்கள், இடையுலகத் தெய்வங்கள், மண் உலகத் தெய்வங்கள் என வகைப்படுத்துவர்.

தெய்வங்கள் வழிபடுவோருக்கு வரங்களை கொடுப்பனவாகவும் பகைவர்களை அழிப் பனவாகவும் விளங்கின என வேதங்கள் குறிப்பிட்டள்ளன. வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே பிற்கால சமய வளர்ச்சியின் தெய்வீக நம்பிக்கையில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. வேதகால மக்கள் தெய்வங்களுக்குச் செய்த வழிபாடுகள், கிரியைகள் பற்றி வேதங்கள் கூறியுள்ளன.

வேதங்களில் அஷ்வமேதம், இராஜசூயம், வாஜபேயம், புருஷமேதம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. வேள்வி வழிபாட்டில் புரோகிதன், அக்கினி பகவான், சோமன் என்போர் பிரதான இடம் வகித்தனர். வேள்விக் கிரியைகளின்போது ஓமகுண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானஸ் துதி பாடுதல், பலியிடுதல், தானம் வழங்குதல், தட்சணை வழங்குதல் முதலான கிரியைகள் இடம்பெற்றன. வேள்விகளின் பிரதான நோக்கம் உலகியல் இன்பங்களேயாகும். நீண்ட ஆயுள், போரில் வெற்றி, நோய் நீக்கம் முதலான உலகியல் இன்பங்களை அவாவி வேள்விகள் செய்யப்பட்டன. சவித்திரு எனும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய காயத்திரி மந்திர செபம், விபூதி தாரணம் பற்றியும் வேதங்களில் காணலாம்.

சுக்கில யசூர் வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களை நூறு முறைகூறி வழிபடும் சதருத்திரிய வழிபாட்டு முறையைக் கூறியுள்ளது. இது வேதகால வழிபாட்டுமுறைகளுள் இலகுவானதாக அமைவதுடன், ஒரு திருப்புமுனையாவும் அமைகிறது. இசையால் இறைவனை வழிபடும் முறை பற்றியும் வேதங்கள் கூறுகின்றன. உதாரணமாக சாம வேதம் இறை வழிபாட்டிற்குரிய இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் கிராமகேய கானம், ஆரண்ணிய கானம் எனும் இருவகைப் பாடல்கள் பற்றிக் கூறுகிறது, இருக்கு வேதம் ‘தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக’ என்று இசையால் இறைவனை வழிபடுதல் பற்றிக் கூறுகின்றது.

அதர்வண வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. பிறருக்கு தீமை தரும் மந்திரங்கள் இதில் அதிகம் காணப்படினும் வழிபடுவோனைக் குறித்து நன்மை தருவனவாய் அமைந்தன. பௌஷ்டிகாணி, ஆயுஸ்ஷானி, ஸ்திரீகர்மாணி, ராஜகர்மாணி போன்ற பகுதிகள் செல்வச் செழிப்பையும், நிறைந்த ஆயுளையும் பெண்களின் சுபீட்சம் பற்றியும், அரசனின் நன்மை பற்றியதாகவும் அமைந்தவை.

## வேதகால மக்களின் சமூகவாழ்வு

வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விபரிப்பன. தனிமனித வாழ்க்கைப் படிநிலைகளாகிய பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன தொடர்பான சிந்தனைகளை வேதங்கள் கொண்டுள்ளன. இருக்கு வேதத்தில் உள்ள பிரம்மசரிய சூக்தம், முனி சூக்தம், திருமணம் பற்றிய பாடல்கள் முதலியவற்றில் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. திருமணம், கணவன் மனைவி உறவு, குடும்ப வாழ்வு, கணவரின் கடமைகள் பற்றியும் அவை குறிப்பிட்டுள்ளன. கணவன் - மனைவி என்போரைச் சுட்டும் ‘தம்பதி’ என்னும் தொடர் இருக்கு வேதத்தில் உள்ளது. குடும்பத் தலைவனின் கடமைகளுள் முக்கியமானது வேள்விச் சடங்கினை ஆற்றுதல்.

வேத இலக்கியங்கள் ஊடாக, அக்கால சமூகக் கட்டமைப்பு, சமூகத் தொடர்புகள் என்பனவற்றை அறியலாம். ஆரம்பத்தில் நிற அல்லது இன அடிப்படையிலான இருவகைச் சமூக அமைப்பே நிலவியது. பிற்காலத்தில் வலுப்பெற்ற நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை இருக்கு வேத புருஷ சூக்தப் பாடல்களில் காணலாம். மகாபுருஷனின் உடம்பிலிருந்து நால்வருணத்தாரும் தோன்றியதாக புருஷ சூக்தப் பாடல் கூறுகிறது. இது நான்கு வருணம் தொடர்பாக சமய அங்கீகாரத்துடன் கூறப்பட்ட முதற்பதிவாக உள்ளது. நால் வருணத்தவருள் பிராமணர் சமூகத்தில் முக்கியமான நிலையில் காணப்பட்டனர். சதபதப் பிராமணம் ‘பிராமணர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்’ என்று கூறியுள்ளது. வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்பன பிராமணர்களின் முக்கிய கடமைகள் எனக் கூறப்பட்டுள்ளன.

வேத காலச் சமூக அமைப்பில் சத்திரியர்களும் முக்கியமான இடத்தை வகித்தனர். வேத கால மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். அதனை அடுத்து குழுத் தலைவர்கள் அரசர்களாக உயர்வு பெற்றனர். அரசர்கள் மாளிகையில் வசிப்பவர்களாகவும், உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிபவராகவும் காணப்பட்டனர எனக்கூறப்பட்டுள்ளது. மக்களின் நலன்களைப் பேணும் வகையில் அரசனின் ஆட்சி அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. அரசரின் மகுடாபிஷேகத்தின் போது ‘மன்னராகிய நீர் இன்று முதல் வலியோரையும் மெலியோரையும் சமமாக நடத்துவீராக’ என்று புரோகிதன் வேண்டிக் கொண்டான். அரசனுடன் தொடர்புடைய சபா, சமிதி முதலான நிறுவனங்கள் பற்றியும் வேதங்கள் கூறியுள்ளன. அரசனது அன்றாடச் செயற்பாடுகளுடன் தொடர்பு உடையனவாக இந்நிறுவனங்கள் காணப்பட்டன.

## வேதங்களில் தத்துவ சிந்தனைகள்

வேத இலக்கியங்கள் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளையும் கொண்டுள்ளன. பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம், ஒழுக்கம் தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், ஜம சூக்தம், வருண சூக்தம் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. இருக்கு வேதப பாடலில், 'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி' என்னும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாக உள்ளது. இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீயப் பாடலில் இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.

வேத இலக்கியங்களில் பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பான சிந்தனைகளையும் காணலாம். இருக்கு வேதத்தில் உள்ள யம சூக்தம், இறப்பு பற்றிய பாடல்கள் போன்ற பகுதிகளில் ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன. பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்களை இருக்கு வேதத்திலுள்ள நாஸதீய சூக்தத்தில் காண முடிகின்றது.

இருக்கு வேதத்திலுள்ள வருணன் பற்றிய பாடல்களில் வரும் வருண சூக்தம் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது. ரிதத்துக்குரிய பொறுப்புடையவன் வருணன். அதனால் ரிதஸ்ய கோபா என்ற பெயர் அவனுக்குண்டு. வருணன் உலக ஒழுங்கைப் பேணுபவனாகவும், மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் கூறப்பட்டுள்ளான். வேதங்களின் இறுதிப் பகுதியாக அமைந்த உபநிடத்தில் பிரமம், ஆன்மா பற்றிய சிந்தனைகள், முத்தி பற்றிய கருத்துக்கள் விரிவாக ஆராயப்பட்டள்ளன. வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருப்பதுடன் அவை பிற்கால மெய்யியல் வளர்ச்சிக்கும் முன்னோடி என்பர்.

## வேதங்களின் முக்கியத்துவம்

இந்து சமய வளர்ச்சியில் வேதங்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இந்து நாகரிகம் சார்ந்த இறை நம்பிக்கை, தத்துவ சிந்தனைகள், அரசியல், சமூகவியற் சிந்தனைகள் முதலியவற்றின் வளர்ச்சியில் வேதங்கள் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. வேதங்கள் இறை சம்பந்தமுடையவை என்பதுடன், அக்கால மக்களின் சமய நம்பிக்கை பற்றியறிய உதவும் முக்கியமான இலக்கிய மூலமாகவும் அமைகின்றன. வேதங்களை இறைநூல், தெய்வீகநூல், முதன்நூல் என்று கூறும் மரபு இவற்றுடன் தொடர்புடையன. இந்தியாவில் தோன்றிய அறுவகைச் சமயங்களும் வைதீக சமயங்கள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றமை இந்து சமயப் பிரிவுகளுக்கும் வேதங்களுக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டுகிறது.

பிற்காலத்தில் வைதீக மரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு வேதங்கள் பிரமாணமாய் அமைந்தன. நால்வகை ஆச்சிரம நிலைகளின் வளர்ச்சிக்கும் வேதங்களே அடிப்படை எனலாம். தரும சாத்திரங்கள், தருமசூத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றின் உருவாக்கத்தில் வேதங்களுக்கு முக்கியமான பங்குண்டு. இறைவனைத் துதித்துப் பாடிய முதல் துதிப் பாடல்களாக வேதப் பாடல்கள் உள்ளன. பிற்காலத்தில் எழுந்த துதிப் பாடல்களுக்கு வேதங்களே முன்னோடி. நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாசுரங்கள் இதற்குத் தக்க சான்று. 'வேத நெறி தழைத்தோங்க....' என்பன போன்ற பாடல்கள் வேத மரபின் வளர்ச்சியை எடுத்துரைக்கின்றன. ஆழ்வார் பாடல்களில் - 'அமரவோரங்க மாதும் வேதமோர் நான் மோதி' - என தொண்டரடிப் பொடியாழ்வார் பாடுகின்றார்.

இந்து தத்துவத் துறையின் வளர்ச்சியிலும் வேதங்கள் பங்களித்துள்ளன. சுருதிப் பிரமாணம் என்ற வகையில் இந்து தத்துவக் கோட்பாடுகளுக்கு வேதங்கள் அடிப்படையாக அமைந்தன. பிரம சூத்திரம் முதலான தத்துவ நூல்களுக்கு மட்டுமன்றி, அத்துவைதம் முதற்கொண்டு தோன்றிய மெய்யியல் கோட்பாடுகளுக்கும் வேத இலக்கியங்களின் பங்களிப்பு மிகவும் பிரதானமானது.

# ஆகமங்கள்

இந்து சமய மரபில் வேதங்கள் ஆகமங்கள் என்பன முதன் நூல்கள் என்று கொள்ளப் படுகின்றன. இவற்றுள் ஆகமங்கள் இந்து சயமத்தின் சிறப்பு நூல்கள் என்று போற்றப்படுகின்றன. இதனால் ஆகம இலக்கியங்கள் இந்து சமயத்தின் அறுவகை நெறிகளின் வளர்ச்சயிலும் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆகமமம் என்பதிலுள்ள ஆ என்பது பாசத்தையும், க என்பது பசுவையும், க -பதியை யும் சுட்டி, சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையை விளக்கும் நூல் என்று பொருள் கூறப்படுகிறது. ஆகமம் என்பதில் உள்ள ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம் என்பனவற்றைச் சுட்டி ஆன்மாவிற்கு மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது என்று பொருள்படுகின்றது.

## சிவாகமங்களின் தோற்றமும் தொகையும்

சிவாகமங்களைச் சிவனே அருளினார் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கை. மாணிக்கவாசக சுவாமிகள் ‘மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம்.....’ எனவும் ‘ஆகமமாகி அண்ணிப்பான் தாள் வாழ்க......’ எனவும் கூறியுள்ளார். ‘வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்’, ‘அண்ணல் அருளில் அருளும் சிவாகமம்......’ என வரும் திருமந்திர பாடல் வரிகளும் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. இறைவனின் ஐந்து முகங்களில் இருந்து இருபத்தெட்டு ஆகமங்களும் தோன்றியதாக அவற்றின் உபதேச வரிசைக் கிரமம் மூறுப்படுகிறது. அது பின்வருமாறு அமையும்.

- சத்தியோசாத முகம்- காமிகம், யோகதம், சிந்தியம், காரணம், அஜிதம்
- வாமதேவ முகம் - தீப்தம், சூஷ்மம், சகஸ்ரம், அம்சுமம், சுப்ரபேதம்
- அகோர முகம் - விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அனிலம், வீரம்
- தத்புருஷ முகம் - ரௌரவம், மகுடம், விமலம், சந்திராஷ்னம், விம்பம்
- ஈசான முகம் - புரோதகீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோட்சம், காராமேஸ்வரம், கிரணம், வாதுளம்

இந்தவகையில் ஆகமங்கள் உபதேசிக்கப்பட்ட ஞான குரு பரம்பரை சதாசிவ மூர்த்தி - அனந்ததேவர் - ஸ்ரீகண்ட ருத்திரர் - திருநந்தி தேவர் - சனற்குமாரர் - முனிவர்கள் - மானிடர்கள் என்று கூறப்படுகிறது.

ஆகமங்கள் குறித்த காலப்பகுதியில் தோற்றம் பெற்றவை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து அதாவது கி.பி. 6ம் நூற்றாண்டை இறுதி எல்லையாக் கொண்டு அதற்கு முற்பட்ட காலத்தில் ஆகமங்கள் அருளப்பட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.

சிவாகமங்களுள் மூலாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு. இவை சிவபேதம் கூறுபவை -10, உருத்திரபேதம் - 18 என இருவகைப்படும். சங்கிதை, பாகவதசாத்திரம் என்று அழைக்கப்படும் வைணவ ஆகமங்கள் 108 என்று கூறுவர். வைணவ ஆகமங்களை வைகாசன மரபு, பாஞ்சராத்திர மரபு, என இரண்டாகக் கூறுவர். வைகாசனம் வைதிக ரிஷியான விகாணஸ் என்பவரால் தொகுக்கப்பட்டது. இவை ஒரே தத்துவங்களைக் கொண்டவை. வைணவ ஆகமங்களுள் சகஸ்தியசங்கிதை, ஈஸ்வர சங்கிதை, காசிப சங்கிதை, அனிருத்தசங்கிதை முதலானவை குறிப்பிடத்தக்கவை. சக்தி வழிபாட்டின் சிறப்பைக் கூறும் சாக்த ஆகமங்களைத் தந்திரங்கள் எனவும் அழைப்பர்.இவை 77 ஆகும். இவற்றுள் மகாநிருவாணதந்திரம், திரிபுரரகசியம், காமகலா விலாசம் சாரதா திலகம் முதலானவை குறிப்பிடத்தக்கவை. சாக்த தந்திரங்களுள் சுப ஆகமங்கள், தீிணாசாரம் (வலது) எனப்படும் 05 ஆகமங்கள் ஞானம், மோஷத்திற்கான வழியைப்பற்றிக் கூறுவன. கௌல ஆகமங்கள், வாமாசாரம் (இடது) எனப்படும் 64 ஆகமங்கள் மந்திர வித்தை, இடக்கரான வழிபாடு பற்றிக் கூறுவன. மிசிர ஆகமங்கள் எனப்படும் 08 - ஆகமங்களும் இருவகையும் கலந்து விளங்குவன.

சிவாகமங்கள் ஒவ்வென்றும் கர்ம காண்டம், ஞான காண்டம் என்னும் இருபெரும பிரிவுகளை உடையன. இவற்றுள் கர்ம காண்டம் செயல் (கிரியை) சார்ந்த விடயங்களையும், ஞான காண்டம் அறிவியல் சார்ந்த தத்துவக் கருத்துக்களையும் கூறுவனவாக உள்ளன.
ழ

சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. அவையாவன:

1. சரியா பாதம்- பிராயச்சித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு உமாமகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்.
2. கிரியா பாதம்-மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்களை அணியும் முறை.
3. யோக பாதம்- அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், ஆறுவகை ஆதாரங்கள்.
4. ஞான பாதம்- முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம்.
   ஞானபாதம் ஆகமாந்தம் எனவும் அழைக்கப்படுகின்றது.

## ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்

சிவாகமங்கள் கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு, ஆன்மாக்கள் ஆற்றும் வினைகள், சைவ சமய வாழ்க்கை, ஆலய அமைப்பு, ஆலயக் கிரியைகள், சித்தாந்த சிந்தனைகள் என்று சைவநெறிசார் பல விடயங்களைக் கூறுகின்றன. சைவாகமங்கள் சைவ மக்களின் ஆன்மீக வாழ்வை ஆலயங்களை மையமாகக்கொண்டு கூறுகின்றமையைக் காணலாம். ஆலய வழிபாட்டையும், சமய அனுட்டானங்களையும் விதிகளாக விளக்குவதனால் சிவாகமங்களுக்கு சாத்திரங்கள் என்ற பெயரும் உண்டு. அனைத்து மக்களும் ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற வகையிலேயே ஆகமங்கள் ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன. வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைவுறுகின்றன.

சிவாகமங்கள் ஆலயம் அமைக்கும் இடம், ஆலய அமைப்பு, ஆலயத்தின் உறுப்புகள், அவை அமைய வேண்டிய இடங்கள், அவற்றின் அளவைப்பிரமாணங்கள், கோயிற் கிரியைகள், ஆலய அனுட்டானங்கள் போன்ற விடயங்களை விதிகளாக விபரிக்கின்றன. சிவாலயத்தில் இடம்பெற வேண்டிய கருவறை, மண்டபங்கள், பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள் மற்றும் கோபுரம், விமானம் என்பன அமைய வேண்டிய விதிகள் என்பன இவற்றில் கூறப்பட்டுள்ளன. ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி காமிக ஆகமம் 'பிரகாரலட்சண விதிப்படலம்' எனும் தலைப்பில் விபரிக்கிறது. ஆலயத்தில் எத்திசையில் எவ்வெவ் மூர்த்தங்கள் அமையவேண்டும் என்பதும் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, கிழக்கில் சூரியன், தெற்கில் ஷண்முகன், மேற்கில் விஷ்ணு, வடமேற்கில் துர்க்கை, வடக்கில் சப்தமாதர், வடகிழக்கில் சிவன், தென்மேற்கில் ஐயனார் எனும் நிலையில் அமைய வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. காமிகாமத்தில் ஆலய அமைப்பு, ஆலயத்தை அமைக்கத் தகுந்த இடம், பரிவார தேவதைகள், பிரகாரங்கள் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது

மனிதன் ஒருவன் தரையிலே நேராக படுத்திருப்பது போன்ற அமைப்பில் ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்கள் விளங்குகின்றன. 'ஷேத்ரம் சரீரப் ப்ரஸ்தாரம்' என்ப தற்கு அமைவாக மனித உடலுக்கும் ஆலய அமைப்பிற்கும் மிக நெருங்கிய தொடர்பு கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கர்ப்பக்கிரகம் | - | தலையும் |
| அர்த்தமண்டபம் | - | கழுத்தையும் |
| மகாமண்டபம் | - | மார்பையும் |
| யாகசாலை | - | நாடியையும் |
| கோபுரம் | - | பாதத்தையும் |

உணத்துகின்றன. திருமூலரும் 'உள்ளம்பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம், வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாசல் ......' என்று கூறியுள்ளார். அதாவது உடலுக்கும் ஆலயத்திற்கும் உள்ள தொர்பினைப் இவ்வாறு கூறியுள்ளார். 'காயமே கோயிலாக...' எனவரும் பாடலும் மேற்குறித்த விடயத்துடன் தொடர்புடையதாக அமைவதைக் காணலாம்.

சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன. சிவலிங்கத் திருமேனி, அர்த்தநாரீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர், தட்சணாமூர்த்தி போன்ற 25 மூர்த்தி பேதங்களை அமைக்க வேண்டிய விதிகளை ஆகமங்களே வகுத்துக் கூறுகின்றன. திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் 'சிலா பரீட்சணம்' என்ற தலைப்பில் கூறுகின்றன. திருவுருவங்களின் பங்க அமைதிகள், அங்கலட்சணம், அவற்றின் அளவுப் பிரமாணம், ஆடை ஆபரணம் என்பன பற்றியும் அவற்றில் கூறப்பட்டள்ளன. காமிக, காரண ஆகமங்களில் சிற்பங்கள், திருவுருவங்கள் அமைப்பதற்கான நுணுக்கங்கள் பற்றியும் உத்தரகாரணாகமத்தில் திருவுருவங்களின் அளவுப் பிரமாணங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. சுக்கிர நீதி - 'திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல' என்கிறது. திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமப் பிரமாணம் முதன்மையான இடம் பெறுகின்றது. சிற்பங்கள், ஆலயங்கள் என்பவற்றை அமைக்கின்ற ஸ்தபதிகளிடத்தில் காணப்பட வேண்டிய தகுதிகள், பின்பற்றவேண்டிய நியமங்கள் என்பவையும் கூறப்பட்டுள்ளன.

## ஆலயக் கிரியைகளும் அனுட்டானங்களும்

அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர் நாதமாக உள்ளது. சிவாகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன. ஆகமம் கூறும் உருவ வழிபாட்டின் அடிப்படையில் 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமோ' என்னும் மணிவாசகரின் வாக்கு அமைகிறது. சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை. நித்திய கிரியை நைமித்திய கிரியை, காமிக கிரியை, பிரதானமானவை. நித்திய கிரியைகள் 3, 6, 12 வேளைகளில் இடம்பெறுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கோயிலில் நடைபெறும் நைமித்திய கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளன.

- கர்ஷணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல்.
- பிரதிட்டை - ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை(நிறுவுதல்) செய்தல்.
- உற்சவம் - ஆலயத்தில் வருடமொரு முறை இடம் பெறும் திருவிழா
- பிராயச்சித்தம் - ஆலய கிரியைகளின்போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூசையின் அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் யாகங்கள், யாகசாலை, மேடைகள், யாக குண்டங்களின் எண்ணிக்கைகள், பூஜையின் தன்மை, காலம், அபிஷேகம் செய்யும் முறை, அலங்காரம், பூசை அமைப்பு, ஷோடஸ உபசாரங்கள், வீதியுலா, உற்சவங்கள் என்பன பற்றிக் கூறுகின்றன. சிவாகமங்களில் வரும் பூஜா விதிப்படலம், மந்திராவதாரப் படலம் போன்ற பிரிவுகள் மேற்கூறிய அம்சங்களுடன் தொடர்புபட்டவை.

ஆகமங்கள் கூறும் கோயிற் கிரியைகளுள் இகோற்சவம், பிரதிட்டை என்பன பிரதான மானவை. இவ்வாறான கிரியைகளினபோது இடம்பெறும் கொடியேற்றம் அனுக்ஞை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரஷாந்தணம், கும்பம் தாபிக்கும் முறை கும்பத்தை தேங்காய், வஸ்திரம், மலர்மாலை, கூர்ச்சம் முதலியவற்றால் அலங்கரிக்கும் முறை, கும்பத்தின் தன்மை, சுற்றப்படும் நூல், நெல்லின் அளவு, தர்ப்பை, மாவிலை, நெல், பச்சையரிசி, பஞ்சகௌவியம், பொரி, நவதானியம், சமித்து, பஞ்சதிரவியம் மகோற்சவத்தின் போது நடைபெறும் கொடியேற்றம், வாகனத் திருவிழா, மௌன உற்சவம், தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பனவற்றை ஆற்றும் முறைகள் பற்றி இவற்றில் உண்டு.

ஆகமங்கள் நால்வகை பிரதிட்டைகள் பற்றிக் கூறுகின்றன. அவை அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்தத்னம், அந்தரிதம் என்பன. இவற்றுள் அநாவர்த்தனம் என்பது ஆலயத்தை புதிதாக அமைத்து அங்கு தெய்வப் படிமங்களை புதிதாக ஸ்தாபனம் செய்து ஆற்றப்படுவது எனவும். பூசைகள் நடைபெற்றுவரும் ஆலயத்தை புனர்நிருமாணம் செய்வதற்காக மூலமூர்த்தியை பாலத்தாபனம் செய்த பின்பு, புனர்நிருமாணத்தைத் தொடர்ந்து இயற்றப்படுவது புனராவர்த்தனம் எனவும். நீண்டநாள் கிரியை நடைபெறாத கோவிலில் கிரியை ஆற்றும் பொருட்டு செய்யப்படுவது ஆவர்த்தனம் எனவும் ஆலயத்தில் நிகழும் ஆசாரக் குறைகளை நிவர்த்த செய்யும் நோக்கில் செய்யப்படுவது அந்தரிதம் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

**சைவசித்தாந்த சிந்தனைகள்**

சிவாகமங்கள் ஆலய வழிபாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளையும் கொண்டுள்ளன. சிவாகமங்களின் யோகபாதம், ஞானபாதம் என்பனவற்றில் சைவ சித்தாந்தக் கருத்துகள் அதிகமாகக் காணப்படுகின்றன. கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் முதலான ஆகமங்கள் சித்தாந்த சிந்தனைகளைப் பெரிதும் கொண்டவை. பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்புகள் பதியின் மூவகைத் திருமேனிகள், அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள், ஆன்ம ஈடேற்றம், மும்மலங்கள் போன்ற விடயங்களை ஆகமங்கள் கூறுகின்றன. கிரண ஆகமம் பதி படலம், பசு படலம், மாயா படலம், சத்திநிபாத படலம் போன்ற தலைப்புகளின் கீழ் சைவசித்தாந்த உண்மைகளை விபரிக்கின்றது. சிவாகமங்களில் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்பனவற்றில் சைவ சித்தாந்த சாதனைகள் குரு லிங்க சங்கம வழிபாடு,சிவசின்னங்கள், தீட்சை பற்றிய விளக்கங்கள் உள்ளன. இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் அட்டாங்க யோகங்கள் பற்றியும் இவற்றில் காணப்படுகின்றன. அட்டாங்க யோகம் மூலம் கைகூடும் அடடமா சித்திகளாகிய அணிமா, லகிமா, மகிமா, கரிமா,பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடுபேறாகிய **சுத்தாத்துவித** முத்தி பற்றியும் சிவாகமங்கள் கூறியுள்ளன.

## ஆகமங்களின் முக்கியத்துவம்

இந்து சமய வரலாற்றில் வேதங்களைப் போல் ஆகமங்கள் முதனூல்கள் ஆகும்.

- சிரௌதம், சுப தந்திரம் என ஆகமம் சிறப்பிக்கப்படுகிறது.
- வேதங்கள் பொது நூல் எனவும், ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப் படுகின்றன.
- ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்ற வகையில், சைவ ஆகமங்களை சிவாகமங்கள் என்றும் வைணவ ஆகமங்களை சங்கிதைகள் என்றும் சாக்த ஆகமங்களை தந்திரங்கள் எனவும் அழைப்பர்.
- இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றில் ஆப்த வாக்கியப் பிரமாணமாக அமையும் சிறப்புடையவை ஆகமங்கள்
  உ-ம்: வேதமொடாகமம் மெய்யாம் இறைநூல் ஓதும் பொதுவும் சிறப்பு
  மென்றுள்ளன நாதன் உரையவை.... திருமந்திரம்
- இந்துக்களின் கோயில் கட்டட, சிற்பக் கலைகளை எடுத்துக் கூறுவது ஆகமம் மாகும். பிற்கால சிற்பசாத்திர நூல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன ஆகமங்கள்
- இந்துக்களின் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதில் ஆகமங்கள் முக்கியமான இடம் பெறுகின்றன.
- ஆகமங்கள் இறை வழிபாட்டை கிரியை நெறி மூலம் வழிப்படுத்துகின்றன. இக்கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூல்களே பத்ததிகள்.
- ஆகமங்கள் ஆலய வழிபாடு, சமய அனுட்டானங்கள், சைவ சித்தாந்த சிந்தனைகள் போன்ற பல விடயங்களின் ஊடாக மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றன.

# இதிகாசங்கள்

வேத நெறிமரபினை தொடர்ந்து ஐந்தாம் வேதமரபாக எழுச்சி பெற்ற இலக்கியங்களே இதிகாசங்கள். இதிகாசங்களில் மகாபாரதம் இராமாயணம் ஆகிய இரண்டும் அடங்கும். மகாபாரத காவியம் ஐந்தாம் வேதம் என அழைக்கப்படும். இதிகாசம் என்னும் சொல் இவ்வாறு நடந்த கதை என்று கூறப்படும். மனிதன் வாழ் வாங்கு வாழ வழிகாட்டும் உபதேசங்களை உடையனவாக இதிகாசங்கள் விளங்குகின்றன. கதாபாத்திரங்களூடாக அறிவுரை கூறும் பாங்கு இதிகார வரலாறுகளூடாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

இதிகாச இலக்கியங்கள் வேத உபநிடத நூல்களைத் தொடர்ந்து எழுச்சி பெற்ற கதை மரபுகளாக அந்நூல்கள் தோற்றம் பெற்றன. இதிகாசக் கதை மரபுகள் குறித்த ஒரு காலத்தில தோன்றியவை அல்ல. பல ஆண்டுகாலமாக நிலவிய கதை மரபுகள் வட இந்தியாவில் குப்தராட்சிக் காலத்திலேயே இறுதி வடிவம் பெற்று தொகுக்கப்பட்டமையை அறிகிறோம். மகாபாரத கதை வியாசரால் தொகுக்கப்பட இராமாணக் கதை வான்மீகியால் தொகுத்து எழுதப்பட்டது. இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதம் இந்து சமய நெறியை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஜகம் புகழும் புண்ணிய கதை இராமனின் கதையே என்று பிற்காலத்தில் இராமாயணம் போற்றப்பட்டது.

**மகாபாரதமும் இந்து சமயப் பண்பாடும்.**

மகாபாரதமானது மிகப் பெரிய கதை வடிவமாக கூறப்பட்டுள்ளது. சுமார் ஒரு லட்சம் சுலோகங்களை உடையதாகவும் 18பருவங்களை உடையதாகவும் மிளிர்கின்றது. பருவங்கள் என்பது அத்தியாயங்களைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. ஆதி பருவம், வனபருவம், துரோணபருவம், வீஸ்மபருவம் அறுசாசனபருவம், சாந்திபருவம் என்பவை பிரதானமானவை. பல இணைக் கதைகளை உடையதாக மகாபாரதம் விளங்குகனின்றது. இந்து தத்துவ நூல்களில் ஒன்றாகிய பகவத்கீதை மகாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. மகாபாரதத்தின் ஒவ்வொரு அத்தியாய ஆரம்பத்திலும் நாராயணாம் நமஸ்கிருதய என்னும் நாராயண ஸ்துதி சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனால் மகாபாரத காப்பியம் வைணவச் சார்புடையதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. மகாபாரத மூல வடிவம் சமஸ்கிருத மொழியிலானது பின் தமிழ் மலாய, யாவா மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

மகாபாரதக் கதையைப் பொறுத்தவரை இந்து சமய பண்பாட்டு விடயங்கள் தொடர்பாக எல்லா சிந்தனைகளும் மகாபாரத கதையில் உள்ளடங்கி இருக்கின்றதெனக் குறிப்பிடலாம். இங்கில்லாத விடயத்தை வேறெந்த நூலிலும் காணமுடியாது என அழைக்கப்பட்ட விடயம் மிகப் பிரதானமானது. சூதர் எனப்படும் கதை சொல்லிகளால் அரண்மனைகளிலும் மக்கள் வாழ்விடங்களிலும் ஓதப்பட்ட வரலாறுகளே இதிகாசங்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

மகாபாரதத்தின் இந்து சமய மரபுகளில் சண்மத நெறிக் கோட்பாடு உன்னதமானதாக விளங்கினாலும் சைவம் வைணவம் என்பன மேல் நிலை பெற்றுள்ளதெனக் குறிப்பிடலாம். விஷ்ணு பரத்துவ பகவத் கீதையில் கூறப்பட்ட அர்ச்சுனன் தவம் செய்த வேளையில் சிவபெருமான் கிராதர் எனும் வேடர் வடிவில் தோன்றி பாசுபதாஸ்திரம் வழங்கிய செய்தி இறை ஆற்றல், இறை அருள் பக்தி மரபு அனைத்தையும் இணைத்த வாறாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சைவம், வைணவம் மட்டுமல்லாது சாக்த, காணாபத்ய கௌமார, சௌர சமயங்களின் வரலாறு வெளிப்படும் இலக்கியமாகவும் மகாபாரதம் விளங்குகின்றது. தன்னிகரில்லாத் தலைவனின் பெருமைகளை இது காட்டுகிறது. அதேவேளை உலகியல் வாழ்வு அறவாழ்வு ஆன்மீக வாழ்வு என்பவற்றை இணைத்த பாங்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மகாபாரதம் குறிப்பிடும் சமய மரபில் பொதுமக்கள் நல்வழியில் வாழ்வதற்கான நீதியை உபதேசம் செய்வது முக்கியமானதாகும் வீஷ்மதருமம் இதனை வெளிப்படுத்துகின்றது. அரசருக்கு வேண்டிய வேள்விகள் ராஜதருமம் என்பனவும் மகாபாரதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மகாபாரத ராஜதருமமே நல்லாட்சிக் கொள்கையாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

வாழ்வின் ஒழுக்கவியல் பற்றிய கருத்துக்களும் மகாபாரதத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கருமயோகம், புலனடக்கம், அறவாழ்வு, சமத்துவம், தருமநெறி, வீடுபேறு என்னும் விடயங்கள் உபதேச வழிகள் மூலமாக குறிப்பிடப்பட்டுள்ளன. தருமம், பொறுமை, சமத்துவம், கற்பு, சகோதர பாசம் முதலிய வாழ்வியல் பண்பாடுகள் கூறப்பட் டுள்ளன. தருமம் ஒன்றே ஒருவனை பின்தொடர்ந்து செல்லும் என்னும் போதனை விதிகளை வடிவமாக மகாபாரத கதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தருமம் தலைகாக்கும் என்பது இதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது. தருமநெறி நின்ற தருமன், வீமன் அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் பாண்டவர் வாழ்வும் தீய வழி நின்ற துரியோதனன் ஆகியோர் வாழ்வும் பிரதானமானவை. நன்மை வெல்லும் தீமை தோற்கும் என்பதை மகாபாரத வாழ்வியல் எழுத்துக்காட்டுகின்றது. கொடையின் சிறப்பு கர்ணன் வரலாற்றில் காட்டப்பட்டுள்ளது.

மகாபாரதம் திரிமூர்த்தி வழிபாட்டை வலியுறுத்துகின்றது. தேவ இலக்கியத்தில் வருணிக்கப்பட்ட இயற்கை தேவர் வழிபாட்டை விட சண்மத தேவர் வழிபாடு முதன்மை பெற்றது. பகவத்கீதையில் அவதார தருமம் கூறப்பட்டுள்ளது. தருமம் குலைந்து அதருமம் பெருகும் போது தருமத்தை நிலைநாட்ட நான் யுகம் தோறும் அவதரிக்கின்றேன் என்பது கீதையின் உபதேசம். அவதாரக் கோட்பாடு இறை ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டே திருஉருவ வழிபாடு தோற்றம் பெற்றது. வேத இலக்கியங்ளில் குறிப்பிடப்படாத திரு உருவவழிகாடு இதிகாசங்களில் மேலும் செல்வாக்கடைகிறது.

யாகங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாடு மகாபாரதக் கதையில் செல்வாக்ப்கு பெற்றது வேள்வி தவம், பூசை, தோத்திரம், தலயாத்திரை, தீர்த்தம் என்பன பிரதான இடம் பெற்றன. கங்காஸ்ஞானம், காசியாத்திரை தியானம் என்பனவும் பாரதக் கதையில் செல்வாக்குப் பெற்றன. மகாபாரதக் கதையில் வைணவ மரபாகிய பாஞ்சராத்திரம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பாஞ்சராத்திர வைணவம் விஷ்ணு பகவானால் உபதேசம் செய்யப்பட்டது என மகாபாரதம் எடுத்துரைக்கின்றது. சூரிய உபாசனை காயத்திரி மந்திர செல்வாக்கும் மகாபாரத கதையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குந்தி தேவியின் வரலாறு இதற்கு சான்று. துர்க்கா உபாசனையும் துர்க்கா கோத்திரமாக அமைந்துள்ளது.

மகாபாரத கதையின் அறவாழ்வுக் கொள்கை மேலானது. அகிம்சை மேலான தருமமாகக் கூறப்படும் சத்தியம், குரோதமின்மை, தானம், புலனடக்கம் பிறரிடம் குறைகாணாமை, பிறரில் குறைகூறாமை கோபமறுதல், மன்னிப்பளித்தல், அகபுறத்தூய்மை பிறரில் பகைமை பாராட்டாமை என்பன உயரிய தத்துவங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. சத்தியமே உயிர் என்று மகாபாரதம் போதிக்கின்றது. சாந்திபருவத்தில் துவேசமின்மை, சத்தியம், புலனடக்கம் பொறுமை, சகிப்புத்தன்மை பரம்பொருளைத் தியானித்தல் என்பன அகிம்சையின் பாற்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குருகுலக் கல்வி மரபுடன் தொடர்பான ஆசாரங்களும் தபோவன வாழ்வும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**மகாபாரதமும் இந்து சமய இலக்கிய மரபுகளும்**

மகாபாரதக் கதையின் இலக்கிய மரபில் பகவத்கீதை முதன்மையானது. பல்வேறுபட்ட கிளைக் கதை மரபுகளையும் மகாபாரதம் உள்ளடக்கி இருக்கின்றது. தேவார பாடல்களிலும் மகாபாரதத்தின் அர்ச்சுனன் தவம் செய்த வைபவம் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ‘அடுத்தானை உரித்தானை அருச்சுனர்க்குப் பாசுபதம் கொடத்தானை’ என்று தேவாரப் பாடல் குறிப்பிடுகின்றது. ‘வேடன் தன் வில்லை விஜயற்கு ஈந்து ....’என்று கிராதார்ச்சுனன் வடிவத்தை தேவாரப்பாடல் பிரதிபலிக்கின்றது. சமஸ்கிருத, தெலுங்கு மொழிகளில் பாரதக் கதை முன்வைக்கப்பட்டது சாள்ஸ் வில்கின்ஸ் என்பார் மகாபாரத கதையை ஆங்கிலத்திலும் தமிழிலும் பாரத அம்மானை மகாபாரதக் கதையை அடியொற்றியதாகம் வைகுந்த அம்மானை, கம்சன் அம்மானை முதலிய சிற்றிலக்கிய வடிவங்களும் இலக்கிய மரபாக எழுச்சி பெற்றுள்ளன. திரௌபதி கோவில் பண்பாடு, பாண்டவர் கதை மரபுடன் தொடர்பானது பல்வகை கூத்துக்களும் நாடகங்களும் பாண்டவர் கதை மரபு தழுவியன.

## இராமாயணம் குறிப்பிடும் இந்துப் பண்பாடு

இராமாயணம் வடமொழியல் வான்மீகி ரிஷியால் தொகுக்கப்பட்டது. இராமாயணம் 7 காண்டங்களை உடையது. பாலகாண்டம் அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம் கிஸ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம், உத்தரகாண்டம் என்பன அவை 24000 சுலோகங்களை உடைய தொகுப்பாக இராமாயணம் காணப்படுகின்றது. இது கி.பி 2ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது. வான்மீகி ஆதிகவி என்று அழைக்கப்படுகின்றார். **பாங்கரும் பாதம் நான்கும்** வகுத்த வான்மீகி எனப் போற்றப்படுகின்றார். இராமாயணம் ஆதிகாவியம் என்றும் அழைக்கப்படுகின்றது.

இராமாயணம் இராமனை கதாநாயகனாக எடுத்துக்காட்டுகின்றது. இராமனது தெய்வீக ஆற்றல் இராம வழிபாட்டிற்கு அடிப்படையான மரபினை ஏற்படுத்தியது. ரிஷிகளுக் கெல்லாம் மகரிஷியாக வான்மீகி சுட்டிக்காட்டப்படுகின்றார். அயோத்தியமாநகரம், தசரதன் கதை, முன்வினைப் பயன் தண்டகாரணியதவம், பரதன் உறவு சகோதர பாசம் , இலங்கை த்தொடர்பு என்பன கதையோட்டமாக அமைகின்றன. அக்கதையோட்டத்தில் இராமன் என்னும் பாத்திரம் உத்தம வடிவமாகவும் இலட்சிய வடிவமாகவும் விளங்குகின்றது.

இராமாயணக்கதையின் மற்றொரு கதாபாத்திரமாக இராவணன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளான். சிவபக்தனாகவும் இசைமரபினனாகவும் வான்மீகி அறிமுகம் செய்கின்றார். இராம இராவண யுத்தத்தில் இன்றுபோய் நாளை வா என்னும் வேண்டுதல் ராஜ தருமத்தினதும் யுத்த தர்மத்தினது உன்னத போக்கைச் சுட்டிக் காட்டுகின்றது. இராவணன் லிங்க வழிபாட்டினன் எனவும் அறியப்படுகின்றது.

இராமாயணக் கதையிலும் தருமத்தின் சிறப்பு தனித்துவமாக எடுத்துக்காட்டப்படுகின்றது. தருமத்தில் இருந்தே எல்லாம் கிடைக்கின்றன என்பதால் அனைத்திலும் மேலானது தருமமே என்பது இதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது பற்றி அரியும் தீயை நீர் ஊற்றி அவிபதைப் போல உள்ளத்தில் எழும் கோபத்தை அடக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. சகிப்புத்தன்மையே உயர் தருமம் என்று குறிப்பிடப்படுகின்றது.

வான்மீகி இராமாயணம் தமிழில் கம்பஇராமாயணம் எனப் பாடப்பட்டது. கம்பர் இதனை சோழராட்சியில் பாடியுள்ளார். பின் இந்தி மொழியில் துளசி தாசர் இராமாயணத்தைப் பாடியுள்ளார். தெலுங்கு கன்னட மொழியிலும் இராமாயணக்கதை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இராமயணக்கதைகளிலும் மோட்சம் நரகம் பற்றிய சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன. வசிட்ட முனிவர் இராமனுக்கு உபதேசித்த வரலாறுகள் இதற்கு சான்றானவை. இராமாயணக் கதைமூலம் மானுட விழுமியங்கள் வடஇந்திய கலாசாரப் பண்புகள் தமிழகத்தில் பரவலாயின. இராமர் கோயில், இராமேஸ்வரம் இலங்கையில் சீதாஎலிய, மாமங்கேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கன்னியா ஆகியன இராமாயணக் கதையுடன் கூடியவை. யாவா. சம்பா, தாய்லாந்து, முதலிய நாடுகளில் இராமாயணக்கதை வரலாறுகள் கோயிற் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காட்டப்பட்டுள்ளன. இராமாயணக் கதைகளை நாட்டார் கலைகளுடன் தொடர்புபட்டன. இராமலக்ஷ்மணன் ஆலயம் ஆஞ்சநேயர் ஆலயம் என்பவை இராமாயண மரபைத் தழுவிய சமயக் குறியீடுகள்.

# புராணங்கள்

வேத உபநிடதங்களில் காணப்படுகின்ற வடமொழிக்கருத்துக்களும் தத்துவ சிந்தனைகளும் மக்கள் இலகுவில் விளங்கக் கூடிய அளவிற்கு கதைவடிவில் அமைந்ததனால் மக்கள் மனதில் செல்வாக்குச் செலுத்தின. அத்துடன் இந்துசமயமரபு வழிபாட்டுமுறை தெய்வ இயல் விரத மகிமை தீர்த்த மகிமை முதலிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் புராணங்கள் வேதங்களைப் போன்ற பெருமையும் புனிதமும் உள்ளவை என்று கூறப்படுகின்றது. புராணம் என்பது தெய்வீக வரலாற்றுக் கதை எனப் பொருள்படுகின்றது. பூரணாத் புராணம் இதி உச்சயதே. இது முழுமையானதால் புராணம் என்ற கருத்தும் உண்டு. தெய்வீக அகத் தூண்டுதலாய் அமைந்த உள்ளுயிர்ப்பு செய்து வரும் நூல்களில் இது முதல் இடம் பெறுகின்றது. சண்மதக் கொள்கைகளின் மைய சிந்தனைகள் இதில் காணப்படுகின்றன. புராணங்கள் கி.மு 400 - 200 க்கும் இடையில் தோற்றம் பெற்ற நூல்கள் எனக் கூறப்படுகின்றது. குப்தர் காலத்தில் புராணங்கள் இறுதி வடிவம் பெற்றன. புராணங்கள் பழையதாயினும் புதிதாக தோன்றுவது என்றும் தன்னிடத்தில் ஈடுபட்டவரை முன்னுக்குக் கொண்டு வரும் தன்மை உள்ளது என்றும் புராணத்திற்கு பொருள் கூறுவர். ஆகவே புராணங்கள் பௌராணி கர்களால் தோற்றுவிக்கப்பட்டு, வைதீக ஒழுகலாறுகளைப் பேணும் வகையிலும் தெய்வீக வரலாற்றைப் பரப்பும் நோக்கிலும் தோற்றம் பெற்றனவாகக் காணப்படுகின்றன. ஆகர் ஓதிய மூவாறு தொல்கதை என கந்தபுராணம் கூறுகிறது.

புராணங்கள் வடமொழிப் புராணங்கள், தமிழ்மொழிப் புராணங்கள் என பிரிக்கப்படுகின்றன. வடமொழிப் புராணங்கள் பதினெண்புராணங்கள், மகா புராணங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. அவையாவன

சிவபுராணங்கள் 10

| | |
|---|---|
| 1. சிவ புராணம் | 6. வராக புராணம் |
| 2. பவிபிய புராணம் | 7. வாமன புராணம் |
| 3. மார்க்கண்டேய புராணம் | 8. மச்ச புராணம் |
| 4. இலிங்க புராணம் | 9. கூர்ம புராணம் |
| 5. ஸ்கந்த புராணம் | 10. பிரமாண்ட புராணம் |

விஷ்ணு புராணம் 04

கருட புராணம்

நாரதீய புராணம்

வைணவ புராணம்

பாகவத புராணம்

பிரம புராணம் 02

பிரம புராணம்

பதும புராணம்

அக்கினி புராணம் 01

ஆக்கினேய புராணம்

சூரிய புராணம் 01

பிரம கைவர்த்த புராணம்

புராணங்கள் பஞ்ச இலட்சணங்களைக் கொண்டிருக்கும்.

1. சர்க்கம் சிருட்டி

2. பிரதிசர்க்கம் அழிந்து மீண்டும் உண்டாதல்
3. வம்சம் தெய்வ பரம்பரை
4. மன்வந்தரம் மனுக்களின் காலம்
5. வம்சியானுசரிதம் வம்சங்களின் வரலாறு

வடமொழிப் புராணங்கள் தசலட்சணங்களையும் கொண்டிருக்கும். எனைய 5 இலக்கணங்களில்
6. விருத்தி தொழில்
7. ரக்ஷா தெய்வங்களின் அவதாரம்
8. முத்தி வீடுபேறு
9. ஹேது அவ்யக்தமான உயிர்
10. அபாச்சய பிரம்மம்

இவ்வாறான மகா புராணங்கள் பிரமா விஷ்ணு சூரியன், உருத்திரன் முதலானவர்களின் பரத்துவங்களைக் கூறுகின்றன. வாழும் உலகில் படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றையும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்களையும் கூறுகின்றன. புராணங்களிலே அரசர்களின் பாரம்பரியங்கள் கூறப்படுகின்றன. (உ.ம்) சிசு, நாகவம்சம், நந்த வம்சம், மௌரிய வம்சம் முதலியவை.

புராணங்கள் இந்து நாகரிகத்தையும் இந்து சமயக் கோட்பாட்டையும் இந்திய தரிசனங்களின் வரலாற்றையும் இயமம், நியமம், நிஷ்டை முதலியவற்றையும் அறிந்து கொள்ள உதவும் கருவூலங்கள் என்பர்.

மேலும் புராணங்கள் கோவில்களையும் பக்திக்குரிய இடங்களையும் கூறுவன. நாட்டு மக்களிடையே நிலையான ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் புராணங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அவை பாரம்பரியமாக நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் வரன்முறையாகக் கூறுவன. உருவவழிபாடு பக்திமார்க்கம், கன்மம், மறுபிறப்பு, உபநிடதக்கொள்கை, ஞானம், மோட்சம், விரதம், தீர்த்தம், தவம், யாத்திரை, தோத்திரம் போன்றவற்றையும் தெய்வீக பரத்துவத்தையும் விளக்குகின்றன. தெய்வீக பரத்துவங்களாவன
1. சிவபரத்துவம் அடிமுடி தேடிய கதையையும்
2. விஷ்ணு பரத்துவம் பாகவத புராண அவதாரம்
3. சக்தி பரத்துவம் துர்க்கை மகிடாசுரனை சங்கரித்தல்
4. பக்தி மரபுகள் மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதைகள் கலை,அரசியல், மரபுகள் கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றன.

புராணங்கள் பழைமையானவையாயினும் சூரியனைப்போன்று புதுமையானவை. உயிர்ப்புள்ளவை. அவை வேதங்களிலே முறை கொண்டவை. புராணங்கள் பெரிய விஞ்ஞான நுணுக்கங்களைக் கூறுவன. தூலநியதி, அறநியதி, அருள் நியதி, வானத்தின் உடுக்கள், கிரகங்கள், வடதுருவம், தென்துருவம் என்பவற்றின் விபரங்களையும் விளக்கமாக கூறுகின்றன.

பிற்காலத்தில் புரோகிதர்கள் புராணங்களைப் பின்பற்றி சமய போதனைகள் செய்தனர், செய்கின்றனர். ஆறுமுகநாவலர் போன்றோர் எமது சமயத்தை வளர்க்கப் புராண படனம் செய்தார்கள். தற்காலத்தில் கந்தசஷ்டி விரத காலத்திலும் கந்தபுராணம் படிக்கப்பட்டு கொருள் கூறுப்படுகிறது. புலவர்கள் இலக்கியம் கண்டு இலக்கணம் செய்தல் என்ற மரபிற்கேற்ப பஞ்சலட்சண, தசலட்சணங்களை கொண்டு இன்றும் விளக்கம் கூறுகின்றார்கள். ஆறுமுகநாவலர் போன்றோர் எத்துணைக் காலம் திருப்பித் திருப்பிப் படிப்பினும் தெவிட்டாது தித்தித்து அமுது ஊட்டும் அதிதிவ்விய அதிமதுரத் தேன் என்று வருணித்திருப்பது கந்தபுராணத்தின் சிறப்பைக் காட்டி நிற்கின்றது.

புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு அட்டவீரத் தலவரலாறு கூறப்பட்டது. திரிபுரமெரித்த கதை இதில் சிறப்பானது. திருமாலின் அவதாரத் தத்துவமும் இதில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. இது சைவ வைணவ மரபிற்குச் சான்றானது.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற வாக்கிற்கு இணங்க மனிதனை நல்வழிப்படுத்தும் சிறந்த கருவூலங்களாகவும் நண்பனைப் போன்று அறிவுரை கூறி வழிப்படுத்தும் சிறந்த கலைக்களஞ்சியமாகவும் புராணங்களைக் கொள்ளலாம் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

### புராணங்களும் பிற்கால இந்துசமய மரபுகளும்

பிற்கால தோத்திர மரபுகளுக்கு புராணக் கதைகள் சான்றானவை சகஸ்ர நாம தோத்திரம் அஸ்டோத்தர நாமார்ச்சனை என்பவை புராணங்களை அடிப்படையாக கொண்டுள்ளன. அடிமுடி தேடியகதை என்பன பிரதானம்.

புராணங்களை தழுவிய வகையில் இலக்கிய மரபுகள் எழுச்சிபெற்றன. சாத்வீக, தாமச, ராஜச அடிப்படையில் புராணக்கதைச் செல்வாக்கை காணலாம். கரிபிரசாத் சாஸ்திரி அவர்கள் புராணங்களை பின்வருமாறு பிரித்துள்ளார் அவை.

1. கலைக் களஞ்சியபுராணங்கள்.
2. விரத தீர்த்த மகிமை கூறும் புராணங்கள்
3. வரலாற்றுக் கதைப்புராணங்கள் என்பன.

தேவாரப் பாடல், ஆழ்வார்பாடல்களிலும் புராணக்கதை மரபு உண்டு. தானம் விரதம் பக்தி, கோகம், கலை மரபு என்பன பிரதான உள்ளடக்கங்கள்.

தமிழ்ப்புராணமரபு, தலபுராண மரபு, புராணபடன மரபு, புராணங்கள் தொடர்பான நாட்டாரியல் கலைகள் என்பவை பிரதானமானவை. கூத்து நாடக வடிவங்களும் புராணங்களைத் தழுவியனவே.

# 1:4 தமிழகப் பண்பாட்டு மாற்றங்கள் - அறிமுகம்

வட இந்தியாவைப் போலவே தென்னிந்தியாவிலும் இந்து சமயம் தொன்மையான வரலாற்றுப் வழமை கொண்டது. தென்னிந்தியாவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இந்துப்பண்பாட்டு மரபுகளின் வளர்ச்சியைக் காணலாம். எனினும் கிறிஸ்து சகாப்பத்திலிருந்தே தமிழகத்தின் தெளிவான வரலாறு ஆரம்பமாகின்றது. தமிழக வரலாற்றில் கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் கி.பி. 3 வரையான காலப்பகுதி சங்ககாலம் என்று அழைக்கப்படுகிறது,

பண்டைய தமிழகம் என்பது பாண்டிய நாடு, சோழநாடு, தொண்டை மண்டலம், வேங்கி நாடு முதலான பகுதிகளை உள்ளடக்கி பரந்து காணப்பட்டது. இக்காலப்பகுதியில் சேர சோழ பாண்டியர் எனும் மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்டமை பற்றி அறிய முடிகிறது. இக்கால பண்பாட்டு வளர்ச்சி பற்றி பத்துப்பாட்டு எட்டுத்தொகை, தொல்காப்பியம் மற்றும் பிற சான்றுகள் வாயிலாக அறியலாம். இக்கால மக்கள் புவியியல் அமைப்புக்கு ஏற்ப தமது வாழ்க்கையையும், பண்பாட்டையும் இயற்கையுடன் இணைந்தவாறு அமைத்துக்கொண்டனர். அது

## சங்ககாலம்

சங்க காலத் தமிழகம் புவியியல் அமைப்பின் அடிப்படையில் ஐவகை நிலங்களாக வகுக்கப்பட்டன. அவ்வாறு காணப்பட்ட நிலங்களுக்குரிய தெய்வங்கள் பற்றி தொல்காப்பியர் மருதத்திற்கு இந்திரன், முல்லைக்கு மாயோன், குறிஞ்சிக்கு சேயோன், பாலைக்குக் கொற்றவை நெய்தலுக்கு வருணன் என்று வகுத்துக் கூறினார். இதனை

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வருணன் மேய தீம்புனல் உலகமும்

எனவரும் பாடல் மூலம் வெளிப்படுத்துகிறார். இவ்வாறு தொல்காப்பியர் இந்து சமயத் தெய்வங்களை ஒவ்வொரு நிலத்திற்கும் உரியதாக வரையறை செய்தார். இவ்வாறு ஐவகை நிலங்களுக்குமுரிய தெய்வங்களின் வரிசையில் சிவன் கூறப்படவில்லை. எனினும் எல்லா நிலத்து மக்களாலும் வழிபடப்படும் பரம்பொருளாக சிவன் விளங்கியிருக்கவேண்டும்.

சங்ககாலத் தொகை நூல்களுள் சிவன், திருமால், முதலிய கடவுளரைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கிறோம். காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சி முதலிய பெருநகரங்களில் இக்கடவுளர்க்குரிய கோயில்கள் இருந்தன. எட்டுத்தொகை நூல்களுள் அகநாநூறு, புறநாநூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப் பற்றியே அமைந்துள்ளன. ஆயின் இப்பாடல்கள் பிற்காலத்தைச் சார்ந்தவை. சங்க நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக வந்துள்ளன. பத்துப் பாட்டு எட்டுத்தொகை இலக்கியங்கள் எதிலும் சைவம், சிவன் எனும் பதங்களைக் காணமுடியவில்லை. ஆனால் பிற்கால சைவசமய மரபில் சிவனுக்குக் கற்பிதம் செய்யப் படும் தோற்றப்பொலிவுகள் தொடர்பான அடைமொழிகள், சிவனின் திருவிளை யாடல்கள், வீரச்செயல்கள் பற்றிய செய்திகளை இவ்விலக்கியங்களில் காணமுடிகிறது. குறித்த காலத்தில் மக்கள் பல தெய்வங்களை வழிபடினும் சிவனே தலைமைக் கடவுளாக விளங்கினான் என்பது இலக்கியச் சான்றுகளால் அறியமுடிகிறது. இதனை 'மழுவா நெடியோன் தலைவனாக' எனவரும் மதுரைக் காஞ்சிப் பாடல் மூலம் அறியமுடிகிறது. மேலும் அந் நூலில் சிவபெருமானுக்கு முதன்மை தந்து அவனே ஐந்து பூதங்களைத் தோற்றுவித்தவன் என்றும் நான்கு பிரிவுகளையும் ஆறு அங்கங்களையும் கொண்ட வேதங்கள் தனிமுதற் கடவுளின் வாயிலிருந்து வெளிவந்தன எனவும் கூறப்பட்டுள்ளது. சடைமுடி உடையவன் முக்கண்ணன் நீலமணிமிடற்றவன், முழுமுதற் கடவுள், மாதொருபாதியன், கங்கை அணிந்தவன், அழித்தற் கடவுள், ஆலமரத்தின் நிழலில் அமர்ந்தவன், வாள் ஏந்தியவன், என்று இந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

சங்க காலத்திற்குரிய திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலான நூல்களில் சிவ வழிபாடு தொடர்பான பல விடயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பரிபாடலில் 'சடதாரி' (சடையில் கங்கையை அணிந்தவன்) 'புங்கமூர்பவன்' (இடப வாகனத்தில் செல்பவன்) 'காய்கடவுள்' (காமதேவனை எரித்தவன்) முதலான அடைமொழிகளும், அதேபோல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய கலித் தொகையில் 'முக்கணான்' (முக்கண்களை உடையவன்) 'ஆலமர் செல்வன்' (கல்லால மரநிழல் உறைபவன்) முதலான அடைமொழிகளும் இடம்பெறுவதனைக் காணலாம். சிவன் பற்றிய இவ்வாறான உருவ வருணனைகள் சிவன் பற்றிய இதிகாச புராணக் கதைகளுடன் தொடர்பு டையனவாக அமைகின்றன. வட இந்தியாவிற்கும் தமிழகத் திற்குமிடையிலான பண்பாட்டு ரீதியான உறவைக் காட்டுவதுடன், இதிகாச புராண மரபு கள் தமிழகத்தின் சமய நம்பிக்கை களில் இணைவுறத் தொடங்கிவிட்டமைக்கும் இவை சான்றாக அமைகின்றன.

சங்க இலக்கியப் பாடல்களில் மிகுதியாகக் குறிக்கப்பெறும் தெய்வமாகத் திகழ்பவர் திருமால். தொல்காப்பியர் நான்கு நிலங்களையும் அவற்றிற்கான தெய்வங்களையும் பற்றிக் கூறுமிடத்து,

'மாயோன் மேய காடுறை யுலகமும்'
'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்..'

என்று இரு நூற்பாக்களில் திருமால் பற்றிக் குறிப்பிடுகின்றார் அகத்திணைக்குரிய தெய்வமான மாயோனைத் தொல்காப்பியர் முதன்மைப்படுத்தியுள்ளார். பெரும்பாணாற்றுப்படையின் தலைவனான தொண்டைமான் இளந்திரையன், இருநிலம் கடந்த திருமறு மார்பின் ............. என்று திருமால் மரபில் வந்த மன்னனாகக் குறிப்பிடப்படுகின்றான். முல்லைப் பாட்டிலும் மதுரைக்காஞ்சியிலும் திருமால் வழிபாடு பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. காப்பி யாற்றுக் காப்பியனார், நான்மடிச்சேர மன்னனைத் திருமால் பக்தியுடையவனாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நற்றிணையில் வரும் ஒரு காட்சி, பெரியமலையிலே அருவி பாய்ந்தோடுகிறது. கரிய நிறமுடைய பாறையும் அதனிடையே வெண்மை நிறமுடைய அருவியும் பாய்ந்தோடுவது திருமாலையும் பலராமனையும் கண்முன் நிறுத்துவதாக அமைகிறது. புறநானூறு திருமாலின் திருவிளையாடல் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

'அணங்குடை யவுணர் கணங்கொண்டொளித்தனர்
செண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா........' என வரும் பாடலில் காணலாம்.

என்று தேவர்களும் அசுரர்களும் போரிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. கலித்தொகையில் கண்ணனின் செயல்கள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

'மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்ப் பகுத்திட்டு புடைத்த ஞான்றின்னன்கொன் மாயோனென்று.....'

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலிலும் திருமால் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. திருமால் வேதங்களால் பாராட்டப்பட்டதை

'நீ யென மொழிவு மலர்ந்தண ரருமறை'

என்று கூறுகிறது. மேலும் அதில் திருமாலும் பலதேவனும் ஒருவரே என்பது

'நீயே வனையொரு புரையும் வாலியோர்க்கவன்............' என்று பாடப்பட்டுள்ளது.

வட மொழி நூல்களில் கூறப்படும் ஸ்கந்தனுடன் தொடர்புடைய தெய்வமாக சங்ககால குறிஞ்சி நில மக்களால் வழிபடப்பட்ட வேலன் அல்லது முருகன் விளங்குகிறார். சேயோன் மேய மைவரை உலகம்' என்று தொல்காபியர் இதனை அடையாளப்படுததியுள்ளார்.

பரிபாடலில் முருகனுக்கு எட்டுப்பாடல்கள் உள்ளன. அப்பாடல்களில் முருகன்: ன்னிரு சிரங்கள், ஆறு கரங்கள் உடையவனாகவும், பத்மாசூரனை போரில் வென்றவனாகவும் வள்ளி தெய்வயானையை மணம் புரிந்தவனாகவும், திருப்பரங்குன்றில் கோயில் கொண்டவனாகவும் வருணிக்கப்பட்டுள்ளான். முருகன் குறிஞ்சி நிலமக்களின் போர் கடவுளாக விளங்கினான் என்பது மலைபடுகடாமில் ஷெவெல்லும் போரே வல்ல முருகன்' எனவரும் பாடல் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இவன் கொற்றவையின் மகனாகவும் சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளான்.

சங்ககால மக்களால் வழிபடப்பட்ட பெண் தெய்வம் என்ற பெருமை கொற்றவை என்னும் கடவுளுக்கே உண்டு. சங்ககாலத் தமிழகத்தில் வரண்ட நிலப்பிரதேசமான பாலை நிலத்தில் வாழ்ந்த மக்களால் வழிபடப்பட்ட தெய்வமாக கொற்றவை அமைகிறாள். கலித் தொகை, குறுந்தொகை, நெடுநல்வாடை மற்றும் சிலப்பதிகாரம் முதலான நூல்கள் கொற்றவை பற்றிய செய்திகளைத் கூறியுள்ளன. கலித்தொகை இவளை எல்லாம் உணர்ந்தவளாகவும், பெருங் காட்டிடை வாழ்பவளாகவும், பேய்க் கணங்களை உடைய வளாகவும் குறிப்பிட்டுள்ளது. பாலை நிலமக்கள் கையில் நூற் காப்பணிந்து கொற்றவையைக் குறித்து விரதம் இருந்தமை பற்றியும், பிரிந்தவர் சேர்ந்த பின் மீண்டும் பிரியாமல் இருப்பதற்கு அருளுமாறு வேண்டி வழிபட்டமை பற்றியும் குறுந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வழிபாட்டு முறைகள்

சங்க கால மக்களால் மேற்கொள்ளப்பட்ட வழிபாட்டு முறைகள், அவை சார்ந்த சமய விழாக்கள் பற்றி சங்க கால இலக்கியங்களில் உள்ள சான்றுகளால் அறியலாம். அம்மக்கள் தெய்வங்களைக் குறித்து குரவைக் கூத்து, வேலன் வெறியாடல் முதலான வழிபாடுகளையும், கார்த்திகைவிழா, ஆதிரைவிழா, தைவிழா, முருகவிழா என பல்வேறு விழாக்களையும் நடாத்தினர்.

சங்க கால மக்களிடையே நிலவிய கோயில் வழிபாடு பற்றி அறிவதற்கு தொல்பொருட் சான்றுகளை விடவும் இலக்கிய சான்றுகள் பெரிதும் உதவுகின்றன. சங்க காலத்தின் ஆரம்ப கட்டத்தில் தோன்றிய புறநானூறு சிவன் கோயில் பற்றி

பணியியர் அத்தை நின்குடையேமுனிவர்
முக்கட் செல்வனார் நகர்வலம் செயற்கே'

என்று குறிப்பிடுகிறது. இங்கு 'நகர்' என்பது சிவன் கோயிலையே சுட்டுகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகனின் அறுபடை வீடுகள் பற்றியும் பெரும்பாணாற்றுப்படை காஞ்சியில் இருந்த திருமால் கோயில், அங்கு திருமால் பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளமை என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது. தவிர சிறுபாணற்றுப்படை பட்டினப்பாலை, மலைபடுகடாம் முதலான நூல்களிலும் கோயில் வழிபாடு தொடர்பான செய்திகள் உள்ளன.

கோயில்சார்ந்த திருவுருவ வழிபாட்டுடன் தொடர்புடையதாக சங்ககால மக்களால் மெற்கொள்ளப்பட்ட நடுகல் வழிபாடு காணப்படுகின்றது. போரில் இறந்த போர் வீரர்களுக்குச் செய்யபட்ட இந்நடுகல் வழிபாடு பற்றிய செய்திகள் புறநானூறு, பட்டினப்பாலை, பரிபாடல் முதலான இலக்கியங்களில் உள்ளன. போரின்போது இறந்த வீரனின் நினைவாக கல்நட்டு பெயர் பொறித்து பீலி சூட்டி வழிபட்டதை புறநானூறு

அணிமயிற் பீலி சூட்டி பெயர் பொறித்து
இனிது நட்டனரே கல்லும்'

என்கிறது. மேலும் அதை நீராட்டி அலங்கரித்து வழிபட்டமை பற்றிய செய்தியும் உள்ளது உண்டு.

சங்க கால மக்கள் செய்த வழிபாடுகளுள் முதன்மைமிக்கது குரவைக் கூத்தும் அதனுடன் இணைந்த வேலன் வெறியாடலுமாகும். குறிஞ்சி மக்களால் செய்யப்பட்ட இவ்வழிபாட்டில் பெண்கள் கைகோர்த்து ஆடும் போது முருகன் போல வேடமிட்ட ஒருவன் வேலனாக வெளிப்பட்டு ஆடுவான். அவ்வேளை முருகனுக்கு இரத்தம் கலந்த சோறு நிவேதனமாகப் படைக்கப்பட்டது.

இவ்வழிபாட்டைச் சங்க இலக்கியங்கள் குன்றக்குரவை என்று குறிப்பிடுகின்றன. முல்லை நிலமக்கள் மயோனை நினைத்து ஆடிய குரவைக்கூத்து ஆச்சியர்குரவை எனப்பட்டது. இதுபற்றி புறநானூறு பரதவ மகளிர் குரவையொடொலிப்ப'

என்று குறிப்பிடுகிறது. மேலும் பாலை நில மக்கள் பெண்ணைத் துர்க்கையாக அலங்கரித்து ஊர்வலமாகச் சென்று துர்க்கை விழாவை கொண்டாடியமை பற்றி சிலப்பதிகார வேட்டுவ வரியில் கணலாம்.

மருத நில மக்கள் இந்திரனைக் குறித்து ஆண்டு தோறும் எடுத்த இந்திர விழாவைக் கொண்டாடினர். பரிபாடல் மார்கழி மாதத்தில் நடந்த ஆதிரை விழா பற்றியும் நற்றிணை, கலித்தொகை முதலானவற்றில் தைத்திருநாள் விழா புனிதநீராட்டு விழா என்பன பற்றியும், திருமுருகாற்றுப்படை ஆறுபடை வீடுகளில் நடைபெற்ற முருகனுக்குரிய பல விழாக்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது.

சங்ககால இறுதியில் வட இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கமான தொடர்புகள் காரணமாக சமய சமுதாய ரீதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழகத்தில் ஏற்பட்ட ஆரிய மயமாக்கம் மக்களின் சமய நம்பிக்கையிலும் செல்வாக்குச் செலுத்தியது. குறிப்பாக வைதீகமரபு தழுவிய வழிபாடுகள் தமிழக மக்களின் வாழ்வியலுடன் பிணைப்புற்ற நிலையில் வேள்வி வழிபாடும் முதன்மை பெறலாயிற்று தொல்காப்பியம் அந்தணருக்குரிய தொழில்கள் பற்றிக் கூறுகையில் வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல் என்று அவற்றை வரையறை செய்கின்றது. இவை வேதஙகளிலும் அவற்றின் வழிவந்த ஸ்மிருதிகளிலும் பிரமாணர்கள் தொடர்பாகக் கூறப்பட்ட வாழ்வியல் நியமங்களாக அமைவதைக் காணலாம்.

# அறநெறிக் காலம்

இந்துப்பண்பாடு சிலகாலம் நலிந்தும் சில காலம் வளாந்தும் சிறப்புப் பெற்றிருப்பதைக் காண்கின்றோம். இந்து சமய வளர்ச்சியில நலிவு ஏற்பட்ட காலங்களில் அப்பண்பாட்டை பேணிப்பாதுகாக்கும் நோக்கில் அரசர்கள், புலவர்கள் சமய அபிமானிகள் பல பணிகளை மேற்கொண்டு வந்திருப்பதனையும் நோக்க முடியும். தமிழ்நாட்டிலே கி.பி.3ம் நூற்றாண்டின் பின்னர் தமிழ் மூவேந்தராட்சி முடிவுக்கு வந்தபோது களப்பிரர் ஆதிக்கமும், பௌத்த மதச் செல்வாக்கும் காணப்பட்டமைக்கான பல்வகை சான்றுகளை நோக்க முடிகின்றது. சிலப்பதிகாரம் சமயச் சார்பான விடயங்களை கூறும் அதேவேளை மணிமேகலை இந்து தத்துவத்திற்கும் ஏனைய தத்துவஞானிகளுக்கும் இடையில ஏற்பட்ட வாதங்கள், தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் காணப்பட்ட போர் ஒழுக்கம், காதல் ஒழுக்கம் என்பவற்றினால் தோற்றம் பெற்ற சமுதாய சீர்கேடுகளைச் சீர்செய்யும் முகமாக அறநெறிப் போதனைகளை வெளிப்படுத்தும் நூல்கள் தோற்றம் பெற்றன. சமயச் சார்பாக சமூக சீர்திருத்தம் மேற்கொள்ளும் போக்கு சங்கம்மருவிய காலத்தில் நிலவியது. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்கள் இதற்குச் சான்று.

சிலப்பதிகாரத்தில பிறவாயாக்கைப் பெரியோன் கோயில் என்பது சிவாலயத்தைக் குறிக்க ஆறுமுக செவ்வேள் அணிதிகழ் கோயில் என்பது அணிகளால அலங்கரிக்கப்பட்ட முருக ஆலயத்தைக் குறிப்பிடுகின்றது.

சிலப்பதிகாரம் குறிப்பிடும் பதினொருவகை ஆடல்கள் சிவபெருமான், திருமால் ஆடிய ஆடல்களாகக் கூறப்பட்டுள்ளன. மாயோன், நீலமேனிநெடியோன், செங்கண் நெடியோன் என்னும் சொற்றொடர்கள் திருமால் வழிபாட்டைக் குறிப்பிடுவனவாக உள்ளன. புராணக்கதைகளின் இந்து சமய சிந்தனைகள் அறநெறிக் கால இலக்கியங்களில் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. சிவபெருமானின் அட்டவீரக் கதைகளுடன் தொடர்பான ஆடல்களை மாதவி ஆடியதாக சிலப்பதிகாரம் கூறுகின்றது. பெண் தெய்வங்களின் உபாசனைகளும் சங்கம் மருவியகால இலக்கியங்களில் காணப்பட்டமைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன. மாயோன் துணங்கையன் செல்வி என்னும் சொற்பதங்கள் இதற்குச் சான்று மாயவன் ஆடிய மரக்காலாடலும் என்னும் பாடலடி திருமால் ஆடிய கூத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

சிலப்பதிகாரப் பாடலிலே துர்க்கை சிம்மவாகினியாக நிற்கும் நிலை பின்வரும் பாடலடி மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

கரியதிரிக் கோட்டுக்கலை மிசைமேல் நின்றாயால்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்
என்னும் பாடல் வரிகளில் துர்க்கையின் வடிவம் வருணிக்கப்பட்டுள்ளது. கொற்றவையை தொடர்ந்து புகழும் போது

"வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை" "இரண்டு வேறு உருவில் திரண்ட தோள் அவுணன் தலைமிசை நின்ற தையல்"

என்பது மகிஷாசுர வதத்தை நினைவுபடுத்துகின்றது.

தத்துவார்த்த சிந்தனையை நோக்கும் போது இந்துக்களின் ஊழ்வினைக் கோட்பாட்டை அடியொற்றிய நம்பிக்கைகள் காணப்பட்டுள்ளன.

‘‘ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்’’ என்று சிலப்பதிகாரம் பாட சாங்கிய கொள்கையினரும் சைவ தத்துவவாதிகளும் அறநெறிக் காலத்தில் தமிழகத்தில் காணப்பட்டார்கள் என்பதனை மணிமேகலைக் காப்பியம் எடுத்துரைக்கின்றது.

மணிமேகலைக் காப்பியத்தில சைவவாதி என்னும் தத்துவப் பிரிவினர் காணப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இது சைவசித்தாந்த மரபினரைக் குறிப்பதாகும். அதே கால கட்டத்தில் எழுந்த திருமந்திரப் பாடல்களிலும் ஆகம மரபு தழுவிய சைவசித்தாந்தம் செல்வாக்கடைந்துள்ளது. மேலான தற்பரம் கண்டோர் சைவசித்தாந்தரே என்பது குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்தம் என்னும் சொல் முதன்முதலாக தமிழில் இக்காலத்திலேயே பயன்படுத்தப்பட்டது.

சங்கமருவிய காலத்திலே இந்துசமய நாடக வளர்ச்சிக்கான அடிப்படைகள் காணப்படுகின்றன.

கொற்றவை வழிபாட்டுடன தொடர்பான வேலன் வெறியாடல் கூத்து இந்து சமய ஆடல் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் சிலப்பதிகாரம் குறிப்பிடும் 11 வகை ஆடல்களும் இதன் பெருமையைச் சுட்டிக்காட்டுகின்றன.

## பல்லவர் கால இந்துப்பண்பாட்டு வளர்ச்சி

தமிழக வரலாற்றில் கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் 9ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி பல்லவர் காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் தமிழகத்தை பல்லவ, பாண்டிய அரசர்கள் ஆட்சி புரிந்தனர். எனினும் தமிழகத்தின் அநேகமான பகுதிகள் பல்லவர்களின் ஆதிக்கத்திலேயே இருந்தன. இக்காலப்பகுதியில் பக்தி இயக்கத்தை மையமாகக் கொண்ட சைவ வைணவ நெறிகளின் வளர்ச்சியைக் காணமுடிகிறது.

தமிழ்நாட்டுக்கு வடக்கே சாதவாகன வம்சத்தவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த சில மாகாணங்களுக்குத் தலைவர்களாக இருந்த பல்லவர்கள் சாதவாகன பேரரசுநிலை தளர தாம் தலைமை வகித்த மாகாணங்களுக்கு தாமே அரசர்களாகி தமிழகத்தின் வடபாகத்தைக் கைப்பற்றி கி.பி. 575ல் களப்பினரை வென்றனர். களப்பினரை தோற்கடித்து சிம்மவிஸ்ணு கி.பி 575 முதல் தொண்டை மண்டலத்தையம் அதன்பின் சோழ மண்டலததையும் கைப்பற்றி அபராஜித வர்மனை சோழமன்னனான ஆதித்ய வர்மன் தோற்கடித்து கி.பி. 890ம் ஆண்டு வரை பல்லவர் ஆட்சி நிலவியது.

### பல்லவ அரசர்களும் பண்பாட்டு வளர்ச்சியும்

பல்லவர் காலத்தில் தமிழகத்தை ஆண்ட பல்லவ அரசர்களுள் முற்கால பல்லவ மன்னர்களாக பப்பதேவன், குமாரவிஸ்ணு, ஸ்கந்தவர்மன், சிம்மவர்மன், நந்தி வர்மன் முதலியவர்களையும் இடைக்கால பல்லவ மன்னர்களுக்கு மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், ராஜசிம்மன் முதலானோரையும் பிற்கால பல்லவ அரசர்களுள் நந்திவருமன், 2ம் பரமேஸ்வரவர்மன், 3ம் மகேந்திரவர்மன், 2ம் நந்திவர்மன் போன்றவரையம் குறிப்பிடலாம். இக்கால அரசர்கள்
ஆலயங்களை அமைத்ததுடன், அவைசார்ந்த பணிகளிலும் ஈடுபட்டனர். ஆலயங்களுக்குக் கிராமங்களைத் தேவதானமாக வழங்கினர். கலைஞர்கள், சிற்பிகள், புரோகிதர்கள் சைவ வைணவ சமயப் பணிகளில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தது. ஆலயங்கள் கல்வி, பண்பாட்டு நிலையங்களாக விளங்கவும், வேதக்கல்வி, இதிகாச புராணக்கதை மரபு என்பன பரப்பப்படுவதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தினர்.

பல்லவர்கால இந்து பண்பாட்டு வளர்ச்சியிலும் பக்தி நெறியின் மறுமலர்ச்சியிலும் பெரும் பங்கு வகித்தவன் சிம்மவிஸ்ணு மன்னன். ஆயினும் இவனது மகனான மகேந்திரவர்மன் காலத்தில் இந்துமத மறுமலர்ச்சியில், புதுமைகளும் இடம்பெற்றன. இதன் பின்னர் வாதாபி சாளுக்கியருடன் போராடி தமிழகத்தை மீட்ட பெருமை மாமல்லனைச் சாரும். இவனை அடுத்து ராஜசிம்மன் 4ம் ஆண்டு ஆட்சிசெய்தான். இவனது காலத்தில் அவைதீக சமயம் வீழ்ச்சி அடைந்து வைதீகசமயம் உயர்நிலை பெற்றது.

தமிழகத்தில் பல்லவ அரசர்களின் ஆட்சியை நிலையாக ஏற்படுத்தியவன் என்ற பெருமை மகேந்திரவருமனுக்கே உண்டு. சமண சமயத்தை ஆதரித்த இவன் அப்பரால் சைவத்திற்கு மதம் மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவன் சைவத்தை தழுவியதையடுத்து சைவ நெறியின் வளர்ச்சியில் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. இவன் தன் சமயப்பற்றை வெளிப்படுத்தும் வகையிலும், தன் இறை நம்பிக்கையை வெளிப்படுத்தும் நோக்கத்திலும் பல குடைவரைகளை இந்து தெய்வங்களுக்காக உருவாக்கினான். இவன் மண்டகப்பட்டு என்ற இடத்தில் முதல் குடைவரையை அமைத்த பின் மகேந்திரவாடியம், மாமண்டூர், வல்லம், பல்லாவரம் முதலான குடைவரைக் கோயில்களை அமைத்தான். மகேந்திரவர்மனின் வியத்தகு திறத்தோன், சங்கீர்ணஜாதி, குணபரன், மத்தவிலாசன, சித்திரகாரபுலி, ஷேதாகாரி ஆகிய விருதுப்பெயர்கள் அவனது பல்துறைப் பாண்டியத்துவத்தையும், இந்து சமய ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகின்றன.

பல்லவ கால அரசர்களுள் மாமல்லன், 'முதலாம் நரசிம்ம பல்லவன்' என்று அழைக்கப்பட்டான். தமிழகத்தின் மீது கொண்டிருந்த வாதாபிச் சாளுக்கியரின் ஆதிக்கத்தை தடுத்து தமிழகத்தை மீட்ட பெருமைக்குரியவனாக நரசிம்மன் விளங்குகிறான். வாதாபியை வெற்றி கொண்டதை அடுத்து, வாதாபியிலிருந்து கணபதி வழிபாடு தமிழ் நாட்டிற்கு பரவுவதற்குக் காரணமக இருந்தான். இவன் மாபல்லபுரத்தை மையப்படுத்தி அமைத்த இந்து ஆலயங்கள் இவனது இந்து சமயப் பற்றுக்குச் சான்று.

மாமல்லபுரக் கலைக்கூடத்தையும் குடபோக மண்டபங்களையும் ஒற்றைக்கல் ரதக்கோயில்களையும் அமைத்தான். திரிமூர்த்தி மண்டபம், ஆதிவராக மண்டபம், மகிஷா சுரமர்த்தினி மண்டபம், தருமராஜ மண்டபம், மாமல்லபுரம் போன்றவை இவன் அமைத்த மண்டபங்களுக்கு உதாரணங்கள். மாமல்ல புரத்தில் நரசிம்மனால் அமைக்கப்பட்ட மலைதளிகள், மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களாலும் கிராமியத் தெய்வங்களின் பெயர்களாலும் அழைக் கப்படுகின்றன. அவை தருமரதம், வீமரதம், கணேசரதம், சகாதேவ ரதம், அர்ச்சுன ரதம், கொற்றவைரதம், வடக்குப் பிடாரிரதம், தெற்குப் பிடாரி ரதம், வலையான் குட்டை ரதம் எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. புராண இதிகாசக் கதைகளைச் சிற்பங் களாக வடித்தான். மாமல்லபுர ஒற்றைக்கற் கோயில்களுள் அருச்சுனன் ரதம், தர்மராஜரதம் ஆகியவை சிவனுக்குரியவை.

பல்லவர் கால அரசர்களுள் மற்றொருவனாகிய பரமேசுவரவர்மன் வித்யாவிநீதன் எனும் விருதுப்பெயரைக் கொண்டிருந்தான். இவன் கூரம் என்ற இடத்தில் சிவன் கோயிலொன்றை அமைத்தான். அக்கோயிற் பூசைகளுக்கென 108 சதுர்வேதிகட்கு நிலமளித்தான். இவன் தனது திருமுடியில் உருத்திராட்சத்திலான மகா சிவலிங்கத்தைத் தரித்திருந்தான் என்பதற்கு அறிஞர்கள் சான்றுகளைக் காட்டுகின்றனர். மாமல்லபுரக் கணேசர் கோயிற்கல்வெட்டு, பரமேசுவரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியினை எடுத்துக்காட்டும். அக்கல் வெட்டில் ‘சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை; அவனே முழுமுதற்கடவுள்; சிவனை நினை யாதோர் ஆறு முறை சபிக்கப்பட்டவர்கள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற பெயர்கொண்ட இராசசிம்மன் 40 ஆண்டுகள் ஆட்சி செய்தவன் என்ற பெருமையைப் பெறுகின்றான். இவனுடைய காலத்தில் தமிழ்நாட்டில் அமைதி நிலவியது. சிவ பக்தனாகையால் இவன் காலத்தில் சைவ நெறி சிறப்பாக வளர்ச்சி கண்டது. சிவசூடாமணி சங்கரபக்தன், ஆகமப்பிரியன், சிஷலாஞ்சனன், சைவ சித்தாந்த மார்க்கன் எனும் விருதுப்பெயர்களும் கலியுகத்தில் அசரீரி கேட்டவன் என்ற விருதுப்பெயரையும் கொண்டிருந்த ராஜசிம்மன், பூசலாரின் வரலாற்றுடன் தொடர்புபட்ட மன்னனாகவும் காணப்படுகின்றான். மகாபலிபுரத்திலும் காஞ்சிபுரத்திலும் சைவ ஆலயங்க ளையும் வைணவ ஆலயங்களையும் அமைத்தான். மகாபலிபுரத்தில் நரபதிசிம்ம விஷ்ணு ஆலயம், சத்திரய சிம்மேஸ்வரம் முதலானகோயில்களை அமைத்தான். காஞ்சிக் கடிகையை மறுசீரமைப்புச் செய்து, வடமொழிப் பண்பாட்டைப் பரப்பினான். பூசலார் நாயனார் வர லாற்றுடன் தொடர்புபடுத்தப்படும் மன்னனாக இவன் கூறப்படுகிறான்.

இராஜசிம்மனின் ஆட்சியின் பிற்காலத்தில் பல்லவர் பாண்டியர் தொடர்பு வலுப்பெற்றது. தமிழகத்தின் வடக்கில் பல்லவர்களும் தெற்கில் பாண்டியர்களும் ஆட்சி செய்தனர். அவர்களிடையே சமயப் பண்பாட்டு அடிப்படையில் ஒருமைப்பாடு நிலவியது. மேற்படி அரசர்கள் முதலில் தொண்டை மண்டலத்தையும் அதனைத் தொடர்ந்து சோழ மண்டலத்தையும் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்தினர். ஆந்திர மண்டலத்தின் தென்பகுதிகளும் பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. இவ்வரசர் காலத்தில் சைவ வைணவ ஆலயங்களுக்கு தனித்தனிச் சொத்துக்கள் வழங்கப்பட்டன. சிவாலயங்களுக்குச் சொந்தமான நிலபுலங்கள் தேவதானம் என்றும் வைணவ ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் திருவிடையாட்டம் என்றும் அழைக்கப்பட்டன.

இக்காலத்தில், வடஇந்தியாவிலிருந்து வந்த வைதீக கலாசாரம் தமிழ் கலாசாரத்துடன் கலந்தது. சதுர்வேதி மங்கலங்களும் கிருஷ்ண மங்கலங்களும் பெருகின. வைதீகக் கல்வி பரவியது. புராண இதிகாசக் கதைகளும் போதிக்கப்பட்டன. தமிழ்நாட்டு மக்கள் புராண இதிகாசக் கதைகளை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. சைவம், வைணவம் என்பவற்றுடன் பாசுபதம், கபாலிகம் என்னும் சைவப் பிரிவுகளும் வைசேடியம், சாங்கியம் முதலிய தத்துவக் கோட்பாடுகளும் பரவலாயின. இராசசிம்ம அரசன் அமைத்த பெரிய திருக்கற்றளி - காஞ்சி கைலாசநாதர் கோயில், தமிழகத்தின் பெரிய கட்டுமானக் கோயில் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

# நாயன்மார் ஆழ்வார்களின் பணிகள்

தமிழகத்தில் பல்லவர் காலம் முன்னைய காலங்களை விட சைவ வைணவ நெறிகள் மிகவும் தலைத்தோங்கிய காலப் பகுதியாக விளங்குகிறது. அவைதீக சமயங்களின் துறவு, அகிம்சை பற்றிய கருத்துக்களால் அலைப்புண்டிருந்த தமிழக மக்கள் சைவ, வைணவ நெறிகள்சார்ந்த சமய அனுபவங்களையும் தத்துவார்த்த உண்மைகளையும் உணரத் தொடங்கிய காலகட்டமாக இது அமைகிறது. படித்தவர்களுடன் சாதாரண மக்களையும் இலக்காகக் கொண்டு சைவமயத்தின் மீதான நம்பிக்கையை புதிய பாணியிலே வெளிப்படுத்தும் முறையால் கலை, இலக்கிய தத்துவரீதியான தாக்கம் நிறைந்த காலமாக பல்லவர் காலத்தைக் குறிப்பிடுவர். சைவ சமயம், வைணவ சமயம் என்னும் இருபெரும் நெறிகளை மையப்படுத்தியதாக பல்லவர் காலப் பக்தி இயக்கம் இரு தளங்களில் செயற்பட்டது.

பல்லவர் கால ஆழ்வார்களும் நாயன்மார்களும் பல நிலைப்பட்ட வகையில் தமது பணிகளை முன்னெடுத்தனர். புறச் சமயக் கண்டனம், சைவ சமய மீட்டுருவாக்கம், இறைவனை அன்புவழியில் வழிபடல், தோத்திரப் பாடல்கள் தோன்றுதல், பதிகம் பாடல், இசையுடன் பாடல் கலைஞர்களை இணைத்தல், சைவப் பெண்களைப் பக்தி இயக்கத்தில் இணைத்தல், மன்னர்களை சைவ சமயத்தில் சேர்த்தல், சிவசின்னங்களைப் பேணுதல், பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல் போன்றவற்றை சைவபக்தி இயக்கத்தினர் கடைப்பிடித்தனர். ஆலயத் தொண்டுகளைச் செய்தனர். ஊர் ஊராகச் சென்று, புராணக் கதைகளைக் கூறினர். ஆடிப்பாடி வழிபாடு செய்தனர். சிவனடியார் பக்தி இயக்கத்தில் கலந்து செயற்பட்டனர். பொதுமக்கள் நாயன்மார்களுடன் சேர்ந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். வைணவ சைவ சமயங்களே மெய்ச் சமயங்கள் என வலியுறுத்தப்பட்டன.

இந்து சமயத்தின் உயிர்நாதமாக விளங்கும் பக்தியை மக்களிடையே நிலைபெறச் செய்த பெருமை பல்லவர் கால அடியவர்களுக்குண்டு. பௌத்த மதத்தின் செல்வாக்குக் காரணமாக பாணர், கூத்தர், பொருநர், விறலியர் எனப்பட்ட கலைஞர்கள் சமுதாயத்திலிருந்து ஓதுக்கப்பட்டனர். பௌத்த துறவியர்கள் ஆடல் பாடல்களை வெறுத்தமை இதற்குப் பிரதான காரணமாகும். ஆடல், பாடல் தழுவிய இம்மரபு நாயன்மார் ஆழ்வார்களின் எழுச்சியினால் மீண்டும் சமுதாயத்தில் முக்கியம் பெறலாயிற்று. அவர்கள் இவற்றை பக்தியுடன் இணைத்து சமயத்தை நிலை நிறுத்துவதற்கான ஓர் உபாயமாகக் கையாண்டனர். கோயில்களில் அழுதல், விழுதல், தொழுதல் என்னும் நிலையில் மட்டுமல்லாது, ஆடுதல், பாடுதல், கூடுதல் மூலமாகவும் பக்தி நெறியை வளர்த்தனர். திருநாவுக்கரசரும்

'தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி சங்கரா சயபோற்றி.....'

என்று ஆலயத்தில் மெய்மறந்த இறை அனுபவம் ஆடலாகவும், பாடலாகவும் வெளிப்ப டுவதனைப் பாடுகிறார்.

பல்லவர் கால அடியவர்கள் வடமொழிக் கலாசாரம் தழுவிய புராண இதிகாசக் கதைகளை தமது பாடல்களில் பயன்படுத்திய ஆழ்வார், நாயன்மார்கள் அதன் வாயிலாக மக்களிடையே தமது சமயத்தை நிலைபெறச் செய்வதற்கு முனைந்தனர். சிவன், விஸ்ணு என்போரின் வீரதீரச் செயல்கள், அடியவர்களுக்கு அருளும் திறன், அடியவர்களின் பக்தி வைராக்கியம் முதலான விடயங்களை மக்களுக்கு உணர்த்தும் வகையில் புராண இதிகாசக் கதைகளை ஆதாரம் காட்டினர். சிவன், யமனை உதைத்தமை, மன்மதனை, திரிபுரத்தை எரித்தமை, முதலிய செயல்களைக் கூறினர். ஆழ்வார்கள் விஸ்ணுவின் பத்து அவதாரங்களை தமது பாடல்களில் வெளிப்படுத்தினார்கள். மாணிக்கவாசகர், சிவன் ஆதியந்தம் அற்றவர் எனும் உண்மையை மக்களுக்கு உணர்த்துவதற்கான அடிமுடி தேடிய கதையை எடுத்தாண்டுள்ளார். அவரது

'மாலறியா நான்முகனும் காணாமலையினை நான்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்'

என வரும் பாடல் இதற்குச் சான்று. அதேவேளை இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தவேளை அவனுக்கு அநுக்கிரகம் செய்த வரலாறும் சிவன் அரிச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் வழங்கிய கதையும் மக்களிடையே பரப்பப்பட்டன. இலங்கை அரசனாகிய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தமையினையும், அதனைத் தடுத்த சிவபெருமான் இராவணனுக்கு அருள் புரிந்தமையினையும் திருஞானசம்பந்தர் மக்களுக்கு எடுத்தியம்பியுள்ளார். 'குன்றம் ஏந்தி குளிர்மழை காத்தவன் அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்' முதலான ஆழ்வார்பாடல்களில் விஷ்ணுவின் பராக்கிரமம் கூறப்பட்டுள்ளது.

பிரான் பரன்' என்று விஷ்ணுவின் அவரதாரப் பெருமையை ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆன்மீக ஈடேற்றத்திற்கான சாதனைகள் பல்லவர்கால அடியவர்களின் பணிகள் வாயிலாக செயல் வடிவம் பெற்றன. இதில் நாற்பாதங்களும், வைணவம் கூறும் ஆறு வகையான உறவு முறைகளும் இதனுள் அடங்கும். பல்லவர்கால அடியவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களின் வழி வாழ்ந்து, மக்களுக்கு வழிகாட்டினர். திருநாவுக்கரரர் உழவாரங்கொண்டு சரியைத் தொண்டுகள் புரிந்தார்.

'நிலைபெறுமாரென்னுதியே நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு.......... '

என்று சரியை நெறியாளன் ஆலயமொன்றில் ஆற்றும் சரியைத் தொண்டுகள் பற்றி அப்பர் பாடியுள்ளார். சுந்தரர் யோக நெறியை தோழமை உணர்வுடன் பின்பற்றியமையை அவரின் பாடல்களால் அறியமுடிகிறது. ஞான மார்க்கத்தில் தனது இறை அனுபவத்தை வெளிப்படுத்தியவராக மாணிக்கவாசகர் விளங்குகிறார். இவரது திருவாசகப் பாடல்கள் ஞான நெறியின் விளக்கமாக அமைகின்றன. ஆண்டாள், பெரியாழ்வார் முதலான ஆழ்வார்கள் தாகியம், சகியம், வாச்சலியம், மதுரம் முதலான உறவு நிலைகளில் நின்று விஷ்ணுவின் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தி னார்கள். ஆண்டாள் மதுர பாவனையில் தன் இறை அன்பை வெளிப்படுத்தினார். அவரது மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத .....'என வரும் பாடல் இவரது மதுர பாவனைக்கச் சான்று.

பக்தி இயக்கத்தின் முக்கியமான அம்சமாக விளங்கியவை பக்திப் பாடல்களே. பக்தி நெறியை நிலை நிறுத்திய ஊடகம் என்ற வகையில் இசைப் பாடல்கள் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன. அவை தெய்வப் பெருமைகளைப் கூறும் அதேவேளை தெய்வீக நம்பிக்கையுடைய அடியார்களின் பக்தி உணர்வுகளையும் வெளிப்படுத்துவனவாக இருந்தன. அடியவர்களால் அருளப்பட்ட பாடல்கள் இதற்குச் சான்று. தேவார முதலிகள் அருளிய தேவாரத் திருமுறைகளும், ஆழ்வார்களின் நாலயிரத் திவ்விய பிரபந்தங்களும் இந்நோக்கத்திலேயே அருளப்பட்டவை. தமது இறையுணர்வை வெளிப்படுத்துவதற்கும், சிவனின் தோற்றப் பொலிவுகளை மக்கள் மனக் கண்ணில் நிலைபெறச் செய்வதற்கும், மக்களுக்கு இறை நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் மக்களுக்கு சமய உண்மைகள், சமய அனுட்டானங்களை விளக்குவதற்கும், தலயாத்திரைகளை மேற்கொள்வதற்கும் இவ்வருட்பாடல்கள் பெரிதும் உதவியன. திருஞானசம்பந்தர்

'தோடுடைய செவியன் விடையேறியோர் ......'

எனத்தொடங்கும் தனது முதல் பாடலிலேயே சிவனின் தோற்றப் பொலிவை வெளிப்படுத்தியுள்ளார். அப்பர் திருத்தாண்டகத்தை சிறப்பாகக் கையண்டமையாலேயே அவர் 'தாண்டக வேந்தர்' எனும் நாமத்தைப் பெற்றார். இதுபோலவே 'பச்சைமாமலைபோல் மேனி............' எனத்தொடங்கும் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாடல் விஷ்ணுவின் திருவுருவ அழகை மக்களின் மனக்கண் முன் கொண்டு நிறுத்துகிறது.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்போரால் ஆற்றப்பட்ட அற்புதங்கள் குறித்த கால சமய வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. பல்லவர் கால பக்தி இயக்கம் பொது மக்கள் இயக்கமாக புது வடிவம் பெறுவதற்கு இது உந்துசக்தியாக அமைந்தது. தமக்கும் மக்களுக்கும் துன்பங்கள் ஏற்படும் சந்தர்பங்களிலும், பிற சமயத்தவர்களுடன் வாதங்களில் ஈடுபடும் வேளைகளிலும் இவர்களால் பல அற்புதங்கள் ஆற்றப்பட்டன. நாயன்மார்கள் ஆண் பனைகளை பெண் பனைகளாக்கியமை, படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தமை, எலும்பைப் பெண்ணாக்கியமை ஆற்றிலிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமை முதலான அற்புதங்களை நிகழ்த்தினர். திருக் களிற்றுப்படியார் சைவ நாயன்மார்களின் அற்புதங்கள் பற்றிக் கூறுகிறது. சம்பந்தர் சமணர்களுடன் புன்ல்வாதத்தில் ஈடுபட்டபோது 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்...............' எனும் பாடலைப்பாடி சைவமே உண்மைச் சமயமென உணர வைத்தார். ஆழ்வார்கள் இவை போன்ற அற்புதங்களை ஆற்றி வைணவ நெறியை நிலைபெறச் செய்தனர்.

# சோழர் காலம்

தமிழக அரச வம்சங்களில் சோழ அரசர்கள் சங்ககாலம் முதல ஆதிக்கம் செலுத்தினாலும் சோழப் பேரரசு என்பது கி.பி. 850 தொடக்கம் தமிழகத்தில் நிலை பெற்றது. கி.பி.850 கி.பி.1015 வரையிலன காலப்பகுதியில் முதலாம் ஆதித்தன் முதலாம் பராந்தகன் கண்டராதித்தன் 2ம் பராந்தகன் முதலிய மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். இவ்வரசர்களைத் தொடர்ந்து இராசராச சோழன் இராசேந்திரசோழன் ஆகியோரும் ஆட்சி செய்தனர். கி.பி.1229 -1280 வரையிலான காலகட்டத்தில் 1ம் குலோத்துங்கன், இரண்டாம் இராசேந்திரன் ஆகியோரும் ஆட்சி செய்தனர்.

ஆரம்பகால சோழப் பேரரசர்கள் விசயாலய சோளேஸ்வரம் கொடும்பாரூர் மூவர் கோயில், கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோயில் என்பன செல்வாக்கடைந்தன. சோழர் ஆட்சிக்காலம் இந்துசமய வரலாற்றில் பொற்காலமாகவும், காவிய காலமாகவும், பெரும் தத்துவமாகிய சைவசித்தாந்த எழுச்சிக் காலமாகவும் அமைகின்றது. சோழ அரசர்கள் தமிழ்நாட்டில் மட்டுமன்றி தென்கிழக்காசியா, வடஇந்தியா, இலங்கை முதலிய பிரதேசங்களிலும் தமது பண்பாட்டைப் பரப்பினார்கள். இதனால் சோழ அரசர்களை கங்கை கொண்டான் கடாரம் வென்றான் என்றும் புகழ்ந்தனர். சோழ மண்டலம், ஈழமண்டலம் வேங்கை மண்டலம் அனைத்தும் சோழ அசரர் கைவசமாகியது.

சோழ அரசர் பண்பாட்டை வலியுறுத்துவதற்கு பல்வகைச் சான்றுகளை ஆதாரமாகக் காட்டுவர். கல்வெட்டு, செப்புப்பட்டயம், முன்னைய கட்டடங்கள். இலக்கியம் பொறிப்புகள் என்பனவும் சோழர் கால பண்பாட்டை அறியும் சான்றுகளாக அமைந்துள்ளன.

### சோழ அரசரும் பண்பாட்டு வளர்ச்சியும்

சோழ அரசர்கள் சைவ வைணவ மரபைப் பின்பற்றியவர்களாவர். சிவனேசச் செல்வர்களாக விளங்கினர். திருநீற்றுச்சோழன் திரிபுவனச் சக்கரவர்த்தி, சிவபாதசேகரன் எனப் புகழப்பட்டமை அவரது சைவ ஈடுபாட்டினை குறிப்பிடுகின்றது சோழவரசரது ராஜ்யசின்னமாக நடராச வடிவமும் நந்திக் கொடியும் விளங்கின. பல்லவர்கால பண்பாட்டுத் தொடர்பில் சோழ அரசு வளர்ச்சியடைந்தது. பல்லவ - பாண்டிய ஆட்சியைத் தொடர்ந்தே விசயாலய சோழன் தனது ஆதிக்கத்தைப் பரப்பினான். பராந்தகனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து பல்லவ சாம்ராட்சியம் வீழ்ச்சி கண்டது. பல்லவ வீழ்ச்சியை தொடர்ந்து தொண்டை மண்டலத்திலும் சோழராதிக்கம் பரவியது.

சோழராட்சியிலே வடநாட்டில் இருந்து வடமொழிப் புலமை மிக்க புரோகிதர் வருகை காணப்பட்டது. அவர்கள் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் இருத்தப்பட்டனர். சதுர்வேதி மங்கலங்கள் உருவாக்கப்பட்டன.

- ஆதித்த சோழன்- பாடல் பெற்ற தலங்களை புதுப்பித்தான். இதில் திருவாவடுதுறை, திருவாலங்காடு முதலிய கோயில்கள் அடங்குகின்றன.
- விசயாலய சோழன் - விசயாலய சோழேஸ்வரத்தையும் நிசும்பசூதனி கோயிலையும் அமைத்தான்.
- பராந்தகன் - காவிரிக்கரைக் கோயில்களைப் புதுப்பித்தான்.
- இராசேந்திரசோழன் - கங்கை கொண்டசோழேஸ்வரத்தையும் இலங்கையில் வானவன் மாதேவி ஈஸ்வரத்தையும் அமைத்தான்.
- 2ம் ராஜராசன் - தராசுரம்கோயிலையும்
- குலோதுங்க சோழன் - திரிபுவனம் கோயிலையும் அமைத்ததாக வரலாறு கூறுகின்றது.

சோழ அரசியர் நினைவாகவும் கோயில்களை அமைக்கும் முறை பின்பற்றப்பட்டது. கோயில்களில் அரசர்களது திருநட்சத்திர நாட்களும், பிறந்த நாள் விழாக்களும் கொண்டாடப்பட்டன. ஐப்பசி சதய விழா பெருவிழாவாக கொண்டாடப்பட்டது. ஆகம முறையான பூசைகளுக்கு இலக்கணமாக தஞ்சைக் கோயில் விழாக்கள் அமைந்தன. கோயில் வழிபாட்டிற்காக சிவனடியார் திருவுருவங்களும் திருமேனிகளும் பிரதிஸ்டை செய்யப்பட்டன. 12 மாதங்களுக்கும் 12 விழாக்களை கொண்டாடும் முறை பின்பற்றப்பட்டது தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், புரட்டாதி விழா மார்கழித் திருவாதிரை ஆகியவற்றுடன் கிரகண நாட்களிலும் பெருவிழாக்களாகக் கொண்டாடப்பட்டன. சோழ அரசர்கள் திருக்கோயில் களையே அரண்மனைகளாகக் கருதினர். அங்கு பிராமணர்களுக்கும் கலைஞர்களுக்கும் புலவர்களுக்கும் விருதுகளை வழங்கினர். உதாரணமாக தலைக்கோலிபட்டத்தைக் குறிப்பிடலாம்.

சைவ இலக்கியங்களின் செல்வாக்கினை அரசர்களூடாக கோயில்கள் பாதுகாத்தன. திருமுறைப் பாடல்கள் தேடப்பட்டன. கோயில்களிலே பாடப்பட்டன, பண்வகுக்கப்பட்டது திருமுறை ஓதுவார் மரபும் கோயிலில் பின்பற்றப்பட்டது ஓதுவார்களை பிடாரர்கள் என்று அழைத்தனர். தஞ்சைக் கோயிலில் 48 பிடாரர்கள் நியமிக்கப்பட்டனர். கோயில்களுக்கான நிவந்தங்களில் அவிப்புறம், அர்ச்சனா போகம், வீணைக்காணி, திருப்பதியகாணி, உவச்சகாணி, திருக்கைக்கோட்டி, திருமெழுக்குப்புறம், திருவிளக்குப் புறம் என்பன பிரதானமானவை.
கோயில் பணியாளர்களுக்கு தேவரடியார் ரிஷபத்தளியிலார் நிருக்த விடக்கியர் முதலானோரும் தேவார முதலிகளும் தேவார தேவர்களும் பணி செய்யலாயினர். கோயில்கள் கல்விக் கூடங்களாகவும், ஆதுலர்சாலைகளாகவும் விளங்கின. அரசர் அரசியர் நினைவாக ஆதுலர் சாலைகள் அமைக்கப்பட்டன.

**சோழர் காலத்து கோயில்களும் பண்பாட்டு வளர்ச்சியும்**

இந்துப் பண்பாட்டு விருத்திக்கான மைய இடங்களாக கோயில்கள் விளங்கலாயின. கோயில்களில் வேதவிருத்தி புராண விருத்தி, பாரத விருத்தி முதலியவற்றுக்காகப் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஆலயங்களுக்கு அண்மையில் மடங்களும் அமைக்கப்பட்டன. திருமுக்கூடல் எனுமிடத்தில் வணிகர்கள் அமைத்த மடங்கள் காணப்படுகின்றன. கோயில்களில் வக்காணிப்பு மண்டபம், தேவார சுற்று மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டன. கோயில்களில் கணக்கு பொத்தகம், நூலகம், கலைக்கூடங்கள், வைத்திய சாலை என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது. பெருங்கோயில், பெருவிமானம் என்பவற்றின் வளர்ச்சியுடன் பெரும் காப்பியமும் தொடர்புபட்டன.

கோயில் சார்ந்தே பதிகங்கள் சோழர் காலத்திலும் எழுச்சி பெற்றன. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடல்கள் இதற்கு சான்றானவை. கோயில்களில் அம்மன் வழிபாட்டிற்கான திருக்கமைக் கோட்டம் முக்கியமான இடமாகும். திருக்கமைக் கோட்டம் அம்மன் சந்நிதியாக கூறப்படுகின்றது. கோயில்களின் சுற்றுப்பிரகார அமைப்புகளும் விரிவடைந்தன. தேரோடும் வீதி தேர்விழா என்பனவும் கோயிலுடன் தொடர்பாக வளர்ச்சி பெற்றன. ஆலயங்களில் நாயன்மார் வழிபாடு, நாயன்மார் குருபூசை, நாயன்மார் வாழ்வியலை ஆற்றுகை செய்தல் என்பனவும் காணப்பட்டது.

**சோழர் கால வைணவமும் வேதாந்த மரபும்**

பல்லவர் காலத்தில் மங்கலாசனம் பெற்ற வைணவக் கோயில்கள் சோழர்காலத்தில் விண்ணகரம் எனப் பெயர் பெற்றன. வைணவத்திற்கு மன்னர்கள் ஆதரவு வழங்கினர். ஆழ்வார் பாடல்களுக்கும் உரை வகுக்கப்பட்டது. நாத முனிவர், யமுனாச்சாரியார், இராமானுசர், மத்துவர், கம்பர் முதலியோர் வைணவர் பணி செய்தனர். ஆழ்வார் மரபு ஆச்சாரியாரர் மரபாக வளர்ச்சியடைந்தது. கம்பராமாயணத்தில் இராம வழிபாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆழ்வார் பாடல்களின் சாராம்சமாக அமைந்தன ஸ்ரீரங்கக் கோயில் வைணவ தலைமைபீடமாக அமைந்தது. இராமானுசர் வேதாந்தம் நம்மாழ்வார் பாடல் சாராம்சமாக விளங்கியது. விஷிட்டாத்வைத வேதாந்தம் விரிவான வளர்ச்சி கண்டது. இராமானுசரின் வைணவ கைங்கரியங்களால் வைணவம் எழுச்சியுற்றது. நம்மாழ்வார் வரலாற்றினை சடகோபரந்தாதியாக கம்பர் இயற்றினார். ஆழ்வார் பாடல்கள் வைணவ கோயில்களில் பாடப்பட்டன. தேடரும்திறல் என்னும் பாடல் தினமும் பாராயணம் செய்யப்பட்டது. ஆழ்வார் பாடல்கள் தொகுக்கப்பட்டன. ஆழ்வார் பாடல்களுக்கு இசையமைத்து நாடகமாக நடிக்கும் விழாவும் காணப்பட்டது. அவ்விழா பிரபந்த அத்தியயனம் என அழைக்கப்பட்டது. அநாயர் என்னும் கலைஞர்கள் இதற்கு முன்னோடியாக விளங்கினர்.

# விஜய நகர நாயக்கர் காலம்

தென்னிந்திய இந்து சமய வளர்ச்சியிலும் தமிழக இந்து சமய வளர்ச்சியிலும் பெரும் பங்கெடுத்த காலகட்டமாக விஜயநகரர் ஆட்சியைக் குறிப்பிடலாம். கி.பி.1336இல் கர்நாடக மாநிலத்தில் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டதை தொடர்ந்துத் தமிழகத்திலே கி.பி 15ம் நூற்றாண்டில் நாயக்க மன்னர் ஆதிக்கம் பரவியது விஜய நகர அரசர்கள் தமிழகத்தில் பரவிய அதேவேளையில் இஸ்லாமியரது ஆதிக்கமும் தென்னிந்தியாவை நோக்கிப் பரவியிருந்தது.

மரபு வழியான இந்துப் பண்பாட்டில் இஸ்லாமியர்கள் தாக்குதல்களை நடாத்தினர். இந்துக் கோயில்களைச் சிதைத்து இந்துச் சிற்பங்கள் ஏனைய கலைப் பாரம்பரியங்களையும் சிதைத்தனர். இதனால் கர்நாடக தேசத்தில் மேலான நிலை பெற்றிருந்த இந்துப் பாரம்பரியம் தளர்வுறும் நிலை ஏற்பட்டது. டில்லிச் சுல்தானியர்களே கர்நாடக இந்துப் பண்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தினர் இந்துப் பண்பாட்டினைப் பாதுக்கும் முகமாகவே விஜயநகரப் பேரரசு எழுச்சி பெற்றது.

விஜயநகரப் பேரரசு பற்றி அறியப் பல மூலாதாரங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை தொகுத்து அவதானிக்கும் போது

1. இலக்கிய ஆதாரங்கள்
2. தொல்பொருள் ஆதாரங்கள்
3. அயல் நாட்டவர் குறிப்புக்கள் என மூன்று வகையாக நோக்க முடியும்.

இலக்கிய ஆதாரங்களில் வடமொழி, தமிழ் கன்னட மொழி இலக்கியங்கள் விஜயநகராட்சி பற்றிய செய்திகளைத் தருகின்றன. சமஸ்கிருத இலக்கியங்களில் மதுரா விஜயம் என்பது விஜயநகர தோற்றம் பற்றி குறிப்பிடுகின்றது இந்நூலில் விஜயநகர மன்னராட்சிக்கு குமார கம்பணர் என்றும்சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட பிரபன்னாமிர்த் என்றும் நூல் ஆனந்தராயர் என்பவலால் எழுதப்பட்டது. திருசுரங்கக் கோயில பண்பாட்டை இஸ்லாமிய படை எடுப்பில் இருந்து பாதுகாதத வரலாற்றைக் குறிப்பிடுகின்றது. இக்கால கட்டத்தில் மாதவர், சாயனா எழுதிய உரை நூல்களும் விஜயநகர அரசர் வரலாற்றினை எடுத்துக் கூறுகின்றன. சாயனாச்சாரியார் எழுதிய உரை மாதவ்ய தாது விருத்தியாகம். மாத்வாச் சாரியார் எழுதியது வேதபாஷியம் என்னும் நூலாகும். இதனால் வைதீக மரபுக்கலாசாரம் விஜயநகரர் ஆட்சியில் மீளுருவாக்கம் பெற்றது.

தெலுங்கு மொழியில் தோற்றம் பெற்ற நூல்களில் ஆமுக்த மால்யதா என்னும் நூல் கிருஷ்ணதேவராயரின் படைஎடுப்பு பற்றியும் அவரது இந்து சமய ஆச்சார்யத்தையும் இறைவழிபாட்டையும் எடுத்துக் கூறுகிறது. ஏகாதசிவிரதம் கிருஷ்ண தேவராயரால் அனுஸ்டிக்கப்பட்டதாகவும் நான்குயாமப் யாமப் பூசைகள் இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. இஸ்லாமிய தாக்குதலுக்கு எதிராக கிருஷ்ணதேவராயர் மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகளும் இந்நூலில் விலாவாரியாகக் கூறப்பட்டுள்ளன.

மதுரைத் தலவரலாறு, கோயிலொழுகு முதலிய நூல்கள் விஜயநகர அரச பற்றி தோற்றம் பெற்ற தமிழ் இலக்கியங்கள். கோயிலொழுகு என்னும் நூல் விஜயநகராட்சியில் திருவரங்கக் கோயில் பெற்ற பண்பாட்டுச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. தனிப்பாடல் திரட்டு கரிதாசரின் இரு சமய விளக்கம், ஏகாம்பநாதருலா முதலிய நூல்களும் விஜயநகர நாயக்கர் பண்பாடு பற்றி சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

விஜயநகர ஆட்சியில் நடைபெற்ற பண்பாட்டம்சங்களின் விருத்தி பற்றிய தொல் பொருட்களை அவதானிக்கும் போது கல்வெட்டுக்களும் செப்பேடுகளும சான்றாக அமைந்தன. இக் கல்வெட்டுக்களும் தமிழ், வடமொழி, தெலுங்கு மொழிகளில் பொழியப்பட்டுள்ளன. விஜய நகர அரசர்களாகிய அரிகரனின் செப்பேடுகள், விருப்பன்ன உடையார் செப்பேடுகள் ஆகியன அரசர்களது பணிகளைக் கூறுகின்றன. விஜயநகரம் விருலாட்சகர் கோயில் அவர்கள், கோபுரம், கோட்டை, தெப்பக்குளம், சிற்பம் என்பவற்றின் எஞ்சிய பாகங்களும் தொல்பொருட் சின்னங்களாக சிறப்பிக்கப்படுகின்றன. மன்னர் திரு உருவம், நாணயம் என்பனவும் விஜயநகர ஆட்சிக்கால எச்சங்களாக விளங்குகின்றன. நிக்கொலஸ் கொண்டி என்னும் பிறநாட்டு அறிஞரும் விஜயநகர ஆட்சி பற்றிய கருத்துக்களை குறிப்பிட்டுள்ளன.

**விஜயநகரப் பேரரசின் தோற்ற சூழலும் தமிழ்நாட்டில் அதன் செல்வாக்கும்.**

விஜயநகர ஆட்சியில் சங்கமர், சாருவர் துளுவா என்னும் அரசவம்ச ஆட்சி இடம்பெற்றது. 1323ம் ஆண்டு சங்கம மரபினர் விஜயநகர ஆட்சியை ஆரம்பித்தனர். அரிகரன், ஆகியோரும் சங்கம மரபில் ஆட்சி செய்தனர். கரிகரர் புக்கரே விஜயநகர ஆட்சியில் முதன்மை அரசராவர். சாளுவ மரபில் ஆட்சி செய்த சாளுவ நரசிம்மன் பணிகளில் அக்கால வைணவ சமய வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. சாளுவ அரசவம் சத்தவர்கள் கி.பி.1485ஆம் ஆண்டுகளில் ஆட்சி செய்தனர்.

துளுவ மரபினர் கி.பி.1500 ஆட்சியை ஆரம்பித்தனர். துளுவ அரச வம்சத்தினரில் ஒருவராகவே முதலாம் பிருஷ்ண தேவராயர் பணி செய்தார். துளு வம்சத்தில் அச்சுத் தேவரா, இராமராயர், சதாசிவராவர் முதலியோரும் ஆட்சி செய்தனர். வதயாரண்யர் என்னும் அமைச்சர் இவ்வாட்சியை ஆரம்பித்ததாகவும் அவரே சங்க குலத்தாருக்கு இவ்வாட்சியை ஒப்படைத்தார் எனவும் இலக்கியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

வித்யாரண்டா துங்கபத்திரி நதிக்கரையில் விஜய நகரத்தை துங்கலத்திரா நதிக்கரை வரலாற்றுச் சிறப்பும் புராணப் பெருமையும் உடைய இடமாக விளங்கியது. இராமாணயக் கதையின் களமாக கிஸ்கிந்தை விளங்கியதெனவும அவ்விடமே விஜயநகரமாக அமைந்ததாகவும கூறப்படுகின்றது. முதலாம் கரிகரன், முதலாம் புக்கன் ஆகியோரைத் தொடர்ந்து புக்களின் மகனாகிய குமாரகம்பனை விஜயநகரப் பேரரசு தமிழக்திற்கு பரப்பிய முதலாவது அரசன் ஆவார். தமிழ் நாட்டில் விஜயநகர பேரரசு பரவியமைக்கு குமார கம்பணன் என்னும் அரசனே காரணம் என்பர்.

குமாரகம்பணன் ஆட்சிக்காலத்தில் பல்வகை ெல்வாக்கை வெளிப்படுத்தினான். இதனால் மதுரை, திருவரங்கம், திருவானைக்கா, தில்லை முதலிய ஆலயங்களில்ம் தடைப்பட்ட வழிபாடுகள் மீண்டும் இடபெற வாய்ப்பேற்பட்டது. குமார கம்பணன் பாண்டி நாட்டையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். குமாரகம்பணன் ஆட்சி மண்டலேசுவரர் ஆட்சி எனக் குறிப்பிடப்பட்டது. மண்டலங்களை ஆட்சி செய்தமையால் மண்லேஸ்வரர்கள் என அரசர்கள் அழைக்கப்பட்டனர்.

இவ்வரசர் ஆட்சியில் தேர்த் திருவிழாக்கள் நடைபெற்றன . தேவரடியார்கள் தேர்களில் அமர்ந்து பல்வகை இசைக் கருவிகளை இசைத்தனர். திருக்கார்த்திகையில் தீபமேற்றி மஞ்சள் நீர் தெளித்து வழிபாடு செய்தனர்.

**விஜயநகர மன்னர்களும் இந்து சமய விருதுகளும்.**

விஜயநகர மன்னர்கள் தமது உடலில் விருபாட்சகர் என்னும் குறியீட்டை பொறித்தனர். சைவ மக்கள் விருபாட்சகர் பொறிப்பைக் குறிப்பிட வைணவர்கள் ஸ்ரீராம லட்சிணையைப் பொறித்தனர். மண்டலேஸ்வரர் எனவும் அழைக்கப்பட்டனர். சாளுவ நரசிம்மா அரசர் ஸ்ரீமன் இராஜாதிராஜா ராஜபரமேஸ்வரர் என அழைக்கப்பட்டார். இரண்டாம் கரிகாரர் ராஜவியாசன், ராஜ வான்மீகி ஆகிய விருதுப் பெயர்களைக் கொண்டிருப்பதாக அக்கால கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இரண்டாம் கரிகரன் அவர்களே விஜயநகரத்தில் சைவநெறி வளர்ச்சியும் வைணவமும் வேறுபட்ட சமய நெறிகள் என்பதையம் அவற்றுக்காக தனித்தனி பக்தி மார்க்கங்களையும் எடுத்துக் காட்டினார். திருக்காளாத்தி, திருப்பதி, சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய ஆலயங்களுக்கு பல நிபந்தங்களை வழங்கிய அரசராகவும் இரண்டாம் அதிகரரை குறிப்பிட முடியும்.

**கிருஷ்ணதேவராயரும் இந்து சமயக் கோட்பாடும்.**

கிருஷ்ண தேவராயர் வைணவர் அட்டதிக்கஜம் என்னும் அவைக்களப் புலவர்கள் எண்மரைக் கொண்டிருந்தார். அப் புலவர்கள் சைவவாதிகளாகவும் அத்வைத கொள்கையுடையோராயம் இருந்தனர். வைணவராக இவர் விளஙகிய வேளையிலும் விஜய நகரம் விருபாட்சகரையே வழிபட்டார். விட்டாலா கோயிலமைத்து விட்டாலா வழிபாட்டையும் பரப்பினார். தலயாத்திரை செய்து தலங்களுக்கான தானதருமங்களையும் வழங்கினார். ஆலயங்களுக்கு பதினாயிரம் வராகன் வழங்கினார் என கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ராஜகோபுரங்கள் ஆயிரங்கால் மண்டபங்களையும் அமைத்தார். கலிங்க நாட்டை வெற்றி கொண்ட பின் சிதம்பரம் வடக்குக் கோபுரத்தை வெற்றிச் சின்னமாக அமைத்தார் என அவருடைய செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

கிருஷ்ண தேவராஜர் அரசராக மட்டுமன்றி புலவராகவும் பணி செய்தார். இவரது ஆமுக்த மால்யதா ஆழ்வார் வரலாறுகளையும் வைணவ செல்வாக்கையும் கூறுவதாகும். அவருடைய அவைக்களப் புலவர்கள் எட்டுப் பேரில துர்ஜாதி எனும் புலவர் களாத்தி மகாத்மியம் என்னும் நூலை எழுதியுள்ளார். இவரது காலத்தில் வாழ்ந்த கரிதாசர் இருசமய விளக்கம் எனும் நூலை எழுதினார். விஜய நகராட்சியில் வைணவமே மேலான சக்தி உடையதாக விளங்கியுள்ளமையை காண்கிறோம்.

கிருஷ்ண தேவராயர் ஆட்சியுடன் இணைந்ததாக அச்சுதராயர் இராமராயர் என்னும் அரசர்கள் விஜயநகரத்தை ஆட்சி செய்தனர். அச்சுதராயர் ஆட்சியிலேயே தென்னிந்தியா மீது படை எடுப்பு இடம் பெற்றது. அச்சுதராயர் பாண்டி நாட்டில் இந்து கலாசாரம் பரவப் பணி செய்தார். அச்சுதராயர் காலத்திலேயே மதுரை நாகக்கர் செஞ்சிநாயக்கர், தஞ்சை நாயக்க மன்னர்கள் ஆட்சி ஆரம்பமாயிற்று. விஜயநகரர் படை எடுப்புக்களின் இறுதி நிலையில் தலைக் கோட்டைப் போர் முதன்மை பெற்றது. அதன் பெறுபேறாகவே தமிழகம் நாயக்க அரச வம்சத்தினர் கைவசமானது. விஜயநகரர் நாயக்கரை தமது குறுநில மன்னராக நியமித்தார்.

**விஜயநகர கால பண்பாட்டு விருத்தி**

விஜயநகர ஆட்சியில் வருணாச்சிரம தருமம் மேல் நிலை பெற்றிருந்தது. வைணவ வழிபாடுகள் ஆழ்வார் பாசுர அடிப்படையில் இடம்பெற்றன. அந்தணர்களுக்காக அரசர்கள் சைவாலயங்களுக்கு வழங்கிய தருமம் பிரமதேயம் என்றும் வைணவ போயில் நிபந்தம் திருவிடையாட்டம் என்றும் அழைக்கப்பட்டன. யூ சைவம் வைணவ மடமாக விளங்கியது. திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய ஆதீனங்களில் அந்தணர்கள் தங்கியிருந்து கோயில் பரிபாலனங்களில் ஈடுபட்டனர். வீர சைவ மடங்களில் அந்தணரல்லாதோர் பணி செய்தனர்.

சைநெறி சுமார்த்தசைவம், சைவசமயம், வீரசைவம் என விரிவடைய வைணவம் வடகலைவைணவம், தென்கைலை வைணவம் என விரிவுபட்டது. வைணவப் பிரிவினரின் பக்தி முறைமைகளும் வேறுபட்டன. பிள்ளை லோகாசுசாரியங்கள் வேதாந்த தேசிகர் இப்பக்திமுறைமைகளை அறிமுகம் செய்தனர். மார்க்கட நியாயம், மாச்சார்ய நியாயம் எனும் பக்தி உறவில் வைணவம் பரவிச் சென்றது.

சுமார்த்த சைவம்- சண்மத தேவரை வழிபட்டதுடன் அத்வைத கோட்பாடுடையோராய் விளங்கினர்.

சைவசமயம் - தென்னாட்டு சைவம், சைவசித்தாந்தம் வளரக் காரணமாயிற்று. பாசுபத களை முகப் பிரிவினர் இணைக்கப்பட்டனர்.

வீரசைவர் - லிங்கவழிபாடு, மகேசுர வழிபாடுடையோராக விளங்கினர்.

விஜயநகர ஆட்சியில் கலைமரபும் மேலான நிலை பெற்றது. சைவவைணவ ஆலயங்கள் முதன்மை பெற்றன. ராஜகோபுரம் கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், அம்மன் சந்நிதானம் என்பன் செல்வாக்கு பெற்றன. குதிரை யாழ் தூண்கள் தேரோடும் வீதிகள் சுற்றுப் பிரகாரங்கள் ராஜகோபுரங்கள் சிற்பமாடங்கள் புராண இதிகாச கதைச் சிற்பங்கள் செல்வாக்குப் பெற்றன. ஆலய விழாக்களுடன் தொடர்பான கலைமரபுகள் வளர்ச்சி பெற்றன. கல்யாண மண்டபம், தெப்பக்குளம், தேர்அமைப்பு முகப்புக் கோபுரம், திருவிளையாடல் சிற்பங்கள் மேலேழுந்தன.

நாட்டாரியல் கலை வடிவங்களும் செல்வாக்கு பெற்றன. பரத நாட்டியத்துடன் கோலாட்டம், பள்ளு, சிந்து முதலிய கீர்த்தனை வடிவங்களும் காணப்பட்டன. திரிகூட இராசப்ப கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி இசை நாடக வடிவமாக அமைய அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரனுபூதி என்பன இசைச் சந்தப் பாக்களாக விளங்கின.

**சமய இல்க்கியங்களின் எழுச்சி**

சைவசித்தாந்த ரீதியாக நோக்குகையில் உமாபதி சிவாச்சரியாரின் சித்தாந்த அட்டக நூல்கள் முதன்மை பெற்றன. சிவப் பிரகாசரது பிரபுலிங்கலீலை வீரசைவ வரலாற்றிலக்கியமாக அமைந்தது. குமர குருபரரின் சகலகலா வல்லிமாலை, மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்பனவும் பிரதானமானவை. தலபுராண எழுச்சிகளும் காணப்படுகின்றன. கோயிற்புராணம் உமாபதியால் பாடப்பட்டது. திருவானைக்கா புராணம் சேது புராணம் காஞ்சி புராணம் என்பவற்றுடன் சிவாக்கிரக யோகிகள் தாயுமானவர் பாடல்களும் அருணகிரிநாதரின் தோத்திரங்களும் பிரதானமானவை. நாயன்மார் வழிபாட்டிற்கான நால்வர் நான்மணி மாலையும் முக்கியமாக இடம்பெற்றது. ஆதீனங்களுடன் தொடர்பாக தசகாரியம் சித்தாந்த சிகாமணி, நமசிவாயமாலை என்பனவும் சைவசித்தாந்த உரைகளும் எழுந்தன. சாயனர் , மாதவர் ஆகியோர் வேதங்களுக்கு உரை எழுதினர். முருக வழிபாடு, சித்தர் மரபுகள், அம்மன் வழிபாடு என்பன பொதுமக்கள் வழிபாடாக எழுச்சி பெற்றன. வீரபத்திரவழிபாடு, வீர நாராயணர் வழிபாடு, வீரநரசிம்மர் வழிபாடு வளர்ச்சி பெற்றது. கோயில் மரபுகளும் கவின்கலை மரபுகளும் விருத்தியடைந்தன. கோயில் மரபு கலை மரபையும் வழிபாட்டு மரபையும் உண்டாக்கியது. இசைநடன வளர்ச்சி பொதுமக்கள் சார்ந்ததாகவும் பக்தி பூர்வமானதாகவும் அமைந்திருந்தது.

முதலாம் புக்கன் சாயனருக்கு உதவி செய்தான். அவனால் நான்கு வேதங்கள் பிராமணங்கள் என்பவற்றுக்கு உரை எழுதப்பட்டது. இராமாயண உரையை ஸ்வரதீட்சிதர் எழுத கிருஷ்ணதேவராயர் உதவினார். கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவதிம்மர் மகாபாரதத்திற்கு கிருஷ்ணசந்தம் என்னும் உரையை எழுதியுள்ளார். விஜயநகராட்சியில் நாடக நூல்களும் எழுந்தன. தமிழகத்தில் ஆட்சிசெய்த நாயக்கர் அவையில்

அப்பையதீட்சிதர் வடமொழி இலக்கியத்துறைக்கு பெரும்பணி செய்தார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு இலக்கியங்கள் இங்கு சிறப்பிடம் பெற்றன. கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா என்னும் ஆண்டாள் கதையை இயற்றினார். சைவ சமய மரபு தழுவிய இலக்கியங்களின் வளர்ச்சியையும் இக்காலத்தில் காணலாம். குறிப்பாக சித்தாந்த இலக்கியம், தலபுராணம், சித்தர் பாடல்கள், உரைநூல்கள் என்று பல்துறை இலக்கியங்கள் தோன்றின. இக்காலத்தில் தோன்றிய தலபுராணங்களுள் உமாபதி சிவம் சிதம்பரக் கோயில் பற்றிப் பாடிய கோயிற்புராணம், கமலை ஞானபிரகாசரின் திருவானைக்கா புராணம், நிரம்ப அழகிய தேசிகரின் சேதுபுராணம், எல்லப்ப நாவலரின் அருணாசல புராணம், சிவஞான முனிவரின் காஞ்சி புராணம், கச்சியப்ப முனிவரின் தணிகைப் புராணம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

பல்லவ சோழ காலங்களில் அருளப்பட்ட தோத்திரங்களுக்கு நிகராக சக்தி, முருகன் முதலான தெய்வங்கள் மீது பல தோத்திரங்கள் அருளப்பட்டன. அவற்றுள் குரு நமச்சிவாயரது சிதம்பர வெண்பா, குமரகுருபரரின் கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லிமாலை, அருணகிரிநாதரின் திருப்புகழ், மயில் விருத்தம் முதலானவையும், தாயுமான சுவாமிகள் அருளிய தோத்திரங்கள் என்பனவும் பிரதானமானவை. இக்காலத்தில் ஆகமங்களுக்கு எழுதப்பட்ட உரைகளுள் சந்த ஆகம விருத்தி, பௌகர ஆகமவிருத்தி, சிவதருமோத்திரம் முதாலாவற்றைக் கூறலாம். திரகூடராசப்ப கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி கீர்த்தனை இசைநாடக நூலாக அமைவதுடன், அருணகிரிநாதரின் சந்தக்கவிதைகளும் இந்தவகையில் குறிப்பிடத்தக்கவை.

சைவ சித்தாந்த கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சாத்திர நூல்களுள் தசகாரியம் சித்தாந்த சிகாமணி, நமச்சிவாய மாலை முதலியவை குறிப்பிடத் தக்கவை. நால்வர் நான்மணி மாலை சைவசமய நாயன்மார்கள் பற்றிய தோத்திரமாக விளங்குகின்றது. -

விஜயநகர ஆட்சியில் இஸ்லாமியர்கள் இந்துப் பண்பாடுகளை அழித்தனர். இந்துக்களை மதம் மாற்றினர். கோயில் களையும் படிமங்களையும் சிதைத்தனர். அத்துடன் இந்துக்களை இழிவாகக்கருதும் நிலையை ஏற்படுத்தினர். இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர்க்கத் தோன்றியதே விஜயநகர அரசு கொய்சல (கௌசல) அரசின் தொடர்ச்சியாகவே விஜயநகர அரசு வளர்ச்சி பெற்றது. வித்யாரண்யர் (1305-1387) என்னும் அரசவைத் தலைவர் இதனை உருவாக்கினார்.

விஜயநகர அரசர்களில் ஒருவரான கரிகரர் காளகஸ்தி, சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார். இவற்றினூடாக கரிகர அரசரது சைவ, வைணவப் பணி வெளிப்படுகின்றது. விஜயநகரத்தின் ஆரம்பகால அரசர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகர அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு கூடுதல் மானியங்களை வழங்கினர். சாளுவநரசிம்மனுக்கு பின்பு ஆட்சி செய்த அரசர்கள் வைணவ அரசர்களாவர். அவர்கள் சைவ, வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி தானங்களை வழங்கினர்.

சித்தாந்த சைவம், வீர சைவம், காஷ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது. பசவபுராணம் பிரதான நூல். இது வீரசைவக் கோட்பாட்டைக் கூறுகின்றது. பிரபுலிங்கலீலை, விருபாட்சகர் கோயில், விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை. சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்றது. வைணவம் பற்றித் தெலுங்கு, கன்னட மொழிப்பாடல்கள் எழுந்தன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் தெலுங்கு இலக்கியமும் முதன்மை இடம்பெற்றது. கிருஷ்ணதேவராயரே விஷ்ணுசித்தீயம் என்னும் நூலை எழுதியுள்ளார். இதுசிறந்த எளியநடைக் காப்பியம். **அட்டதிக்கஜம்** என்னும் எட்டு நூல்களை எழுதிய புலவர்கள் பிரதானமானவர்கள்.

சைவசமயத்தில் காளத்தி மகாத்மியம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் எழுதப்பட்டது. இஸ்லாமிய மதத்தைக் கண்டனம் செய்ததன் மூலம் விஜயநகரத்தின் புகழ் பரவிக் காணப்பட்டது. வைணவம் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என விரிவடைந்தது. திருவரங்கத்தில் வாழ்ந்த மத்துவர் வேதாந்தத்தைப் போதித்தார். அருணகிரிநாதர் பாடல்கள் முருக வழிபாட்டை எடுத்துக் காட்டுவன. காளமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர்.

# 2.1 : வட நாட்டு வைணவ பக்தி நெறி

**அறிமுகம்**

தென்னாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்க வளர்ச்சியைத் தொடர்ந்து வட இந்தியாவிலும் பக்திநெறி வளர்ச்சி கண்டது. வட இந்தியாவில் 13ஆம் நூற்றாண்டில் இப்பக்தி நெறி வளர்ச்சியடையத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் வடஇந்தியாவில் இஸ்லாமியர்களின் செல்வாக்கினால் இந்துசமயம் தளர்ச்சி கண்டிருந்தது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை அக்கால அறிஞர்களுக்கும் இந்துமத ஆட்சியாளர்களுக்கும் இருந்தது. இதன் விளைவாகவே வடஇந்தியாவில் பக்திநெறி தோற்றம் பெற்றது.

## வடஇந்திய பக்தி இயக்கம் தோற்றம் பெற்ற காலச் சூழல்

இந்து சமயம் சமய உட்பூசல்களாலும் அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்களாலும் மத்திய காலத்தினை அடுத்துவந்த காலப்பகுதிகளில் வீழ்ச்சியடைந்தது. இந்தியாவின் வட தோழமை நாடான பெர்சியாவின் மீது அரேபியர்கள் படையெடுத்த போது, நாகரிகத்தையும், வைர சுரங்கங்களையும், வெளிநாட்டு வாணிகத்திலும் செழித்தோங்கிய இந்தியாவையும் அவர்கள் கண்ணுற்றனர். சிறிய கால போராட்டத்திற்குப் பின்னர் இந்தியாவை இஸ்லாமிய சுல்தான்கள் கைப்பற்றினர். ஆனால் இந்த துருக்கியரின் படையெடுப்புக்கு முன்னர் இஸ்லாமியர்கள் இந்திய கடலோர பகுதிகளுடன் வாணிகம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் இந்து மகா சமுத்திரம் வழி அரேபியாவிலிருந்து கேரளா வந்தனர். இவ்வாறு இவ்விரு வகையான இஸ்லாமியர்களும் இந்தியாவில் 13ஆம் நூற்றாண்டில் அதிக செல்வாக்குடையவர்களாக மாறினர்.

இவர்களின் படையெடுப்புக்களாலும் ஆட்சி முறைகளாலும் இந்திய கலாசாரத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்படலாயின. இது மதம், கட்டிடக் கலை, இசை, உடை ஆகியவற்றில் அழியாத மாற்றங்களை ஏற்படுத்தியது. டில்லி சுல்தான்கள் காலத்தில் நாடோடி இனம் அல்லது முகாம் என்ற பொருளை கொண்ட உருது மொழி பிறந்தது. இது சமஸ்கிருத பிரகிருதி, துருக்கி, அரபு மொழி ஆகியவற்றின் கலப்பினால் உருவாகியது. இதனால் சுதேச மொழிகள் செல்வாக்கிழக்கத் தொடங்கின.

1600 களில் முகலாய அரச மரபு இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பாலான பகுதிகளை ஆண்டது. சில இஸ்லாமிய மன்னர்கள் இந்து மதத்தையும் அதனது கலாசாரத்தையும் ஆதரித்தனர். எடுத்துக்காட்டாக, அக்பர் இந்துக்களுடன் நல்லுறவை ஏற்படுத்த முற்பட்டார்.இருப்பினும் முகலாய காலத்தில் முகலாய சாம்ராஜ்ஜியத்தின் அரசியல் அமைப்புகள் மிகவும் வலிமையாக இருந்தன, முகலாய மன்னர்கள் இந்திய மன்னர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர், இந்திய ராணிகளை மணந்து கொண்டனர், அவர்கள் தங்களது துருக்கிய பெர்சிய கலாசாரத்தை இந்திய முறைகளுடன் இணைத்து இந்தோ-சாராசெனிக் கட்டடக் கலையை உண்டாக்கினார்கள். இதன் மூலம் இந்துமதத்தின் தனித்துவம் சீரழிந்தது.

பின்னர் வந்த அவுரங்கசீப் போன்ற மன்னர்களும் இஸ்லாமிய ஆதிக்கத்தைத் திணித்தனர். இஸ்லாமிய ஆதிக்கமும், மக்களை கொடுமைப்படுத்துதலும் ஒன்று சேர்ந்து இந்து சாம்ராஜ்ஜியத்தை வலு இழக்கச் செய்தன. அவுரங்கசீப் மற்ற அரசர்களைப் போல் அல்லாது பொதுமக்கள் பெரிதும் விரும்பாத பல கொள்கைகளை கையாண்டார். பல கோவில்கள் அழிக்கப்பட்டன. இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் பெரும் வரிகளைக் கட்டினர். இதனால் இந்துக்கள் இன்னல்களுக்கு முகங் கொடுக்க வேண்டியவர்களானார்கள்.இத்தகைய சூழ்நிலையிலேயே வடநாட்டில் பக்தி இயக்கத்தின் தோற்றத்தினைக் காணமுடிகின்றது.

## வடஇந்திய பக்தி இயக்கத்தின் பொதுவான கொள்கைகளும் நடைமுறைகளும்

இந்துசமயத்தை குறிப்பாக வைணவ சமயத்தினை மையமாகக் கொண்டதாக வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் செயற்பாடுகளும் அமைந்தன. பொதுவாக வட இந்திய பக்தி நெறியாளர்கள் அன்பும் அருளும் நிறைந்த முதல்வனான விஷ்ணு மீது நம்பிக்கை கொண்டிருந்தனர், ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தனியானவை எனவும் அவை பரமாத்மா எனும் இறைவனின் பகுதியாகாமை எனவும் நம்பினர். பக்தி மார்க்கம் மூலம் முத்தி என்னும் விடுதலை பெறலாம் எனவும் பக்தி என்பது கர்மம் ஞானம் கிரியைகள் சடங்குகளில் மேலானது எனவும் இவர்கள் கருதினர்.

குருதேவருக்குத் தனி மரியாதை எனும் பணிவைக் காட்டுதல் இவர்களது ஒரு பொது மரபாக உள்ளது. இவர்களது செயற்பாடுகளால் சமஸ்கிருதம் பெற்றிருந்த செல்வாக்கு இழந்து ஹிந்தி மொழி உருவானது.இஸ்லாமிய மதம் பின்பற்றிய சுபிசம் எனும் இறைக்கொள்கையும் செல்வாக்குப் பெற்றது. இவர்களது வழிபாட்டு முறைகளில் ‘‘நாம சங்கீர்த்தன முறை’’ பிரபல்யம் பெற்றதொன்று. வடஇந்திய பக்தி நெறியாளர்கள் தமிழகத்து பக்தி நெறியாளர்களைப் போன்று சாதிப்பிரிவை தகர்த்து எல்லோரும் ஒருவர் எனுங் கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். எடுத்துக் காட்டாக ஞானேஸ்வரர், பிராமணர்,சேனா, நாவிதர், துர்க்காராம் - வர்த்தகர்,கோரா,குயவர்.

வடஇந்திய பக்தி நெறியாளர்கள் திருநாம உபதேசத்தைத் தீட்சை மூலம் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவர்களது செயற்பாடுகளின் விளைவாக இந்துமதமும் இஸ்லாம் மதமும் இணைந்து சீக்கியம் உருவானதெனலாம். இந்துமதத்தில் இதுவரை அதிக செல்வாக்குப் பெற்றிருந்த வேதாகம விதிமுறைகளை இவர்கள் விளங்கப்படுத்தவில்லை. மாறாக பக்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். அந்த பக்தி அடிப்படையான கதையம்சங்களைக் கொண்ட இதிகாச, புராணங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளித்தனர். குறிப்பாக பாகவத புராணம்,விஸ்ணுபுராணம் போன்றவை முக்கியம் பெற்றன. பொதுவாக இவர்கள் தாம் பாடும் பக்திப்பாடல்களை தங்கள் பிரதேசத்தில் வழங்கிய சுதேச மொழிகளில் பாடியுள்ளமை குறிப்பிட்டுக் கூறக்கூடியது. ஹிந்தி, மராத்தி, வங்காளி, குஜராத்தி போன்ற மொழிகளில் இப்பக்திப் பாடல்கள் காணப்படுகின்றன. இவர்கள் இறைவன் மீது கொள்ளும் பக்தி பாவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இப்பண்பினை தென்னிந்திய பக்தி நெறியாளர்களிடமிருந்து இவர்கள் பெற்றிருக்கக் கூடும். அதாவது உறவுமுறையில் இறைவனுடன் இணைந்து கொண்டு வழிபாடு இயற்றுவதும் இவர்களது பொதுவான கொள்கையாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக, துளசிதாசர் ஹதாசிய பாவம், மீராபாய் - மதுர பாவம்.

# (01)ஸ்ரீ சைதன்யர்

## சைதன்யரின் பிறப்பு

கி.பி. 1486இல் சைதன்யர் நாதியா மாவட்டத்திலுள்ள மாயாப்பூரில் சந்திர கிரகணத்தின் போது இவர் பிறந்தார், இவரது தந்தை, வேத கலாசாரத்தைச் சார்ந்த பிராமணரான ஜகந்நாத மிஸ்ரர் இவரது தாய் சசீ தேவி. பிரபல ஜோதிடரான பண்டிதர் நீலாம்பர சக்ரவர்த்தி அவர்கள், இக்குழந்தை வருங்காலத்தில் ஒரு மகாபுருஷராக வருவார் என்பதை முன்னுரைத்தார். அதன் காரணத்தினால் குழந்தைக்கு விஷ்வம்பரர் என்று பெயர் சூட்டினார். அவரது பொன்னிற மேனியைக் கண்ட அக்கம்பக்கத்துப் பெண்கள் அவரை கௌரி என்று அழைக்க, அவரது தாயோ வேப்ப மரத்தின் (நிம்ப மரத்தின்) அடியில் பிறந்ததால் அவரை நிமாய் என்று அழைத்தார்.

## கல்வி

மாயாப்பூருக்கு அருகிலிருந்த கங்காநகரத்தில் கங்காதாஸ பண்டிதர் நடத்திவந்த பள்ளியில் எட்டு வயதில், இவர் சேர்க்கப்பட்டார். இரண்டு வருடத்தில் இவர் சமஸ்கிருத இலக்கணத்திலும் அலங்காரத்திலும் வல்லுநரானார். அதன் பின்னர் இவரது கல்வி பெரும்பாலும் சுயகல்வியாக அவரது வீட்டிலேயே அமைந்தது, பண்டிதராகத் திகழ்ந்த தனது தந்தைக்குச் சொந்தமான பல புத்தகங்களை அவரால் அங்கு படிக்க முடிந்தது. புகழ்பெற்ற பண்டிதரான ரகுநாத சிரோமணியிடம் பாடம்பயின்ற தனது நண்பர்களுடன் போட்டியிட்டபடி, அவர் ஸ்மிருதியையும் நியாயத்தையும் தானாகவே பயின்றார். பத்து வயதிற்குப் பின், சைதன்யர் இலக்கணம், அலங்காரம், ஸ்மிருதி, நியாயம் ஆகியவற்றில் மதிக்கத்தக்க பண்டிதரானார்.

## இல்லற வாழ்வு

பதினான்கு வயதில் வல்லபாசாரியரின் மகளான லக்ஷ்மிதேவியை திருமணம் செய்தார். கிழக்கு வங்காளத்தில் இவர் வசித்த காலத்தில், இவரது மனைவி பாம்பு கடித்ததால் இவ்வுலகினை விட்டுச் சென்றாள். வீடு திரும்பிய இவர், தனது தாய் வருத்தம் தோய்ந்த மனதுடன் இருப்பதைக் கண்டார். மனித வாழ்வின் நிச்சயமற்ற தன்மையைப் பற்றிய நீண்ட உரையின் மூலம் தனது தாய்க்கு ஆறுதல் கூறினார். தாயின் வேண்டுகோளுக்கிணங்கி, ராஜ பண்டிதர் ஸநாதன மிஸ்ரரின் மகளான விஷ்ணுபிரியாவை இவர் திருமணம் செய்து கொண்டார்.

## தீட்சை பெறல்

பதினாறு வயதில் இவர் காயாவிற்குச் சென்ற போது புகழ்பெற்ற மாதவேந்திர பூரியின் சீடரும் வைஷ்ணவ சந்நியாசியுமான ஈஷ்வர பூரியிடமிருந்து ஆன்மீக தீட்சையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர், அவர் ஒரு வாதமிடும் பண்டிதராகவோ, சண்டையிடும் ஸ்மார்த்தராகவோ, குற்றங்களைச் சுட்டிக் காட்டும் அலங்கார வித்வானாகவோ இருக்கவில்லை. கிருஷ்ணரின் திருநாமத்தை உச்சரித்து பரவசத்தில் மூழ்கியவராகத் திகழ்ந்தார், பக்திப் பரவசத்தின் தாக்கத்தினால் உற்சாகமடைந்த நபராக விளங்கினார்.

## பக்தி இயக்கப் பணிகள்

### (அ) வீடுதோறும் சென்று இராமநாமத்தைச் பாடச் செய்தல்

சைதன்யர் தனது சீடர்களுக்கு, செல்லுங்கள்! நகரத்தின் வீதிகளுக்குச் செல்லுங்கள், வீடுவீடாகச் சென்று ஒவ்வொரு மனிதனையும் சந்தியுங்கள், அவனை தூய வாழ்வுடன் ஹரியின் திருநாமத்தைப் பாடச் சொல்லுங்கள், பின்னர் தினசரி மாலை நேரத்தில் உங்களது பிரச்சாரப் பணியின் பலன்களை எனக்குத் தெரிவிப்பீராக எனப் பணித்தார். இக்கட்டளையைச் சீடர்கள் ஏற்று அதனை தினமும் நிறைவேற்றினர். ஒருமுறை ஜகாய், மதாய் என்னும் இரண்டு நபர்கள் மகாபிரபுவின் கட்டளையைக் கேட்டு சீடர்களை அவமதித்தனர், இருப்பினும் பகவான் அளித்த பக்தியின் போதனைகளால் கவரப்பட்டு விரைவிலேயே மாற்றப்பட்டனர். இதனால் ஆச்சரியமுற்ற நாதியாவின் மக்கள், நிமாய் பண்டிதர் மிகச்சிறந்த பண்டிதர் மட்டுமல்ல, அவர் நிச்சயமாக வல்லமை பொருந்திய கடவுளால் அனுப்பப்பட்ட தூதரே, என்று கூறினர்.

**(ஆ) கிராமம் தோறும் சென்று கொள்கைகளை பிரச்சாரம் செய்தல்**

தனது இருபத்திமூன்று வயது வரை இவர் தனது கொள்கைகளை நாதியாவில் மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள இதர கிராமங்களிலும் நகரங்களிலும் பிரச்சாரம் செய்தார். தன்னைப் பின்பற்றுவோரின் இல்லங்களில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார், பக்தியின் அந்தரங்க கொள்கைகளைக் கற்றுக் கொடுத்தார், மேலும், இதர பக்தர்களுடன் சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டார். நாதியா நகரத்திலிருந்த இவரது தொண்டர்கள் ஹரியின் திருநாமத்தை கடைவீதிகளிலும் இதர வீதிகளிலும் பாடத் தொடங்கினர். பக்தர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர், ஸ்மார்த்த பிராமணர்களோ நிமாய் பண்டிதரின் வெற்றியினால் பொறாமை கொண்டு, சைதன்யரின் குணம் இந்துக்களைப் போன்று அல்ல என்று மன்னன் சந்த் காஜியிடம் குற்றம் சாட்டினர். மன்னனும் பலத்த எதிர்ப்பை காட்டிய போதிலும் அவனையும் கவர்ந்திழுத்து மனமாற்றினார் சைதன்யர்.

**(இ) அமைதிப் புரட்சி செய்தல்**

ஹரி நாம சங்கீர்த்தனம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், யாராவது தொடர்ந்தால் அவர்கள் பராபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும் என்றும் மன்னன் காஜி கட்டளையிட்ட போது சைதன்யர் உடனடியாக ஒத்துழையாமை இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தார். அமைதியான முறையில் மிகப்பெரிய அளவில் நிகழ்ந்த இப்புரட்சி இந்திய வரலாற்றில் முதலாவதாக இடம் பெற்றது. சைதன்யரும் இவரைப் பின்பற்றிய இலட்சக்கணக்கான பக்தர்களும், வீதிகளில் தோன்றி பல கீர்த்தனக் குழுக்களாகப் பிரிந்தனர். நகரம் முழுவதும் ஹரே கிருஷ்ண மந்திரத்தைப் பாடியபடி அனைவரும் காஜியின் வீட்டின் முன்பாகக் கூடினர்.

கூட்டத்தினைக் கண்டு பயந்தபடி உள்ளேயே இருந்த காஜியினை பகவான் அன்புடன் அழைக்க, வெளியே வந்த காஜி அவருடன் சமயப் பயிற்சிகள் குறித்து நீண்ட வாதத்தில் ஈடுபட்டார். இறுதியில் காஜியும் சைதன்யரைப் பின்பற்றுபவராக மாறி, சங்கீர்த்தன இயக்கத்தைப் பாதுகாத்துப் பரப்பத் தொடங்கினார். இன்றும்கூட பக்தர்கள் சந்த் காஜியின் சமாதிக்குச் சென்று தங்களுடைய மரியாதையைச் செலுத்தி வருகின்றனர். காஜி வாழ்ந்த காலத்திலிருந்து இன்றுவரை நவத்வீபத்தைச் சார்ந்த இஸ்லாமியர்கள் ஹரி நாம ஸங்கீர்த்தனத்திற்கு ஆதரவளிப்பவர்களாக உள்ளனர்.

**(ஈ) சங்கீர்த்தன இயக்கம் ஆரம்பித்தல்**

சைதன்யர் சங்கீர்த்தன இயக்கத்தை ஆரம்பித்த குறுகிய காலத்தில், பலரும் அவரைப் பின்பற்றத் தொடங்கினர். வீடுகளிலும் வீதிகளிலும் கீர்த்தனம் காட்டுத் தீயைப் போலப் பரவியது. அந்த சங்கீர்த்தன இயக்கம் வங்காளத்தை ஆண்டு வந்த இஸ்லாமியர்களையும், ஜாதியின் அடிப்படையில் புரோகிதர்களாக இருந்த இந்துக்களையும் அச்சுறுத்துமளவுக்கு எழுச்சி கண்டது. பகவான் ஸ்ரீ சைதன்யர் நாம ஸங்கீர்த்தனம் குறித்து, தனது சிக்ஷாஷ்டகத்தில் கூறுவது யாதெனில், இந்த ஸங்கீர்த்தன இயக்கம் காலங்காலமாக நம் இதயத்தில் படிந்துள்ள எல்லா அழுக்கையும் சுத்தப்படுத்தி, கட்டுண்ட வாழ்வில் தொடரும் பிறப்பு, இறப்பு என்னும் தீயை அணைக்கிறது. நிலவு தன் குளிர்ந்த ஒளியினால் எல்லாருக்கும் நன்மையளிப்பதைப் போல, இந்த சங்கீர்த்தன இயக்கம் மனித குலத்திற்கு மாபெரும் வரப்பிரசாதம். இது தெய்வீக ஞானத்திற்கு உயிரூட்டுகிறது, பேரானந்தப் பெருங்கடலைப் பெருகச் செய்கிறது, எப்பொழுதும் நாம் விரும்பும் அமிர்தத்தை முழுமையாகச் சுவைக்கச் செய்கிறது.

அதனைத் தொடர்ந்து வங்காளத்தை அப்போது ஆண்டு வந்த சந்த் காஜி என்ற இஸ்லாமிய மன்னரிடம் அவர்கள் புகார் கொடுத்தனர். அவர்களின் புகாரைக் கேட்ட காஜி, வளர்ந்து வரும் சங்கீர்த்தன இயக்கத்தினைத் தடுக்க முயன்றார். அவரது கட்டளையின் பேரில், சைதன்யரைப் பின்பற்றுவோர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற காவலர்கள் அவர்களின் மிருதங்கத்தினை உடைத்தனர். ஹரி நாம சங்கீர்த்தனம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், யாராவது தொடர்ந்தால் அவர்கள் பராபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும் என்றும் காஜி கட்டளையிட்டார். இவ்வாறு மன்னன் பலத்த எதிர்ப்பை காட்டிய போதிலும் அவனையும் கவர்ந்திழுத்து மனமாற்றினார் சைதன்யர்.

### (ஈ) பக்திச் செயற்பாட்டிற்கு இல்லறத்தைத் துறத்தல்

குடும்பம், ஜாதி, இனம் ஆகியவற்றுடன் தனக்குள்ள தொடர்பை துண்டித்துவிட்டு, உலகத்தின் குடிமகனாக ஆவதற்கு உறுதி பூண்டார். இந்த தீர்மானத்துடன் தனது 24வது வயதில், கட்வாவிலிருந்த கேசவ பாரதியின் வழிகாட்டுதலின்படி இவர் சந்நியாச ஆஸ்ரமத்தை ஏற்றுக் கொண்டார். இவரது தாயும் மனைவியும் இவரது பிரிவிற்காகக் கதறி அழுதனர், இருப்பினும் சைதன்யர் குடும்பம் என்னும் சிறிய உலகினைத் துறந்து, கிருஷ்ணரின் எல்லையற்ற ஆன்மீக உலகத்திற்காக பொதுமக்களுடன் சேர்ந்தார். சைதன்யர் கோவணமும் வெளியாடையும் மட்டுமே அணிந்தார். இவரது தலையில் முடி இல்லை, கைகள் சந்நியாச தண்டத்தையும் (குச்சியையும்) கமண்டலத்தையும் தாங்கியிருந்தன.

### (உ) வாதங்களில் கலந்து கொள்ளல்

பல இடங்கள் யாத்திரை செய்த சைதன்யர் பூரி எனும் இடத்தை அடைந்த போது அங்கு புகழ் பெற்ற ஸார்வபௌமருடன் வாதத்தில் கலந்து கொண்டார். தன்னிடமிருந்து வேதாந்த சூத்திரங்களைக் கேட்கும்படி ஸார்வபௌமர் மஹாபிரபுவிடம் வேண்டு கோள் விடுக்க, அவர் மௌனமாகச் சம்மதித்தார். ஸார்வபௌமர் ஏழு நாள்கள் கம்பீரத்துடன் உரைத்த விஷயங்களை சைதன்யர் மௌனமாகக் கேட்டார். அதன் இறுதியில், ஸார்வபௌமர்,கிருஷ்ண சைதன்யரே! என்னுடைய பாராயணத்தையும் விளக்கவுரையையும் கேட்ட தாங்கள் ஏதும் கூறாது இருப்பதால், தங்களுக்கு வேதாந்தம் புரியவில்லை என்று நான் நினைக்கிறேன் என்று கூறினார். தான் சூத்திரங்களை மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டதாகவும், ஆனால் சங்கராசாரியர் அளித்த விளக்கவுரையை புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் சைதன்யர் பதிலளித்தார். இதனால் ஆச்சரியமுற்ற ஸார்வபௌமர், சூத்திரங்களின் அர்த்தங்களைப் புரிந்துகொண்ட தாங்கள் அந்த சூத்திரங்களை விளக்கும் வியாக்கியானத்தைப் புரிந்துகொள்ளவில்லையா? சூத்திரங்களைத் தாங்கள் புரிந்துகொண்டீர்கள் எனில், தங்களது வியாக்கியானத்தை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன், என்று கூறினார்.

அதன் பின்னர், மஹாபிரபு எல்லா சூத்திரங்களையும் தனது சொந்த வழியில் சங்கரரின் அத்வைத உரையைத் தொடாமல் விளக்கினார். சைதன்யர் வழங்கிய விளக்கங்களில், மெய்ப்பொருள், அழகு, வாதங்களுக்கு இடையே இருந்த பொருத்தம் ஆகியவற்றை ஸார்வபௌமர் நன்கு புரிந்து கொண்டார், அவ்விளக்கங்கள், பிரம்ம சூத்திரங்களை இவ்வளவு எளிமையாக விளக்கக்கூடிய நபரை தற்போதுதான் முதன்முதலில் காண்பதாக அவரை ஒப்புக்கொள்ள வைத்தன. மேலும், வேதாந்த சூத்திரத்திற்கு மஹாபிரபுவிடமிருந்து பெற்ற விளக்கங்களை போன்ற இயற்கையான விளக்கங்களை சங்கரரின் வியாக்கியானம் ஒருபோதும் வழங்கிய தில்லை என்றும் ஏற்றுக் கொண்டார். பின்னர், மஹா பிரபுவின் தொண்டராகவும் அவரது கருத்துக்களை முன்னுரைப்ப வராகவும் ஸார்வபௌமர் மாறினார். குறுகிய நாள்களில் அவர் அக்காலத்தின் மிகச்சிறந்த வைஷ்ணவர்களில் ஒருவரானார்.

### (ஊ) யாத்திரைகள் மூலம் பக்தி பற்றிய உரையாடலை மேற்கொள்ளல்

தென்னிந்தியா பயணமான சைதன்யர் இராமானந்தராயரை கோதாவரிக் கரையில் சந்தித்து, அவருடன் பிரேம பக்தியைப் பற்றிய தத்துவ உரையாடலை மேற்கொண்டார். இவர் தனது பயணம் முழுவதும் வைஷ்ணவ தருமத்தையும் நாம சங்கீர்த்தனத்தையும் பிரச்சாரம் செய்தார். மழைக்காலத்தைக் கழிப்பதற்காக ஸ்ரீரங்கத்தில் வேங்கடபட்டர் என்பவரின் வீட்டில் நான்கு மாதங்கள் தங்கினார். அக்குடும்பம் முழுவதையும், வேங்கடரின் பத்து வயது மகனான கோபாலன் உட்பட அனைவரையும் அவர் இராமானுஜ வைஷ்ணவத்திலிருந்து கிருஷ்ண பக்திக்கு மாற்றினார். கன்னியாகுமரி வரை தென்னிந்தியாவில் பயணம் செய்த சைதன்யர் பீம நதிக்கரையிலுள்ள பண்டரிபூரின் வழியாக இரண்டு வருடத்தில் பூரிக்குத் திரும்பினார். தனது பயணத்தின் போது, இவர் புத்தமதவாதிகள், ஜைனர்கள், மாயாவாதிகள் முதலியோரை பல்வேறு இடங்களில் சந்தித்து, தன்னை எதிர்த்தவர்களை வைஷ்ணவ தருமத்திற்கு மாற்றினார்.

**(எ)அத்வைதிகளை எதிர்த்தமை**

கடவுளுக்கு உருவம் இல்லை என்று நினைத்து, அதனை நிரூபிப்பதற்கான வீண் முயற்சியில் ஈடுபட்டு, வேதங்களின் அர்த்தங்களை திரித்துக் கூறக்கூடிய மாயாவாதிகள் (அத்வைதிகள்) பலரையும் சைதன்யர் தனது பயணத்தின்போது எதிர்கொண்டு வென்றார். ஆன்மீகத் தன்னுணர்வினை அடைய சமஸ்கிருத மொழியில் வேதாந்த சூத்திரத்தினைப் படிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்த அவர்களைத் தனது பிரசாரத்தின் வலிமையால் பக்தித் தொண்டை ஏற்கச் செய்தார். ஸார்வபௌம பட்டாசாரியர் என்ற பிரசித்தி பெற்ற மாயாவாதியினை சாஸ்திர வாதத்தினால் சைதன்யர் வென்றார். சைதன்யர் தனது காரணமற்ற கருணையால், ஸார்வபௌம பட்டாசாரியரின் முன்பு தனது ஆறு கரங்களைக் கொண்ட உருவை வெளிப்படுத்தினார். இரு கரங்களில் இராமரின் வில் மற்றும் அம்பினையும், இரு கரங்களில் கிருஷ்ணரின் புல்லாங்குழலையும், இரு கரங்களில் சைதன்யரின் கமண்டலம் தண்டு என்பவற்றை ஏந்தியபடி, தான் முழுமுதற் கடவுள் என்பதை வெளிப்படுத்தினார் எனக் கூறப்படுகின்றது. அதுவரை மிகப்பெரிய மாயாவாதியாக இருந்த ஸார்வபௌமர் அப்போது ஸ்ரீ சைதன்யரின் தாமரைத் திருவடிகளில் சரணடைந்து, மிகப்பெரிய பக்தராக மாறினார்.

வாரணாசியில் தங்கிய சைதன்யர் ஹரி நாம ஸங்கீர்த்தனத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்தார். இவற்றைக் கேள்விப்பட்ட மாயாவாதிகளின் தலைவரான பிரகாசானந்த சரஸ்வதி, ஓர் உண்மையான சந்நியாசி, இதுபோல எல்லா தரப்பட்ட மக்களுடனும் இணைந்து பாடி ஆடுவது தவறு, என்று தனது கருத்தைத் தெரிவித்தார். மாயாவாதிகளின் இக்குற்றச்சாட்டுகளின் காரணத்தினால், மிகவும் வேதனைப்பட்ட சைதன்யரின் சீடர்கள், ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தனர். அதில் கலந்துகொள்ள வந்த சைதன்யர், வாசலில் மக்கள் கால் கழுவும் இடத்தின் அருகில் அமர்ந்தார். தனது சக்தியினால் உடலிலிருந்து சூரியனைக் காட்டிலும் பிரகாசமான ஆன்மீக ஒளியினை வெளிப்படுத்தினார். அதனைக் கண்ட மாயாவாதிகள் உடனடியாக அவருக்கு மரியாதை செலுத்தத் தொடங்கியபோதிலும், பிரகாசானந்த சரஸ்வதி சைதன்ய மஹாபிரபுவிடம், வேதாந்தத்தைப் படிக்காமல் வீதிகளில் இவ்வாறு பாடி ஆடுவது ஏன்? என்று வினவினார். சைதன்யர், நான் மிகப்பெரிய முட்டாள் என்பதால், வேதாந்தத்தைப் படிக்காமல் நாம ஸங்கீர்த்தனத்தில் ஈடுபடும்படி எனது குரு எனக்குக் கட்டளையிட்டுள்ளார். என்று பதிலளித்தார்.

வேதங்களைப் படித்து தற்பெருமையுடன் விளங்கும் மாயாவாதிகளை பகவான் மறைமுகமாகத் தாக்கினார். மேலும், தனது ஆன்மீக குரு தன்னைப் பின்வரும் ஸ்லோகத்தை எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டும் என்று கூறியதாக எடுத்துரைத்தார். "சண்டையும் சச்சரவும் நிறைந்த கலி யுகத்தில், ஆன்மீக முன்னேற்றமடைய ஹரி நாமத்தைத் தவிர, ஹரி நாமத்தை தவிர, ஹரி நாமத்தை தவிர, வேறு வழியில்லை, வேறு வழியில்லை, வேறு வழியில்லை." (பிருஹன் நாரதீய புராணம்) பல்வேறு வாதங்களின் இறுதியில், மிகப்பெரிய பண்டிதரான பிரகாசானந்த சரஸ்வதியும் அவரது சீடர்களும் சைதன்யரிடம் சரணடைந்து மிகுந்த உற்சாகத்துடன் ஹரே கிருஷ்ண மந்திரத்தைப் பாடத் தொடங்கினர். இந்த மாபெரும் மாற்றத்தைக் கண்ட வாரணாசி மக்கள் முன்பை விட அதிகமாக சைதன்யரின் ஸங்கீர்த்தன இயக்கத்தை ஏற்றுக் கொண்டனர்.

**(ஏ) பேதமற்ற பக்தி நிலையை வெளிப்படுத்தல்**

மிகவுயர்ந்த பிராமண குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலும், பகவான் சைதன்யர், அத்தகைய வெளிப்புற அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சமூக அந்தஸ்தைப் பற்றி கருத்தில் கொள்ளாமல், ஒருவர் பக்தராக இருந்தால் போதும், அவர் தாழ்ந்த பிரிவினராக இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல், அவர்களின் வீட்டில் தங்கி உணவும் அருந்தினார். அதுமட்டுமின்றி இறையன்பின் மிகவுயர்ந்த உபதேசங்களை தாழ்ந்த குடியின் உறுப்பினரான இராமானந்தராயரிடம் வெளிப்படுத்தினார். சைதன்யரின் மற்றுமொரு சீடரான ஹரிதாஸ் தாகூர் இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்தவர் இருப்பினும், அவரை "கிருஷ்ணரின் திருநாமத்தை வழங்கும் ஆன்மீக குரு," அல்லது நாமாசாரியர் என்னும் மிகவுயர்ந்த நிலைக்கு உயர்த்தினார். சமூக நிலை முக்கியமல்ல, ஆன்மீக முன்னேற்றமே முக்கியம் என்பதை சைதன்யர் நிலைநாட்டினார்.

**(ஓ) சைதன்யரின் போதனைகளின் முக்கியமான அம்சங்கள்**

குருவிடம் மதிப்பும் மரியாதையும் பணிவும் காட்டவேண்டும், அறநெறியைக் கடைப்பிடிக்க வேண்டும், அறப்பண்பை வளர்த்தல்,அமைதி கொள்ளல் வேண்டும், சத்தியநெறியில் நிற்றல் என்பன இவர் போதிக்கும் அடிப்படைகளாகும். சைதன்யர் மனிதனுக்கு மனிதன் எவ்வித பேதமும் இல்லை கடவுளறிவைப் பெற்றவன் எவனாயினும் அவன் பிராமணனிலும் பெரியவன் எனும் கொள்கை உடையவர். துளசியின் மகிமை பற்றித் தனது பாடல்களில் போற்றியுள்ளார். இவரது பக்தி இயக்கத்தை பரப்பிய சீடர்களுள் முதன்மையானவர்கள ் நித்தியானந்தர், ஜீவகோஸ்வாமி,பலதேவர்,கரிதாஸ் ஆகியோராவர்.

## (02) இராமானந்தர்

### இராமானந்தரும் வைணவப் பக்திநெறியும்

வைணவபக்திமார்க்கம் இரு பிரதேசங்களை அடிப்படையாக கொண்டது. வட இந்திய வைணவ பக்தியாளர்களும் தென்னிந்திய வைணவப் பக்தியாளர்களும் இவ்வகையில் அடங்குவர். வடஇந்தியப் பக்தி நெறியாளர்களில் இராமானந்தர், கபீர்தாசர், மீராபாய், துளசிதாசர் முதலியோர் பிரதானமானவர்கள். தென்னிந்திய வைணவ பக்தியாளர்களில் ஆழ்வார்கள்,யமுனாச்சாரியார், யாதவப் பிரகாசா இராமானுசர் ஆகியொர் அடங்குவர். தென்னிந்தியாவில் ஆழ்வார்கள் வைணவ பக்தி நெறியைத் திவ்விய பிரபந்தமாகப் பாட இராமானுசர் அப்பிரபந்தக் கோட்பாடுகளைப் பக்தி நெறியாகப் பரப்பினார். இராமானுசர் தமிழ் நாட்டைச்சேர்ந்தவர். அத்தகைய இரானுசரிடம் வைணவப் பயிற்சி பெற்றவரே வட இந்திய பக்தி இயக்க முன்னோடிகளில் ஒருவராகிய இராமானந்தர். இந்த வைணவ மரபு ரீதியான வளர்ச்சியே தென்னிந்தியாவில் ஊற்றெடுத்த பக்தி நெறி வடஇந்தியாவில் பரவிய வரலாறாக உதித்தது.

வடஇந்திய வைணவ பக்தி இயக்கத்தின் தலைவராகவும் மகாபாகவதராகவும் விளங்கியவர் இரானந்தர். திருமால் மீது அதீத பக்தியுடையவராக விளங்கினார். இராம பக்தியே நிரந்தரமானது என்பது இவரது கொள்கை. வைணவ நெறியில் பிரதானமான சமரச சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தவர். இராம ராஜ்ஜியத்தை உலகில் தோற்றுவிக்க வேண்டும் என்னும் கொள்கையுடையவராக வாழ்ந்தவர். இராம ஆட்சி, ஏகபத்தினிவிரதம், ஒரு கடவுட் கொள்கை என்னும் மூன்று கோட்பாடுகளையும் வைணவ நெறியுடன் இணைந்தவராக இராமானந்தர் விளங்கினார். அரசியல் சமூக கோட்பாடுகளுடன் வைணவ நெறியையும் இராம பக்தியையும்இணைத்தார். தவறு செய்பவர்களை தண்டிப்பது பாவமான காரியமாகும் என்னும் கொள்கையுடையவராக இராமானுசர் விளங்கினார். தவறு செய்பவர்கள் மன்னிக்கப்படல் வேண்டும் என்னும் இவரது வாழ்வியல மார்க்கம் இராவண வரலாற்றுடன் தொடர்புடையது. இராவணன் குற்றம் செய்த போதும் இராமபிரான் இராவணனைப் பார்த்துஇன்று போய்ப் போர்க்கு நாளை வா என்று கூறிய இராம தருமததை உலகறியச் செய்தவரே இராமானந்தரே. அதனால் இராமதாசர் என்னும் விருதுடையவராக இராமானந்தர் விளங்கினார்.

வடஇந்தியாவில் அலகாபாத் பிரதேசத்தில் இராமானுசர் தோற்றம் பெற்றார். இராமானுசரின் நேரடிச் சீடராகவும் மானசீக சீடராகவும் விளங்கினார். இராம தரிசனம் பெறுவதும் இராம நாமம் ஓதுவதும் இவரது தினசரிக் கடமைகள். வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தலைவராக விளங்கினார். ஆத்மீக அனுபூதிமானாக விளங்கிய இராமானந்தர், நாமஜெபம் பஜனை, பிரார்த்தனை, பக்தியின் புஸ் மார்க்கம் என்பவற்றுடன் தலயாத்திரை, அனுமன் ஆலய அமைப்பு, ஆஞ்சநேய வழிபாடு என்பவற்றை வைணவ கைங்கரியமாக ஏற்றார்.

இராமானந்தரது வைணவச் சீடர் மரபொன்றும் காணப்பட்டது. சிவாஜி மன்னனை இராமானந்தர் தமது சீடராக ஏற்றுக்கொண்டார். மன்னர் படை எடுப்பின் போது அற்புதங்கள் மூலம் படை எடுப்பை பின்வாங்கச் செய்தார். அத்தோடு கபீர்தாசரையும் இராமானந்தர் தமது சீடராக ஏற்றார். இவ்வேளையிலே கபீர் தாசருக்கும் இராமானந்தருக்கும் இடையில ஆன்மீக விவாதம் இடம்பெற்றது. கோயிற் கோபுரப் பக்கம் கால் நீட்டி உறங்க கூடாது என்ற கருத்துக்கு இறைவன் இல்லாத பக்கம் எது? அப்பக்கத்திற்கு நான் காலைத் திருப்பி நீட்டிக் கொள்கின்றேன் என்னும் ஆத்மீக விவாதங்கள் கபீர் - இராமானந்தரிடையே இடம்பெற்றமை சமய சிந்தனைகளுக்கும் தத்துவ சிந்தனைகளுக்கும் காரணமாக விளங்கின.

வடஇந்தியாவில் வைணவ பக்தி இயக்கத்தை ஆரம்பித்து வைத்த பெருமை இவரைச் சாரும். அத்தோடு பஞ்சாப் நாட்டிலும் வங்காளத்திலும் தோன்றிய பக்தி இயக்கத்தை ஊக்குவித்த பெருமையுடையவராகவும் இராமானந்தர் விளங்கினார். இராமபிரான் பெற்ற அருளை இவ்வுலகில் நிலைபெறச் செய்தவர் இராமானுசர் அதுவே இராம இராச்சியம் என்று அழைக்கப்பட்டது.

## (03) மீராபாய்

இவர் வாழ்ந்த காலம் கி.பி 16ம் நூற்றாண்டின் முற்பகுதி மேர்த்தா எனும் சமஸ்தானத்தில் 1498 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையின் பெயர் ரணா ரத்னசிங். கணவரின் பெயர் போஜ்ராஜ். இவர் ராஜஸ்தான் மாநிலத்து கவிஞானச் செல்வி என அழைக்கப்பட்டார். சிறு வயதிலே சங்கீதஞானம் பெற்றவர்.குடும்பபந்தங்களை தகர்த்துவிட்டு அச்சமின்றி சுதந்திரமாக கிருஸ்ணபக்தியை மேற்கொண்டார்.1521ம் ஆண்டில் கணவன் போரில் இறந்ததும் இவர் கைம்மை நோற்று துறவிக்கோலத்தில் வாழ்ந்து தனது பக்தியை அதிகரித்தார்.மீரா கிருஸ்ணனே தன் காதலன் என்று பாடினார்.மீராபாய் 400 பாடல்களை பாடியுள்ளார்.

**இவர் இயற்றிய நூல்களுள் முக்கியமானவை**

1. கீதகோவிந்தடீகா
2. ராகஸோரட்
3. ராகமல்கார்
4. ராககோவிந்
5. மீராணிகர்பி
6. ருக்மிணிமங்களம்

இவரின் பாடல்கள் வாத்சல்ய பக்தி,தாஸ்யபக்தி என்பவற்றோடு நாயகன், நாயகி பாவனையுடன் அமைந்தவை.இவரின் பக்தியில் மதுரபாவம் அதிகம். பக்தியில் காணப்படும் சிரவணம், ஸ்மரணம், பாதசேவை, அர்ச்சனை, தாஸ்யம், ஸக்ஸம், ஆத்மநிவேதனம் எனும் 9 வகையான நியமங்களும் இவரின் பாடல்களில் காணப்படுகின்றன.

### (அ) அரண்மனை வாழ்வு

மீராபாய் ஜோத்பூர் அரசை நிருமாணித்த ராவ்ஜோதாவின் மகனான ராவ்தூதாவின் இளையமகனான ரத்தன் சிங், வீரகுமாரி தம்பதிகளின் மகளாக ஒரு வைணவக்குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய ஏழாம் வயதில் தன் அன்னையை இழந்த மீரா பின்னர் தன் பாட்டனாரான ராவ்தூதால் வளர்க்கப்பட்டு கல்வியும் பயின்றார். அரச குடும்பத்தைச் சார்ந்த இவர் வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். குழந்தைப் பருவம் முதலே கிரிதர கோபாலன் எனும் கிருஷ்ணர் சிலை மீது தொடங்கிய ஈடுபாடு நாளடைவில் ஆண்டாள் போல கண்ணனை தன் மணவாளானாக வரித்துக்கொண்டது. குடும்பத்தின் வற்புறுத்தலின் பேரில் 1516-ல் பதினெட்டு வயதில் சுய விருப்பமின்றி போஜராஜன் எனும் சித்தோர்கர் இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்.

போஜராஜன் குடும்பத்தின் குலதெய்வமான துளஜ பவானி எனும் துர்க்கை வழிப்பாட்டை மேற்கொள்ளாத மீராபாயின் கிருஷ்ண வழிபாட்டிற்கு எதிர்ப்பு கிளம்பியது. 1521 இல் தில்லி சுல்தானின் இசுலாமிய சாம்ராச்சியத்திற்கு எதிராக ராஜபுத்திரர்கள் ஒன்றுசேர்ந்து போர்புரிந்த போது இறந்த அரசர்களில் மீராவின் கணவர் போஜராஜனும் ஒருவர். மாமனார் அரவணைப்பில் அரண்மனையில் வாழ்ந்த மீரா, பின்னர் அவரையும் இழக்க கண்ணன் ஒருவனே துணையென சித்தோர்கர் அரண்மனையிலேயே வாழ்ந்து வரலானார்.

### (ஆ) கொலைமுயற்சி

ஆரம்பம் முதலே இவரின் கிருஷ்ண பக்திக்கு இருந்துவந்த எதிர்ப்பு, அடுத்து பதவிக்கு வந்த போஜராஜன் தம்பியான விக்ரமாதித்யாவால் உச்சத்தை அடைந்தது. அந்தரங்கமான இவரின் பக்தி நாளடைவில் அரண்மனைவிட்டு சாதுக்களின் கூட்டத்தோடும் சாமான்யர்களோடும் தன்னைமறந்து ஆடுவதும் பாடுவதுமான போக்கினால், அரசகுடும்ப மதிப்பிற்கு களங்கம் வருமென எண்ணி விக்ரமாதித்யா தன் தங்கையான உதாபாயோடு சேர்ந்து பலமுறை மீராவை கொலைசெய்ய முயற்சித்தான்.

1. கண்ணனுக்கு நிவேதனம் (படைத்த) செய்த பிரசாதத்தில் நஞ்சைக் கலந்து, அதனை மீராவை அருந்துமாறு செய்தான். பின்னர் கண்ணன் அருளால் நஞ்சு நீக்கப்பட்டது.
2. மீராவின் படுக்கையில் இரும்பு முட்களை நிறைக்க, கண்ணன் அருளால் அவைகள் ரோசாமலர் இதழ்கள் ஆனது.
3. கொடிய பாம்பு அடைத்த பூக்கூடையை கொடுத்து கண்ணனுக்கு அர்ப்பணிக்குமாறு கொடுக்க, அலங்கரிப்பதற்கு மீரா அப்பூக்கூடையை திறந்த போது அது அழகிய பூமாலை ஆயின.

### (இ) பக்தி வெளிப்பாடு

இவரின் இறைபற்றிய கருத்தில்இறைவன் ஒருவனே சத்தியம், கிருஸ்ணர் எங்கும் நிறைந்தவர்,எல்லாம் வல்லவர்,பக்தர்களிடம் பெருங்கருணை வைத்தவர்,அவர்களை ஆபத்துக்களில் காப்பவர் என உரைக்கின்றார்.ஆண்டாளைப் போல மீராபாயும் கிரிதர கோபலன் மீது பக்தி கொண்டிருந்தார். கண்ணனை மணாளனாகவே இவர் கருதினார். உலக ஜீவராசிகள் எல்லாம் ஆத்மா என்றும் பரமாத்மா அவன் ஒருவன் தான், அவன் தான் கிருஷ்ணன் என்பதே மீராவின் தேடலாகும். ராஜபுத்திர குடும்பங்களில் இன்றைய ராஜஸ்தான் பெண்களின் வாழ்க்கையிலும் தொடர்ந்து வரும் குலதேவி வழிபாடு மிக முக்கியமானது. அதாவது திருமணத்திற்கு முன் வரை ஒரு பெண் அவள் தந்தை வீட்டு குல தேவி வழிபாட்டை மேற்கொள்வதும் திருமணம் ஆனபின் தன் கணவன் வீட்டு குலதேவி வழிபாட்டை மேற்கொள்வதும் அவர்கள் வழக்கம். அதை உடைக்கிறார் மீராபாய். கோபலனை மட்டுமே கும்பிட்ட அவளுக்கு வேறு எந்த உருவ வழிபாடுகளும் ஒத்துவரவில்லை. கணவன் போஜராஜன் போரில் இறந்த பின் அரச வம்ச வழக்கப்படி மீரா உடன்கட்டை ஏறி இருக்க வேண்டும். ஆனால் மீராவோ அரண்மனையில். தன் கோபலனுடன் உரையாடிக் கொண்டும் சாதுக்களுடன் பாடிக்கொண்டும் இருக்கிறாள். இவை யாவும் மீராபாயின் பக்தியின் வெளிப்பாடுகளே. .

பிருந்தாவனத்தில் கிருஷ்ண சைதன்ய மகாபிரபுவின் சீடரான ரூபகோஸ்வாமி இருந்தார். மீரா அவரைப் பார்க்க விரும்பினார். ஆனால் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. தன்னுடைய இடத்திற்கு எந்த ஒரு பெண்ணையும் அனுமதிப்பதில்லை என்று மீராவிற்கு அவர் பதிலளித்தார். கோபத்தில் மீரா,”பிருந்தாவனத்தில் இருக்கும் அனைவரும் பெண்களே. கிரிதரனான கோபாலன் மட்டுமே புண்ணிய புருஷன். அவனைத் தவிர, இன்னொரு கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் இருப்பது எனக்கு இன்றுதான் தெரியும் என்று” பதிலளித்தார். ஜீவா கொசைன் தன் செய்கைக்காக வெட்கப்பட்டார். மீரா ஒரு சிறந்த பக்தை என்பதைப் புரிந்து கொண்டார். தானே மீரா இருக்கும் இடத்திற்குச் சென்று, அவருக்கு மரியாதை செய்தார்.

மீரா வாழ்ந்த காலத்தில் முகலாய மன்னர் அக்பரின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பல அரசுகள் அவருக்கு கட்டுப்பட்டு கப்பம் செலுத்திக்கொண்டிருந்தனர். அக்பர் சிறந்த கலாரசிகர். அவர் அரண்மனையில் “தான்சேன்” என்ற மிகச்சிறந்த பாடகர் இருந்தார். ஒருமுறை தான்சேன் பாட, அதிலொரு பாடலில் மெய்ம்மறந்த அக்பர், “இது யாருடைய பாடல்? என்று கேட்டார். “இது சித்தூர்கட் ராணி மீராபாயுடையது. அவள் சிறந்த கிருஷ்ண பக்தை என்றார் தான்சேன். “மீராவின் பாடலை நான் கேட்கவேண்டும்” என்று அக்பர் சொல்ல, அவள் அரண்மனையில் இருப்பாள். ராஜபுத்திரர்கள் நமக்கு எதிரிகளல்லவா?” என்றார் தான்சேன். “மாறுவேடத்தில் செல்வோம்” என்றார் அக்பர்.

அக்பரும் தான்சேனும் குதிரைகளில் புறப் பட்டுச் சென்று, ஒரு அடர்ந்த காட்டில் சந்நியாசி வேடமிட்டுக்கொண்டு சித்தூர்கட் அரண்மனை சென்றனர். அங்கு மீராபாயின் நெஞ்சுருகும் பாடலைக் கேட்டு நெகிழ்ந்தனர். அனைவரும் சென்றபின் அக்பர் மீராவின் பாதம் பணிந்து, தன் கழுத்திலிருந்த முத்துமாலையை எடுத்து மீராவிடம் கொடுத்து, இதை உங்கள் கண்ணனுக்கு அணிவியுங்கள் என்று சொல்லி விடைபெற்றார்.

அவர்கள் காட்டுக்குள் சென்று வேடம் கலைத்து குதிரையேறிச் செல்ல, தற்செயலாக இதை சிலர் பார்த்துவிட்டனர். விவரமறிந்த ராஜகுடும்பம் பரிதவித்து, மீராவை சிறையிலடைத்தனர். சந்நியாசிகள், பக்தர்கள் வருவதையும் நிறுத்தினர். அப்போதும் அவள் கண்ணனைப் பாடுவதை நிறுத்தவில்லை. பாலில் விஷம் கலந்து கொடுத்தனர். பாலைக் குடித்தாள். அவளை விஷம் எதுவும் செய்யவில்லை. ஆனால் கண்ணன் விக்ரகம் கருநீலமாக மாறிவிட்டது. பார்த்தவர் அதிசயித்தனர். பிறகு ஒருமுறை பூஜைக்கான மாலை இருப்பதாகச் சொல்லி ஒரு பிரம்புப் பெட்டியை அவளிடம் கொடுத்தனர். அவள் சாகட்டும் என்ற நோக்கில் அதில் கருநாகப் பாம்பை வைத்திருந்தனர். கண்ணனுக்கு மணமுள்ள மல்லிகை மாலை பிடிக்குமே என்றெண்ணியபடி அவள் பெட்டியைத் திறந்தாள். அதற்குள் அவள் விரும்பியபடியே மல்லிகை மாலை இருந்தது! பாம்பு மாலையாயிற்று! போஜராஜன் இறந்து, அவனது தம்பி ஆட்சிசெய்து கொண்டிருந்தான். மேற்கண்ட சதிவேலைகளைச் செய்தவள் அரசனின் தங்கைதான். கண்ணனை வழிபட இத்தனை தடையேற்படுகிறதே என்று வருந்தினாள் மீரா.

ஒருநாள் இரவு கண்ணன் உருவத்தைப் பார்த்து மனதாரப் பேசிக்கொண்டிருந்தாள். கண்ணனும் பேசினான். அரசனின் தங்கை ஊதா ரகசியமாக அங்குவந்தாள். சிறைக்குள் பேச்சுக்குரல் கேட்கிறதே என்று, இருளில் வாளை வீசினாள். கண்ணன் மறைந் தான். □இரவில் வேறொரு ஆடவனுடன் பேசிக்கொண்டிருக்கிறாயே'' என்று மீராவை நாடு கடத்தினர். அவள் கிருஷ்ண விக்ரகத்துடன் சாதுக்கள் சங்கங்களைத் தேடிச்சென்று ஆடிப்பாடி, சாதுக்கள் கொண்டுவரும் பிரசாதத்தை உண்டு வாழ்ந்து, கண்ணன் ஆணைப்படி பிருந்தாவனம் வந்துசேர்ந்தாள். கிரிதர கோபாலன் என்ற நாமம் அவளுக்கு மிகவும் பிடித்தமானது.

**(ஈ) நாயகன் நாயகி பாவனை**

மானுடக் காதல் ஒரு ஆணையும் பெண்ணையும் வந்தடைகின்ற போது ஏற்படக் கூடிய உணர்வலைகளை மீராபாய் கண்ணபிரான் மீது கொள்கின்ற காதலில் வெளிப்படுத்துகின்றார்

"உண்ணும்போதும் உன்நினைவே எனக்குத் தந்தாய்
உறங்கும்பொழுதும் கனவாய் வந்து அணைத்தாய்
உயிரில்லா உடலாய் என்னை நடக்க விட்டாய்
உன்நாமமே சொல்லவைத்தாய் என்னை கண்ணா..."

தேவகி வயிற்றில் ஜனித்தவன் நீயே,கோகுலத்தில் லீலைகள் புரிந்ததும் நீயே,பாஞ்சாலியின் துயர் தீர்த்ததும் நீயே,என்காதல் என்று உணர்வாய் கண்ணா? ஏன கண்ணனை நோக்கி வினா எழுப்புகின்றார். மன்னனுடன் வாழ்க்கை என்று ஆனபோதிலும் மனதில் என்றும் நிலைத்து இருப்பவன் நீயே எனக் கூறும் மீராபாய் உண்மையில் மன்னனை மனதார மணந்திருக்கவில்லை. உறவினர்களின் பிடிவாதத்தினாலேயே திருமண பந்தத்தினுள் நுழைய வேண்டியேற்பட்டது.

"மாயவனே உன்மனதில் இடமுண்டா எனக்கு
மீராவின் காதல் மறுப்பது ஏன் கண்ணா?" என ஏங்கித் தவிக்கின்றார். கண்ணனை நோக்கி,உன் விசித்திரமான விநோதமான உலகம்எனக்கு விருப்பமில்லை, அங்கே குப்பைகள் நிறைந்திருக்கிறது,இருக்கும் எவரும் புனிதமானவராய் இல்லை, எந்த நகைகளையும் நான்இனி, அணியப்போவதில்லை,கண்ணுக்கு மையிடேன்,கார்கூந்தல் முடியேன்,மங்கலப் பெண்களின்,அலங்காரங்கள் களைந்தேன்,மலைகளை ஏந்திய கிரிதர கோபாலன்,என் தலைவன்.இனி,எனக்கு எந்த மணமகனும்தேவையில்லைஎன மதுர பாவத்தின் உச்சநிலைக்கே சென்று தன் பக்தியை வெளிப்படுத்தினார். அவரது மதுரபாவம் நிறைந்த பக்தியுணர்ச்சிப் பாடல்களுள் சில:

“போராட்டமே என் வாழ்க்கை என்றானபோதும்
போராது இன்னும் இன்னல்கள் தந்தபோதிலும்
கோணாது என் மனம் அறிவாயோ நீயும்
கோபாலனே மனம்கவர் கள்வனே கண்ணா”

உண்ணும் கவளம் என் உள்ளிறங்கவில்லை
உள்ளிருந்து நீயும் எனை உண்ணவைப்பதில்லை
உன்னுயிராய் நான் வாழவேண்டித் தானே
உனக்காய் ஜென்மம் எடுத்தேனே கண்ணா”

“மலரும் மலர்களின் உள்ளிலும் உயிராய் நீ
கனவின் கற்பனையில் காதல்இணையாய் நீ
மதிமறந்த வேளையிலும் என்மனதில் நீ
என்னுள் உயர்ந்த உத்தமனே கண்ணா”

“கசடில்லா வெண்ணையாய் உருகினேன் நானும்
கள்ளமின்றி காதலை வளர்த்திட்டேன் நாளும்
கபடமில்லா மனதால் வசியம் செய்தவனே
காந்த கண்ணழகனே மன்னனே என் கண்ணா”

“உலகமே என்னை பழித்திட்ட போதும்
உனக்காய் உயிர் வாழ்வேன் நானும்
உனதன்பை பெறவே இத்தனை தவமும்
உன்மனதில் உறையவே காத்திருப்பேன் கண்ணா”

### (உ) இறுதிக் காலம்

பின்னாட்களில் குரு ரவிதாசருக்கு சீடரான இவர், அரச குடும்பத்தின் தொல்லைகள் தாளாது பல இடங்களுக்குச் சென்றும் நிறைவுப்பெறாது இறுதியில் கண்ணன் வாழ்ந்த பிருந்தாவனத்தை வந்தடைந்தார். அங்கு தன்னை கோபியர்களில் ஒருவராக உணர்ந்த அவர் வட இந்தியா முழுதும் யாத்திரையாக சென்று தம் கருத்துகளை பாடல்கள் மூலம் வட்டார மக்கள் மொழியான விரஜ மொழியில் பரப்பினார். பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்றார். இவரது பக்திப்பாடல்கள் இனிமையானவை. பக்தி நெறியைச் சுவையான பாடல்கள் வாயிலாகப் பரப்பினர். எளிய பக்தியும், நம்பிக்கையுமே வீடு பேற்றினை அடைய நல்வழி என்றார். பிறப்பால் எவரும் உயர்ந்தவர் இல்லை. உயர்விற்கு காரணம் செயல் என்னும் கருத்தைப் பரப்பினார்.

இறுதிக் காலகட்டத்தில் மீராபாய் கண்ணன் அரசு புரிந்து மறைந்த துவாரகை வந்து, கண்ணன் வாழ்ந்திருந்த பகுதிகளைக் கண்டு ஆடிப்பாடினாள். அப்போது சித்தூர்கட்டிலிருந்து அரச வம்சத்தினர் மீராவிடம் வந்து, மீரா சென்றபிறகு நாட்டின் வளம் சீர்குலைந்துவிட்டதாகவும், மீண்டும் நாடு திரும்பவேண்டுமென்றும் அவளிடம் வேண்டினர். “நான் கண்ணனைக் கேட்கிறேன்” என்று துவாரகை ஆலய கர்ப்பக்கிரகம் சென்றாள். அப்படியே கண்ணன் விக்ரகத்துக்குள் கலந்துமறைந்தாள்.

## (04) கபீர்தாசர்

### (அ) பிறப்பு

காசியில், நெசவுத் தொழில் செய்து வந்த, இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த நூர் அலி, நிமா தம்பதியர். கிடைப்பதில் மனநிறைவு கொண்டு, வருவோர்க்கு விருந்தோம்பல் செய்து நல்லறம் நடத்தி வந்தனர். அந்தத் தம்பதிக்கு பலகாலம் கடந்தும் பிள்ளைப்பேறு கிட்டவில்லை. ஒரு சமயம் வீட்டிற்கு வந்த ஒரு பெரியவருக்கு விருந்தோம்பல் செய்தனர். அதனை மகிழ்ச்சியுடன் ஏற்ற அவர், ‘‘இந்த நற்செயல் தொடர உங்களுக்கு ஒரு மகன் கிடைக்கும்’’ என்றார். ‘‘வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளை பாக்கியம் எவ்வாறு கிட்டும்? ’’ என்றனர். அவரோ, ‘‘என் ஆசீர்வாதம் பொய்க்காது ‘‘ என்று கூறிச்சென்றார்.

ஒருநாள் நூர் அலி கங்கைக் கரைக்குச் சென்றார். அவரிடம் பட்டு நூலுருண்டை ஒன்று இருந்தது. அது கை தவறி கங்கையில் விழுந்து அடித்துச் செல்லப்பட்டது. அதை எடுப்பதற்காக ஓடினார். ஆனால் முடியவில்லை. சற்று தூரம் சென்றவர் ஓடிவந்த களைப்பால் ஒரு மரத்தடியில் அமர்ந்தார். அப்போது ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. குரல் வந்த திக்கில் நோக்கியபோது அழகான ஆண்குழந்தையொன்று படுத்திருப்பதைக் கண்டார் தமால். அக்கம்பக்கம் மனிதர்களோ வீடுகளோ இல்லை. இதுதான் இறைவன் தந்த குழந்தை என்று மகிழ்ந்த அவர், குழந்தையை எடுத்துக்கொண்டு இல்லம் வந்துசேர்ந்தார். அந்தக் குழந்தையே கபீர்தாசர். இந்தக் குழந்தை இந்து விதவைப் பெண் ஒருத்திக்குப் பிறந்தது என்கின்ற கருத்தும் உண்டு.

இதேவேளை கபீர்தாசரின் பிறப்பு தொடர்பாக, வேறு சில கருத்துக்களும் உள்ளன. வைகுண்டத்தில் மகாவிஷ்ணு சுகமுனிவரைப் பார்த்து, ‘‘சுகா, பூவுலகில் அதர்மம் தலைதூக்குகிறது. எனவே நீ அங்கு பிறந்து நாம மகிமை, மத ஒற்றுமை போன்றவற்றை வளர்க்கவேண்டும்’’ என்றார். அதற்கு சுகர், ‘‘சுவாமி, நான் கர்ப்பம் புகமாட்டேன்’’ என்றார். ‘‘நீ காசியில் குழந்தையாகவே அவதரி’’ என்றார் மகாவிஷ்ணு. அவ்வாறு வந்த சுக முனிவரே கபீர்தாசர் என்பர். கபீர்தாசரின் காலம் கி.பி. 1440 முதல் 1518 வரை என்பர்.இதில் சில முரண்பாடுகள் உள்ளன.

### (ஆ) குருபக்தி

கபீர்தாசர் சிறுவயதில் வளர்ப்புத் தந்தையின் மரபுப்படி மசூதிக்குச் சென்று அல்லாவைத் தொழுவார். அஸ்தானந்தர் என்னும் பெரியார் இவருக்கு இந்து மதத்தைப் போதித்தமையால் இவர் இஸ்லாம் சமயத்தோடு இந்து சமயத்தினையும் அறிந்து வந்தார். இவருக்கு இயற்கையாகவே ராமபக்தியும் இருந்தது. அந்தச் சமயத்தில் ராமானந்தர் என்பவர் மகாகுருவாக விளங்கி வந்தார். அவரிடம் ராமநாம உபதேசம் பெறவேண்டும் என்பது கபீரின் ஆசை. ஆனால் அவர் இஸ்லாமியர் என்று, ராமானந்தரின் சீடர்கள் அனுமதிக்கவில்லை. ராமானந்தர் அதிகாலையிலேயே கங்கையில் நீராடும் வழக்க முடையவர். இதையறிந்த கபீர்தாசர் ஒருநாள் ராமானந்தர் செல்லும் பாதையோரம் படுத்துக்கொண்டார். அவ்வழியே வந்த ராமானந்தரின் பாதம் கபீர்மீது பட’’ராம் ராம்’’ என்றார் ராமானந்தர். சட்டென எழுந்த கபீர்தாசர், ‘‘சுவாமி, தங்களின் ஸ்பரிச தீட்சையும் கிடைத்தது ராமநாம உபதேசமும் பெற்றேன்’’ என்று நெகிழ்ந்தார். ராமானந்தரும் மகிழ்ந்து,‘‘ராமநாமம் ஜெபித்து மேன்மையடைவாயாக’’ என்று ஆசீர்வதித்தார்.

(இ) வாதத்தில் ஈடுபடல்

மச்சேந்திரநாதர் என்பவரின் சீடரான கோரக்கர் என்பவர் மகாசித்தி பெற்றவர். அதேசமயம் அகந்தையும் இருந்ததால் மற்றவர்களை வாதில் வெல்ல ஊர் ஊராகச் சென்றார். அப்படி அவர் காசிக்கு வந்தபோது ராமானந்தரை வாதுக்கு அழைத்தார். ராமானந்தரின் சீடர்கள், ‘‘இவர் மிகுந்த அகந்தை கொண்டவர். இவருடன் வாதிட வேண்டாம்’’ என்று குருவைத் தடுத்தனர். அப்போது அங்குவந்த கபீர்தாசர் ராமானந்தரை வணங்கி, ‘‘குருவே, நான் வாதாட அனுமதி தாருங்கள்’’ என்றார். ராமானந்தர் அமைதியாக இருக்கவே, அதையே அனுமதியாக எண்ணி வெளியே வந்த கபீர்தாசர் ‘‘கோரக்கரே, வாதாட வாரும்’’ என்றார். ‘‘உமது மாயவித்தை என்னிடம் வேண்டாம். கீழே இறங்கி வா’ என்றார் கோரக்கர். கபீர் கீழே வர, கோரக்கர் ராமானந்தர்போல கபீருக்கு காட்சி தந்தார். இதைக்கண்ட உண்மை யான ராமானந்தர், ‘‘ராமச் சந்திரா! நீதான் கபீரைக் காப்பாற்ற வேண்டும்’’ என்று வேண்டினார். அப்போது கபீருக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அவர் கோரக்கரின் குரு மச்சேந்திரரைப்போல காட்சி தந்தார். வியப்படைந்த கோரக்கர் மகாவிஷ்ணுபோல காட்சி தந்தார். உடனே கபீர் சரபமூர்த்தியாக காட்சி தந்தார். இப்படி பற்பல சித்துவிளையாடல்கள் நடந்தன. கோரக்கர் கபீரின் குரு பக்தியை உணர்ந்து, ‘‘ராமானந்தரின் உயர்ந்த சீடன் நீ. ஞானம் பெற்று நீடுழி வாழ்வாயாக’’ என வாழ்த்தி அங்கிருந்து அகன்றார்

## கபீர்தாசரின் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகள்

(அ) சமயங்களுக்கிடையிலான நல்லுறவு

கபீர்தாசர் இந்து, இசுலாமியம் ஆகிய இருமதங்களின் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் வெறுத்து அவற்றின் மீது கேள்விகளை எழுப்பியவர். கபீர்தாசர் ராம்-ரஹீம் என்ற அடிப்படையில் ஒருவரையும் வேறுபடுத்திப் பார்த்தவர் அல்லர். இவரது சிந்தனைகளின் வெளிப்பாடுகள் இறைவனைப் பற்றிய கருத்துகள், இறைவழிபாட்டைப் பற்றிய கருத்துகள் என யாவும் இந்து-முஸ்லீம் மதக் கோட்பாடுகளை ஒருங்கிணைத்தே வெளிப்பட்டன. அவை இந்துமுஸ்லிம் நல்லுறவை வளர்க்கும் இயக்கமாகவும் விளங்கியது. இவரது பாடல்களில் சில சீக்கிய மதத்தின் ஆதிகிரந்தத்தில் இடம் பெற்றுள்ளன. நெசவாளராக வாழ்ந்து, சமயநல்லுறவிற்கு பெரும்பங்காற்றிய சிறந்த கவிஞரான கபீர்தாசரின் பெயரில் அவரது நினைவைப் போற்றும் வண்ணம்‘‘சந்த் கபீர்’ என்ற சிறந்த நெசவாளருக்கான விருதை மத்திய அரசு கடந்த ஐம்பது ஆண்டுகளாக (1965இல் இருந்து) வழங்கி வருகிறது.

தனது சிந்தனைகளை இருசமயத்தாரையும் நோக்கியே எடுத்துக் கூறுகிறார் கபீர்தாசர். இவர் பார்வையில் மதவேறுபாடுகள் மறைந்து போகின்றன. இறைவன் ஒருவனே, உருவமற்ற அவனை உணரச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் தேவையில்லை, இறைவனை வெளியில் தேடுவது அறியாமையின் விளைவு. இறைவன் நம்முள்ளேதான் இருக்கிறான், அங்குத் தேடினாலே அடைய முடியும் என்ற கருத்துக்கள் பல பாடல்களிலும் வெளிப்படுகின்றன.

‘‘ஓ! பணியாளனே, என்னை நீ எங்கே தேடுகிறாய்?
இதோ, நான் உன் அருகிலேயே இருக்கிறேன்.
நான் திருக்கோயிலிலும் இல்லை மசூதியிலும் இல்லை
கா∴பாவிலும் இல்லை கைலாயத்திலும் இல்லை’’

**(ஆ) சடங்குகளும் சம்பிரதாயங்களும்:**இறைவழிபாட்டிற்கான சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் உடன்பாடில்லாதவர் கபீர்தாசர். இறைவன் நம் உள்ளேதான் உள்ளார். அவரை வெளியில் தேடுவது அறிவீனம் என்பதைப் பல பாடல்களிலும் குறிப்பிடுகிறார். அன்பின் வழியே இறைவனை அடையும் வழி என்பது கபீர்தாசரின் இறைக்கொள்கை. அன்பின் பேரொளியை கண்டவரே உய்வு பெற இயலும் என்றும் குறிப்பிடுகிறார்.‘‘நான் சடங்குகளிலோ அவை சார்ந்த சம்பிரதாயங்களிலோ இல்லை. யோகப் பயிற்சியிலோ துறவிலோ இல்லை. நீ என்னை நாடும் உண்மை ஆர்வலனாக இருப்பின் உடனடியாகக் காணமுடியும். கண்ணிமைப் போதிலோ கைநொடிப் போதிலோ என்னைச் சந்திக்க முடியும்‘‘என இறைவன் எடுத்துரைப்பது போல் பாடல்களைப் பாடுகின்றார் கபீர்தாசர்.

பூந்தோட்டத்திற்கு நீ போக வேண்டாம்.
என் நண்பனே, அங்கே போகாதே.
உன் உடம்பிலேயே மலர்வனம் உள்ளது.
ஆயிரம் இதழ்த் தாமரை மீது நீ அமர்ந்து கொள்.
அங்கிருந்தபடியே எல்லையற்ற பேரழகை
அகக்கண்ணால் கண்டு நீண்ட நேரம் உற்று நோக்கு''

**(இ) வாழ்வியல் அறிவுரைகள்:**

கபீர்தாசரின் பாடல்கள் வாழ்வியல் அறிவுரைகள் பலவற்றையும் எளிய வகையில் கூறிச்செல்கின்றன. ''நான'' என்னும் அகங்காரமும் ''எனது'' என்னும் மமகாரமும் இருக்கும் வரை, செய்யும் வினைகள் பயனின்றியே ஒழியும். செருக்குணர்வும், உடைமைப் பற்றும் மரணிக்கும் போது செயல் முடிவுக்கு வருகின்றன என்கிறார் கபீர்தாசர்.

''பார்! வாழ்வையும் மரணத்தையும் பார்!
அவற்றுக்கிடையே பேதமில்லை பிரிவினை இல்லை.
வலக்கையும் இடக்கையும் ஒன்றுதான். ஒன்றேதான''

என வாழ்வில் முரண்பட்டுத் திரியும் மனிதர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார். ''தவறுகள் கதவை அடைக்கின்றன. அப்பூட்டினை அன்பெனும் சாவியால் திற'' என வாழ்வில் அன்பின் முக்கியத்துவத்தை உபதேசித்தார். மனித வாழ்வில் துன்பங்கள் ஏற்படுவதற்கு ஆசையே காரணமென கபீர்தாசர் எடுத்துரைக்கின்றார். மரணமிலாப் பெருவாழ்வு என்னும் ஆழ்கடலில் அலைந்து திரியும் அந்த இன்பானுபவம் என் வேண்டுதல்களையெல்லாம் அடியோடு அகற்றிவிட்டது. விருட்சம் வித்தினுள் அடங்கி யிருப்பது போல் எல்லா வகையான பிணிகளும் ஆசையில்தான் அடங்கிக் கிடக்கின்றன என்கிறார்.

**(ஈ) உடன் கட்டை ஏறுதலை மறுத்தல்**

இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறுதல் என்ற பெண்கொலைகள் அக்காலத்தில் பரவலாக இருந்ததும், அச்செயலின் அவலம் புரியாது அது உயர்வாகக் கருதப்பட்ட சமூகத்தின் மனநிலையும் கபீர்தாசரின் பல பாடல்களில் வெளிப்படுத்துகின்றன. "இறந்துவிட்ட கணவனின் உடல் அருகே கைம்பெண் உட்கார்ந்திருக்கிறாள் அவள் சிதையைக் கண்டு அஞ்சுவதில்லை இந்த அற்ப உடம்பைப் பற்றிய எல்லா அச்சங்களையும் விட்டொழிப்பாயாக" என விதவைப் பெண்ணை தைரியமூட்டுகின்றார்.

"கணவனை இழந்த காரிகையிடம்,
உடன்கட்டை ஏறித் தன்னை எரித்துக்கொள்ளுமாறு
யார் சொல்லிக் கொடுத்தார்கள்?
பற்றற்ற நிலையில் பேரின்பம் காண்
என யாராவது சொல்லித்தர வேண்டுமா என்ன?

இறைவனை அடையும் பேரின்பப் பேறு அடையும் நிலை, கைம்பெண் கணவனுடன் உடன்கட்டை ஏற்றப்படுவதுடன் ஒப்பிடப்படுவது பெண்கள் எத்தகைய துன்பம் அனுபவித்துள்ளனர் என்பதையும், எந்த அளவு மக்களின் மரத்துப்போன மனம் பெண்களின் உயிர்க்கொலையினை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் ஏற்றுக் கொண்டு வாழ்ந்துள்ளது என்பதையும் இப்பாடல்கள் கண்முன் நிறுத்துகின்றன.

**கபீர்தாசரின் பக்தி இயக்கப் பணிகளும் சிந்தனைகளும்**

**(அ) பக்தி பற்றிய அவர்தம் கருத்துக்கள்**

கபீர்தாசரின் கவிதைகள் பக்தி இலக்கியத்தில் தனியிடம் பெற்றுப் போற்றப்படுபவை. கபீர்தாசரின் கவிதைகள் பக்தியினூடாக மதநல்லிணக்கத்தை வளர்க்கின்றன ராமனை தன்னுள் உணர்வது பக்தி என்கிறார் கபீர்தாசர். நீர்த்துளி கடலில் அடங்கும் என்பதை யாரும் அறிவார்கள். நீர்த்துளிக்குள் கடல் அடங்கும் என்பதை யாரும் அறியார்கள். அதாவது உலகம் இறைவனின் படைப்பு என்பதை யாரும் அறிவார்கள். இந்த இறைவனின் படைப்பாகிய தொண்டர் உள்ளத்துள்ளே இறைவனே அடக்கம் என்பதை யாரும் அறியார்கள். என்று பாடியுள்ளார். இது பராபக்தி எனப்படும்.

**(ஆ) பேதங்கள் கடந்த பக்தி நிலை**

மதகுருவும், போர் வீரனும், வியாபாரியும்,
மற்றுள்ள முப்பத்தாறு சாதியினரும் -
ஒன்று போலவே இறைவனை நாடுகிறார்கள்.
அந்த ஞானி என்ன சாதியாக இருப்பான்
என்று கேட்பது மூடத்தனம்.
முடி திருத்தும் நாவிதனும்
இறைவனைத் தேடியிருக்கிறான்.
துணி துவைக்கும் வண்ணாத்தியும்,
மரங்கொல் தச்சரும் இறைவனைத் தேடியிருக்கிறார்கள்"

என்ற பாடலில்,"மதகுருவும்","போர் வீரனும்","வியாபாரியும்", மற்றுள்ள "முப்பத்தாறு சாதியினரும்" என "வருணாச்சிரம தருமம்" பிரித்துரைக்கும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பிரிவுகளையும் சுட்டுகிறார். இவர்களில் ஒரு பிரிவினர் மட்டும் இறைவனைத் தேட விரும்புவதில்லை. அனைத்துப் பிரிவு மக்களின் ஆர்வமும் இறைவனை அடைய விரும்புவதே என்றும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் சாதி சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது இறைவழிபாடு என்ற கபீர்தாசரின் பரந்துபட்ட எண்ணம் வெளிப்படுகிறது.

**(இ) சமயம் கடந்த இறைபோற்றும் பார்வை:**

கபீர்தாசரின் பல பாடல்களில் சமயசார்பற்ற இறைவணக்கமுறைக் கருத்துகள் விரவியுள்ளன.

"ஆண்டவன் மசூதியின் உள்ளேதான் இருக்கிறானெனில்
இந்த உலகம் யாருக்குச் சொந்தமானது?
நீ மேற்கொண்ட புனித யாத்திரையில்
காண நேர்ந்த கற்சிலைதான் இராமனெனில்,
உலகத்தில் நிகழ்வனவற்றை அவனல்லாமல் அறிவான் யார்?
"ஹரி கீழ்த்திசையில் இருக்கிறான்,
அல்லா மேற்றிசையில் இருக்கிறான் என்கிறாயே,
நீ உன் இதயத்தை உள்நோக்கிப்பார்.
அங்கே கரீம் ராம் இருவரையும் காண்பாய்"

காஜியார் திருக்-குர்-ஆனில் சொற்களைத் தேடிக் கொண்டிருக்கிறார். இது இப்படி, அது அப்படி என்று மற்றவர்களுக்கு வாய்கிழிய உபதேசிக்கிறார். அவரது இதயம் அன்பில் நனையவில்லையெனில், அவர் மற்றையோர்க்கு ஆசானாக இருந்து என்ன பயன்? யோகி தன் ஆடையைக் காவியில் தோய்த்து நிறமேற்றுகிறார். ஆனால், அன்பின் நிறம் இன்னது என அவர் அறியார். அவ்வாறாயின், இவர் ஆடை வெள்ளாடை ஆயின் என்? கல்லாடை ஆயின் என்? என நடைமுறையில் மனிதன் கொள்ள வேண்டிய பக்தியை விபரிக்கின்றார்.

### (ஈ) துறவறத்தை மறுத்துரைத்து இல்லறத்தினூடாகவே பக்தியை வெளிப்படுத்தல்

இறைவனை அடையத் துறவறம் மேற்கொள்வதை கபீர்தாசர் ஆதரிக்கவில்லை. இல்வாழ்வில் முறைப்படி வாழ்ந்தே இறைவனை அடையமுடியும் என்பதை அவர் ஆணித்தரமாக நம்பியதும் அவரது பலபாடல்களின் வழி தெரிகிறது.

"குறிப்பிட்ட நோக்கமின்றி வெளியே அலைந்து திரிபவனை
அவனது இல்லத்திற்குத் திரும்ப அழைப்பவனே
உண்மையில் எனக்குப் பிரியமானவன்.
வீட்டில்தான் அன்பின் சங்கமம்.
வீட்டில்தான் வாழ்வின் நுகர்ச்சி.
உண்மை அவ்வாறிருக்க, நான் ஏன் வீட்டைத்
துறந்து காட்டில் அலைய வேண்டும்?
சத்திய தரிசனம் காண பிரம்மம் எனக்கு உதவுமானால்,
நான் வீட்டிலேயே தளையையும் விடுதலையையும் காண்பேன்"

### (உ) நாயக-நாயகி பாவம்:

கபீர்தாசர் இறைவனை ஆண்வடிவில் காண்கிறார். இறைவனை அடைய விரும்பும் தன்னை இறைவனின் நாயகியாக உருவகித்துக் கொள்கிறார். இவர் பாடல்கள் பெரும்பாலும் நாயக-நாயகி பாவத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. நாயகனான இறையை அடையவிரும்பும் நாயகியான தன்னை, நாயகனுடன் இணைந்துவிடத் துடிக்கும் காதலியாகவும், மனைவியாகவும் கற்பிதம் செய்து கொள்கிறார்.

"உன்னை நினைத்தே என் உடம்பும் மனமும் ஏங்குகிறது.
என் ஆருயிர்க் காதலனே! என் இல்லத்திற்கு எழுந்தருள்.
உன்னை மணந்து கொள்ளப் போகிறவள் நான்தான் என்று
மற்றவர்கள் சொல்லும்போது
எனக்கு ஒரே நாணமாக இருக்கிறது.
ஏனெனில் இந்த வினாடி வரை உன் இதயத்தை
என் இதயத்தால் நான் தொட்டதே இல்லை.
அவ்வாறானால், என் காதலுக்கு என்னதான் பொருள்?
பாலும் கசந்தது என் படுக்கையும் நொந்தது.
வீட்டின் உள்ளே இருந்தாலும் புறத்தே நின்றாலும்
என்மனம் அமைதியின்றி அலைகிறது.
தாகம் தீரத் தண்ணீர் தேவை.
மணப்பெண்ணுக்கு மணாளனே தேவை.
யார் அங்கே?
என் காதலனுக்கு நான் விடுக்கும் மடலைக்
கொண்டு சேர்க்க வல்லார் யார் இருக்கிறார்கள்"

என்ற பாடலில் தன்னைக் காதலியாக எண்ணிக்கொண்டு, காதலனான இறைவனை அடைய விரும்புவதை அவருக்கு மடல் எழுதித் தெரிவிக்கிறார். இதில் எங்குமே இது இறைவனை நோக்கிக் கூறப்பட்ட பாடலாகத் தெரியாமல், காதல்வயப்பட்ட காதலி ஒருத்தியின் பாடலாகவே இப்பாடல் அமைந்திருப்பதைக் காணலாம்.

**(ஊ) இராமநாமத்தின் சிறப்பு**

வட இந்தியா முழுக்க ராம நாமத்தை பரப்பியவர் க்பீர்தாஸர். “நண்பனே, ஹரியின் நாமத்தை இடைவிடாமல் சொல்லுங்கள். “என்னுடையது” என்று சொல்லி என்ன பயன் கண்டீர்கள். ஹரி நாமம் சொல்லாவிடில் யாவும் மாயையே. ஹரியின் குணத்தைப் பாடுங்கள். பாடி ஆடிக்கொண்டே வைகுண்டம் ஏகுங்கள்!” என்கிறார் கபீர்தாசர். கபீர்தாசரின் மீது அன்பும் பக்தியும் கொண்ட பத்மபாதர் என்பவர் கபீர்தாசரின் சீடராக இருந்தார். சகல சாஸ்திரங்களிலும் வல்லவர். ராமபிரான் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். ஒரு முறை தொழு நோயாளி ஒருவனை அவர் சந்தித்தார். உடல் முழுவதும் புண்ணாகி, அழுகி, ரத்தம் சொட்டச் சொட்ட நின்ற அந்தத் தொழுநோயாளியை அவனது உறவினர்கள் கங்கைக்கரைக்கு எடுத்து வந்தனர். எந்த மருத்துவத்தினாலும் அவன் நோய் குணமாகாத காரணத்தினால், வாழ்க்கையை வெறுத்த அந்த நோயாளி தன் உயிரை விடத் துணிந்தான். அவன் உடல் கங்கை நீரில் அமிழ்ந்து போகாமல் மிதக்கும் பொருட்டு அவன் கால்களிலும், கைகளிலும் குடங்களைக் கட்டும் பணியில் உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்த நேரத்தில் பத்மபாதர் அங்கே வந்தார். நடப்பதைக் கண்டு, என்ன விஷயம் என்று விசாரித்தார்.

சுற்றி நிற்பவர்கள் அவரிடம் தொழுநோயாளியைப் பற்றி எடுத்துரைத்தனர். அவன் ஒரு வியாபாரி என்பதை அறிந்த அவர் அவனைப் பார்த்து,”நோயாளியே, நீ வியாபாரியாக வாழ்ந்து உடலுக்குத் தேவையான அத்தனை சௌகரியங்களையும் குறைவில்லாமல் தேடிக் கொண்டாய். ஆனால் ஆத்மாவின் நலனுக்காக என்ன செய்தாய்?” என்று கேட்டார். அவன் மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான். உடனே பத்மபாதர்,”கவலைப்படாதே மனத்தூய்மையோடு, நீயும் உன் நலனில் அக்கறை வைத்திருப்பவர்களும் ஒரே சிந்தனையோடு ராம நாமத்தை மூன்று முறை தொடர்ந்து உச்சரியுங்கள். உன்னைப் பிடித்திருக்கும் தொழு நோய் ஓடிப் போய்விடும்” என்று உபதேசித்தார்.

அவர் பேச்சில் நம்பிக்கை வைத்த தொழுநோயாளியும், அவனது உறவினர்களும் மூன்று முறை மனத்தூய்மையோடு ராம நாமத்தை உச்சரித்தனர். ஆச்சரியப்படும் விதமாக இதுநாள் வரையில் வியாபாரியைப் பீடித்திருந்த நோய் அப்போதே மறைந்தது. அவன் உடல் தங்கம்போல ஜொலித்தது. இந்த அதிசயத்தை நிகழ்த்திய பத்மபாதரை அந்த வியாபாரி பல முறை தொழுது கண்ணீர் அஞ்சலி செய்து தன் நன்றிக்கடனைச் செலுத்தினான். சுற்றியிருந்த மக்கள் கூட்டமும் அவரைத் தொழுதது. இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டார் கபீர்தாசர். தனது சீடர் பத்மபாதரை அழைத்தார். குருவின் அழைப்பைக் கேட்டு, பத்மபாதர் விரைந்து சென்று கபீர்தாசரை சந்தித்து வணங்கினார்.

“ஒரு தொழுநோயாளியின் நோயை ராம நாமத்தை உச்சரிப்பதன் மூலம் நீ போக்கியதை அறிந்தேன். அவனை எத்தனை முறை ராம நாமத்தை உச்சரிக்கச் சொன்னாய் ?” என்று கேட்டார் கபீர்தாசர். “மூன்று முறை குருவே” என்றார் பத்மபாதர் பணிவோடு. “இத்தனை சிறிய பலனுக்காக ராமநாமத்தை மூன்று முறை உச்சரிக்க வேண்டுமா? நகத்தினால் கிள்ளி எறியக் கூடிய இலையை கோடாரியால் வெட்டலாமா? மனம், மெய், வாக்கு மூன்றினாலும் சுத்தமாக இருந்து ராம என்ற மந்திரத்தை ஒரே ஒரு முறை சொன்னாலே நாம் பல ஜென்மங்களில் செய்த பாவம் அத்தனையும் அந்த நிமிடத்திலேயே எரிந்து சாம்பலாகி விடுமே! வேத புருஷனாலும் அளவிட்டுச் சொல்ல முடியாத பெருமை உடைய ராம நாமத்தை அல்ப விஷயத்தின் பொருட்டாக மூன்று முறை உச்சரிக்கச் செய்தது தவறாயிற்றே” என்றார். அவர் ராம நாமம் பற்றிக் கூறும் போது,

“”ராம” நாமம் ஒருமருந்து  
“ராம” நாமம் அரு மருந்து  
ஒரே ஒரு மருந்து ஒரு மருந்து  
உலகத்தை உய்விக்க வந்த மருந்து”  
“ஜானகிக்கு ஜீவன் தந்தது அந்த மருந்து  
ஜாதி மத பேதமின்றி சொல்லும் மருந்து  
மாருதிக்கு பெருமை தந்தது அந்த மருந்து  
மாதேவன் பாராட்டிப் பேசும் மருந்து”

### (எ)கபீர்தாசரின் இறைவழிபாட்டு முறை

ஒவ்வொரு பக்தனும் தனக்கென ஒரு கடவுளை உருவாக்கிக் கொண்டு வழிபாடு செய்கிறான். முழுமுதற் கடவுளான பிரமத்தை யாரும் தேடுவாரில்லை. அவர்கள் அவதாரங்களை நம்புகிறார்கள். எந்த அவதாரமும் பரம்பொருள் ஆகா. ஏனெனில் அவர்கள் தத்தம் வினைப்பயனைத் துய்த்தே கழிக்கவேண்டியுள்ளது. எனவே, இவையல்லாத வேறொன்றே பரம்பொருள் ஆதல் வேண்டும் என்கிறார். கபீர்தாசர் மனிதனை நோக்கி,"உன் தேவன் உன்னருகே இருக்கிறான்.நீயோ அவனைப் பார்ப்பதற்காகப் பனைமரத்தில் ஏறுகிறாய்.

பிராமண குரு வீடு வீடாகப் போய் இறை நம்பிக்கையை விதைக்கிறான்.மக்களைத் தன்பால் ஈர்க்கிறான்.வாழ்வின் நிஜமான நீரூற்று உன்னருகே உள்ளது.நீயோ வழிபாடு செய்வதற்காக ஒரு கல்லை நட்டு வைத்து, எதிரே முணுமுணுக்கிறாய்."என் தேவன் எவ்வளவு இனியன் என்று நான் ஒருபோதும் கூறேன்.மூச்சை அடக்கி யோகம் செய்வதும், ஜெபமாலை உருட்டுவதும்,புண்ணியம் பாவம் என்பதும் எல்லாமே வீண்.பயன்படாது. வெறும் அபத்தம். வாய்மையைப் போற்றுபவர், செருக்கும் வஞ்சனையும் அற்றவரே இறைநிலையை அடையமுடியும் என்பது கபீர்தாசர் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டும் இறைவழிபாட்டு முறை.

### (ஏ)இறைவனை அடைவதற்கான வழி

சடங்குகளுக்கும் சம்பிரதாயங் களுக்கும் அப்பாற்பட்ட வழியையே கபீர்தாசர் போதித்தார். பொறிபுலன்களாகிய கதவுகளை அடைத்து வைத்து மூச்சை அடக்கி உலகத்தைத் துறந்து போதலான வழியை கபீர்தாசர் முழுவதுமாக மறுத்தார்.

"நீ எந்த ஒன்றுள் தோய்ந்திருந்தாலும்,
அந்நிலையிலும் அவர் தெய்வமென்னும்
ஒண்பொருளைக் கண்டறியக் கற்பிக்கிறார்.
உலகின் போகநுகர்ச்சிக்கு இடையேயும்
இறைவனோடு இணைந்து நிற்கும்
பேரின்பத்தைக் கற்றுத் தருகிறார்"

எனவே ஐம்புலன்களை அடக்கி, மூச்சடக்கி, துறவறம் மேற்கொள்ளாது, உலக வாழ்விலேயே இறைவனை அடைய வழிகாட்டுபவரே உண்மையான ஞானி என்பது கபீர்தாசரின் கருத்தாகவுள்ளது.

இதன்படி,இறைவனை அடைவதற்கான வழிகள் அன்பும் பக்தியுமாகும்.இவையன்றி வேறு எதனாலும் இறைவனை அடைய முடியாது.உரக்க அழைத்து பிரார்த்திப்பதோ, அடையாளங்களை அணிந்து கொள்வதோ உய்வடைவதற்கான சரியான வழிகள் கிடையாது என்கிறார் கபீர்தாசர்.

"முல்லா அவனை உரத்த குரலில் கூவியழைக்கிறார்.
ஏன்?உன் தேவன் செவிடனா?
சின்னஞ்சிறு பூச்சியின் காலில் மணி கட்டியிருந்தாலும்,
அது இயங்கும்போது ஒலிக்கும் ஓசையைக்
கூட அவன் கேட்க வல்லவன் ஆயிற்றே!
ஜெபமாலையை உருட்டு
நெற்றி நிறைய விபூதியைப் பூசிக்கொள்.
தலைநிறைய கற்றைச் சடாமுடியை
நீள வளர்த்து அலங்காரமாகத் தூக்கிக் கட்டிக்கொள்.
என்ன செய்தால் என்ன? உன் நெஞ்சில் ஈரம் இல்லை.
அன்பு இல்லை. நீ எப்படி இறைவனை அடைவாய்?

எனவே இறைவனை அடைவதற்கான வழி பக்தியும் அன்புமே ஆகும்.

**கபீர்தாசரின் இறுதி நாட்கள்**

தம் இறுதிநாள் நெருங்குவதை உணர்ந்த கபீர்தாசர் மக்ஹர் என்ற இடத்திற்குச் சென்றார். தட்சன் யாகம் செய்த அந்த இடம் சிவபெருமானால் சபிக்கப்பட்ட பூமி என்றும் அங்கு இறப்பவர்களுக்கு மோட்சம் கிட்டாது என்பதும் இந்துக்களின் நம்பிக்கை. அதைப் புனிதப்படுத்தும் நோக்கோடு அங்கு சென்ற கபீர், ஒரு அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டாராம். சற்று நேரத்தில் அங்கிருந்து ஒரு ஜோதி வெளியாகி வானில் கலந்தது. அறைக்கதவைத் திறந்து பார்த்தபோது அங்கு யாருமிருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

ஒரு சிறந்த பக்தி நெறியை மக்களுக்கு உணர்த்தி, எண்ணற்ற ராமநாம சங்கீர்த்தனங்களைப் பாடி, இன்றளவும் மக்களால் போற்றி வணங்கப்படுகிறார் கபீர்தாசர். உண்மையான ஞானி தான்தான் என பலர் கூறிக் கொண்டழைகின்றனர். கபீதாசர் உண்மையான ஞானி ஒருவன் எவ்வாறு இருக்க வேண்டுமென இலக்கணம் வகுக்கின்றார். வடிவமற்ற இறைவனின் வடிவத்தை இந்த ஊனக் கண்களுக்குப் புலப்படச் செய்பவர் யாரோ அவரே உண்மையான ஞானி என்கிறார்.அதன்படி உண்மையான ஞானியாக வாழ்ந்தவர் கபீர்தாசர்.

## (05) துளசிதாசர்

### (அ) வாழ்க்கைக் குறிப்பு

துளசிதாசர், பெரும் முனிவர் வால்மீகியின் அவதாரமாகக் கருதப்படுகிறார். துளசிதாசரின் சமகாலத்தவரும் பெரும் பக்தருமான நப்பாதாசு கூட தன்னுடைய படைப்பான பக்த்மாலில் துளசிதாசரை வால்மீகியின் அவதாரமாகவே விவரிக்கிறார். இராமனான்டி சமய பிரிவும்கூட (துளசிதாசர் இந்தச் சமயப் பிரிவைச் சார்ந்தவர்) வால்மீகி தான் இந்த கலியுகத்தில் துளசிதாசராக மறுபிறவி எடுத்துள்ளார் என்று திடமாக நம்பியது.

துளசிதாசர் 1532-1623 ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்தவர். இவரை தத்துவஞானி, பாடலாசிரியர் என அடையாளப்படுத்தலாம். பதினாறாம் நூற்றாண்டில் இந்தியில் இராமாயணத்தினை ‘‘இராமன் சரித மானஸ்’’ எனும் பெயரில் எழுதினார் துளசிதாசர். துளசிதாசர் இராமாயணம் எழுதும் முன் திவ்ய தேச யாத்திரையாக இராமேசுவரம் வந்ததாகவும் அங்கே கம்பராமாயணத்தினைக் கேட்கும் பேறு பெற்றதாகவும் கம்பன் காவியத்தின் நயங்களை தன்னுடைய காதையில் பல இடங்களில் கையாண்டுள்ளதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். சிறந்த இராமபக்தராக இருந்த துளசிதாசர் சைவ, வைணவ, சாக்த் சம்பிரதாயங்களைச் சமமாகப் பாவித்துப் பெருமை பெற்றவர்.

உத்திரப் பிரதேசத்தில் பந்தா மாவட்டத்தில் பிரயாகைக்கு (காசி) அருகில் உள்ள ராசாப்பூர் கிராமத்தில் ஆத்மாராம் துபே என்பவருக்கும் உலேசி அம்மையாருக்கும் மகனாக விக்ரமி சாம்வாட் கி.பி. 1532 ஆம் ஆண்டு பிறந்தார் துளசிதாசர். இவர் இளமையிலேயே பெற்றோரை இழந்து வறுமையில் வாடிய நிலையில் வால்மீகி இராமாயணக் கதையை மக்களிடையே பிரச்சாரமாகச் சொல்லி அதன் பலனாக வாழ்க்கையை நடத்தி வந்தார். உரிய வயதில் இராமபக்தியும் அறிவும் நிறைந்த இரத்தினாவளி என்கிற பெண்ணை மணந்தார். தம் ஆசிரியரான நர்ஹரி தாசர் அவர்களின் அடக்கமான தொண்டராக துளசிதாசர் தம்மையே ஒப்படைத்துக்கொண்டார், சுகார்-கெட்டில் சிறுவனாக இருந்தபோது இவர் முதன்முதலாக அவரிடமிருந்து இராமனின் வீரச்செயல்களைக் கேட்டார், பின்னர் இதுவே இராமசரிதமானசா வின் பொருளாக அமைந்தது.

### (ஆ) துளசிதாசரின் கொள்கைகள்

துளசிதாசரும் ஒப்புயர்வற்ற கடவுளை ஏற்றுக் கொள்கின்றார். இந்த இறைவன் தானே ஒருமுறை மனித வடிவை எடுத்துக்கொண்டார், மனிதகுலத்தினை ஆசீர்வதிப்பதற்காக இராமராக அவதாரம் எடுத்தார். அதனால் உடலானது போற்றப்படவேண்டுமே தவிர பயனற்றதாக எண்ணக்கூடாது. இறைவன் நம்பிக்கையுடன் (பக்தியுடன்) அணுகப்படவேண்டும், தன்னலமற்ற வழிபாடு சுத்தமான அன்பில் தன்னையே சரணடையச் செய்யவேண்டும், மேலும் அவனின் சிந்தனையில் சுய-விருப்பங்களின் அனைத்து செயல்களிலும் சுத்தமாக வேண்டும்.

அனைத்து உயர்களிடத்திலும் அன்பு காட்டவேண்டும், அப்போது அவை மகிழ்ச்சியடையும் ஏனெனில் எல்லாவற்றின் மீதும் அன்பு காட்டும் போது நீங்கள் இறைவனிடமும் அன்பு கொள்கிறீர்கள், ஏனெனில் அவனே எல்லாமுமாக இருக்கிறான்.ஆன்மா இறைவனிடமிருந்து பெறப்பட்டது, மேலும் வாழ்க்கையில் அது வேலைகளில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது (கர்மா) மனிதகுலம் தன்னுடைய பிடிவாதத்தினால், செயல்களின் வலைகளில் தங்களைத் தாங்களே பிணைத்துக்கொள்கிறது.

இறைவனிடத்தில் நம்பிக்கை வைப்பவர்களின் பேரின்பத்தை அறிந்தபோதிலும் கேட்டறிந்தபோதிலும், விடுதலை ஆவதற்கான வழியை அவர்கள் முயற்சிப்பதில்லை. கடவுளின் இல்லத்தில் ஆன்மா பெறக்கூடிய பேரின்பம் இறைவனிடத்தில் ஈடுபாடு அல்ல, அவருடனேயே ஒன்றாதலாகும். இது பிறப்பு மற்றும் மறுபிறப்பின் சுமையிலிருந்து விடுதலையாதல் (முக்தி) உச்சநிலையிலான ஆனந்தமாகும்.

இராமரிடத்தில் பக்தி மற்றும் சிவனிடத்தில் பற்றுதல் ஆகியவற்றுக்கு இடையில் எந்த முரண்பாடும் இல்லாதிருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார் (இராமாயணா, லங்கா காண்டம்,தோஹா 3). ஆனால் அவருடைய எல்லா எழுத்துகளின் நடைமுறை முடிவுகளும் இராமரை நோக்கி செய்யப்படும் பக்தியாக, ஆழமாக மனதில் பதியச் செய்வதாக இருக்கிறது, அதன் மூலம் பிறப்புகள் மற்றும் மறுபிறப்புகளின் சுழற்சியிலிருந்து விடுதலை பாவ விமோசனம் என்பவற்றுக்குப் பெரும் வழியாக இருக்கிறது, பிராமணர்கள் போலவே மிகத் தாழ்ந்த சாதியிலிருக்கும் மக்களுக்கும் திறந்தே இருப்பதான ஒரு விமோசனமாகவும் இருக்கிறது.

### (இ) இவரால் எழுதப்பட்ட நூல்கள்

இவர் இயற்றியதாகக் கூறப்படும் நூல்கள் 39 என்று கூறப்படினும் துளசிதாசரால் இயற்றப்பட்டவை 12 தான் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அவை: வைராக்கிய சிரசந்தீபனீ, இராமாஞ்ஞா பிரஷ்ன, இராமலாலா நகசூ, ஜானகீ மங்கள், பார்வதீ மங்கள், கிருஷ்ண கீதாவளி, கீதாவளி, விநய பத்திரிக்கா (விரஜ மொழி), தோஹாவளி, பரவை இராமாயணம், கவிதாவளி (விரஜ மொழி), இராம சரித மானஸ் என்பனவாகும்.

### (01) இராமசரிதமானசா

இராம அவதாரம் பற்றியுரைப்பது. அந்நியரை இங்கு நிலவிய சூழல் மிக எளிதாக மேலாண்மை செய்ய அனுமதித்த காலத்தில் அவர்கள் இங்கிருந்த செல்வ வளங்களைச் சுரண்டியதோடு தம் மதத்தையும் பரப்பினர். ஒருபுறம் அச்சுறுத்தும் தாந்திரீக வழிபாடுகளும் பரவி வந்தன. இக்கால கட்டத்தில் துளசிதாசர் எழுதிய இராமாயணம் தூய பக்தியைப் பரப்பியது. துளசிதாசர் வடமொழியைத் தவிர்த்துவிட்டு மக்களின் மொழியில் இராமாயணத்தை எழுதினார். மொகலாயரின் கடுமையான அடக்கு முறையையும் மீறி, துளசிதாசரின் மானசம் பல தரப்பட்ட மக்களிடையே மிகவும் குறுகிய காலத்தில் ராம பக்தியை ஓர் இயக்கமாகவே வளர்த்தது.

கிறித்தவ மதபோதகர்கள் மதம் பரப்பும் நோக்கில் இந்திய மொழிகளைக் கற்றாலும் அம்மொழிகளின் இலக்கிய வளத்தால் ஈர்க்கப்பட்டதும், மொழிகளின் வளர்ச்சிக்கு உதவினர். மதம் பரப்புவதற்காக பாரதம் வந்த ''காமில் புல்கே'' என்ற பெல்ஜியப் பாதிரியார் ராமசரித மானசத்தின்பால் ஈர்க்கப்பட்டு அதை முழுமையாகக் கற்றார். இதன் மூலம் ''மானச கௌமுதி'' என்னும் தொகுப்பையும் அளித்துள்ளார். இவர் கிறித்தவ இலக்கியங்களையும், துளஸிதாஸரின் விநய பத்ரிகாவையும் ஒப்பாய்வு செய்தவர். ''இராம காதை'' தோற்றமும், வளர்ச்சியும'' (ஹிந்தி) திறனாய்வால் அலஹாபாத் பல்கலைக் கழகத்தில் உயர் பட்டம் பெற்றவர்.

இராமசரிதமானசா, சமசுகிருத இராமாயணத்தின் மற்ற நூல்களைப் போலவே, இந்தியாவில் உள்ள பல இந்துக் குடும்பங்களில் பெரும் மதிப்புடன் படிக்கப்பட்டு, பூஜிக்கப்பட்டு வருகிறது. இது சௌபாய் என்றழைக்கப்படும் கவிதை வடிவிலான ஈரடிச் செய்யுளைக் கொண்டது. இது துளசி-க்ரிதி இராமாயணா என்றும் அழைக்கப்படுகிறது, இதில் பல செய்யுள்கள் இந்தப் பிராந்தியங்களில் பிரபலமாக இருக்கும் பழமொழிகளாக இருக்கின்றன. இதிலுள்ள சொற்றொடர்கள் சாதாரண பேச்சுவழக்கில் அமைந்திருக்கின்றன. துளசிதாசரின் இராமசரிதமானசாவுக்கும் வால்மீகி இராமாயணத்துக்குமிடையே பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன. எடுத்துக் காட்டாக இராமனை வனவாசத்துக்கு அனுப்புவதற்காக கைகேயி தன் கணவரை வற்புறுத்தும் காட்சி. துளசி தாசரில், வலுவான பண்புரு அருமையான உவமைகளுடன் அது மிக நீளமாகவும் கூடுதல் உளவியல் தன்மை கொண்டதாகவும் இருக்கிறது

(02) விநய பத்திரிகா

துளசிதாசர் காலத்தில் சமுதாயத்தில் ஒழுக்கம் குறைந்து சீர்கேடுகள் மிகுந்திருந்தன. சமுதாய நிலை கண்டு மிகவும் மனம் வருந்திய துளசிதாசர், மக்களிடையே ஒழுக்கத்தை ஏற்படுத்தி அவர்களை உயர்த்த வேண்டி ராமபிரானிடம் முறையிட்டு எழுதியதே "விநய பத்திரிகா. தமது வேண்டுகோள்களை இசைப் பாடல்களாக இயற்றி ராமபிரானின் அரசவைக்கு அனுப்பி வைத்தார் துளசிதாசர். ராமபிரானின் அரசவையில் உள்ள கணேசர், சிவபெருமான், தேவி, சூரியன், கங்கை, யமுனை, அனுமன், இலக்குவன், பரதன்,சத்துருக்னன், சீதை என அனைவரையும் துதித்துப் பாடி அவர்களைத் தம் வேண்டுகோளை நிறைவேற்றச் செய்ய ராமபிரானின் கவனத்தை தம் பக்கம் ஈர்க்கச் சொல்கிறார் துளசிதாசர். கல் மனத்தையும் கரையச் செய்யும் விநயபத்திரிக்கா'' என்ற சொல்லடை இந்தியில் விநயபத்திரிக்காவின் பெருமையைக் குறிக்க வழங்கிவருகின்றது.இந்நூல் துளசிதாசரால் இறுதியாக எழுதப்பட்ட படைப்பாகக் கருதப்படுகின்றது.

ஆசைகள் பற்றியும் அதன் மூலம் பத்தியோகம் அழிக்கப்படுவது பற்றியும் இந்நூல் விளக்கமளிக்கின்றது. சொந்தபந்தங்களின் விரிவைத்தான் உலகம் என்கிறோம். அவை இல்லையென்றால் இவ்வுலகில் என்ன இருக்கின்றது. எனவேதான் விநயபத்திரிகா மனத்தின் விரிவுதான் உலகம் என்று கூறுகின்றது.

(03) அனுமன் சாலிசா

இராமாயணம் தவிர துளசிதாசரின் மிகப் பிரபலமானதும் அதிகமாக படிக்கப்பட்டதுமான இலக்கியப் படைப்பாக இருப்பது "அனுமன் சாலிசா", இது அனுமனைப் புகழ்ந்து பாடும் கவிதை. பல இந்துக்கள் இதை ஒரு இறைவழிபாடாக தினமும் ஒப்புவிக்கிறார்கள்.அனுமன் மகிமைக்கு பெரும் சான்றாக விளங்குவது "அனுமன் சாலிசா என்னும் மந்திரம். அடிப்படையில் அனுமன் தெய்வீகப் பிறவி. ராம- லட்சுமணர்கள் பிறந்த அதே காலகட்டத்தில் புத்திர காமேஷ்டி யாகத்தின் பயனாகவும், அனுமனின் தாயான அஞ்சனை கும்பத்தில் மூச்சை நிறுத்தி யோகத் தவமிருந்த நிலையிலும் கருத்தரிக்கப் பெற்றவன் என்கிறது அனுமன் சாலிசா.

அனுமன் பெரும் கல்வி, ஞானம் இவற்றை அருளும் ஆற்றல் படைத்தவன். அதற்குக் காரணம் அவன் புலன்களை அடக்கி தியானிக்க முடிந்தவனாக இருப்பதுதான். தியானம் எல்லாருக்கும் வசப்பட்டு விடாது. அதற்கு பெரும் மனவலிமை வேண்டும். அடுத்து தியானமே அறிவாகிய மனதிற்கு பெரும் மருந்தாகவும் திகழ்கிறது. மனதை அடக்க முனைபவர்களுக்கு மகத்தான மந்திரமாக விளங்குவது ராம நாமம்,அனுமன் அந்த ராம நாமத்தைக் கூறியே பெரும் தியான சுந்தரனாகத் திகழ்கிறான்.

அனுமனை உபாசிக்கவுள்ள மந்திரங்களுள் உன்னதமாய்த் திகழ்வது அனுமன் சாலிசா. துளசிதாசர் ராமசரித மானஸம் எழுதக் காரணமே அனுமன் என்று கூறப்படுகின்றது. துளசிதாசர்முன் தோன்றி அவருக்கு கவியாற்றலை அனுமன் அளித்திட, அதன்பின் பிறந்ததுதான் ராமசரித மானஸம்.இதனால் துளசிதாசர் தன் குருவாய்க் குறிப்பிடுவது அனுமனைத்தான். "அனுமனே என்னுள் இருந்து கொண்டு என்னை இயக்கி ராமசரிதையை எழுத வைத்தான்'' என்கிறார். இதன் பின்னர் இவரால் மிகுந்த நெகிழ்ச்சியோடு எழுதியதுதான் அனுமன் சாலிசா என்பர்.

## 2.2: இந்துசமூக சீர்திருத்த இயக்கங்களின் எழுச்சி.

அந்நிய சமயங்களாலும், கலாசார மோகங்களினாலும் 18ஆம் நூற்றாண்டில் இந்து சமயம் சமூகம், கலாசாரம் என்பன வீழ்ச்சியடைந்து காணப்பட்ட நிலையில் அந்நியஆதிக்கத்திலிருந் தும் பிறமத தாக்கத்திலிருந்தும் இந்து சமயத்தையும் கலாசார பண்பாட்டு அம்சங்களையும் மீட்டெடுக்கும் நோக்கில் தோற்றம் பெற்ற நிறுவனங்களே இந்துசமூக சீர்திருத்த இயக்கங்கள்.

பழந்தமிழகத்தில் ஏற்பட்ட சமண பௌத்த சமயங்களின் தாக்கத்திலிருந்து நாயன்மாரும், ஆழ்வார்களும் சைவ வைணவ சமயங்களை மீட்டெடுத்தனர்.மத்திய காலத்தில் வடஇந்தியாவில் ஏற்பட்ட இஸ்லாத்தின் தாக்கத்தினை வட இந்திய பக்தி இயக்கத்தினர் தடுத்து வைணவ சமயத்தை மலர்ச்சியடையச் செய்தனர். அவ்வாறே 16ஆம் நூற்றாண்டை அடுத்து வந்த ஐரோப்பியரின் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை மீட்டெடுத்த பெருமை இந்துசமூக சீர்திருத்த இயக்கத்தினரைச் சேரும்.

ஐரோப்பியரின் வருகையால் கத்தோலிக்கம், புரொட்டஸ்தாந்து, கிறிஸ்தவம் முதலான சமயங்கள் இந்திய மண்ணில் வேரூன்றத் தொடங்கியதோடு ஐரோப்பியரின் ஆதரவினால் அவை பெரும் தாக்கத்தினையும் இந்து சமயத்திலும் சமூகத்திலும் ஏற்படுத்தியிருந்தன. திட்டமிட்ட தீவிர சமயப் பிரச்சாரங்களும், தந்திரோபாயக் கொள்கைகளும் இந்து சமயத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகின.

ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட செலவீனம், பிரான்சியருடன் நிகழ்ந்த கடல்யுத்தம் என்பவற்றால் அதிக சுமையைக் கண்ட பிரித்தானியா, சுதேசியர்களை அரசுப்பணிகளில் இணைத்துக் கொள்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியை ஓரளவிற்குக் குறைக்கலாம் என்பதை உணர்ந்து இந்தியர்களுக்கு அரச வேலை எனும் அறிவிப்பை வழங்கின.இந்தியர்கள் ஆங்கிலேயர்களுடன் இணைந்து பணியாற்ற ஆங்கிலமொழி அவசியம் என்பதால் ஆங்கிலமொழியூடாக மதம் பரப்பும் நோக்கில் மிஷனரிகள் இந்தியாவினுள் காலடிவைத்தன. அந்தவகையில் அமெரிக்க மிஷன், வெஸ்லியன் மிஷன்,பப்றிஸ்ட் மிஷன் முதலானவற்றை குறிப்பிடலாம்.

மிஷனரிகளின் செயற்பாடுகள் “கிறிஸ்தவர்களாக மதம் மாறுபவர்களுக்கே ஆங்கில மொழி” எனும் நிபந்தனையை முன்வைத்ததால், இந்தியர்கள் பலரும் மதம்மாறவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆங்கிலமொழியின் அவசியம், அரசவேலையின் ஊடாகக் கிடைத்த சலுகைகள், பாதுகாப்பு போன்ற அம்சங்கள் அவர்களை மதம்மாறத் தூண்டின. குறிப்பாக,

- பகுத்தறிவுக்கு ஏற்புடைய கிறிஸ்தவ மதக் கருத்துக்கள்
- கிறிஸ்தவ சமயக் குழுக்களின் திட்டமிட்ட செயற்பாடு
- கிறிஸ்தவ கல்வியூடாகக் கிடைத்த வேலைவாய்ப்பு
- இந்து சமய விழுமியங்களை அறிவதில் மேனாட்டார் கொண்டிருந்த ஆர்வம்.
- இந்தியர்களின் மேலைத்தேய கலாசார மோகம்
- இந்து சமய, சமூக சீர்கேடுகள்.
- இந்தியக் கல்விப் பாரம்பரியத்தில் காணப்பட்ட குறைபாடுகள்.

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந் நிலையில்,மிஷனரிமாரும் பல்வேறு சமூக சேவைகளை திட்டமிட்டு நடாத்தினர். சமயத்தின் பெயரால் சீர்கேடுகள், மூடநம்பிக்கைகள், ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றை நீக்கி மக்களின் வாழ்வுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். இந்து சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு சீர்கேடுகளும் இந்து சமய வீழ்ச்சிக்குக் காரணமாகின.

- பலதார மணம்
- பால்ய விவாகம்
- பெண்சிசுக் கொலை
- உடன்கட்டை ஏறல்
- விதவைகள் மறுமணம் மறுப்பு
- சாதிப்பாகுபாடு
- பெண்ணடிமைத்தனம்

இத்தகு சீர்கேடுகள் யாவும் இந்துசமயத்தின் பலவீனமாக விளங்கிய சமகாலத்தில் கிறிஸ்தவர்களின் இந்துமதத்திற்கு எதிரான பிரச்சாரத்திற்கும் செயற்பாட்டிற்கும் அடிப்படையாக அமைந்தன. மிஷனரிகள் ஆங்கில கிறிஸ்தவக் கல்லூரிகளை நிறுவியதுடன், சமூக மருத்துவப் பணிகளையும் முன்னெடுத்தனர். இவர்களின் செயற்பாடுகள் பாமர மக்களிடையே ஈர்ப்பினை ஏற்படுத்தின. இது இந்துசமயத்தின் மீது அக்கறை கொண்டிருந்த அறிஞர்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. இதனால் மதம் மாறியவர்கள் போல நடித்து ஆங்கில மொழியை கற்று மிஷனரிகளின் செயற்பாடுகளையும், ஆங்கிலேயரின் செயற்பாடுகளையும் கண்காணிக்க முனைந்தனர்.

இந்திய இலக்கியங்களின் மேல் ஆர்வம் கொண்ட ஆங்கிலேயர்கள் ஆங்கிலம் படித்த இந்தியர்களைக் கொண்டு இந்திய மொழிகளில் இருந்த நூல்களை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தனர். அவற்றை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அந்தவகையில் கோல்புருக், வில்சன், மாக்ஸ் முல்லர் முதலிய அறிஞர்கள் இத்தகு செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இத்தகு ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் ஆங்கிலம் படித்த இந்தியர்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இது அவர்களுக்கு தமது இலக்கியங்களிலிருந்த அறிவியல், ஆன்மீக செய்திகளின் உண்மைத்தன்மையை உணர்த்தியது.

இதன் விளைவால் இந்து சமுதாயத்தில் காணப்பட்ட சீர்கேடுகளையும் குறைபாடுகளையும் அறிந்து கொண்டு சீர்திருத்தவாதிகள் பலரும் தோற்றம் பெற்றனர். அவ்வாறு தோற்றம் பெற்றோருள் சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, மகாத்மா காந்தி, இராமலிங்க வள்ளலார், இரவீந்திரநாத் தாகூர், ஸ்ரீஅரவிந்தர் முதலிய பலரைக் கூறலாம்.இவர்களின் அரும்பணிகளால் இந்திய இந்துசமூக சீர்திருத்தத்தை முன்னிட்டு பல்வேறு அமைப்புக்களும் தோற்றம் பெற்றன. அவற்றுள், பிரம்மசமாஜம், சமரச சுத்த சன்மார்க்க சங்கம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், பிரம்மஞான சங்கம், இராமகிருஷ்ண இயக்கம் என்பன குறிப்பிடத்தக்கவை.

# பிரம்ம சமாஜம்

இராஜாராம் மோகன்ராய் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
பிறப்பு - 1774.05.22
பெற்றோர் - இராமகாந்தர், தாரிணிதேவி
பிறந்த இடம் - மாநகர்
இளமைப் பெயர் - ராம்மோகன்
தமது தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்களால் பெரிதும் துன்பமடைந்த ராஜாராம் மோகன்ராய் அதன் விளைவால் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தார்.

- தமது தந்தை மூன்று பெண்களை மணந்திருந்தமை.
- தனக்கு பால்ய விவாகம் நடைபெற்றிருந்தமை.
- பால்ய மனைவி இறந்ததும் இரண்டாவது தடவையாகவும் பால்ய விவாகம் நடைபெற்றமை.
- தமது அண்ணன் இறந்ததும் மைத்துனி உடன்கட்டை ஏற்றப்பட்டமை.
- 1828 இல் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தார். பரம்பொருள் வழிபாட்டுச் சங்கம் எனும் பொருளில் 1830 இல் சமாஜத்தின் செயற்பாட்டிற்காக புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது.
- “மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் உண்டு” எனும் கொள்கை உடையவராய் தனது பணிகளை முன்னெடுத்தார்.
- 1833 இல் பிரித்தானியா சென்ற மோகன்ராய் அங்கேயே மரணமடைந்தார்.
- மோகன்ராயின் மறைவை அடுத்து 1842 இல் தேபேந்திரநாத் தாகூர் சமாஜத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். சமாஜத்தின் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன.
- 1857 இல் கெசுப்சந்திரசென் சமாஜத்தில் இணைந்தார்.1861 இலிருந்து சமாஜப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். கொள்கை முரண்பாடுகளால் பிரம்மசமாஜம் இரண்டாக பிளவுபட்டது. தேபேந்திரநாத் தாகூரினால் ஆதிப்பிரம்ம சமாஜமும், கெசுப்சந்திரசென்னினால் இந்திய பிரம்ம சமாஜமும் நிறுவனப்பட்டன.

### பிரமசமாஜத்தின் பணிகள்

19ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் தோன்றிய இந்து சமய சீர்திருத்த இயக்கங்களுள் பிரம சமாஜம் தனித்துவமானது. சமகால இந்தியாவில் காணப்பட்ட அரசியல், சமூக, சமய சூழ்சிலைகள் பிரம சமாஜத்தின் செயற்பாடுகளை நிருணயிக்கம் காரணிகளாக அமைந்தன. ஆங்கிலேயர்களின் ஆட்சி, மேலைத்தேய கல்வியின் தாக்கம், கிறிஸ்தவ சமயத்தினதும் கலாசாரத்தினதும் பரம்பல், சுதேசிய சமயங்களில் காணப்பட்ட குறைபாடுகள் மத்தியதர வகுப்பினரின் மேலைத்தேய கல்வியியல் தொடர்புகள் முதலியன பிரம சமாஜம் முதலான நிறுவனங்களின் தோற்றத்திற்கு பின்புலமாக அமைந்தன.

### சமயப்பணிகள்

இராஜாராம் மோகன்ராய் இந்து சமயம் சார்ந்த சிந்தனைகளையும் பிறமதக் கருத்துக்களையும் உள்வாங்கியவராக தன் பணிகளை ஆற்றினார். இங்கு உபநிடத சிந்தனைகளுக்கு முதன்மை கொடுத்து தன் பணிகளை முன்னெடுத்தமையாலேயே அவர் உருவாக்கிய நிறுவனம் பிரம சமாஜம் எனப்பட்டது. பிரம சமாஜம் என்பது பரம்பொருள் வழிபாட்டுச் சங்கம் என்ற பொருளைத் தருகிறது. இவரது சமய சீர்திருத்த சிந்தனைகளிலும் உபநிடதக் கருத்துக்களின் செல்வாக்கினைக் காணலாம். பிரம சமாஜத்தின் பிரார்த்தனைப் பாடல்களிலும் உபநிடத சுலோகங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிறிஸ்தவ சமயப் பரம்பலும், இந்து சமயத்தில் குறைபாடுகள் என்று கிறிஸ்தவர்களால் பிரசாரம் செய்யப்பட்ட விடயங்களும் பிரம சமாஜத்தின் சமய சீர்திருத்த பணிகளுக்கு பிரதான காரணங்களாக அமைந்தன. உபநிடதங்களே இந்து சமயத்தின் பிரமாண நூலெனை வரையறுத்தார். இந்து மத வரலாற்றில் தோன்றிய பல நூல்களும் அதன் அடிப்படை நூல்கள் என்று கொள்ளப்பட்டமை கிறிஸ்தவர்களின் எதிர் பிரசாரத்திற்கு சாதகமாக அமைந்தது. இந்நிலைமையே மோகன்ராய் பிரமாண நூல் தொடர்பான கருத்தை முன்வைப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

இந்து சமயத்தில் நிலவிய உருவ வழிபாடு, பல தெய்வ வழிபாடு முதலான சமய நம்பிக்கைகள் குறைபாடுகள் என பிற சமயத்தவர்களால் பிரசாரம் செய்யப்பட்டன. உபநிடத சிந்தனைகளையும் பிற மதக் கருத்துக்களையும் உள்வாங்கி இவற்றைப் போக்க முனைந்தார். உபநிடதங்களின் ஓர் இறைக்கொள்கை, பிரமத்தின் உருவமற்ற நிர்குண நிலை முதலானவற்றின் ஊடாக இந்து மதக் கடவுள் கொள்கையை முறைமைப்படுத்தினார். தான் எழுதிய **விக்கிர** ஆராதனை மறுப்பு எனும் நூல் இதற்குச் சான்று. மேலும் இவர் 1840ல் உருவ வழிபாட்டை எதிர்த்து துண்டுப் பிரசுரம் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். மோகன்ராயின் இத்தகைய சீர்திருத்த சிந்தனைகளுக்கு கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய சிந்தனைகளும் காரணமாக அமைந்தன.

அனைத்து சமயங்களின் சிறந்த கருத்துக்களை ஏற்றுக்கொண்ட மோகன்ராய் பிற மதங்களில் உள்ள நல்ல விடயங்களை ஏற்று, அவற்றினூடாக இந்து சமூகத்தையும் சமயத்தையும் நன்னெறிப்படுத்தினார். அதேநேரம் சமயங்களில் காணப்பட்ட பொருத்தமற்ற சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கண்டனம் செய்பவராக இருந்தார். குறிப்பாக கிறிஸ்தவர்களின் தீவிர சமய பிரசாரத்தைக் கண்டித்து இவர் யேசுநாதரின் உயிர் சமவாத கெனமுதி, கிறிஸ்தவருக்கு முறையீடு, மனிதாயதம் முதலான் தனது நூல்களில் தனது கண்டனத்தை வெளிப்படுத்தினார். அத்துடன் தனது தற்சரிதம் எனும் நூலில் இந்து மதத்தில் நிலவிய பகுத்தறிவு வாதத்திற்கு முரணான நடைமுறையைக் கண்டித்தார். குறிப்பாக இந்து சமயத்தில் நிலவிய பல தெய்வ வழிபாடு, திருவுருவ வழிபாடு பொருளற்ற சடங்குகள், கன்மம் மறுபிறப்புக் கொள்கை சமுதாய சீர்கேடுகள் முதலானவற்றையும் மோகன்ராய் கண்டித்தார்.

**சமூக கல்விப்பணிகள்**

பிரம சமாஜத்தின் சமூகம் சார்ந்த சீர்திருத்த செயற்பாடுகளுள் பெண் விடுதலை தொடர்பான பணிகள் இந்து சமய வரலாற்றில் பிரதானமானவை. இந்து சமூகத்தில் பெண் தொடர்பாக நிகழ்ந்த உடன்கட்டை ஏறுதல், பல தாரமணம், பெண்சிசுக்களைக் கொலை செய்தல், பெண்களின் கைச்சாத்துரிமை, கல்வி என்பனவற்றையும் மறுத்தல் முதலான சீர்கேடுகள் இந்து சமூகத்தின் சீரழிவுக்கும், கிறிஸ்தவமத பரம்பலுக்கும் சாதகமாக அமைந்தன. இவற்றைத் சமூகத்திலிருந்து போக்கும் வகையிலான உடன்கட்டை ஏறல் தடைச்சட்டம் வருவதற்குரிய காரணகர்த்தாவாக இவரே காணப்பட்டார். 1818ல் பிரித்தானியா அரசினால் உடன்கட்டை ஏறுதல் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் உடன்கட்டை ஏற்றியவர்கள் அதற்கு துணை புரிந்தல் மட்டுமன்றி பெண் சிசுக்களைக் கொலை செய்தல், பால்ய விவாகம் என்பனவும் தண்டனைக்குரிய குற்றங்களாக அமைந்தன.

பிரமசமாஜத்தால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பிரம சமாஜசட்டம் பெண்களுக்கெதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக உருவானது. பெண்களுக்கு மறுக்கப்பட்ட சொத்துரிமைகளை வலியுறுத்தும் வகையில் இவர் பெண்களின் சொத்துரிமைகளில் நவீன ஆக்கிரமிப்பு எனும் நூலை எழுதி வெளியிட்டார். உலகில் உள்ள சமயங்கள் யாவற்றையும் ஒன்றிணைத்து பொதுச் சமயம் ஒன்றை உருவாக்க வேண்டும் எனும் கொள்கையுடையவராகவும் இருந்தார்.

பிரம சமாஜத்தின் கல்விக்கொள்கை நவீன இந்தியாவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. மோகன்ராயின் பன்மொழிப் பாண்டித்தியம் அவர் பெற்ற மேலைத்தேயக் கல்வி என்பன இவரது கல்வி பற்றிய சிந்தனைகளுக்கும் அது சார்ந்த செயற்பாடுகளுக்கும் பிரதான காரணமாக அமைந்தன. மோகன்ராய் மேலைத்தேயக் கல்வியில் உள்ள அரசியல், அறிவியல் சமவுடமை சிந்தனைகள் பற்றி நன்கு அறிந்தவராகவிருந்தார். அத்தகைய கல்வியை இந்திய மாணவர்களும் பெற வேண்டுமென்ற சிந்தனையுடையவராக இருந்தார். இதன் பொருட்டு ஆங்கிலேய ஆட்சியாளருக்கு பல பரிந்துரைகளை வழங்கினார். அவர் அமஸ்கேற் பிரிவுக்க அனுப்பிய கடிதத்தில் இந்திய மாணவர்களுக்கு ஐரோப்பிய ஆசிரியர்களே அறிவியல், விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். 1835ல் இவ் மோகன்ராயின் இவ் ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தினார்கள்.

மோகன்ராயின் மறைவிற்குப் பின் பிரமசமாஜக் கொள்கைகளும் செயற்பாடுகளும் பல மாற்றங்களுக்கு உட்பட்டன. மோகன்ராயின் மறைவைத் தொடர்ந்து 1842ல் சமாஜத்தின் தலைமைப் பொறுப்பை தேபேந்திர நாத்தாகூர் ஏற்றுக்கொண்டார். சமாஜத்தின் கொள்கைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தியதுடன், அதுவரை தனது தலைமையில் இயங்கிய தத்துவ போதினி சபையைக் கலைத்து, பிரம சமாஜத்துடன் இணைத்தார். 1857ல் கெசுப்சந்திரசென் இணைந்து கொண்டதையடுத்து இந்நிறுவனத்தில் பலமாற்றங்கள் ஏற்பட்டன. இவரால் 1860ல் சமாஜத்தின் இணை நிறுவனமாக சங்கட் சபா எனும் அமைப்பை உருவாக்கினார். இருவருக்கம் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணடாக தேபேந்திரநாத்தாகூர் ஆதிப்பிரம சமாஜத்தையம் கெசுப் சந்திரசென் இந்திய பிரம சமாஜத்தையும் உருவாக்கினார். 1867ல் ஆதி பிரம சமாஜத்தின் ஓர் அங்கமாக பிரார்த்தனை சமாஜம் 1867ல் உரவாக்கப்பட்டது. ஆத்மரகம் பாண்டுரங் இதன் தலைவராகச் செயற்பட்டார். எனினும் ஆதி பிரம சமாஜம் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப தனது பணிகளை முன்னெடுக்கவில்லை. இதனால் ஆதிப் பிரம சமாஜம் மக்களிடையே செல்வாக்கு இழந்ததுடன், அந்நிறுவனம் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

# ஆரியசமாசம்

நவயுக இந்தியாவில் இந்து சமய – சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஆரிய சமாஜத்திற்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இந்தியாவில் இந்து சமய - சமூகங்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தன. சுவாமிதயானந்த சரஸ்வதி வேத நெறியையும், சம்ஸ்கிருத மொழியையும் முதன்மைப்படுத்தி 1875 ஏப்ரல் 10ஆம் திகதி ஆரியசமாஜத்தை பம்பாயில் நிறுவினார்.

இந்து சமுதாயத்தினர் எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியிருந்த சவால்கள் பலவற்றிற்கு ஆரியசமாஜத்தின் வாயிலாக விடைகொடுத்தார். இத்தகைய ஆரியசமாஜம் இந்து சமுதாயத்தினருக்குப் பலவேறு வழிகளிலும் பல பணிகளைச் செய்து இந்துமத எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது.

## ஆரியசமாஜத்தின் பணிகள்

- மூட நம்பிக்கைகளை இந்து சமுதாயத்தில் இருந்து விரட்டுதல், புரோகித முறைஎதிர்ப்பு, விக்கிரக வழிபாடு எதிர்ப்பு, சாதிபேத எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை ஆதரவு முதலானவற்றிக்கு வேதங்களில் சான்று காட்டி நிரூபித்தல்
- சாதி, மத, பால் வேற்றுமைகள் பாராமல் மக்கள் மொழிகளில் வேதங்களை மொழி பெயர்த்துப் பரவலான முறையில் பரப்பி மக்களை விழிப்படையச்செய்தமை
- சுதேசிய கல்வி முறைக்கும், சமய – விஞ்ஞான பிணைப்பிற்கும் வேதம் வழிகாட்டவல்லது என்ற கொள்கை பரப்பப்பட்டது.
- நூல்களை வெளியிட்டமை அதாவது ரிக்வேத பாஷ்ய பூமிகா(1877), ரிக்வேத பாஷ்யம்(1899), யசுர்வேத பாஷ்யம் உட்பட 26 நூல்கள் வெளியிடப்பட்டன.
- இவரது நூல்களில் சத்தியார்த்தப் பிரகாசம் குறிப்பிடத்தக்கது.
- சமயப் பிரசாரம் செய்தமை. அதாவது கூட்டாக இணைந்து சுற்றுப்பயணங்கள் செய்து 1845 – 1860 வரைக்குமான காலங்களில் இந்தியா முழுவதும் சென்று சமயப் பிரசாரம் செய்தமை.
- மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட **'சுத்தி'** என்னும் இயக்கத்தையும், இந்துக்களை ஒன்று திரட்ட **'சங்கடனம்'** என்ற இயக்கத்தையும் தயானந்தர் தாபிப்பதற்கு ஆரியசமாஜமே அடிப்படை எனலாம்.
- ஆரிய சுத்திச் சடங்கு விதிகளை உருவாக்கியமை. அதாவது ஹோமம், தலைமுடி களைதல், பூணுல் அணிவித்தல், காயத்ரி மந்திரம் கற்பித்தல் ஆரியசமாஜத்தின் பத்துக் கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளச் செய்தல் ஆகியவை அந்த விதிகளாகும்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூணூல் அணிவித்து அவர்களை மேன்மக்களாகப் பிரகடனப்படுத்தியமை. 1888 இல் பஞ்சாப்பில் முஸபர்கட் மாவட்டத்தில் பண்டித கங்காராம் எனும் ஆரியசமாஜப் பிரசாரகர் ஓட் தீண்டாதார் சமூகத்தினை பூணூல் அணிவித்து இந்து சமூகத்திற்குள் கொண்டு வந்தமை.
- தேசிய கல்வி முறையினை ஆரியசமாஜம் நடைமுறைப்படுத்திச் சாதனை படைத்தது. அதாவது தாய் நாட்டின் இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், கலை, அரசியல், போர்முறை, உற்பத்தித் திறன், தொழில், வாணிபம் ஆகியவற்றை வளர்த்தெடுத்தல்.
- பால்ய விவாகத்தை எதிர்த்தமை பிரம்ம புராணத்தையும், மனுதர்ம சாத்திரத்தையும் ஆதாரம் காட்டி பால்ய விவாகத்தைக் கண்டனம் செய்துள்ளமை.
- விதவைப் பெண்களின் மறுமணத்தினை ஆதரித்தமை. ரிக் வேதத்தினை ஆதாரம் காட்டி விளக்கப்பட்டுள்ளது.
- தயானந்தர் உருவாக்கிய ஆரியசமாஜம் பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் முதலான பிரதேசங்களில் செல்வாக்குடனும், பிற தேசங்களில் காலூன்றியும் வெகுஜன இயக்கமாக, கல்வி இயக்கமாக, தீண்டாமை எதிர்ப்பு இயக்கமாக, பெண்ணுரிமை இயக்கமாக, சமூக சீர்திருத்த இயக்கமாக, தேசிய இயக்கமாக வளர்ச்சி பெற்று விளங்கிற்று.

# இராமகிருஷ்ண பரமஹம்சர் போதனைகளும் சாதனைகளும்

இவர் இந்துமத மறுமலர்ச்சியாளர்களில் தலைசிறந்தவர்.வங்காள நாட்டில் அந்தணகுலத்தில் பிறந்தவர். சாக்த சமயப் பக்தர். வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்வியலுடன் இணைத்துக் காட்டியவர். மக்களுக்குச் சேவை செய்து மானுட துன்பம் நீக்குவதை நடைமுறை வேதாந்தம் என்பதனைச் சாதனையாகக் கடைப்பிடித்தவர். வேத, உபநிடதச் சிந்தனைகளை யும் அவை வெளிப்படுத்தும் இந்து தத்துவத்தையும் ஜனரஞ்சகமான போதனைகளாக எடுத்துக் காட்டிய பெருமை இராமகிருஷ்ண பரமஹம்சரையே சாரும். இந்து தத்துவத்தில் ஈஸ்வர வடிவில் இறைக்கொள்கையை வலியுறுத்தியும் பரப்பிரமம் என்னும் வேதாந்த நிலையில் பரம்பொருட் கொள்கையை வலியுறுத்தியும் தத்துவார்த்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருகொள்கைகளையும் இணைத்தே இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது கருத்துக்களைப் பரப்பியுள்ளார்.

அனைத்துச் சமயங்களையும் ஏற்றுக் கொள்ளும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சமயப் பொதுமைமிக்க மனப்பாங்கு மேலானதன்மையுடையது எல்லாச் சமயங்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இறை உண்மையை எடுத்துக் காட்டுகின்றன என்பதைத் தமது அனுபவங்களால் உணர்த்தினார். சமயங்கள் பலவாறு காணப்பட்டாலும் எல்லாச் சமயங்களும் சமுதாய ஒருமைப் பாட்டையே எடுத்து விளக்குகின்றன என்றும் குறிப்பிட்டார். இதுவே இவரது நடைமுறை வேதாந்தச் சிந்தனை இராமகிருஷ்ண மடத்தை சுவாமி விவேகானந்தர் தாபித்தபோது இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளே சாதனையாகக் கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார். சமயப்பொறையைப் பேணுதல் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் போற்றுதல் முதலிய கடமைகளிலும் ஈடுபட வேண்டும் என்றும் இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது போதனைகளில் வெளிப்படுத்தினார். இறைவனை உணர்ந்து கொள்வதற்கான எளிய மார்க்கங்களை இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சமய அனுபவத்தினூடாக வெளிப்படுத்தினார். இறைவனை அன்பு வழியில் உணரலாம்,சமூக வாழ்வின் விருத்தியே சமய வளர்ச்சி முதலிய கருத்துக்களுக்கு முதன்மை வழங்கினார்.

இத்தகைய கொள்கைகளைச் சாதனையாக்கிக் காட்டவே இந்தியாவிலும், இலங்கையிலும் உலகின் பல பகுதிகளிலும் இராமகிருஷ்ண மடங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. வேதாந்தக் கருத்தை உலகளாவிய நிலையில் பரப்பல், ஆங்கில மொழியில் பரப்பல் என்பன இராமகிருஷ்ண மடத்தின் ஊடாக இடம் பெறுகின்றன. இராம - கிருஷ்ண விஜயம் எனும் சஞ்சிகையை வெளியிடல், ஏழை எளியவர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தல் முதலான பணிகளையும் இராமகிருஷ்ணமடம் செய்து வருகின்றது. சுவாமி விபுலாநந்தர் இராமகிருஷ்ண மடத்தினூடாகவே இந்து சமயப் பணியில் ஈடுபட்டார்.

## 3.1 இலங்கையில் இந்துசமய வரலாறு - அறிமுகம்

இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இலங்கையின் பங்களிப்பு மிகச் சிறப்பானது. இந்திய, தமிழகத் தொடர்பில் இலங்கையின் பண்பாட்டு வரலாறு மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. தமிழக பண்பாட்டுத் தொடர்ச்சி இலங்கையில் காலம் காலமாக ஏற்பட்டு வந்துள்ளது. கிறிஸ்து காலத்திற்கு முற்பட்ட காலம் முதல் இப்பண்பாட்டுத் தொடர்ச்சி பின்பற்றப்பட்டு வந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இராம - இராவண வரலாறும் இதிகாசச் செய்திகளம் இலங்கயின் பூர்வீக பண்பாடு பற்றிய கருத்தை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவில் குப்தராட்சிக் காலத்திலும் இலங்கை குப்த அரசர் ஆதிக்கத்தில் கீழ் இருந்ததான வரலாறுகளை குப்தர் கால **துஸண்** சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழக இலக்கியங்களில் ஈழத்துப் புலவர், ஈழத்து உணவு பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஈழத்து பூதந்தேவன் என்னும் கவி பற்றிய செய்திகளும் உண்டு. மாந்தை எனும் மாதோட்டம் பற்றி சுந்தரர் தேவாரம் புகழ்கின்றது. நன்னகர் மாந்தை என சங்க இலக்கியமாகிய புறநானூறு எடுத்துரைக்கிறது. கோணேச்சரம் திருக்கேதீச்சரம் ஆகிய திருத்தலங்களைத் திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் புகழ்கின்றனர். கோணேச்சரப்பதிகம் திருக்கேதீச்சரப் பதிகம் என்பவை பிரபல்யமானவை. இத்தலங்கள் பற்றி வாயுபுராணத்திலும் வருணிக்கப்பட்டுள்ளது. திருமூலர் இலங்கையை சிவபூமி என்றழைத்தார். இத்தகைய இலங்கையில் இந்து சமயம் பற்றிய வருணனைகள் தமிழக, இந்திய நூல்களில் சான்றாதாரங்களாகக் காட்டப்படுகின்றன. அனுராதபுர ஆட்சிக்காலத்திலே இந்து-பௌத்த உறவுகள் உன்னத நிலை பெற்றன. பௌத்தக் கோயில்களை இந்துக் கலைஞர் உருவாக்கினர். அது போலவே அனுராதபுர ஆட்சிக்கால அரண்மனைகளில் புரோகிதர் செல்வாக்கும் காணப்பட்டது. அனுராதபுரகால சாசனங்களில் இந்து ஆலயங்களில் ஆன்ம ரீதியான வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடப்பட்டுள்ளது. அச் செப்பேடடில் நிசதி ஒரு திருவமிர்தும் நந்தா விளக்கும் என்னும் குறிப்பு இந்துக் கோயில்களில் நிரந்தர ஆலய கிரியை இடம்பெற்றதைக் குறிக்கும்.

இலங்கையில் புராதன காலம் தொடக்கம் சிவவழிபாடும் முருக வழிகாடும் மேம்பட்டிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முருக வழிபாடு வேடுவ பூசையுடன் தொடர்புபட்டது. அதற்கமையவே பிராமிக்கல்வெட்டுக்களில் வேல, ஸ்கந்த என்னும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. “வலமுறை வேடன் அருளிய பூசை அருள் கதிர்காமப் பெருமாளே” என்று கதிர்காம தலம் பற்றிய திருப்புகழின் வருணனை வேடர் வழிபாட்டை எடுத்துரைக்கின்றது.
இலங்கையின் புராதன ஆலயங்களில் வேடர் வழிபாட்டு எச்சங்களை நோக்க முடிகின்றது. பௌத்தக் கோயில் வழிபாடு பௌத்த ஊர்வலங்களிலும் வேடுவ பண்பாட்டை பின்பற்றும் அம்சங்கள் வெளிப்படும். இவ்வாறு நோக்கும் போது இந்நாட்டின் மிகப் புராதன சமயமாக இந்து சமயம் விளங்குவதும் இதன் முன்னோடியான சான்றுகளாக இந்தியாவில் பெற முடிகின்றது. அனுராதபுர ஆட்சியைத் தொடர்ந்து இலங்கையில் பொலநறுவை ஆதிக்கம் நிலவியது. அவ்வேளையிலும் தமிழகப் பண்பாடு இலங்கையில் செல்வாக்குப் பெற்றது. சோழ அரசனின் 9வது மண்டலமாக ஜனநாதமங்கலம் விளங்கியது. பொலநறுவை பதவிய கந்தளா அனுராதபுரம், மாதோட்டம், குருநாகல் ஆகிய இடங்களில் இந்துக் கோயில்களும் சதுர்தேவிமார்தலங்களும் அமைக்கப்பட்டு இந்துப்பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டது. பௌத்த அரசர்களுக்கும் தமிழக குலங்களுக்கும் இடையிலான திருமணவுறவுகளும் காணப்பட்டன. இதனால் அனுராதபுர, பொலநறுவைக் காலப் பண்பாட்டில் இந்து பௌத்த உறவுகள் செல்வாக்கு பெற்றன.

இலங்கையில் பொலநறுவை ஆட்சிக்காலத்திலேயே சோழ அரசப் பிரதானிகளால் மட்டக்களப்பு பிரதேசப் பண்பாடும் மறுமலர்ச்சியடைந்தது பூர்வீக தமிழ்ப் பிரதேச பண்பாடுகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பாங்கு சோழ மன்னர்கள் இலங்கையில் ஏற்படுத்திய செல்வாக்கின் மூலம் அறியப்படுகின்றது. கலிங்கமாகோன், விஜயபாகு ஆகியோர் தமிழக அரசர்கள் மீது படை எடுப்பை மேற்கொண்ட செய்திகளும் பதிவாகி உள்ளன.

ஆரியச் சக்கரவர்த்திகள் இலங்கையில் ஆட்சி செலுத்தியகாலத்தில் இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்துப் பண்பாடு செல்வாக்கடைந்திருந்தது. இந்து சமயம் சார்ந்த பல பிரபந்தங்கள் இலங்கையில் தோன்றலாயின. இலங்கையின் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பாண்டிய மன்னரின் பிரதிநிதிகளான ஆரியசக்கர வர்த்திகளாட்சி இடம் பெற்றது. சமயாபிமானம் மிக்க அரசர்களாகவம் இவர்கள் விளங்கலாயினர். கி.பி.15ம் நூற்றாண்டு யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலயம் அமைக்கப்பட்ட செய்தி கைலாய மாலை என்னும் நூலின் மூலம் அறியப்படுகின்றது. ஆரியச் சக்கரவத்திகள் இந்து அரசராகவும் நந்தி உருவை பொறித்தவர்களாகவும் விளங்கினர்.

இலங்கையில் 15ம் நூற்றாண்டைத் தொடர்ந்து போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், பிரித்தானியர் என்னும் ஐரோம்பிய வம்சத்தவர்கள் ஆட்சி செய்தனர். இவர்களது ஆட்சியில் இந்துப் பண்பாடு நிலை தளர்ந்ததாலும் பின் எழுச்சி பெற்ற இந்து சமய சீர்திருத்த வாதிகளால் இந்துப் பண்பாடு மறுமலர்ச்சியடைந்தது எனலாம்.

# புராதன இந்துசமய வரலாறு
## (வரலாற்றுக்கு முற்பட்ட காலம்)

இலங்கையில் இன்று நிலவும் இந்து சமயத்தின் மூலக்கூறுகள் பலவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே கருவாகி உருக்கொண்டுவிட்டன. இலங்கை வரலாற்றைப் பொறுத்த வரையில் பௌத்த மதமே இன்று அரச மதமாகக் காணப்பட்டாலும், எமது நாட்டின் ஆதி மதம் என்ற பெருமைக்குரியதாக விளங்குவது இந்து மதமேயாகும். ஆனால், பண்டைய இந்துமதத்தைப் பற்றி அறிவதற்கு தமிழில் இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கவில்லை. பிற்பட்ட காலங்களிலேயே தமிழிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. எனினும் பௌத்த மத இலக்கியங்களான பாளிநூல்கள் பௌத்த மதத்தின் மேன்மையை எடுத்துக் கூறினாலும், அவை ஏதோ ஒரு வகையில் பௌத்தம் பரவுவதற்கு முன்னர் காணப்பட்ட இந்து மதம் பற்றிய கருத்துக்களையும் குறிப்பிட்டு நிற்பதன் மூலம் இந்து மதம் பண்டைய மதமே என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. இவற்றுடன் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களில் கூறப்படும் செய்திகளிலிருந்தும் இந்துமத தொன்மையைக் கண்டுகொள்ளலாம்.

தமிழ்ப் பேரிலக்கியங்களுள் ஒன்றாகிய இராமாயணம் பண்டைய இந்துமதம் பற்றிய ஒரு சில கருத்துக்களை கூறியுள்ளது. அதாவது இலங்கையில் இராவணன் சிவ வழிபாட்டில் ஈடுபட்டமை, அவன் சாமகானம் பாடிச் சிவனை மயக்கியமை, யாகங்கள் இயற்றியமை பற்றிய கருத்தினையும், சீதையை மீட்க வந்த இராமர் மாமாங்கம், முனீஸ்வரம் ஆகிய இடங்களில் இலிங்கங்கள் நிறுவி வழிபட்டிருந்தார் போன்ற கருத்துக்களையும் வால்மீகி இராமாயணம் குறிப்பிடுகின்றது. எனினும் இலங்கையின் தொன்மையான இந்துமத வரலாற்றை அறிய வேறு தமிழ் இலக்கியங்கள் இல்லாமை துரதிஷ்டமேயாகும்.

விஜயனது வருகைக்கு முன்னர் ஈழத்தின் தென்கிழக்கு, வடக்கு, மேற்குப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த சுதேச வழிபாட்டு நெறிகளைக் கடைப்பிடித்த அமானுஷ்யர்களான யக்ஷர்களும், நாகர்களும் வாழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. யக்ஷர்கள் (இயக்கர்) யக்ஷ வழிபாட்டினையும், நாகர்கள் நாக, லிங்க வழிபாட்டினையும் நிகழ்த்தியதாக இவ்விலக்கியம் குறிப்பிடுகின்றது. இவர்களுடன் நாகரிகமடையாத வேடர்களும் வாழ்ந்ததாகக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மேலும் புத்தர் பிரான் மூன்று முறை இலங்கைக்கு விஜயம் செய்தார் எனவும், முதலாவதாக சிறீபாத (சிவனொளிபாதமலை)வில் இருந்த தேவகுமாரன் மகாசுமன் என்பவனை புத்தராக மதமாற்றம் செய்யவும். இரண்டாவது தடவை நாகஅரசன் மகோதரனுக்கும் அவனது மருமகன் குலோதரனுக்கும் சிம்மாசனம் தொடர்பாக ஏற்பட்ட சண்டையை நிறுத்தவும், மூன்றாவது தடவை புத்த சமயத்துக்கு மதம்மாறிய “மணியக்கிகன்” என்பவனின் வேண்டுகோளுக்கிணங்கி நாகர்களுக்குப் போதித்து அனுராதபுரம் சென்று புனித அரசமரம் நாட்டப்படவேண்டிய இடத்தை தேர்ந்தெடுத்து ஆசீர்வதிப்பதற்காகவுமே புத்த பிரானின் வருகை இடம்பெற்றது என மகாவம்சம் கூறுகின்றது. எனவே புத்தரது வருகைக்குமுன் நாகர்கள் வாழ்ந்திருப்பதால் இந்துமதமே பண்டைய மதம் என்பதை இதிலிருந்து குறிப்பிடலாம்.

பாளிநூல்களில் தமிழர் பற்றிய குறிப்புக்கள் எல்லாவற்றிலும் அவர்கள் விதேசிகள், தவறான சமய நம்பிக்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் (இந்துமத நம்பிக்கைகள்) ஆக்கிரமிப்பாளர்கள், படையெடுப்பாளர்கள் என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. அரசியல் மேலாதிக்கத்திற்காக நடைபெற்ற எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம் கூட ஓர் இன மோதலாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதோடு இவ்யுத்தத்தில் கொல்லப்பட்ட பௌத்தத்தைச் சரணடையாத தமிழர்கள் மிருகங்களை விடக் கேவலமானவர்கள் ஆதலால் அவர்களைக் கொன்றமை பற்றி “மன்னா நீ கவலைப்படத் தேவையில்லை” என்று மரணப்படுக்கையில் கழிவிரக்கம் கொண்டிருந்த துட்டகைமுனுவுக்குப் புத்தகுருமார் அறிவுரை கூறியதாக மகாவம்சம் கூறுகின்றது. இதிலிருந்தும் கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள்(இந்துக்கள்) என்பதையும் இவர்கள் பழங்காலத்திலிருந்தே வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

தேவநம்பியதீசன், அவனது மனைவியர் வைதீகர்களாக விளங்கினர் என்பதை இம்மன்னனின் அடைமொழியாகிய தேவநம்பிய என்பதும், அவனது மனைவியர் பெயராகிய இராமதத்த, வருணதத்த ஆகியனவும் எடுத்துக் காட்டுகின்றன. பௌத்தம் பரவத் தொடங்கி மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கூட சில சிற்றரசர்கள் பௌத்தத்திற்கு மாறாது தமது பழைய நம்பிக்கைகளைப் பேணினர் என கி.பி 1ஆம் நூற்றாண்டிற்குரிய திஸமகாராமக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. பௌத்தக் கட்டமைப்பில் இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டன. ஈழத்தின் முதல் தாதுகோபுரமாகிய தூபாராம கட்டப்பட்ட இடம் பழைய யக்ஷ வழிபாட்டுத் தெய்வமாகிய 'மகேஜ'க் கடவுளின் இடம் என்பதை மகாவம்சம் ஏற்றுக் கொள்கின்றது.

தொல்லியல் சான்றுகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு பழங்காலத்தில் இந்துக் கோயில் இருந்ததற்கான தடையங்களோ, கட்டட சிதைவுகளோ காணப்படவில்லை என சிலர் குறிப்பிடுவர். ஆனால் அவற்றில் பல பௌத்த மன்னர்களால் அழிக்கப்பட்டன என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அதேவேளை இதே காலகட்டப்பகுதியில் தமிழ் நாட்டில் கோயில்கள் அழியும் பொருட்களால் கட்டப்பட்டதாக இலக்கியங்கள் குறிப்பிடும் செய்தியிலிருந்து இலங்கையிலும் அழியும் பொருட்களால் (சாந்து, மணல், மரம்) கோயில்கள் கட்டப்பட்டிருக்கலாம் அதனாலேயே இன்று அதன் எச்சங்களை காண முடியவில்லை எனவும் தற்கால ஆராய்ச்சியாளர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

பொதுவாக இந்துமத வழிபடு தெய்வங்களாக யக்ஷ வழிபாடு, நாக வழிபாடு, சிவ வழிபாடு, முருக வழிபாடு, மாயோன் வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு என்பவை இடம்பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. யக்ஷ வழிபாடு பற்றி நோக்குமிடத்து, தென்னாசிய பழங்குடி மக்கள் வழிபட்ட தெய்வங்களுள் யக்ஷ வழிபாடும் ஒன்று. இத்தெய்வங்கள் ஆரியர்க்குரியவரல்லாத இந்தியத் தொல்குடியினர்க்குரிய வழிபடு தெய்வங்களாகும். இவை நாட்டுபுற மக்களால் வழிபடப்பட்ட தெய்வங்கள் என்பர். யக்ஷர்களின் தலைவனாகிய குபேரன் பண்டுகாபயனின் காலத்தில் ஆலமரத்தின் கீழ் வழிபடப்பட்டதை மகாவம்சம் குறிக்கின்றது. இக்கடவுளை வெஸ்ஸவண என்று இந்நூல் அழைக்கின்றது.

யக்ஷன், யக்ஷி ஆகியோர் உறையும் இடங்களாகக் காடுகள், மலைகள், நீர்நிலைகள், மரங்கள் ஆகியன கருதப்பட்டன. மக்களுக்கு நன்மை, தீமை ஆகியவற்றை அளிக்கும் தகைமை பெற்று இவை காணப்பட்டன எனக் கருதப்பட்டதால் மக்கள் இவைகளுக்குப் பலி அளித்தும் வழிபாடியற்றினார்கள். அத்துடன் ஊருக்குப் பொதுவான மரங்களில் இத்தெய்வங்கள் குடிகொண்டிருந்தன என நம்பிய மக்கள் இத்தெய்வங்கள் வசித்த மரங்களை அலங்கரித்து, மாலை அணிவித்து விளக்கும் ஏற்றினர். அத்துடன் இவற்றுக்குப் படையல்களும் செய்தனர்.

அடுத்ததாக நாக வழிபாடு பற்றி நோக்குமிடத்து,ஈழத்தில் நாக வழிபாடு ஆதிக்குடிகளின் வழிபாடு என்பதைப் பாளி நூல்களிற் காணப்படும் ஐதீகங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. புத்தர் மேற்கொண்ட மூன்று விஜயங்களில் ஒரு விஜயம் யக்ஷர்களோடு தொடர்புபட மற்றைய இரு விஜயங்களும் நாகர்களுடன் சம்மந்தப்படுகின்றது. எனவே புத்தரது வருகைக்கு முன்பே நாக வழிபாட்டில் ஈடுபடும் நாகர் வாழ்ந்துள்ளமை தெரிய வருகின்றது.

இப்பாளி நூல்கள் குறிப்பிடும் நாகதீப என்பது தற்கால வடமாகாணம், வடமத்திய மாகாணத்தின் வடக்கேயுள்ள பகுதி என்பவற்றையே குறிப்பிடுகிறது. அதேபோல் கல்யாணி அரசு தற்கால கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதியாகக் காணப்பட்டது. இலங்கையில் திருகோணமலைப் பகுதியிலும் நாக வழிபாடு சிறப்புற்று இருந்தது என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கி.பி இரண்டாம் நூற்றாண்டிற்குரிய தொலமி என்ற கிரேக்க அறிஞரின் குறிப்பும் இதனை உறுதிப்படுத்துகிறது.

நாகர்கள் ஒருபோதும் மனித வர்க்கத்தினராகப் பாளிநூல்களில் சித்திரிக்கப்படவில்லை. மாறாக இவர்கள் சாதாரணமாகப் பாம்பின் தோற்றத்தினை உடையவர்களாகவும் நிலத்தின் கீழ் வாழும் அமானுஷ்யர்களாகவுமே சித்திரிக்கப்பட்டுள்ளனர். சேருவாவிலவிற்கும் நாக வணக்கத்திற்குமிடையே உள்ள தொடர்பினை எடுத்துக்காட்டும் விதத்திலே இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த புத்தர் சிலைகள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய சிலைகளில் புத்தரின் தலைமீது நாக பாம்பினது படம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது புத்தர் நாகத்தால் பாதுகாக்கப்படுகினறார் என்ற செய்தியை உணர்த்துவதாய் அமைந்துள்ளது. பின்னர் பௌத்த மதத்தின் பாதுகாப்புக்குரிய நிலையில் நாக வழிபாடு விளங்கியதையும், பௌத்தத்தால் நாக வழிபாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

அடுத்ததாக திராவிட வழிபாட்டு முறைகளுள் ஒன்றான சிவ வழிபாடு பற்றி நோக்குமிடத்து, இது ஈழத்தின் மிகப் பழைய வழிபாடுகளுள் ஒன்றாக விளங்குகின்றது. பண்டைய காலத்தில் மன்னர்கள் சூடியிருந்த பெயர்கள் இத்தகைய வழிபாடு இடம்பெற்றமைக்குச் சான்றாக உள்ளது. விஜயனின் பின் ஆட்சி செய்த பண்டு வாசு தேவனின் பதினொரு பிள்ளைகளுள் ஒருவன் ‘சிவ’ என்ற பெயரைத் தாங்கியிருந்தான். பண்டுகாபய மன்னனின் மாமன்மார்களில் ஒருவனின் பெயர் ‘கிரிகண்ட சிவ’ ஆகும். பண்டுகாபய மன்னனுக்குப் பின் அரசு கட்டிலேறியவன் ‘முடசிவ’ ஆவான். தேவநம்பியதீஸனின் சகோதரர்களில் ஒருவன் ‘மகாசிவ’ என்ற பெயரைத் தாங்கியுள்ளான். தாதுவம்சம் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் கல்யாணி, சேருவாவில ஆகிய இடங்களை ஆண்ட சிற்றரசர்கள் ‘சிவ’ என்ற பெயரைத் தாங்கி நின்றதைக் குறிக்கின்றது.

பாளிநூல்களைப் பற்றி அறிந்த போல் பீரிஸ் என்பவர்”விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்னரே இலங்கையிற் கருத்திற் கொள்ளத்தக்கனவும் முழு இந்தியாவின் வழிபாட்டிற்குரியனவுமாகிய ஐந்து சிவாலயங்கள் இருந்தன. இவையாவன மகாதீர்த்தத்திற்கு அண்மையில் உள்ள திருக்கேதீஸ்வரம், முத்து சிலாபத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முன்னீசுவரம், மாதோட்டத்திற்கருகிலுள்ள தண்டேஸ்வரம், பெரிய கொட்டியாரக் குடாவுக்கு எதிராக உள்ள திருக்கோணேஸ்வரம், காங்கேசன் துறைக்கு அண்மையிலுள்ள நகுலேஸ்வரம் என்பனவாகும். இவை வெறும் புகழ்ச்சி அல்ல” எனவும் குறிப்பிடுவது பண்டைக்காலத்திலேயே சிவ வழிபாடு நிலவியிருந்தது என்பதை புலப்படுத்துகின்றது.

மகாசேனன் போன்ற மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அனுராதபுரம், மாதோட்டம், ஏரகாவில், கோகர்ணம் ஆகிய இடங்களில் வழிபட்ட சிவாலயங்களை அழித்தே மகாசேன மன்னன் அவ்விடங்களில் பௌத்த ஆலயங்களைக் கட்டியதாக மகாவம்சம் கூறுகின்றது.

ஈழத்துப் பிராமிக் கல்வெட்டில் ஸிவ(சிவ) என்ற பெயர் உள்ளதோடு சிவதத்த, சிவரக்ஷித, சிவகுத்த, சிவபாலித, சிவதாச போன்ற அடைமொழிகள் இவற்றோடு இணைந்து காணப்படுவதும் மற்றோர் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாறாக சிவ வழிபாட்டோடு தொடர்புடையதாக பெயர்கள் காணப்படுவதிலிருந்தும் சிவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் கட்டப்பட்டமை பற்றி பாளி நூல்கள் குறிப்பிடும் செய்திகளிலிருந்தும் ஈழத்தில் சிவ வழிபாடு இடம்பெற்றுள்ளமை உறுதியாகின்றது.

# அனுராதபுர காலத்தில் இந்துசமயம்

புராதன இலங்கையின் தலைநகரமாகப் புகழ்பெற்று விளங்கியது அனுராதபுர நகரம்.இலங்கை வரலாற்றில் கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுரக் காலம் எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. பௌத்த சமய நம்பிக்கைகளுடன் இந்த சமய மரபுகளும் வளர்ச்சியடைந்த காலம் என்ற வகையில் இலங்கையின் இந்துசமய வரலாற்றில் அனுராதபுரக் காலத்திற்கு தனித்துவமான இடமுண்டு.சிங்களவரின் வரலாற்று நூலான மகாவம்சத்தின்படி, வடகிழக்கு இந்தியாவிலிருந்த லாட தேசத்திலிருந்து, அவனுடைய துர்நடத்தை காரணமாக, 700 நண்பர்களுடன் சேர்த்துத் துரத்திவிடப்பட்ட விஜயன் என்ற இளவரசன் இலங்கை வந்தபோது அவனுடன் வந்த அனுராத என்பவனால் தோற்றுவிக்கப்பட்ட குடியேற்றமாக அனுராதபுரம் அமைகின்றது. ஆரம்பத்தில் அனுராதகிராமம் என அழைக்கப்பட்டது.இலங்கையை ஆண்ட பண்டுகாபயன் என்ற அரசன் அனுராத கிராமத்தை அனுராதபுரமாக மாற்றி அவனது தலைநகராக்கினான்.

அனுராதபுர கால இந்துசமய வளர்ச்சியில் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை, சமய மறுமலர்ச்சி என்பன அதிக செல்வாக்குச் செலுத்தின. இக்காலப்பகுதியில் பௌத்தம் அரச மதமாக செல்வாக்குப் பெற்றிருந்த போதும் இவ்வாட்சிக் காலத்திற்கு முன்பிருந்தே இந்து மதம் இங்கு நிலைபெற்று வந்துள்ளதை பௌத்த வரலாற்று இலக்கியமான மகாவம்சத்தின் மூலம் அறிய முடிகின்றது. பண்டுகாபயன் அனுராதபுர அரசினை அமைத்தபொழுது, சிவிகசாலை, சொத்திசாலை என்னும் இருநிலையங்களை உருவாக்கினான் என மகாவம்சம் கூறுகின்றது. அவற்றுள் சிவிகசாலை என்பது சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபடும் கோட்டம் என்று ‘வம்ஸத்தப்பகாஸினி’ விளக்குகின்றது. அவ்வாறே சொத்திசாலை என்பது பிராமணர்கள் வேதம் ஓதுவதற்கென்று அமைக்கப்பட்ட சாலை என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.

அனுராதபுரக்காலம் முதலாக ஆட்சிபுரிந்த அரசர்கள் சைவசமயத்திற்கும் வைதீகக்கலாசாரத்திற்கும் ஆதரவு புரிந்துள்ளனர்.இலங்கையில் பௌத்தம் வந்த போது ஆட்சி செய்தவன் தேவநம்பியதீசன். அவனது தந்தையின் பெயர் முடசிவ என்பது. அவனது முன்னோர்களில் பலருக்கும் கிரிகந்தசிவ, மஹாசிவ, போன்ற பெயர்களே அதிகளவில் வழங்கியிருக்கின்றன. இது அவர்களது சைவப்பற்றையும் சிவநெறி வாழ்வையும் உறுதி செய்கிறது. இலங்கையில் கிடைத்த கி.மு 3ம், 2ம் நூற்றாண்டுகளுக்குரிய நாணயங்கள் பலவற்றில் இடபஇலச்சினை, மகாலஷ்மி, சிவலிங்கம், சுவஸ்திகம், பூரணகும்பம்,வேல், மயில், சேவல் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதாகவும் வரலாற்றாய்வாளர்கள் காட்டுகின்றனர்.

அரசா், இளவரசா், வணிகா், கிராமத்தலைவா்கள், குடும்பத் தலைவா்கள் சிவ என்ற பெயரைக் கொண்டிருந்தனா். எனவே சிவனைப் போற்றி வழிபடும் மனப்பாங்குடையவா்கள் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளனா் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது.இலங்கையில் பௌத்த சாசனங்கள் பலவற்றில் குமார, விசாக, மகாசேன போன்ற பெயர்கள் உள்ளன. இவை முருகவழிபாட்டின் அடையாளங்களை உணர்த்துவதாகக் கருதப்படுகின்றது. பொம்பரிப்பு முதலான இடங்களிலே கிடைத்துள்ள கலவோடுகளில் வேலின் உருவங் காணப்படுகின்றமையும் முருக வழிபாட்டின் செல்வாக்கை எடுத்துரைக்கின்றது.

இலங்கையில்இந்துகலாசாரத்தின் அம்சங்கள் பரவுவதற்குப் பிராமணர்கள் காரணமாயிருந்தனர் என்பதைச் சாசனங்கள், இலக்கியங்கள் மூலம் அறியலாம். 22 பிராமிச் சாசனங்களில் பிராமணர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. நாள், நட்சத்திரம், நேரம், காலம் ஆகியவற்றை நிச்சயிப்பதற்கு பிராமணணரின் ஆதரவு மன்னர்களுக்குத் தேவைப்பட்டது. மேலும் குடும்ப வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் நடைபெறும் பிரதானமான சடங்குகள் எல்லாவற்றையும் பிராமணரே செய்தனர். வைதிக சம்பிரதாயங்களை கடைப்பிடிப்பதன் மூலம் பல புராதனமான சமூகங்கள் வைதீக சமுதாயத்திலே கலந்துவிட்டன. ஆட்சி அதிகாரம் பெற்றிருந்தவர்கள் பிராமணருடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியிருந்தனர். அரசர்கள் தமது அனைத்துக் காரியங்களுக்கும் பிராமணர்களின் உதவியைப் பெறுவதற்காக அரசசபையில் நியமித்திருந்தனர். மகாவம்சம் விஜயன் உபதிஸ்ச என்ற பிராமணனை நியமித்திருந்தமையைக் கூறுகின்றது. அது போல பண்டுகாபயன் என்ற இலங்கை வரலாற்றில் பிரபலமான அரசன் பண்டுல என்ற பிராம்மணனிடம் வில் வித்தை கற்றான். பண்டுலவின் மகனான சந்திரன் என்பான் பிற்காலத்தில் அவனது ராஜகுருவானான். அரசனோடு கொண்டிருந்த மிக நெருக்கமான தொடர்புகளின் விளைவாகச் சில சமயங்களிலே பிராமணருக்கும், அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களுக்கும் இடையே மணத்தொடர்புகள் ஏற்பட்டன.

**இந்துக் கோயில்கள்**

அனுராதபுர காலத்திலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவிரண்டும் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தன. அவை இரண்டினைப் பற்றியும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார். திருக்கேதீஸ்வரத்தைப் பற்றி சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒரு பதிகம் பாடியுள்ளார். அப்பர் தேவாரத்தில் அவற்றைப்பற்றிய குறிப்பு உள்ளது.

திருக்கேதீஸ்வரம் பாலாவியின் கரைமேல் அமைந்திருந்தது. அது மாதோட்டத்தில் சிறப்பு மிகு தலம் என்றும் அடியார்களின் பாவ வினைகளைப் போக்க வல்லது என்றும் நாயன்மார்கள் இருவரும் பாடியுள்ளனர்.

சம்பந்தர்,

**“கேதீச்சரங் கைதொழக் கடுவினையடையாவே…..”**
**“கேடிலாத கேதீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே…….”**
அப்பர்,
**“பூதியணி பொன்னிறத்தார் பூண்நூலார்**
**பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்**
**கேதீச்சரமேவினார்……”**

கிழக்கிலங்கையிலே அமைந்துள்ள புனிதத் தலமாக திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது. இதன் சிறப்பினைச் சம்பந்தர் மேல்வருமாறு பாடுவார்

**"....நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்**

**கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே"**

அனுராதபுரத்தின் வடபகுதியிலே தமிழர் வாழ்ந்த சில பகுதிகளில் மட்டும் புராதனமான சைவக்கோயில்களின் அழிபாடுகள் தொல்பொருள் அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்டன. எல்லாமாக 5 கோயில்களின் அழிபாடுகள் அந்தப் பகுதியிற் காணப்பட்டன. அமைப்பில் அவை எல்லாம் ஒரேவிதமானவை, அளவில் சிறியவை, கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம் எனும் பகுதிகள் அவற்றிலே காணப்பட்டன. இவை செங்கற்களினால் கட்டப்பட்டிருந்தன. இன்று முழுமையாக அழிந்துவிட்டன. அகழ்வாய்வுகளின் போது பல இந்துத் தெய்வங்களின் கற்சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை, தேவேந்திர முனையில் உப்புல்வன் ஆலயம் சிறப்புற்றிருந்தமை, வசபக்குளத்தின் அருகில் பிள்ளையார் ஆலயம் இருந்தமைக்கு அவ்வாலயத்தின் அடித்தளம் கண்டுபிடிக்கப்பட்டமை என்பனவும் குறிப்பிடத்தக்க ஆதாரங்களாகின்றன.

# பொலநறுவைக் காலத்தில் இந்துசமயம்

கி.பி 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரை பண்டைய இலங்கையின் தலைநகரமாகப் பெயரும், புகழும் பெற்று விளங்கியது பொலநறுவை நகரம். அனுராதபுரத்திற்கு பாதுகாப்பு வழங்குமொரு அரணாகவிருந்த இந்நகரை, சோழர் இலங்கையின் தலைநகராகத் தெரிவுசெய்தனர். பின்னர் இந்நகரம் சிங்கள மன்னர் காலத்திலும் இலங்கையின் தலைநகரமாக விழங்கியது. இக்கால இந்துசமய வளர்ச்சியைப் பற்றி மகாவம்சம், சூளவம்சம், ராஜவலிய, பூஜாவலிய போன்ற இலக்கியங்கள் மூலமும் கட்டடங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் முதலான தொல்பொருட்சின்னங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம்.

இராஜராஜனுக்குப் பின் ஆட்சிபீடம் ஏறியவன் இராஜேந்திர சோழன். இவன் இலங்கையையும் தன் ஆட்சிக்குள் உட்படுத்திக் கொண்டு பேரரசனாகத் திகழ்ந்தான். இக்காலத்தில் இலங்கை 'மும்முடிச் சோழமண்டலம்' என்று அழைக்கப்பெற்றிருக்கிறது. இக்காலத்தில் மாதோட்டத்தில் சோழர்களால் திருவிராமேஸ்வரம், இராஜராஜேஸ்வரம் என்ற இரு சிவாலயங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இதைவிட உத்தமசோழீச்சரம்,பண்டித சோழீச்சரம் என்ற கோயில்களும் அமைக்கப்பட்டன. அதுவரை காலமும் தலைநகராக விளங்கிய அநுராதபுரத்தை இவர்கள் பொலநறுவைக்கு மாற்றினர். புலத்திநகரே பொலநறுவையாயிற்று. இதற்கு சோழர்கள் வைத்த பெயர் ஜனநாதமங்கலம். இங்கும் பல சிவாலயங்கள் எழும்பின. இவற்றில் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்கிற கோயில் இன்று வரை சிறப்பாக உள்ளது. இக்காலத்தில் சதுர்வேதிமங்கலங்கள் என்ற குடியிருப்புக்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

பொலநறுவைக்காலம் சைவசமய வரலாற்றிலே சிறப்பு மிக்க காலமாகும். இங்கு இந்து கலாசாரம் விருத்தி பெற்றதோடு அரசர் சிலரும் அரச குடும்பத்திற் பலரும் சைவராயிருந்தனர். அரசியலிலும் நிருவாக முறைமையிலும் இந்திய இலக்கியங்களினதும் இந்து மரபினதும் செல்வாக்கைக் காணலாம். குறிப்பாக அரண்மனை ஆவணங்களிலே சமஸ்கிருத மொழித்தொடர்கள் மிகுந்து காணப்படுகின்றன. அரசர்களால் மட்டுமன்றி, பிரதானிகள், வணிகக் கணங்கள் என்போராலும் கோயில்கள் அமைத்து நிருவகிக்கப்பட்டன. அக்காலத்தில் நானாதேசிகர், வீரவளஞ்சியர், முதலான வணிகக் கணங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. சமூக முன்னேற்றத்திலும், கலாசார அபிவிருத்தியிலும் ஐந்நூற்றுவர் எனும் வணிகக் கணத்தின் பங்கு முக்கியமானது. ஆலயத்தை அமைத்தல், திருவுருவங்களை நிறுவுதல், மண்டபங்களை அமைத்தல் எனப் பல வகையில் அவர்களின் பணிகள் அமைந்தன.

## பொலநறுவைக்கால கோயில்கள்

பொலநறுவை இராசதானியிலே 14 இந்துக் கோயில்களும் தொல்பொருள் சின்னங்களும் காணப்படுகின்றன. அவற்றிலே சில சோழராட்சிக்காலத்தில் அமைக்கப்பெற்றவை. ஏனையவை அதற்குப்பின்பு 1070- 1250 ஆகிய காலப்பகுதியில் உருவாக்கப்பட்டவை. பொலநறுவை நகரத்தின் அரண்மனைகளாற் சூழப்பெற்ற மத்திய பகுதியிலும் வெளிப்புறங்களிலும் இந்துக்கோயில்கள் அமைந்திருந்தன. அவற்றுள் 1ம் சிவாலயம், 2ம் சிவாலயம் ஆகிய இரண்டும் தனியாக அமைந்துள்ளன. ஏனைய கோயில்கள் இரண்டு அல்லது மூன்று என்ற வகையிலே தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிலே சில கற்றளிகளாகக் காணப்படுகின்றன.

2ம் சிவனாலயம் என்னும் வானவன் மாதேவீச்சரம், 1ம் இராசராசனது காலத்திற்கு முற்பட்ட கோயில்களின் அம்சங்களைக் கொண்டுள்ளது. அது கலை வனப்பு மிக்க ஒரு கட்டடமாக அமைந்திருப்பதோடு அதற்குப்பின் பொலநறுவையில் அமைக்கப்பட்ட கோயில்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கியது.

### முதலாம் சிவாலயம்

நகரின் மத்தியிலே அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் 61 அடி 9 அங்குல நீளமானது. இங்கு அதிஷ்டானப் படைகள் செம்மையாக அமைந்துள்ளன. இங்கு காணப்படும் அதிஷ்டானம், தூண்கள்,தேவகோஷ்டங்கள் பிற்கால சோழ கலைப்பாணியை ஒத்துள்ளன. கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள விமானம் முற்றாக இடிந்து வீழ்ந்து விட்டது. மகாமண்டபத்தின் அடித்தளம் மட்டுமே எஞ்சியுள்ளது. 3 பரிவார தேவர் கோயில்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

### வானவன் மாதேவீஸ்வரம் ∴ 2ம் சிவாலயம்

இது 1ம் இராஜேந்திரனின் தாயின் நினைவாக கட்டப்பட்டது பொலநறுவையில் காணப்படும் கட்டடங்களில் காலத்தால் முற்பட்டது. இலங்கையில் உள்ள திராவிட கலைப்பாணியிலான ஆலயத்தில் பழைமையானது. இவ்வாலயம் கருங்கல், சுண்ணக்கல் ஆகிய இருவகை கற்களையும் கலந்து கட்டப்பட்டுள்ளது. இது 66′ 4" நீளம் கொண்டது. இங்கு காணப்படும் திரிதள விமானம் - 31′ 9" உயரங்கொண்டது. கோயிலின் அதிஷ்டானத்திலே சோழரின் ஆட்சிக்காலத்திற்குரிய பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை ஆலய வழிபாடு, நிருவாகம், நன்கொடைகள் பற்றியவை. கோயிற்பணிகளை செய்கின்ற பரிசாரகர் என்னும் பணிமக்களும் அக்கோயிலில் பணிபுரிந்தனர். மாணிக்கம் என்னும் பட்டம் பெற்ற தேவரடியார் வானவன் மாதேவீஸ்வரத்தில் இருந்தனர்.

### 5ஆம் சிவாலயம்

இதுவே பொலநறுவையில் அமைக்கப்பட்ட ஆலயங்களுள் அளவில் பெரியது வெவ்வேறு காலப்பகுதிகளில் இது அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்டவெண்கலப் படிமங்களில் மிக கூடுதலானவை இதன் வளாகத்திலிருந்து பெறப்பட்டவை. முன் உள்ள மூன்று மண்டபங்களும் கற்றூண்களால் உருவாக்கப்பட்டிருந்தன. 80 தூண்கள் வரையில் இதில் அமைக்கப்பட்டிருந்தன. விமானம் 3 தளங்களைக் கொண்டது. அகழ்வாய்வின் போது நான்கு சிறிய சாசனங்கள் கிடைத்தன.

### அம்மன் கோயில்

இவ்வாலயம் செங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிரகத்துச் சுவர்களில் மகரதோரணங்கள் பொருந்திய தேவகோட்டங்களும் அணைவு தூண்களும் அமைந்திருந்தன. மூலஸ்தானத்தில் 8 கரங்கள் பொருந்திய மகிஷமர்த்தனியின் உருவம் நின்ற கோலத்தில் உள்ளது.

### இரண்டாம் விஸ்ணு கோயில்

கோயிலும் மண்டபமும் வெவ்வேறு காலப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. கர்ப்பக்கிரகத்தில் ஸ்தானக கோலத்திலுள்ள விஸ்ணுவின் படிமம் பத்ம பீடத்தில் அமைந்துள்ளது. மூன்று கரங்களில் சங்கு, சக்கரம், கதாயுதம் என்பவற்றைத் தாங்கியும் நான்காவது கரத்தினை அபயகரமாகவும் கொண்டுள்ள நிலையில் இவ்வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

### பொலநறுவைக் கால வெண்கலப் படிமங்கள்

பொலநறுவைச் சிவாலயங்கள் அமைந்துள்ள இடங்களில் தொல்பொருள் அகழ்வுகளை நடாத்தியபொழுது 1907 ஆம் ஆண்டு முதலாக வெவ்வேறு காலகட்டங்களில் பெருமளவிலான கடவுட் படிமங்களும் வெண்கல உருவங்களும் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் 1ஆம் சிவாலயம், 5ஆம் சிவாலயம் ஆகியவற்றின் வளாகத்திலிருந்து கிடைத்துள்ளன. தொல்பொருள் திணைக்களமும், கொழும்பு அருங்காட்சியகமும் இதைப் பேணிப் பாதுகாத்துள்ளன. 1907,1908 ஆண்டுகளில் கண்டெடுக்கப்பட்ட உலோகப் படிமங்களை சேர். பொன். அருணாசலம்,மு. ஆநந்தகுமாரசுவாமி ஆகியோர் கலாதத்துவ நோக்கில் அவற்றைப் பற்றி விளக்கியுள்ளனர்.

தொல்பொருள் திணைக்கள ஆணையாளராக இருந்த எச்.சீ.பீ.பெல் முதலாம் சிவாலயம் அமைந்துள்ள தலத்தில் 1907ஆம் ஆண்டில் அகழ்வுகளை நடத்தியபோது 8 வெண்கலப் படிமங்கள் கிடைத்தன.

அவை
1. நடராசர் வடிவம்
2. சிவகாமி சமேத நடராசர்
3. உமாதேவியாரின் உருவம்
4. சமயகுரவர்களது உருவங்கள்

எச்.சீ.பீ.பெல் ஐந்தாம் சிவாலயம் அமைந்துள்ள தலத்தில் அகழ்வுகளை நடத்தியபோது பெருந்தொகையான வெண்கலப் படிமங்கள் கிடைத்தன.

அவை
4 – சிவபெருமான் வடிவங்கள்
4 – பார்வதியின் வடிவம்
1 – விஸ்ணுவின் ஸ்தானக நிலையில் உள்ள சிற்பம்
3 – சம்மந்தர், அப்பர், சுந்தரர் வடிவங்கள்

6ஆம் சிவாலயத்தில் நடாத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் நடராஜர், அம்மனின் சிற்பங்கள் இரண்டுடன் ஆராதனைக்கு பயன்படுத்தப்பட்ட தாம்பாளம், முக்காலி, கிண்ணம், மணி, தடப்பை -2, தூவக்கல் -2, சங்கு -2 முதலான பொருட்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஐந்தாம் சிவாலயத்தின் வளாகத்தில் 1960 ஆம் ஆண்டிலே தொல்பொருள் திணைக்கள ஆணையாளராக இருந்த சீ. ஈ, கொடகும்புறவினாலே அகழ்வுகள் நடத்தப்பட்டபொழுது மேலும் பல வெண்கலப் படிமங்கள் கிடைத்தன. $5^{1}\because_{2}$ " உயரங் கொண்ட பெண் வடிவ வெண்கலப் படிமம், நடராஜர், சிவன், பார்வதி, விஸ்ணு, நாயன்மார் இருவரின் படிமங்களோடு சிலவற்றின் பீடங்களும் திருவாசிகளும் கிடைக்கப்பெற்றன. இவற்றுடன் ஒரு குடத்தினுள் சிறியளவான வெண்கலப் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நடராஜர், வைரவர், குமரக் கடவுள், பாலகிருஸ்ணர், அம்மன், நந்தி, முக்காலி, தூபக்கல், மணி என்பன அவற்றுள் அடங்கும்.

**கலிங்க மாகன்**

பொலன்னறுவையினை இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த அரசர்களுட் கலிங்க மாகன் இறுதியான அரசனாவான். மகாவம்சம், பூஜாவலிய, ஹத்தவனகல, விகாரவம்சம் முதலான நூல்களில் இவனைப் பற்றிய விபரங்கள் உள்ளன. மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற நூலிலே மாகோன் என்ற அரசனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

பாளி நூல்களும் சிங்கள நூல்களும் பெரும்கேடுகளுக்கும் துன்பங்களுக்கும் ஏதுவாகவிருந்த வல்லாளனாக மாகனை வருணிக்கின்றன. அவனுடைய ஆட்சியின் விளைவாக பொலன்னறுவை இராசதானியின் ஆதிக்கம் சிதைவுற்றது. பொலன்னறுவைக் காலத்தில் ஆட்சி செலுத்திய அரசபரம்பரையினரும் அதிகார வர்க்கமும் வரலாற்றிலிருந்து முற்றாக ஒதுங்கிவிட்டன.

மாகன் காலிங்க வம்சத்தவன், கலிங்கதேசத்திலிருந்து வந்தவன், அவன் பௌத்த சமயத்திற்கு விரோதமானவன், அவனடைந்த வெற்றிகளின் பயனாகப் பௌத்த சாசனத்திற்கும் இராட்சியத்திற்கும் பெருங்கேடுகள் ஏற்பட்டன. இவ்வாறான பல குறிப்புக்கள் தரப்பட்டாலும் இவை பற்றிய உறுதியான சான்றுகள் இல்லை. மேலும் மாகனுடைய மேலாட்சியின் விளைவாக மட்டக்களப்புத் தேசத்திலே குறிப்பிடத்தக்க சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டன. அவனுக்கு ஆதரவு புரிந்த படைகளின் தலைவர்கள் அங்கு உயர் பதவிகளையும், அதிகாரங்களையும் தம்வயப்படுத்திக் கொண்டனர். மலையாள முக்குவர், காலிங்க குடியினர் என்போர் வன்னிமைப் பதவிகளைப் பெற்றுக்கொண்டனர். முக்குவர் சமுதாயத்திற்குரிய மருமக்கள் தாயமுறை தேசத்து வழமையாகியது.

தான்தோன்றீஸ்வர கோயிலிற் காணப்படும் விமானமும் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயிலிற் காணப்படும் விமானமும் 13ஆம் நூற்றாண்டுத் திருப்பணிகளானவை என்று கொள்ளுவதற்கு ஏற்ற காரணங்கள் உள்ளமையால் மாகனுடைய ஆட்சிக்காலத்திற் பெருங்கோயில்கள் தொடர்பான திருப்பணி வேலைகள் கிழக்கிலங்கையில் நடைபெற்றன என்று கருதலாம். ஆலயத் தொழும்புகளை மாகன் திட்டம் பண்ணினான் என்று மட்டக்களப்பு பூர்வசரித்திரப் பாடல்கள் சிலவற்றிலே சொல்லப்படுகின்றன. இந்தவகையிலே மாகனுடைய காலத்திலே சைவசமயம் மேலோங்கியது. வீரசைவத் தொடர்புகளில் அது புதிய பரிமாணத்தைப் பெற்றது என்று கொள்ளலாம்.

## ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இந்து சமயம்

கி.பி 13 - 17 ஆம் நூற்றாண்டு வரையான காலம் இலங்கையில் ஆரியச் சக்கரவர்த்திகளினுடைய ஆட்சி இடம்பெற்ற காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் இந்துசமயம் மிகுந்த செல்வாக்குப்பெற்றிருந்தது. கி.பி.1283 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட பாண்டியப் படையெடுப்பின் விளைவாக யாழ்ப்பாணத்திலே ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. ஆரம்பத்தில் வடஇலங்கையிலே பாண்டியரின் பிரதிநிதிகளாக நிருவாகப் பொறுப்புக்களை மேற்கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்திகள் தென்னிந்தியாவிற் பாண்டியப் பேரரசு நிலைகுலைந்ததும் அரசர்களாக முடிசூடி யாழ்ப்பாணத்திலிருந்து சுதந்திரமாக ஆட்சிபுரிந்தார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாடும்(வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி), தீவுப்பற்றும்(நயினாதீவு, புங்குடுதீவு, காரைதீவு, நெடுந்தீவு, கச்சதீவு) வன்னி(கிளிநொச்சி, முல்லைத்தீவு),மாந்தை முதலிய இடங்களும் இவர்களுடைய ஆட்சியின் கீழ் இருந்தன. சிங்கை நகர் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் தலைநகராக இருந்தது.

இவர்கள் குலத்தால் அந்தணர்களாக இருந்தமையினால் சைவ சமயம் மேன்மையடைய பல பணிகளைப் புரிந்தனர். ஆரியச் சக்கரவர்த்திகளினுடைய விருதுப் பெயர்களும் அரச சின்னங்களும் சமயச் சார்புடையனவாய் இருந்தன. சேதுகாவலன், கங்கையாரியன், கங்கைநாடன் என்ற விருதுப் பெயர்களெல்லாம் அவர்களது சமயாபிமானத்தை விளக்குவனவாயுள்ளன. சேது - இராமேஸ்வரத்தை குறிக்கும். சேதுகாவலன் - இராமேஸ்வரத்தின் மீது கொண்ட ஈடுபாட்டிற்கும் சமயாபிமானத்திற்கும் தக்க சான்று. இவர்கள் பயன்படுத்திய நாணயங்களிலும் சேது என்ற மொழி பொறிக்கப்பட்டிருந்தது.

சிவ சின்னமாகிய நந்தியின் வடிவத்தினை தமது அரச சின்னமாகவும் அரச முத்திரைகளுள் ஒன்றாகவும் பயன்படுத்தியமை சைவசமயச் சார்புடையவர்கள் என்பதை வெளிக்காட்டுகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகளினுடைய நாணயங்கள் பலவற்றிலே அழகிய கலைவனப்பு மிக்க நந்தியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் மேற்புறமாகப் பிறையின் வடிவங்காணப்படுகின்றது.

**கோயில்கள்**

சமகாலத் தமிழகத்தை போல ஆலய வழிபாடும் சிறப்புற்றிருந்தது. ஆலயங்கள் பெரும்பாலும் விவசாயிகள் வகுப்பைச் சேர்ந்த நிலவுடமையாளர்களதும் பிரதானிகளதும் கட்டுப்பாட்டில் இருந்தன. வருடாந்த விழாக்களும் தல யாத்திரைகளும் சிறப்பம்சங்களாயிருந்தன. மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, கீரிமலை, நயினாதீவு, வெருகல் சித்திரவேலாயுதர், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் முதலான ஆலயங்கள் பிரபல்யம் பெற்றிருந்தன.

நல்லூர் முருகன் கோயில் 15ஆம் நூற்றாண்டில் புவனேகபாகு என்பவனால் அமைக்கப்பட்டதாக கைலாயமாலை குறிப்பிடுகின்றது. பாடல் பெற்ற தலங்களிலும் திருப்பணி வேலைகள் இடம்பெற்றிருந்தன. பரராஜசேகரன், செகராஜசேகரன் ஆகியோர் கோணேசர் கோயிலில் செய்த திருப்பணி பற்றி கோணேசர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. பரராஜசேகரன் திருகோணமலை சென்று ஆலய தரிசனம் பண்ணி தேர்த்திருவிழா ஏற்பாடுகளைக் கவனித்து நிவந்தங்கள் பல செய்திருந்தான் என திருகோணசல புராணம் குறிப்பிடுகின்றது.

**சைவ சமய சார்புடைய நூல்கள்**

சமயச் சார்புடைய இலக்கியங்கள் பலவும் இக்காலத்தில் எழுந்துள்ளன. இவற்றுள் சைவ சமய சார்புடையனவற்றுள் கோணேசர் கல்வெட்டு, தட்சணகைலாய புராணம், திருக்கரைசைப் புராணம் என்பன முக்கியமானவை.

**கோணேசர் கல்வெட்டு**

- ஆசிரியர் - கவிராஜவரோதயன்
- செய்யுள் வடிவிலும் வசன வடிவிலும் அமைந்துள்ள பல பகுதிகளைக் கொண்டது.
- திருகோணமலையில் உள்ள கோணேசர் ஆலய வரலாற்றினையும் குளக்கோட்டு மன்னன் அங்கு மேற்கொண்ட திருப்பணிகளையும், மக்கள் தம் வாழ்க்கைப் பண்பாட்டினையும் சித்திரிப்பதாக இந்நூல் விளங்குகிறது.

**தட்சணகைலாய புராணம்**

- ஆசிரியர் - பண்டிதராசர்
- ஈழத்துத் தல புராணங்களிலே தலைசிறந்தது. கோணேசர் ஆலயத்தைப் பற்றியது.
- தலபுராணங்களுக்குச் சிறப்பாகவுரிய பண்புகளையெல்லாம் கொண்டுள்ளது.
- கோணேசர் அலயத்தின் உற்பத்தியையும் வளர்ச்சியையும் விளக்குவதற்கு பௌராணிக மரபிலுள்ள கதைகளையுங் குளக்கோட்டன் கதையினையும் பண்டிதராசர் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திருக்கரைசைப் புராணம்**

- ஈழத்தில் எழுந்த தல புராணங்களுள் ஒன்று
- திருகோணமலைக்கு அருகில் உள்ள மகாவலி கங்கைக் கரையிலே, கரசைப் பகுதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் புகழை விரித்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது.
- இதன் ஆசிரியர் யாரென்பது அறியப்படவில்லை.
- காப்புச் செய்யுள் உட்பட 170 பாடல்கள் காணப்படுகின்றன.
- இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச் சருக்கம் ஆகிய சருக்கங்கள் கொண்டது.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

**காலப்பினனணி**

போர்த்துக்கீச தளபதியான பிரான்சிஸ்டி அல்மெல்டாவின் மகன் லொறன்கோ டீ அல்மெல்டா என்பவர் புயல் காற்றினால் திசைமாறி 1505ல் இலங்கைக் கரையைக் கடந்து கரையோரங்களுக்கு அதிகாரிகளாயினர். இவர்கள் பௌத்தர்களையும் இந்துக்களையும் வலிந்து தமது சமயத்திற்கு இழுத்தனர். இந்து ஆலயங்களை அழித்தனர். பின்பு ஒல்லாந்தரும் 16ம் -17ம் -18ம் நூற்றாண்டுகளில் தேசிய வாழ்வையும், கலாசாரத்தையும் எவ்வித சுவடும் இன்றி அழிப்பதில் ஈடுபட்டனர். இந்துக்கள் தேவாலயங்களுக்குச் சென்று வழிபடவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டார்கள். கிறிஸ்தவனல்லாத எவனும் போத்துக்கல்லுக்கும் யேசு நாதருக்கும் எதிரானவன் என்று கணிக்கப்பட்டான். யாழ்ப்பாணத்திற்கு ஆட்சியாளனாயிருந்த ஒல்லாந்தர் தளபதியின் சமையலறைக்கு நாள்தோறும் இறைச்சித் தேவைக்கென ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மாடு அனுப்பப்படல் வேண்டும் என்ற சட்டம் ஒன்றே ஒல்லாந்தர் காலத்தில் முக்கியமான சமய எதிர்ப்பு நிகழ்ச்சியாய் இடம்பெற்றது. இச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முன்னோரான திருநெல்வேலி ஞானப்பிரகாசர் தமது முறை வரும் போது இரவோடு இரவாக கப்பலேறி தமிழகம் சேர்ந்தார். அங்கு அவர் சிவப்பணி செய்து சிதம்பரத்திலே ஞானப்பிரகாசர் குளத்தை வெட்டுவித்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசிரியரான சேனாதிராயமுதலியார் (1750-1840) ஒல்லாந்தர் கால இறுதிப் பகுதியிலும் ஆங்கிலேய காலத் தொடக்கத்திலும் வளர்ந்த சைவப்பெருமான் இவர் நல்லூர் முருகப்பெருமானின் மீது நல்லைக் குறுவஞ்சி பாடினார். இதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் விவிலிய வேகத்தையும் பாதிரிமாரையும், ஆங்கிலக் கல்வியையும் பக்கத்துணைகளாய்க் கொண்டு சுதேச மதத்தினை வலிகுன்ற வைத்து அவர்களது கலாசாரத்தை கலாசார மரபுகளைப் புகுத்தவும் முனைந்தனர்.

மதமாற்றதோடு ஆங்கிலக்கல்வியை அளிப்பதும் ஆட்சியாளரின் நோக்கமாயிருந்தது. கல்விக் கூடங்களும் மிஷனரிகளால் தொடக்குவிக்கப்பட்டன. விவிலிய வேத மூலம் கிறிஸ்தவம் கற்பித்தல், மாணவவர்களைத் தேவாலயம் செல்ல வற்புறுத்தல் அவர்கள் தமது சமயாசாரங்களையும் சின்னங்களையும் கடைப்பிடிப்பதைத் தடுத்தல் முதலான தந்திரங்களைக் கையாண்டு இந்து சமயத்திற்கு ஊறுவிளைவிப்பதில் பாதிரிமார் தீவிரமாயிரந்தனர். கிறிஸ்தவர்களை பீட்டர் பேர்சிவல் (வெஸ்லியன் பாடசாலை அதிபர்) பஞ்சாட்சரக் கிறிஸ்தவர் என்று குதித்தார். ‘‘சிவாலயம்’’ என்பதும் சம்பளம் என்பதும் ஐந்தெழுத்துத்தான் என இந்நிலைப்படுத்தப்பட்டது. இந்நிலையில் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 1823-1879 காலப்பகுதியில் தோன்றினார்.

‘‘சைவசமயம் தனித் தமிழருடன் தொடங்கித் தோழமையில் கலக்கிறது. அறிவக்குரிய இயக்கமாக அமையாமல் வாழவேண்டிய நெறியை புகட்டுகிறது’’ என்பது உலகப்புகழ் பெற்ற தத்துவஞானி இராதாகிருஸ்ணனின் கூற்று. (டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்வும் தொண்டும்- செ.உலகநாதன்) நாவலர் சைவசமயப் புனருத்தாரணத்தை அறிவுக்குரிய இயக்கமாகவும் இருவையிலும் புத்துயிரளித்தார்.

இவர் பீற்றர் பேர்சிவல் துரையுடைய ஆங்கில வித்தியாசாலையிலே ஆங்கிலம் கற்றார். பேர்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதரானார். ஆனால் பிதிரார்ச்சிதம் இவர் பெறவில்லை. இவர் கீலக வருடம் புரட்டாதிமாதம் (1848) பரித்சியாகஞ் செய்தார். பேர்சிவல் துரைநான் தங்களுக்கு உயர்வாகிய வேதனந் தருவேன் தாங்கள் என்னை விடலாகாது’’ என பல தாம் வலியுறுத்தியும் அதில் அவர் விருப்பம் வைக்கவில்லை. ஆங்கிலம் மூலம் கிடைக்கும் உத்தியோகத்தை இவர் விரும்பவில்லை. இவர் மஇல்வாழ்க்கையில் புகாமல் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தலிலே பேராசையாக இருந்தார்.

## தோற்றம்

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கார்காத்த வேளாள வருணத்திலே பாண்டி மழவர் குடியிலே 12.12.1822ஆம் ஆண்டு புதன்கிழமை இரவு சிங்க லக்கினத்திலே பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமி அம்மை. இவர் தொடக்கத்திலே நல்லூரிலிருந்த சுப்பிரமணியபிள்ளை என்பவரிடத்திலே தமிழ் நெடுங்கணக்குப் பயின்று பின் அவரிடத்தில் மூதுரை முதலிய நீதி நூல்களும் கற்று வந்தார். இளம் பருவத்திலிருந்தே சைவத்தின் மீது மிகுந்த பக்தியுடையவாயிருந்தார். சைவத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்க்க வேண்டும் எனும் நொக்கோடு தனது ஆசிரிய பதவியையும் துறந்தார் ஆறுமுகநாவலர். ஆங்கிலேயர்கள் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டு கிறிஸ்தவ சமயத்தை பரப்பினார்களோ அதே வழிமுறையினைக் கையாண்டு நாவலர் சைவசமயத்தின் எழுச்சிக்கு பாடுபடலானார். சைவ சமய மறுமலர்ச்சி, சைவமரபிலான கல்வி வளர்ச்சி, சமூக நலன் எனும் விடயங்கள் தொடர்பாக இவரது பணிகள் அமைந்திருந்தன.

ஆங்கிலேயர் பாடசாலைகள் அமைத்து கல்வி என்ற போர்வையில் மதமாற்றம் செய்வதை கண்ணுற்ற நாவலர் சைவ மக்கள் கல்வியில் முன்னேற வேண்டும் எனும் நொக்கில் 1848ஆம் ஆண்டு வண்ணார்பண்ணையில் சைவப் பாடசாலையை ஒன்றை நிறுவினார். 1821இல் கிறிஸ்தவ பிரசுரங்கள் சபை நிறுவப்பட்டது. கிறிஸ்தவ மதச் சிறப்பினை எடுத்துக்காட்டவும் நமது சமயங்களை இழித்துக் கூறுவனவாகவும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டதை பார்த்து 1849இல் நாவலர் அச்சியந்திரசாலையை நிறுவினார். சைவப் பாடசாலைகளுக்கு வேண்டிய புத்தகங்கள் யாவும் இங்கேயே அச்சிடப்பட்டன.

மிஷனறிமார் சமயப் பிரசங்கங்கள் செய்து பொதுமக்களை கவர்வதைக் கண்ட நாவலர் மேடைப்பிரசங்க நிலையை சிறப்பாகக் கையாண்டு பிறருக்கு வழிகாட்டியாக விளங்கினார். பொய் மதமாற்றம் செய்திருந்த சைவசமயிகளைப் பற்றி இவர் கடுமையாகச் சாடுவார். ‘‘இவர்கள் பாதிரிமார்கள் எதிரே முளங்கால் பலியிடுதல், இராப்போசனம் எடுத்தல் முதலிய கிரியைகளாலும் கோட்பாடுகளில் விவிலியப் புத்தகம் எடுத்து பிரமாணம் பண்ணுகையினாலும் கிறிஸ்தவர்கள் போல் நடிக்கிறார்கள். ஆனால் தங்கள் வீடுகளில் வீபூதிதாரணம், அனுட்டானம் செய்கிறார்கள். இருசமயத்துள் ஒன்றிலாயினும் உறுதியின்றி இரண்டையும் சார்ந்து நடக்கம் இப்புரட்டர்கள்’’ எனக் குறிப்பிடுவார். மீண்டும் வளர்ச்சியுற்ற சைவசமயத்தில் உள்ள குறைபாடுகளையும் எடுத்துக் கூறினார். வாணவேடிக்கை, பிராமணர்களது சில நடவடிக்கைகள், சின்னமேளம், மிருக பலி, சிறுதெய்வ வழிபாடு என்பவற்றை எதிர்த்துக் குரல் எழுப்பினார். ஆறுமுக நாவலரது இத்தகைய செயற்பாடுகள் காரணமாக அகத்தில் சைவராயும் புறத்தில் கிறிஸ்தவர்களாயும் இருந்த மக்கள் மதம் மாறி சிவதீட்சை பெற்று உண்மைச் சைவர்களாகியமை குறிப்பிடத்தக்கது.

சைவசமயிகளின் சமய வாழ்வை நிலைபெறச் செய்ய வேண்டி நாவலரவர்கள் 1847ம் ஆண்டு மார்கழிமாதம் 18ம் நாளிலிருந்து வெள்ளிக்கிழமை தோறும் வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலிலே சைவசமய உண்மைகளை எடுத்து பிரசங்கமாரி பொழிந்தார். ஆறுமுகநாவலர் சைவசமய சாரமாகக் குவிந்துள்ளவை 24 கட்டளைகளாய் அமைந்துள்ளன.

உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்கிற மூன்று தொழில்களையுஞ் செய்வதற்கு கருத்தா ஒருவர் இருக்கிறார். அந்தக் கருத்தா சிவபெருமான். சிவபெருமான் என்றுமுள்ளவர், எங்கும் நிறைந்தவர், என்றுஞ் சுத்தர், எல்லாமறிபவர், எல்லாம்வல்லவர், பெருங்கருணையுடையவர். சிவபெருமானுக்குத் தேவி அவருடைய சக்தியாகிய திருவருள் சிவபெருமானொருவரே விக்கினேசுரர், சுப்பிரமணியர் முதலிய பல மூர்த்திகளாகி நின்று அருள் செய்வர். ஆன்மாக்கள் சிவபெருமானுக்கு என்றும் அடிமைகள்.சிவபெருமானை மனம், வாக்கு, காயம் என்கிற மூன்றினாலும் வழிபடுதல் ஆன்மாக்களுக்கு கடன்.

மனதினாலே செய்யும் வழிபாடுகளாவன சிவபெருமானைத் தியானித்தல், அவருடைய குணங்களைச் சிந்தித்தல் முதலானவைகள். வாக்கினாலே செய்யும் வழிபாடுகளாவன, சிவபெருமானுடைய திருநாமங்களை உச்சரித்தல், அவருடைய பெருமையைப் பேசுதல், அவருடைய சரித்திரங்களைப் படித்தல் முதலானவைகள். கரணத்தினாலே செய்யும் வழிபாடுகளாவன சிவபெருமானுடைய திருமேனியைத் தலையினாலே வணங்குதல், கண்களினாலே தரிசித்தல், கைகளினாலே கும்பிடுதல், பூசித்தல், கால்களினாலே வலம் வருதல் முதலானவைகள்.

சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடே அசுத்தர்களாகிய ஆன்மாக்களைப் பந்தித்த பாசமாகிய நோய்க்கு மருந்து. வழிபாடாகி மருந்துக்கு அநுபானமாவது மெய்யன்பு. வழிபாடான மருந்துக்குப் பத்தியங்களாவன உயிர்களுக்கு இரங்குதல், உண்மைபேசுதல், செய்ந்நன்றியளித்தல், தாய்தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோரை வணங்குதல், வறியவர்களுக்குக் கொடுத்தல் முதலிய புண்ணியங்கள்.

வழிபாடாகிய மருந்துக்கு அபத்தியங்களாவன கொலை, களவு, கள்ளுக்குடிததல், மாமிசம் புசித்தல், பொய், விபசாரம், சூதாடுதல் முதலிய பாவங்கள். சிவபெருமான் தமக்கு ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுநிற்கம் இடங்களாவன சிவலிங்கம் முதலிய திருமேனியும் மெய்யடியார்களுடைய திருவேடமும். சிவபெருமான் ஆன்மாக்கள் அறிந்து வழிபட்டுய்யும் பொருட்டு அருளிச்செய்த முதுலநூல்கள் வேதம், சிவாகமம் என்கிற இரண்டும்.
சிவபெருமானை வழிபடும் பொருட்டு ஆன்மாக்களுக்குச் கிடைத்த கருவி மனித சரீரம்.
மனித சரீரத்தைப் பெற்ற ஆன்மாக்களுக்குச் சிவபெருமானை வழிபடும் பொருட்டு யோக்கியதையை வருவிப்பது சிவதீட்சை.

சிவதீட்சை பெற்றுக்கொண்டு வேதசிவாகமப்படியே சிவபெருமானை வழிபடுகிற சமயம் சைவசமயம். சைவசமயிகள் அவசியமாக தரிசிக்கத்தக்க சிவசின்னங்களாவன வீபூதியும், உருத்திராட்சமும். சைவசமயிகள் அவசியமாகச் செபிக்கத்தக்க சிவமூல மந்திரம் பஞ்சாட்சரம். சைவசமயிகள் அவசியமாக ஓதத்தக்க சிவஸ்தோத்திரங்களாவன தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்கின்ற அருட்பா ஐந்தும்.
ஆன்மாக்களுக்குச் சுதந்திரமாகிய அறிவுத் தொழிலும் இல்லை. ஆதலினாலே சுதந்திரமாகிய அறிவுத் தொழிலும் உடைய சிவபெருமானை நோக்கி “ அடியேங்கள் பாவங்களை விலக்கி புண்ணியங்களைச் செய்து உம்மை மெய்யன்போடு வழிபட்டு உய்யும் பொருட்டு உம்முடைய திருவருளைப் பொழிந்தருளும்” என்று பிரார்த்தித்து அந்தத் திருவருளை முன்னிட்டு அதன் வழியே ஒழுகல் வேண்டும். சிவபெருமானை விதிப்படி மெய்யன்போடு வழிபட்டவர் அவருடைய திருவடிக்கீழ் நித்தியமாகிய பேரின்பத்தை அநுபவிப்பார்.

நாவலரவர்களின் கல்விப்பணிகள் மூன்று வகையாகப் பிரித்து நோக்கப்படுகின்றன.

- ஆசியரியப்பணி
- நூலாசிரியர் பணி
- பாடசாலைகளை நிறுவிய பணி

**ஆசிரியப்பணி**

இவர் சிறந்த ஆசிரியர். யாழ்ப்பாண மத்திய கல்லூரி என வழங்கும் வெஸ்லியன் பாடசாலையிலே கற்பித்ததோடு அமையாது மாலை வேளைகளிலே தம்மை நாடி வந்த பலருக்கும் சமய சாத்திரங்கள், இலக்கிய இலக்கணங்கள் ஆகியவற்றைக் கற்பித்து வந்தார். இவர் மாணவர்களாக இவரின் மருமகனான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, பெறாமகனாகிய ஸ்ரீமத் த.கைலாசப்பிள்ளை, காசிவாசிசெந்திநாதையர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். இதில் இலக்கண இலக்கியக் கடலான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும் இவரிடையே சந்தேகம் தீர்த்த இவர் நல்லதொரு மாணாக்க பரம்பரையை உள்ளடக்கியும் சிறந்த சமய இலக்கிய இலக்கண நூல்களை எழுதியும் சைவத்தையும் தமிழையும் காத்தனர். நாவலரவர்களின் மாணாக்கப் பரம்பரை கடைசிக் கொழுந்துகளாக ஆன்மீகத்துறையிலே பண்டித சி.கணபதிப்பிள்ளை அவர்களும் தமிழ்க் கல்வித் துறையிலே புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிளளை அவர்களும் விளங்கி வந்தனர்.

இவர் நூலாசிரியர் தொண்டில் சிறந்து விளங்கினார். இவர் வசனநடை கைவந்த வல்லாளர். இவர் உரைநடையில் எழுதியுள்ள திருவிளையாடல் புராணவசனம், முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்கள் அவ்வப்போது எழுதித் துண்டுப் பிரசரங்களாய் வெளிவந்து பின்பு ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு எனும் பெயரில் வெளியான நூல், பெரியபுராணசூசகம் முதலான நூல்கள் சைவசமய உண்மைகளை உணரச்செய்தன. திருமுருகாற்றுப்படைக்கு இவர் உரை எழுதியுள்ளார். இதுவே இவர் உரைநடையில் எழுதி வெளியிட்ட முதலாவது உரைநூல் ஆகும். மேலும் திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை உட்பட பல நூல்களைச சிறந்த முறையிலே ஆராய்ந்து பதிப்பித்த பெருமையும் இவருக்குண்டு.

இவர் சைவப்பிரகாச வித்தியாசாலையைப் பல்வேறு நோக்கம் கருதி ஸ்தாபித்தார். அதாவது சைவசமயப் பிள்ளைகளைச் சைவச் சூழலில் வளர்த்தல், சைவசமய உண்மைகளை அவர்களுக்கு உணர்த்தல் அவர்களை உலகியல் வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துதல் என்பனவே அவை. இனி இவரின் சமூக தேசிய பணிகளை நோக்குமிடத்து அந்த காலத்தில் வாழ்ந்த சைவ மக்கள் பலர் ஒழுக்கக் கேடுகளை உடையவர்களாக, கடவுள் பக்தியற்றவர்களாகவும் இருப்பதைக் கண்டு அவர்களைத் திருத்தும் பொருட்டு எழுத்தாலும் பேச்சாலும் அறிவுரைகள் பலவற்றை எடுத்துரைத்தார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அவரின் சமயப்பணியோடு சமூகப்பணியையும் கூறுகிறது.

யாழ்ப்பாணத்திலே மாகாணாதிபதியாயிருந்த துவைனந்துரையின் கொடுமைகளையும், ஊழல்களையும் பகிரங்கமாக துண்டுப்பிரசுரம் மூலம் எடுத்துக்காட்டி மக்களை விழிப்படையச் செய்தார். மேலும் திருக்கேதீச்சரத் திருத்தலம் சேதமடைந்து வழிபடப்படாமல் இருந்த காலத்திலே அதன் பழம் பெருமைகளை எடுத்துரைத்து புனருத்தாரணம் செய்தார். தொடர்ந்து 1879ல் இலங்கைச் சட்ட நிரூபண சபைக்குப் பிரதிநிதியாகத் திரு.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைத் தெரிவு செய்தல வேண்டும் எனப் பிரசாரம் செய்து வெற்றி கண்டார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகம முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. இதனால் நாவலர் 1879ல் வண்ணார் பண்ணை சிவன் கோயிலில் ஒரு பெருங்கூட்டம் கூடி நல்லூர்க் கோயிலில் அதிகாரியை விலக்குவதற்காக வழக்கு ஒன்று தொடரும் பொருட்டுச் சபை ஒன்றை நிறுவினார். இந்த வழக்கு 1929ல் விசாரணைக்கு வந்தது. அதன்படி இக்கோயில் பொதுச்சொத்து எனவே கோயிலில் அதிகாரி நீதிமன்றத்துக்கு கணக்குக் காட்டல் வேண்டும் எனச் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சிதம்பர ஆலயத்தில் சிவதீட்சை பெற்றுக் கொள்ளாத ஆலய தீட்சிதர்களையும் இவர் கண்டிக்கத் தவறவில்லை. 1867ல் அவர்கள் ஆடுவெட்டி வேள்வி செய்ய முயற்சித்தனர். அதனைத்தடுத்து நிறுத்தினார். நல்லூர் கந்தசுவாமி கோயிலிலே தேர்த்திருவிழா அன்று ஆடுவெட்டிப் பலி கொடுத்த வழக்கத்தையும் இவர் கண்டித்துத் தடுத்து நிறுத்தினார்

கமக்காரர்களுக்கு விதைநெல் கிடைப்பதற்காக சட்ட நிருபணசபைக்கு விண்ணப்பம் செய்தார். சமூகங் கடைப்பிடிக்க வேண்டிய சைவ சமயப் பராம்பரியம் யாது என்பதனை யாழ்ப்பாணத்துச் சமயநிலை, சைவவிரோதம், தமிழ் புலமை, சைவசமயி, அநாசாரம் முதலிய கட்டுரைகளில விளக்கி உள்ளார்.

இவர் உதயபானு எனும் பெயருடன் சைவப்பத்திரிகை ஒன்று நடாத்த விளம்பரம் விடுத்திருந்தார். இதனால் சைவ உதயபானு எனும் பத்திரிகை இவருடைய மாணவர்களால் 1880ல் ஆரம்பிக்கப்பட்டது. 1889ல் இது இந்து சாதனம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இது தவிர யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சங்கம் கிறிஸ்து மத கண்டன சபை என்பவற்றுக்கும் இவர் வித்திட்டார். 1872ல் இவர் ஆரம்பித்த ஆங்கில தமிழ் வித்தியாசாலையை முன்னோடியாக வைத்து யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1880ல் ஆரம்பித்த சைவப் பிரகாச சமாஜியம் என்பது 1888ல் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை எனப் பெயர்மாற்றம் செய்யப்பெற்றது.

இவர் சேர்.முத்துக்குமார சுவாமியுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். தாம் இலங்கையர் எனக் கூறுவதில் பெருமிதம் கொண்டார். இலங்கைத் தமிழர்கள் எவ்வகையிலும் இந்தியத் தமிழர்களுக்குச் சளைத்தவர்களல்ல என்பதை மித்தியாவாத திரசனம், நல்லறிவுச்சுடர் கொளுத்தல் எனும் வெளியீடுகள் மூலம் எல்லோரையும் அறியச்செய்துள்ளார்.

இவர் சென்னைக்குச் சென்று அச்சு இயந்திரம் வாங்கிய பின் அங்கிருந்து தமிழ்நாட்டுத் திருத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். இவருடைய சமய, கல்வித்திறமையை முன்பே அறிந்திருந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் தம் திருமடத்துக்கு இவரை அழைத்து உபசரித்தனர். இதில் பண்டாரச் சந்நிதிகள் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பண்டாரச் சந்நிதிகள் கேடடதன் பேரில் சுபநாள் ஒன்றில் ஆதீன அவையில் ஆறுமுகன் “பதி பசு, பாசவிளக்கம்” எனும் பொருள் பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். இவருடைய நாவன்மையைக் கண்டு வியந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பண்டாரச சந்நிதிகள் இவருக்கு “நாவலர்” என்ற பட்டத்தை வழங்கினார்.

திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இவரின் சிறப்பை பின்வரும் பாடலில் கூறுகிறார்.

“நீடுபுகழ்த் திருக்கேதீச் சாந்திருக்கோ ணாசலமிந்
நிலவா நின்ற
நாடுபுகழ்த் தலம் பொலியாழ்ப் பாணத்து நல்லூர்வாழ்
நகராக் கொண்டோன்
தேடுபக முருவமைந்த கந்தவே டவத்துதித்த
செல்வன் யாரும்
பாடுபுக ழாறுமுக நாவலனவ் வாறச்சிற்
பதிப்பித் தானே”

மேலும் இராமநாதபுரம் பொன்னுசாமி தேவருடைய சபையில் நாவலர் செய்த பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்த தேவர் மிகச் சிறந்த விருதை நாவலருக்கு வழக்கினார். பின்பு நாவலர் மதுரை திருஞானசம்பந்த சுவாமி ஆதீனத்துப் பண்டார சந்நிதிகளுடைய வேண்டுகோளின்படி மதுரை மீனாட்சி அம்மையார் சந்நிதானத்திற் பிரசங்கம் செய்தார். அதைக்கேட்ட பண்டாரச் சந்நிதிகள் தாம் அணிந்திருந்த ஆறுகட்டி சுந்தர வேடங்களைக் கையிலெடுத்து “ இவை எல்லாம் எங்களுக்கு ஏன்? சமய தாபனஞ் செய்யவந்த தங்களுக்கே ஏற்றவை எனக் கூறி நாவலருக்கே சூட்டினார். நாவலர் இவ்வேடங்களை மீண்டும் சந்நிதிகளிடம் ஒப்படைத்தார்.

மேலும் 1877ஆம் ஆண்டளவில் மழை குறைந்ததால் தானியங்கள் விழைவு குன்றி நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது கஞ்சித்தொட்டி கட்டிப் பஞ்சம் நீங்கும் வரை சுமார் ஏழு மாதங்களுக்கு ஆரம்பத்தில் கஞ்சியும் பின்னர் அன்னம், கறி முதலியனவும் ஏழை மக்களுக்கு வழங்கிப் பஞ்சப்பிணியைப் போக்க காரணமாக இருந்தமை இவரது முக்கியமான சமூகப் பணியாகும். இவ்வாறு நாவலர் தனி மனிதராக நின்று சைவசமயத்திற்கும், சமூகத்திற்குமாக செய்த அரும்பணிகளே பின்னாட்களில் சைவ இயக்கங்களின் தோற்றத்திற்கு வழிகோலுவதாய் அமைந்தன.

சமயப்பிரசங்கம், சொற்பொழிவுகள், புராணபடனம் என்பவற்றின் மூலமாக அடிப்படைச் சமய அறிவினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான முயற்சியில ஈடுபட்டவர். ஆங்கிலேயர் காலத்திலே நிறுவனமயப்பட்ட அமைப்பாக பாடசாலைகள் தோன்றத் தொடங்கின. கிறிஸ்தவ பாதிரிமார்களே பள்ளிகளை ஆங்காங்கு தொடக்கி நடத்தி வந்தார்கள். இவ்வாறான சூழலில் சுதேசிகளாகிய வைசர்களுக்கு பாடசாலைகளை அமைக்க வேண்டிய தேவை உண்டாயிற்று.

இவ்வாறான பாடசாலைகளை அமைப்பதற்குப் பல தடைகள் இருந்து வந்தன. அரசின் நிதியுதவி கிடைக்காமை, பாதிரிமார் அரசின் மீது கொண்டிருந்த செல்வாக்கினால் இந்துக்கள் தொடங்கிய பாடசாலைகளுக்கு அரசு முட்டுக்கட்டை இடுதல் முதலாகப் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. பிடியரிசித் தருமம், செல்வர்களின் தனிப்பட்ட நிதியுதவிகள் என்பவற்றைக் கொண்டே 1848இல் நாவலர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே சைவப்பிரகாச வித்தியாசாலையை தொடங்கினார். நாவலரின் கல்விக்கான அடிப்படை நோக்கம் சைவம், தமிழ் சார்ந்ததாகவே பெருமளவு இருந்தது.

சி.வை.தாமோதரமபிள்ளை நாவலரின் தொண்டுகளைப் போற்றி பாடியுள்ளார்.

> "நல்லை நக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
> சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே எல்லவரும்
> ஏத்து புராணாகமங்கள் எங்கே ப்ரசங்கமெங்கே
> அத்தனறிவென்கே அறை"

இவரின் இறுதிப் பிரசங்கம் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் 1879ம் ஆண்டு சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசைத் தினமாகிய ஆடிச்சுவாதி நட்சத்திரத்தன்று இடம்பெற்றது. தனது 57வது வயதில் 1879 கார்த்திகை 21ம் நாள் (1879.12.05) வெள்ளிக்கிழமை அன்று மக நட்சத்திரமும் சப்தமித் திதியும் கூடிய புண்ணிய வேளையில் விண்ணுலகு ஏகினார்.

# சுவாமி விபுலாநந்தர்

## அறிமுகம்

இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார். 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆந் திகதி தமிழ் கர வருஷம் பங்குனித் திங்கள் 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பூரட்டாதி நட்சத்திரத்தில் கிழக்கு மாகாணத்தில் மட்டுமாநகரின் தெற்கே சுமார் 26 மைல் தொலைவிலுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தார். சாமித்தம்பி யாருக்கும் கண்ணம்மைக்கும் நன்மகனாக தம்பிப்பிள்ளை என்னும் இளமைப் பெயர் கொண்டார். பின் மயில்வாகனனானார் என்னும் இளமைப் பெயர் கொண்டார். உயர்திரு க. குஞ்சித்தம்பி, புலோலி பொ. வைத்தியலிங்க தேசிகர் ஆகிய உபாத்தியாயர்களிடம் இளமைக்கல்வியைக்கற்றார். இளமையில் ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றார். இளமைக் கல்வியினை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் பின்னர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.

பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கையில் கேம்பிரிஜ் ஜுனியர், கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைகளில் சித்தி பெற்றார்.கொழும்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமாப் பயிற்சிபெற்றார். 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றார். 1920 இல் லண்டன் B.Sc விஞ்ஞானமாணிப் பரீட்சையில் தேறி விஞ்ஞானப்பட்டதாரியானார். கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை மட்/புனித மிக்கேல் கல்லூரி, யாழ்/ சம்பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் விஞ்ஞானஆசிரியராகக் கடமையாற்றினார்.

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய வேளை 1922 துறவில் நாட்டம் ஏற்பட்டமை இவரது வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. இதனையடுத்து சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடம் சுவாமி சிவானந்தரால் “பிரபோத சைதன்யர்“ என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டார். 1924 ஆம் ஆண்டு ஞான உபதேசம் பெற்று “சுவாமி விபுலாநந்தர்“ என்னும் தீட்சை நாமம் பெற்றார். துறவு வாழ்வு மானிட நேயத்தை வளர்த்தது. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம் முதலிய மொழிகளில் வல்லவராக விளங்கினார்.

### விபுலாநந்தரின் பணிகள்

விபுலாநந்தர் ஆற்றிய பணிகளை கலைப்பணி, நூலாசிரியர் பணி, சமூகப்பணி, கல்விப்பணி, உரையாசிரியர் பணி, பதிப்பாசிரியர் பணி என்று பல நிலைகளில் அவதானிக்கலாம்.

### சமயப் பணிகள்

இவர் இந்து சமய வளர்ச்சிக்காக பல சமயப் பணிகளை ஆற்றினார். இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார். ஈசன் உவக்கும் இன்மலர்கள், கோயில் என்பவற்றை வினாவிடை அமைப்பில் இயற்றினார். மகாலட்சுமி தோத்திரம், நடராஜ வடிவம் (ஐந்தொழில் களையும் சுருக்கமாக விளக்கும் நூல்),

உமாமகேஸ்வரம் (மாதொரு பாகனாய அமைந்துள்ள நுட்பத்தை விளக்குவது) கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமரவேள் நவ மணிமாலை முதலான சமய நூல்களை ஆக்கியுள்ளார்.

சமயப் பிரசங்கம் செய்தல், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் ஈடுபட்டவர். இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் பரவலுக்கு முன்னோடியானவர். இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத் தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவி, அதன் ஆதரவில் கல்விச்சாலை கள் பல அமைத்தும், மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தரும பரிபாலனம் செய்தவர். சமயம் அனுட்டிப்பதற்குரியது என்பதனை தமது போதனைகளிலும் சாதனைகளிலும் நிலைநாட்டினார்.

சமய தத்துவக் கருத்துக்களைச் சாதாரண மக்களும் விளங்கக்கூடியவாறு இலகு நடையில் விளக்கினார்.கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள் சிந்துகளையும் கையாண்டு சமய நூல்களைப் பாடினார். உதாரணமாக நான்மணிமாலை, தோத்திரம், தேவபாணி என்பனவற்றைக் கூறலாம். சமயத்துறை சார்ந்தனவாகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் இவரது கவிதைகள் காணப்படுகின்றன. இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலான சமயப் பெரியார்களை மதித்துப் போற்றி யதுடன், அவர்களுடைய போதனைகளையும், பணிகளையும் முன்மாதிரியாகக் கொண்டவர்.

**கல்விப் பணிகள்**

விபுலாநந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார். தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கும் பொருட்டு சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவதை வலியுறுத்தி, சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபார்சு செய்ததுடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உதயமாவதற்கும் வித்திட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தி லும், இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார். சுய மொழியபிமானமற்றதும், தேசாபிமானமற்றதும், அடிமைத்தனமானதும், நாகரிகத்தை நாசப்படுத்துவதுமான கல்வி முறையைக் கண்டித்தார். மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைவாகப் போதிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்தார். “கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது; அது உயிர்ப்பூட்டுவது; உண்மையைக் காட்டுவது; தன்னம் பிக்கையைத் தருவது “ எனும் கொள்கை உடையவராக விபுலானந்தர் விளங்கினார்.

சுவாமி விபுலானந்தர் தன் கல்வியற் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் பல பணிகளை மேற்கொண்டார். இராம கிருஷ்ணமிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை இந்து போர்ட் இராஜரத்தினத்துடன் இணைந்து உருவாக்கினார். 1925 இல் இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று, தன் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார். இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை நிறுவி நிருவகித்தார்.

விபுலாநந்தர் இராமகிருஷ்ணமிஷனுடன் இணைந்து பணிபுரிந்த காலத்தில் கல்லடி - சிவானந்தா ஆண்கள் பாடசாலை ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை, காரைதீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை - இந்துக்கல்லூரி வண்ணை - வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டினார். தான் உருவாக்கிய சிவானந்தா வித்தியாலயத்தில் மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்ற வழிப்படுத்திய தூரநோக்கு சிந்தனையுடையவர். 1926ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி, அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார். இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூற் சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச்சபை என்பனவற்றின் உறுப்பினராகவிருந்து கல்வித்துறைசார் பணிகளைப் புரிந்தார். மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு "கலைச்சொல் அகராதியை" உருவாக்கினார்.

பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சியான பல பணிகளை ஆற்றினார். வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல். பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல். வார இறுதியில் சைவ சமய வகுப்புகளையும், பண்ணிசைப் பயிற்சிகளையும் நடாத்துதல். சமயக் கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல் அவரது புதிய திட்டமாகும். விபுலாநந்தரின் அத்தகைய திட்டம் இன்று செயல் முறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது கல்விப் பணிகள் அனைத்திலும் சமயம்சார் கல்விப் பணிகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

**சமூகப் பணிகள்**

விபுலானந்தர் மக்களை நேசித்தவர். அவர்களுடைய நன்மை தீமைகளில் ஈடுபட்டவர். ஒருமுறை 'கடவுள் நேரில் வந்தால் ...........' என்று பேச்சு எழுந்தபோது, சுவாமி பின்வருமாறு கூறினாராம். "நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது. " இவ்வாறு பிறருக்குப் பணி புரிவதே பெருமின்பம் தருவது என்ற திடசித்தம் கொண்டவர்.

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர். இவர் தன் சொந்த நலன்களைத் துறந்த வேளையிலும் நாட்டு நலனையும், மக்கள் நலனையும், மொழி நலனையும் துறவா திருந்த சிறப்பு போற்றத்தக்கது.அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடைத் திட்டங்களை ஏற்படுத்தினார். விபுலானந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஏழை மாணவர்களினதும், அநாதைக் குழந்தைகளதும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்த சமூகப்பணிகளே என்பர்.

## ஏனைய பணிகள்

இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் பொருந்திய விபுலாநந்தர் கவிதை கள் ஓசைநயம் மிகுந்தவை. "இயலின்றி இசையில்லை; இசையின்றி இயலில்லை" என்பது இவரது கொள்கை. காலத்திற்கேற்ப கவிதை அமைந்துள்ளது. இவரது நூல்களில் செந் தமிழ் நடை கையாளப்பட்டுள்ளது. குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுக நாவலர், கங்கையில் விடுத்த ஓலை என்பவற்றை எழுதியுள்ளார். இவர் உள்ளத்தில் அனுப வித்த உணர்வுகளைக் கவிதையிலே தீட்டிக் காட்டும் திறமை உள்ளவர். ஆசிரியப்பா,

நாடகநூல் - மதங்கசூளாமணி. இசைத்தமிழ் - யாழ்நூல் ஆங்கிலவாணி, பூஞ்சோலைக்காவலன் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் (1936) சொல்லாக்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லவர் என்பதால் 'முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்" எனப் போற்றப்படுகிறார். தமிழ்க் கவிதையின் போக்கிலே புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த பாரதியாரைப் பண்டிதர்கள் தீண்டாதிருந்த வேளையில் பாரதி கழகம் அமைத்து, பாரதி புகழைத் தமிழ் நாட்டில் பரப்பிய பெருமைக்குரியவர்.

தெளிவான, எளிமையான மொழி நடையைக் கையாண்ட சுவாமி விபுலாநந்தர் ஓசைநயத்தாலும் உணர்ச்சி வெளியீட்டுச் சிறப்பாலும் தனது உரைநடையிற்கூட பல இடங்களில் கவிதையின் எல்லையைத் தொட்டவர். இவரது உரைநடை நூல்களாக விஞ்ஞானக் கட்டுரைகள், கலைச்சொற்கள், விஞ்ஞான தீபம் முதலானவற்றையும், மொழிபெயர்ப்பு நூல்களாக சுவாமி விபுலானந்தர் சம்பாசணை, விவேகானந்த தீபம், விவேகானந்தரின் சொற்பொழிவு நூல்கள் முதலானவற்றைக் கூறலாம்.

விபுலாநந்தரின் நூல்கள் பிழையற்ற பதிப்புக்களாக கால, இட விபரங்களுடன் எழுதப் பட்டவை. அவர் தமிழரின் பழம் பெருமைகளைப் பத்திரிகைகளில் கட்டுரை வடிவில் வெளியிட்டார். உதாரணமாக செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி, வேதாந்தகேசரி, இராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத முதலான வெளியீடுகளுக்குப் பத்திராதிபராக விளங்கினார்.

இந்துப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு பல நிலைகளிலும் பங்களிப்புச் செய்த சுவாமி விபுலாநந்தர் 1947 ஜுலை 19 ஆம் நாள் சமாதி அடைந்தார். இவரது சமாதி மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள இராமகிருஷ்ண மடத்தில் உள்ளது.

"முத்தமிழும் பெருஞ்சீர் முதல்வனார் திருக்குமரா
பக்தியுடன் பணிபவர்க்கு பல "கலையும் பாலிக்கும்
சித்தி புத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில்
நிலைத்து நிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ"

(சுவாமி விபுலாநந்தர்)

# 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டு இந்துசமயம்

## 20ம் 21ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் இந்து சமய மரபுகள்

கி.பி.1505ல் போர்த்துக்கேயர்கள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தியதை தொடர்ந்து இலங்கையின் இந்துப் பண்பாட்டில் பல் பின்னடைவுகள் ஏற்படும் 'சூழல் உருவாகியது. அவ்வேளையில் இலங்கையின் மரபு வழி இந்துக்கள் தம்மரபுகள் பாரம்பரியங்களை இழக்கும் நிலை ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்திலேயே இலங்கையில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தமிழினையும் சைவத்தினையும் ஸ்திரப்படுத்தி ஆறுமுகநாவலரும் அவருடைய மரபினரும் சுவாமி விபுலானந்தரும் தமது பணிகளை விரிவுபடுத்தினர். ஐரோப்பியர்கள் சைவதூஷண நூல்களை எழுத நாவலரோ சைவ தூஷண பரிகாரம் எனும் நூல் எழுதி வாதப் பிரதிவாதப் போக்கினை ஆரம்பித்தார். 20ம் நூற்றாண்டின் இலங்கையின் இந்து சமய போக்கிற்கு சைவதூஷண பரிகாரமும் அதனை ஒட்டிய சைவ சமய தருக்க வாதங்களும் தோன்றின.

சைவ சமயம் சார்பாக எதிர்நிலைவாதங்கள் எழுந்தாலும் சைவசித்தாந்த வேதாந்த எதிர்வாதங்களாகவும் அவை விரிவு பெற்றன. இதற்கு இலங்கைப் பேரறிஞர்கள் தமிழகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட சைவசமய உறவுப்பாலம் பிரதானமாது. இதன் முன்னோடியாக நாவலர் விளக்கினார். திருவாவடுதுறை ஆதீனமே ஆறுமுக நாவலருக்கு நாவலர் பட்டத்தை வழங்கியது. நாவலரது பிரசங்கமும் பேச்சு வன்மையும் இதற்கு சிறந்த சான்றுகள். இறுகிய எழுத்துக்களால் ஆன செய்யுள் மரபை கைவிட்டு இளகிய எழுத்துக்களையும் கருத்துக்களையுமுடைய பிரசங்க முறையும், உரை முறையும் வளர்ச்சி பெற்றன. வைதீக சிந்தனைக் கருத்துக்களை சாதாரண மக்களுக்கு விளக்குமுகமாகவே பிரசங்க முறை உரை எழுதி பதிப்பிக்கும் முறை என்பன பின்பற்றப்பட்டன. இவை இலங்கையின் 20ம் நூற்றாண்டின் இந்துப் பண்பாட்டின் புதிய பாதையை விரிவுபடுத்தின. பிரசங்கமுறை உரை எழுதிப் பதிப்பிக்கும் முறை என்பன இந்துக் கல்வி மரபின் விழிப்புணர்விற்கு காரணமாக அமைந்தன.

புராதன இந்து மரபின் பாரம்பரிய செந்நெறிகள் கூடுதலாக காணப்பட வைதீக சமயம் சார் எழுச்சி 20ம் 21ம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றது. சைவ சமய பகுத்தறிவு வாதம் செல்வாக்கடைந்தது சைவ சமயிகள் ஆங்கிலம் கற்கும் சூழல் உருவாகியது. நாவலருடைய சைவாங்கிலப் பாடசாலை இதற்கு சான்றானது. தமிழக தொடர்பிலான பண்பாட்டில் நாவலரியக்கம் என்னும் சைவமரபினர் குழு செயற்படத் தொடங்கியது.

நவீன தொடர்பாடல் முறையில் புதிய ஊடக செல்வாக்கின் அடிப்படையிலும் 20ம் 21ம் நூற்றாண்டின் இந்துப் பண்பாடு வளர்ச்சியடைந்தது. அச்சூடக வருகை, பிரசங்கமாகிய பேச்சூடகம், புராண படனம், சைவ கதாகலாட்சேபமுறை நவீன தொடர்பாடல் முறையாக வளரலாயிற்று. மரபு வழிச் சிந்தனையில் மீள் கட்டுமானத்தை ஏற்படுத்தி புலவர் மரபும், பண்டிதர் மரபும் எழுச்சியடைந்தன. இலங்கையின் இந்து சமய மரபில் முதன்முதலாக நிறுவன மயமாக்கல் செயற்பாடுகளை 20ம் 21ம் நூற்றாண்டுகளில் சைவநெறி பெற்றது சைவ பரிபாலன சபை இதற்கு ஆதாரமானது. இந்து சமய நெறியினை சமூக வாழ்வியலுடன் தொடர்புபடுத்திப் பணி செய்வதும் தற்கால இந்துமதப் போக்கின் இயல்பைச் சுட்டிக் காட்டுகின்றது. பிடியரிசித்திட்டம், கஞ்சித் தொட்டித்தருமம் என்பவை சமுதாய - இந்து சமய தொடர்பை வெளிப்படுத்துவனவாகும். இந்து ஆலயங்களின் சீர்திருத்தம் 21ம் நூற்றாண்டு சைவ சமய வளர்ச்சியின் மற்றொரு பரிணாமமாகும். இந்து சமயப்பண்புகள் சர்வதேசமயமாக்கம் பெற்றமையாகும்.

## சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர் பணிகள்

### அறிமுகம்

20ம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் சைவப்பணியையும், சைவசித்தாந்தப் பணியையும் புரிந்த பெரியார்களுள் ஒருவராகத் திகழ்பவர் அருணாசல தேசிகர். இவர் 1888 முதல் 1969 வரை 81 ஆண்டுகள் மட்டக்களப்பில் வாழ்ந்தவர். இவரின் தாயாரின் பெயர் சின்னப்பிள்ளை அம்மையார். தந்தையாரின் பெயர் காசிநாத சாஸ்திரியார். இவர் மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவு எனும் இடத்தில் பிறந்தார். இவரின் வேறு பெயர்களாக தேசிகமணி, சைவமெய்ப்போதகர், சைவசித்தாந்தமணி என்பன.

### பின்னணி

இவர் சைவசமயத்தில் அதிக ஈடுபாடு காட்டுவதற்கு இவரது குடுப்பப் பின்னணியே முக்கியமான காரணமாக அமைந்திருந்தது. இவரது சிறுபராயத்தில் இருந்தே இவரது தாயார் சைவசமய விரதங்களைப் பக்தியோடு அனுட்டித்து சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் மட்டக்களப்பு நகரிலுள்ள ஆனைப்பந்திப் பிள்ளையாரைச் சென்று வழிபட்டார். இதனால் இவருக்கும் அதில் ஈடுபாடு ஏற்பட்டது.

இவரின் தந்தை சிறந்த சோதிடர். இவர் புராண, இதிகாசக் கதைகளில் ஈடுபாடு கொண்டவர். அத்தோடு இவர் வீட்டிற்கு வரும் கதிர்காம யாத்திரிகர்கள் அடியார்கள், நண்பர் எல்லோருடன் புராண இதிகாசக் கதைகளைப் பகிர்ந்து கொள்பவர். சிறுபராயத்தில் இவற்றைக் கேட்டு வளரும் பேறு அருணாசல தேசிகருக்குக் கிடைத்ததுடன் அது இவரது வாழ்விலும் பிரதிபலித்தது.

மேலும் இவரின் மனைவியின் பெயர் பொன்னம்மா இவர் தேசிகரின் கல்விப்பணிக்கும் சமயபணிக்கும் உதவக்கூடிய சைவ ஆசாரம் உடையவராக விளங்கினார். தேசிகரின் அன்னையும் பிதாவும் முதற்குருவாக அமைந்து வழிநடத்தினர். இவர் ஆரம்பக் கல்வியைத் தந்தையிடம் ஆனைப்பந்திக் கோயிலுடன் தொடர்பு பட்டிருந்த திண்ணைப் பள்ளியில் பெற்றார். அடுத்து மட்டக்களப்பு, புளியந்தீவு மகிழடித் தெருவில் இருந்த சைவப்பள்ளியில் கல்வி கற்றார். தொடர்ந்து மட்டக்களப்பு அரசடியில் இருந்த மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும் கல்வி பயின்றார். இளமையில் இவர் திறமைவாய்ந்த மாணவராக விளங்கினார்.

### மட்டக்களப்பு சுதேச இயக்கமும் அருணாசலதேசிகரும்

அருணாசல தேசிகர் இளமைக்காலத்தில் மட்டக்களப்பு சைவசமய சார்பான சுதேச இயக்கத்தில் பங்காளராக விளங்கினார். ஐரோப்பியர் மட்டக்களப்பை என்று கைப்பற்றினார்களோ அன்றே அங்கு சுதேச இயக்கம் தோற்றம் பெற்றது. இதனால் மட்டக்களப்பு பிரதேசத்தில் சைவசமயம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. அவ்வேளையில் கிறிஸ்தவ சமயத்தவரின் மதமாற்ற நடவடிக்கைகள் தீவிரமடைந்த நிலையில் சைவசமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறான காலகட்டங்களில் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய சைவத்தமிழ் எழுச்சி 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பிலும் பரவத் தொடங்கியது. மேலும் சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கச் சிஷ்யையான அவபாமியா அம்மையார் மட்டக்களப்பிற்குச் சமுகமளித்து ஊர்ஊராக இந்து சமயப் பிரசாரம் செய்தார்.

அதனால் மட்டக்களப்புச் சைவமக்கள் பெரிதும் விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்றனர். மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளின் பயனாக சைவப் பிள்ளைகள் அனைவரும் சைவப் பாடசாலைகளில் படிக்க வேண்டிய அளவு சைவப் பாடசாலைகளை ஊர் எங்கும் அமைக்க வேண்டும் தமது காரியங்களைத் தாமே செய்ய வேண்டும் என்ற குறிக்கோள்களுடன் நிறுவனங்கள் இராமகிருஷ்ண மிசன் என்பவற்றுடன் இணைந்து ஊர்மக்களும் சைவப் பாடசாலைகளைக் கட்டினர். அப்போது பாடசாலைகளை ஆசிரியர்களே கட்டி கல்விப்பணி செய்யும் முறைமை பின்பற்றப்பட்டது. பின்பு அப்பாடசாலைகளை அரசில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு சைவசமய வளர்ச்சி ஏற்பட்டது.

மட்டக்களப்பில் ஏற்பட்ட இவ்வாறான சைவத்தமிழ் எழுச்சியால் பின்வரும் நன்மைகளும் கிடைக்கலாயின. இந்துக்கோயில்கள் பல ஆகம மயமாக்கப்பட்டன.
- இந்துக் கோயில்களில் புராணபடனம் பரவியது
- புதிய நூல்கள் பல வெளிவந்தன.
- கல்விப் பணிகள் இடம்பெற்றன.
- மறைந்து கிடந்த சில பழைய நூல்கள் அச்சிடப்பட்டன.

இந்த முயற்சியில் அருணாசல தேசிகருடன் முதலியார் கா.வ. மார்க்கண்டன்,வித்துவான் ச. பூபாலபிள்ளை, பண்டிதர் மயில்வாகனனார், வித்துவான் அ. சரவணமுத்தர், வித்துவான் வைத்தியலிங்க தேசிகர் முதலானோரும் அடங்குவர். மேற்குறிப்பிட்டவர்களுடன் அக்காலத்தில் மட்டக்களப்பில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரியோர் பலரும் பங்களிப்புச் செய்தனர்.

இனி அருணாசல தேசிகரின் தொழில் சார்ந்த விளக்கத்தினை பார்க்குமிடத்து இவர் மட்டக்களப்பில் அரசடியில் இருந்த மெதடிஸ்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டார். ஆனால் ஆசிரிய பயிற்சி இறுதிப் பரீட்சையில் தோற்றுவதற்கும் சான்றிதழ் பெறுவதற்கும் மதம் மாறவேண்டும் எனும் வற்புறுத்தலுக்குப் பணியாது ஆசிரியர் பயிற்சியை இடைநிறுத்தினார்.

மேலும் நிறைந்த அறிவைப் பெற்றிருந்த இவர் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு, நீண்ட காலம் நிலைத்திருந்தார். அதனால் மட்டக்களப்புப் பிரதேசம் பெருமளவிலான நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. அதன் பின் நற்பிட்டிமுனை சைவப் பாடசாலையில் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர் தொடர்ந்து 1949இல் ஓய்வு பெறும் வரை 40 வருடங்கள் ஆனைப்பந்தி சைவப் பாடசாலையில் தலைமை ஆசியரியராகப் பணியாற்றினார். பின் இவர் படிப்பதையும், படித்ததை மற்றவர்களுக்குக் சொல்லிக் கொடுப்பதையும் தனது கடமையாகக் கொண்டார்.

பாடசாலை நேரம் என்றில்லாது தேவைகளுக்கு ஏற்றதாக சாயங்காலப் பள்ளி, இரவுப்பள்ளி என்பவற்றையும் நடத்தினார். மேலும் வீட்டில் படிக்க வசதி குறைந்த பிள்ளைகளுக்காக இரவுப் பள்ளி நடத்தினார். தம் மாணவர்களை முன்னிலைக்குக் கொண்டுவர ஓய்வையும் பொருட்படுத்தாது செயற்பட்டார். எவ். எக்ஸ். சி. நடராசா அவர்கள் பலவருட காலமாக பழைய முறையில் உபாத்தியாயர் வேலை செய்து பின் புதிய முறையில் தலைமை ஆசிரியர் பதவி ஏற்று உலகும் அரசும் போற்ற உத்தமராய்க் கடமைபரிந்த தேசிகர் என்றும் வ.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் பாடசாலையில் சிறுவர்கள் ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடையையும், இலக்கணபாட நேரத்தில் நன்னூல் சூத்திரங்களையும் மனனம் செய்து ஒப்புவிக்க வேண்டும். தவறினால் தேசிகரின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்றும் கூறியிருப்பவை இவரது தொழிலின் நேர்மையை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் சுவாமி விபுலாநந்தரைப் போல மாணவர்களைச் சைவ சமய நெறியில் வாழப்பழக்குதல் தம் தொழில்களைத் தாமே செய்தல் மற்றவர்களோடு அன்பாக இருத்தல் சிக்கனம், எளிமை முதலான உயர்ந்த பண்புகளை மாணவர் சமூகத்தில் உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

இந்த வகையில் பண்டைய குருகுலக்கல்வி முறையில் குருவுக்குரிய தன்மையினையும் திண்ணைப் பள்ளிக்கூட முறையில் உபாத்தியாயருக்குரிய தன்மைகளையும் நவீன ஆசிரியர்களுக்குரிய தன்மைகைளையும் ஒருங்கே காணக்கூடியவராக தேசிகமணியவர்கள் விளங்கினார்.

**சைவத்தமிழ்ப்புலமை**

இவர் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றி அதில் திறமைச்சித்தி பெற்று சைவப்புலவரானார். இது இவரது சைவப் புலமைக்குச் சான்று. இவருக்குத் தேசிகர் என்ற பட்டத்தைச் சூட்டிப் பெருமைப்படுத்தியவர். இராமகிருஷ்ண சங்கத் துறவி அவிநாசாநந்த அடிகளார் (இத்துறவியார் சுவாமி விபுலானந்தரோடு தொடர்புபட்டு உழைத்தவர்)

இவரது சமய அறிவையும் சேவையையும் பாராட்டி மட்டக்களப்பு தமிழ்க்கலை மன்றம் 1952இல் தேசிகமணி என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 1920ல் சுவாமி விபுலாநந்தரின் அழைப்பின் பேரில் தமிழ் விழாவில் உரையாற்ற தமிழ் நாட்டின் நவநீத கிருஷ்ண பாரதியார் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். அவர் தமது கட்டுரை ஒன்றில் அக்காலத்தில் மட்டக்களப்பில் சைவப் பெரியார்களாகவும், கல்விமான்களாகவும் விளங்கிய சைவப்புலவர் அருணாசல தேசிகர் வித்துவான் பூபாலபிள்ளை, இராசநாயக முதலியார் ஆகியோரின் நட்புக் கிடைத்தமை பற்றி நாம் பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது தேசிகரின் சைவத் தமிழ் புலமைக்கான சான்றாகும்.

**அருணாசல தேசிகரின் செயற்பாடுகள்**

இவர் சைவசித்தாந்த நூலறிவும் மிகுந்த தமிழ்மொழிப்புலமையும் வடமொழிப் புலமையும் உடையவர். இவர் அறிவைப் பெருக்கிக் கொள்வதில் ஈடுபாடு காட்டிய இரு துறைகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று இறக்கும் வரை தேடிக் கற்கும் முயற்சி, மற்றது கற்றவர்களோடு சேர்ந்து அறிவைப் பெருக்குதல். இவர் நூல்களைச் சேகரிப்பதிலும் ஈடுபாடுடையவர். உதாரணம் இவரது வீட்டு நூலகம், நூலகங்களை அமைக்கும் பணிகளில் மற்றவர்களுடன் இணைந்து செயற்பட்டார். உதாரணம் ஆனைப்பந்தி நூல் நிலையம் கோட்ட முனை வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்கருகில் உள்ள நூல் நிலையம் இறுதிக் காலத்தில் மட்டக்களப்பு பொது நூல்நிலையம் இவரின் பொழுதுபோக்கிடமாயிற்று.

**அருணாசல தேசிகரின் பணிகள்**

அருணாசல தேசிகர் சைவசமயத்தை வளர்ப்பதற்காகப் பல்வேறு செயன்முறைகளைக் கையாண்டார். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

- சொற்பொழிவுகள் ஆற்றுதல்
- பிரசங்கம்செய்தல்
- பிரசங்கம் செய்வதற்கான மாணவர் பரம்பரையை உருவாக்குதல்
- சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- சமயப் போதனைகள் செய்தல்
- சைவசமய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் எழுதுதல்
- சைவசமயக் கட்டுரை, ஆய்வுக்கட்டுரை எழுதுதல்
- வேறுபட்ட வசன நடைகளைக் கையாண்டு எழுதுதல்
- செய்யுள் இயற்றுதல்
- கோயில் தொண்டு செய்தல்.

**சொற்பொழிவுகள் ஆற்றுதல்.**

இவர் மட்டக்களப்பில் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். இவரது சொற்பொழிவுகள் மட்டக்களப்பிலுள்ள சைவக் கோயில்களில் எல்லாம் இடம்பெற்றன. இவர் தமது 15வது வயதிலிருந்து சுமார் 65 ஆண்டுகளுக்கு மேல் இப்பணியில் ஈடுபட்டார். இவருடைய திறமைகளில் ஒன்று எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் அதில் ஆழ்ந்து பேசுகின்ற இயல்பு இது இவரது சொற்பொழிவுகளுக்கு மெருகூட்டியது.

மேலும் இவரது சொற்பொழிவுகள் வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டு இருந்தன. தேசிகமணி அவர்கள் பொது மக்களைக் கவரக்கூடிய இனிய எளிய தமிழில் நகைச்சுவை ததும்ப உணர்ச்சியுடன் பேசுவார். ஆனால் இவர் முதலில் சொற்பொழிவாற்றி மக்களுள்ளத்தைத் தட்டியெழுப்பித் தகுதிபெறச் செய்து, வித்துவான் சரவணமுத்தன் தமது பிரசங்கத்தைத் தொடங்குவார். மேலும் இவர் சைவசமயத்தைக் காத்து வளர்த்து வந்த இவர் ஒரு சைவசமயி அகவாழ்விலும் புறவாழ்விலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையே சொற்பொழிவுகளுக்குப் பொருளாகக் கொண்டார்.

மட்டக்களப்பில் ஆகம வழிபாட்டு முறைக்கு விளக்கம் கொடுத்தல், கோயில் அமைப்பு, நித்திய நைமித்திய பூசைமுறைகள், வழிபாட்டு முறைகள் என்பவை பற்றி விளக்குதல் சைவ சமய ஆசாரங்களைப் பேணுதல் ஒழுக்கத்தோடு வாழுதல் மற்றவர்கள் மீது அன்பு காட்டுதல், சமய நூல்களைக் கற்று அறிவு பெறுதல் என்பவற்றை வலியுறுத்தும் வகையிலும் இவரது சமயச் சொற்பொழிவுகள் அமைந்தன.இவற்றைக் கதைகள் மூலமும் மேற்கோள் காட்டியும் பாடல்கள் மூலமும் எடுத்துரைத்தார்.

**பிரசங்கம் செய்தல்.**

இவர் மட்டக்களப்பில் சைவசமயத்தை நிலைநாட்ட பிரசங்கங்கள் மிக அவசியமானவை எனக் கருதினார். அதனால் ஓய்வொழிவின்றி சுவாமி விபுலாநந்தர் சரவணமுந்தன் என்போருடன் ஊர்கள் தோறும் சென்று சைவசமயப் பிரசங்கம் செய்வதில் ஈடுபட்டார். அத்தோடு மட்டக்களப்பு மக்களிடையே ஆலய வழிபாட்டின் அவசியம், சைவப் பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் என்பவற்றைப் பிரசங்கங்கள் மூலம் தெளிவுபடுத்தினார். ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் தவறாது சைவப் பிரசங்கம் செய்து வந்தார்.

**பிரசங்கம் செய்வதற்கான மாணவர் பரம்பரையை உருவாக்குதல்**

சமயப் பிரசங்கம் செய்யும் பணியில் ஈடுபட்டதோடு அப்பணியில் ஈடுபடக்கூடியவர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவித்தார். அவர்களில் திரு.சீ.நாகையா ஆசிரியர், திரு.வ.சித்திவிநாயகம் ஆசிரியர், பண்டிதர் த.கிருஷ்ணபிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கி சைவப்பணிபுரிந்தனர்.

**சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்ககுல்**

சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதிலும் அருணாசல தேசிகர் ஈடுபட்டார். அவற்றில் பேச்சாளர் ஒருவர் வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். தமிழ் இலக்கியப் பரப்பில் உள்ள அருட்பாடல்கள் அறநெறிப்பாடல்கள் என்பவற்றை பேச்சாளர் மனனம் செய்திருக்க வேண்டும். இதற்காக இத்தகைய பாடல்களில் ஒரு பகுதியைத் தமது நூல்களிலும் வெளியிட்டார். சைவப் பேச்சாளர் இதிகாச, புராணக்கதைகளைத் தெரிந்திருப்பதிலும் பயன்படுத்துவதிலும் அக்கறை காட்ட வேண்டும் இந்த ஆலோசனைகளைத் தமது வாழ்விலும் கடைப்பிடித்தார்.

**சமயப் போதனைகள் செய்தல்.**

இவர் சைவசமய போதனைகள் மூலம் சைவசித்தாந்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் விளக்கிக் கூறினார். மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதிகளை நல்வழிப்படுத்துவதற்காக அங்கு அடிக்கடி சென்று சமயப் போதனைகள் செய்து வந்தார்.

**சைவசமய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் எழுதுதல்**

இவர் தமது இளமைக்காலத்தில் ஆசிரியப்பணியுடன் சமயப்பணிகளிலும் ஈடுபட்டார். அத்துடன் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் ஈடுபட்டதன் காரணமாக எழுத்துப் பணிகளில் ஈடுபடவில்லை. ஆனால் அறுபது வயதுக்குப் பின்பே நூல்களை எழுதுவதில் ஈடுபட்டார். இவரது நூல்களில் சமய விடயங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் சேர்த்து எழுதப்பட்டவையாக உள்ளன. மேலும் சைவ மாணவர்கள் கற்பதற்காக இலகு தமிழிலும் சமய நோக்கிலும் பன்னிரெண்டுக்கு மேற்பட்ட சமய நூல்களை எழுதி உள்ளார். அவை வருமாறு

சைவசமய ஆரம்ப போதினி - 1962
சைவசமய இளைஞர் போதினி - 1958
இந்து மாணவர் பக்திப்பாடல் பாமணிமாலை - 1961
இந்து சமய மாத மகத்துவ மான்மியம் - 1960
சைவ இலக்கிய கதாமஞ்சரி - 1964
சைவசமய சிந்தாமணி - 1960
சித்தாந்த சிரோண்மணி
மெய்ஞ்ஞானதீபம் ஷர்வஞான கோத்தராகம சார சங்கிரகம்
அருட்பாத்திரட்டும் அரும் பொருட்பாக்களும்
விநாயக மகத்துவ நுட்பமும் புளிய நகர்
ஸ்ரீ.சித்தி விக்னேஸ்வர ஆலய மான்மியமும் - 1968
முருகன் மகத்துவ நுட்பம்

இப்பன்னிரு நூல்களையும் சேர்த்து சைவசமயக் களஞ்சியம் என பெயர்சூட்டப்பட்டுள்ளது. சைவ சமயத்தில் சிறந்த அறிவைப் பெற இத் தொகுதியைக் கற்றல் அவசியம். இவரது முதல் மூன்று நூல்களும் மாணவர்களுக்குச் சைவ அறிவை ஊட்டுவதற்காக எழுதப்பட்டவை.

சைவசமய ஆரம்ப போதினி - சிறிய வகுப்பு மாணவர்களுக்கானது
சைவசமய இளைஞர் போதினி - மத்திய தர வகுப்பு மாணவர்களுக்கானது.

இவ்விரு நூல்களும் 1952குப் பின்பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டவை. இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணிமாலை - முதலாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு வரை சைவசமய மாணவர் கற்க வேண்டிய பக்திப்பாடல்களின் தொகுப்பாக உள்ளது. இது மாணவரிடையே சைவசமயம் சார்ந்த பாடல்களைப் பாடவும் பண்ணோடு ஓதவும் வழிகாட்டியது.
சைவசமய சிந்தாமணி - இந்நூல் சாதாரண மக்கள் முதல் பல்கலைக்கழக ஆய்வாளர் வரை பயன்படுத்தத்தக்கது.

**சைவசமயக் கட்டுரை, ஆய்வுக் கட்டுரை எழுதுதல்.**
இவரது கட்டுரைகளில் சில வேலனின் சுதேச நாட்டியம் எனும் பத்திரிகையில் வெளிவந்தன. மேலும் அடிகளார் படிவ மலரில் (1969) கட்டுரை எழுதியுள்ளார். எப்.எக்ஸ்.சீ.நடராசாவின் எண்ணெயச் சிந்து நூலுக்கு இவர் எழுதிய முன்னுரை ஆய்வுத்தன்மை உடையது. இவர் 1952ல் எழுதிய ஆய்வுக்கட்டுரையும் குறிப்பிடத்தக்கது.

**வேறுபட்ட வசன நடைகளைக் கையாண்டு எழுதுதல்**

தேசிக மணி அவர்கள் சைவசமய விடயங்களை எழுதும் போது வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையைக் கையாண்டார். அது மட்டுமன்றி சைவசமய சிந்தாமணி எனும் நூலில் தர்க்கரீதியாக எழுதுகின்ற போக்கைக் கையாண்டார். மேலும் இவர் செய்யுள் இயற்றுவதில் ஈடுபாடு கொண்டவர். இவரது செய்யுள்கள் எளிமையும் யாப்பமைப்பும் கொண்டவையாகும்.

**கோயில் தொண்டுகள் செய்தல்.**

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த சைவக் கோயில்கள் எழுச்சிபெறப் பாடுபட்டவர். அக்கோயில்களின் வளர்ச்சிக்காக ஆலோசனை வழங்கியமை ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில் நிருவாகி, ஆலோசகர் எனப் பணிகளாற்றியமை என்பன குறிப்பிடத்தக்கவை. மேலும் இவர் ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலுள் சிவாலயம் அமைத்துக் கொடுத்தார். என்றும் மரண சாசனத்தின் மூலம் தான் குடியிருந்த வீட்டையும் ஆனைப்பந்திப்பிள்ளையாருக்கு அர்ப்பணித்தவர்.

**தேசிகமணியும் அவரது நண்பர்களும்**

தேசிக மணியின் இளமைக்காலத்தில் இவருக்கு முன்னோடியாக இருந்தவர் வித்துவான் ச.பூபாலபிள்ளை. மேலும் வித்துவான் அ.சரவணமுத்தன், சுவாமிதாச மயில்வாகனனார் என்பவர்கள் இவரின் கல்வி, இலக்கியம், சமயம் சார்ந்த நண்பர்களாவர். அத்துடன் இவரும் வித்துவான் சரவணமுத்தனும் மயில்வாகனனாரும் மட்டக்களப்பின் அன்றைய சமய கல்விச் சூழ்நிலையில் அத்துறைகளில் பணிபுரிவதற்கு இல்லறத்திலும் துறவறமே சிறந்தது என கருதியவர்கள் காலப்போக்கில் மயில்வாகனனார் மாத்திரம் துறவு பூண்டு சுவாமி விபுலானந்தராக, மற்றைய இருவரும் இல்லறத்தவராயினர்.

**தேசிகமணியும் சுவாமி விபுலாநந்தரும்**

அருணாசல தேசிகர் 1910க்கு முன்பு இருந்தே சுவாமி விபுலாநந்தருடன் (மயில்வாகனனார்) தொடர்பு கொண்டிருந்தார். விபுலாநந்தருடன் இணைந்து தமிழையும் சைவத்தையும் கற்றார். மேலும் இவர் தமது 47வது வயதில் சுவாமி விபுலாநந்தர் நடத்திய யாப்பருக்கலக் காரிகை வகுப்பில் கற்றார். நல்ல பல கருத்துக்களை சுவாமி விபுலானந்தரிடம் பெற்றுக் கொள்ளும் அவாவினால் தேசிகமணி விபுலாநந்த அடிகளாருடன் கால்நடைப் பயணங்கள் செய்வதை விரும்பினார்.

ஆனைப்பந்தி பாடசாலையின் தலைமை ஆசிரியராக அருணாசல தேசிகர் இருந்த காலத்தில் அடிகளாரும் மற்றைய இராமகிருஷ்ண சங்கத் துறவிகளும் அப்பாடசாலை அறையிலேயே வசித்தனர். அவர்களை அருணாசல தேசிகரின் குடும்பம் உபசரித்தது. சுவாமி விபுலாநந்தரின் தளபதிகள் எனப் போற்றப்படும் அளவுக்கு வித்துவான் அ. சரவணமுத்தரும் அருணாசலதேசிகரும் அடிகளாருக்கு உறுதுணையாக இருந்தனர். சைவசமயப் பற்று மிக்க அருணாசல தேசிகர் சைவமக்களிடையே காணப்பட்ட அஞ்ஞானத்தைப் போக்கவும், சமயத்தின் பேரால் மக்கள் மேற்கொண்ட மூடநம்பிக்கைகளை அகற்றவும் சுவாமி விபுலாநந்தருடன் இணைந்து பணியாற்றினார். அன்றைய சூழ்நிலையில் புதிய பாடசாலைகள் தொடங்குவதிலும், சமயம் வளர்ப்பதிலும் உறுதுணையாக இருந்தார்.

மட்டக்களப்பில் விபுலாநந்த அடிகளாரின் கல்விப்பணி அக்காலத்தில் வெற்றி அடைய வித்துவான் அ.சரவணமுத்தரும் அருணாசலதேசிகரும் முக்கியமான காரணர் ஆயினர். மேலும் அண்ணாமலை, கொழும்பு ஆகிய இடங்களில் அடிகளார் பேராசிரியராக பணிபுரிந்த போது அவரை நீண்டகாலம் பிரிந்திருக்க முடியாத தேசிகமணி அவ்விடங்களுக்குச் சென்று சந்தித்து வந்தார். அடிகளார் வெளியிடங்களில் வாழ்ந்த காலத்தில் தேசிகமணிக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார்.

மேலும் சுவாமி விபுலாநந்தர் கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க பொது முகாமையாளர் பணியை ஏற்றபோது மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயமும் ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிசன் பாடசாலையும் உயர்தரப்பாடசாலைகளாகவும், சிவானந்தாவுக்கு அருகில் கல்லடி உப்போடையில் மாணவரில்லம் நிறுவப்படவும் சுவாமிகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தோரில் அருணாசலதேசிகரும் ஒருவர். ஏனையோர் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, கே.கணபதிப்பிள்ளை, வி.நல்லையா, எஸ் அம்பலவாணதேசிகர் ஆகியோர்.

## அருணாசல தேசிகரும் இராமகிருஷ்ண சங்கமும்

மட்டக்களப்பில் இராமகிருஷ்ண சங்கக்கிளை சுவாமி விபுலாநந்த அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்டது முதல் தேசிகமணி அதனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். அடிகளாரின் மறைவின் பின்பும் அந்த உறவு தொடர்ந்தது. அங்கிருந்த இராமகிருஷ்ண சங்கத்துறவிகளான சுவாமி அபினாசானந்த அடிகளார், சுவாமி நடராசானந்த அடிகளார், சுவாமி ஜீவானந்த அடிகளார் ஆகியோருடன் தொடர்பைக் கொண்டிருந்தார். இராமகிருஷ்ண சங்கமும் அதன் குருகுலங்களும் ஆண்டுதோறும் வட்டியைக் பெறக்கூடியதாக தேசிய மணியவர்கள் ஒரு தொகைப் பணத்தை நிலையான வைப்பில் இட்டிருந்தார். தேசிக மணியின் இறுதிக் காலத்தில் இராமகிருஷ்ண சங்கத்தின் பேருதவி இவருக்கு கிடைத்தது. தேசிகமணியின் ஈமக்கிரியைகள் ஒழுங்காக நடைபெற சுவாமி ஜீவானந்த அடிகளார் ஆவன செய்தார்.

## சமயக் கொள்கை

அருணாசலதேசிகர் இராமகிருஷ்ண சங்கத்தை ஆதரித்தாலும் இவர் தீவிர சைவபக்தர். இவருக்கு வேதாந்த சித்தாந்த வித்தியாசமில்லை. இவர் ஆகம வழிபாட்டு முறையினை ஆதரித்தார். இவரின் பேச்சு, எழுத்து என்பன அவற்றையே வலியுறுத்தின. ஆயினும் சிறு தெய்வ வழிபாட்டை வெறுத்து ஒதுக்கவில்லை. சிறு தெய்வ வழிபாட்டிடங்களுக்குச் சென்றாலும் ஆகம முறை சார்பாகவே பேசுவது இவரது வழக்கம்.

இவ்வாறாக சைவப்புலவர் கா.அருணாசலதேசிகரின் வாழ்வு சமய வாழ்வாக அமைந்தது. இவர் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் சமய, சமூகப் பணிகளுக்காகவே அர்ப்பணித்தவர். இவரது சேவை மட்டக்களப்பிலும் அதற்கு வெளியேயும் பயன் கொடுப்பனவாக அமைந்தன. மட்டக்களப்பு மாவட்டம் மறக்க முடியாத மாமனிதர் இவர். தமக்குப் பின்னரும் மட்டக்களப்பில் பல சைவசமய பெரியார்களும் தமிழறிஞர்களும் தோன்றுவதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை.

## காசிவாசி செந்திநாதையர் பணிகள்

இலங்கையில் 19ம் நூற்றாண்டு சைவநெறிக்கு காவலராக விளங்கியோர் பலராவர் ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து இலங்கை இந்திய தொடர்பில் சைவப்பணி செய்தவர்களில் காசிவாசி செந்தில் நாதையரும் அடங்குவர். இவர் ஐயர் பரம்பரையில் 02.10.1848ல் யாழ் குப்பிளான் கிராமத்தில் பிறந்தார். தந்தை சிறந்த ஐயர் மரபில் அவதாரம் செய்தமையினால் இளமை முதல் சமஸ்கிருத மொழிப் புலமையுடையவராக விளங்கினார். இணுவசின் நடராச ஐயரிடம் இளமைக் காலக் குருகுலக் கல்வியைத் தொடர்ந்தார். நாவலரைப் போலவே யாழ் மத்திய கல்லூரியில் சென்று சேர்ந்து ஆங்கிலப் புலமையையும் வளர்த்துக் கொண்டார். தமது இருபதாவது வயதில் ஆங்கிலம் கற்றலை விட்டு நல்லூர் சம்பந்தப் புலவரிடம் தமிழும் இலக்கண இலக்கியங்களையும் கற்று சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் பாண்டித்தியம் உடையவராக விளங்கினார். அதனால் நாவலர் ஸ்தாபித்த வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், நாவலர் ஸ்தாபித்த சைவாங்கிலப் பாடசாலையிலும் சமஸ்கிருதம் தமிழ், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

செந்திநாதையரின் சைவசமயத்திருப்பணிகள் நாவலர் பணிகளுடன் இணைந்ததாகவே நடைபெற்றன. ஆறுமுகநாவலரும் காசிவாசிசெந்தில் நாதையரும் சைவாங்கிலப் பாடசாலையில் ஒன்றாக சமயக் கல்வியிலும் பிரசங்கத்திலும் ஈடுபட்டனர். தனது தந்தையாருடன் தமிழக திருத்தலங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்து தேவார திருவாசக பாராயணப்புலமை உடையவரானார். அதனாலேயே தேவாரம், வேதசாரம் என்னும் பெருநூல்கள் எழுதும் வாய்ப்பையும் இறை அருளையும் பெற்றார். தமிழ்நாட்டுத் தலயாத்திரையில் கவரப்பட்டு காசி திருத்தலத்தில் சிலகாலம் தங்கியிருந்ததனாலே காசிவாசி செந்திநாதையர் என்னும் பெயரையும் பெற்றுக்கொண்டார். நாவலருடைய விவிலிய குற்சிதம் என்னும் நூலை பதிப்பித்ததனால் பதிப்பாசிரியர் என்ற பெருமையையும் பெற்றார்.

19ஆம் நூற்றாண்டு இலங்கையில் சைவசமய மறுமலர்ச்சியுடன் தொடர்பான எல்லா விடயங்களிலும் காசிவாசி செந்தில் நாதையரின் பங்களிப்பு தொடர்புபடுகின்றது. பிறசமய கண்டனம், அச்சகம் அமைத்தல் நூல் பதிப்பித்தல், நூல்களுக்கு உரை எழுதுதல் என்பன இவரால் மேற்கொள்ளப்பட்ட சைவசமயச் சார்பான பணிகள் ஆகும். 1872 - 1879 வரை இந்தியாவில் தங்கியிருந்து இந்து சமய பிரசங்கங்களில் ஈடுபட்டார். அந்த நூல்களுக்கு உரை எழுதும் போதும் அவ்வுரையில் அந்நூல்களுக்கு கருத்துக்களை சைவசித்தாந்த கொள்கையுடன் தொடர்பு படுத்தி வெளியிட்டார்.

இவர் வாழ்ந்த காலத்தில் வெளியிடப்பட்ட இந்து சாதனம் என்னும் அச்சூடகத்திலே “வைதீக சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயம்” என்னும் கருத்தில் கட்டுரைகளை எழுதினார். சைவசித்தாந்த தத்துவத்தை தத்துவ நெறியாக மட்டுமன்றி சமய நெறியாகவும் பார்க்கும் பார்வை இவரிடம் காணப்பட்டது. தன்னுடைய பிரம சூத்திர உரையில் சைவநெறியுடன் தொடர்பு படுத்தி தத்துவ நெறியாக்கம் செய்தார். உபநிடதம், பிரமசூத்திரம், வேதாந்த சிந்தனை என்பவற்றை சைவ நெறியுடன் தொடர்புபடுத்தி விரிவுரை விளக்கம் செய்ததன் பெறுபேறாகவே சைவ வேதாந்தம் என்னும் கொள்கை தோற்றம் பெற்றது. இவருடைய தத்துவார்த்தப் படைப்புக்களிலே சைவ வேதாந்தம் என்னும் நூலே பிரதானமானது.

வேதாந்தம், சைவ சித்தாந்தம் ஆகிய இரு மரபுகளையும் இணைத்து நோக்கும் ஒரு கொள்கையாளராக காசிவாசி செந்திநாதையரை நோக்க முடிகின்றது. கி.பி.1880களைத் தொடர்ந்து கொழும்பில் வைதீக சைவசித்தாந்த பொருள் பற்றி உபதேசங்களைச் செய்து வந்தார். அதனைத் தொடர்ந்து கதிர்காம யாத்திரை மேற்கொண்டு கதிர்காமத் திருத்தலத்திலே 12 நாட்கள் கந்தபுராணப் பாடல்களை பக்திப் பரவசத்துடன் பாடிமுடித்தார். 1883ல் மீண்டும் தமிழ் நாட்டிற்குச் சென்று “சுஜனமே மனோரஞ்சனி” என்னும் இந்து சமய சஞ்சிகைக்கு பத்திராதிபராகப் பணி செய்தார்.

இதன் மூலம் நூலாசிரியராக , வைதீக ஆசிரியராக, சைவப் பிரசங்கியாக, உபதேசமணியாக மொழிபெயர்பாளராகப் பல வகிபாகங்களைப் பெற்று தெய்வீகப் பணி செய்தமையை நோக்க முடிகின்றது.

காசிவாசி செந்திநாதையர் சைவசித்தாந்த வாதம், பிரதிவாத செயற்பாட்டினூடாக தனது சமயதத்துவப் பணிகளை முன்னெடுத்துச் சென்றார். இவருடைய சைவ சமயச் சார்பான ஆக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். தேவாரம் வேதசாரம், கந்தபுராண நவநீதம், பரமசூத்திர நீலகண்டாலாசிய மொழிபெயர்ப்பு, சிவஞான போதவசனாலங்காரதீபம், ஞானரத்னா வளி என்னும் நூல்களை எழுதி ஈழத்துச் சைவசித்தாந்த மரபிற்கு பங்களிப்புச் செய்தார். இவற்றுடன் பிரம சூத்திர உபக்கிரம மணிகைக் கருத்தை சைவசித்தாந்தப் பொருளுடன் இணைத்துப் பரப்பினார் வேதாந்த சித்தாந்த சமரச கொள்கையை இந்து மெய்யியலில் உருவாக்கிய பெருமை இவரையே சாரும். வேதம் உபநிடதம், பிரம சூத்திரம் என்பவற்றின் சாராம்சம் சைவசித்தாந்தமே என்பது காசிவாசி செந்திநாதையரின் ஆதார சுருதி வாசகமாக அமைந்தது. இதன் மூலம் ‘‘வேதாந்த தெளிவாம் சைவசித்தாந்தம்’’ என்னும் கொள்கையைப் இலங்கை சைவசித்தாந்த மரபில் பரப்பிய ஒருவராக காசிவாசியை நோக்க முடிகின்றது.

கந்த புராண நவநீதம் என்னும் நூலில் கந்த புராண சாரம் சைவசித்தாந்தமே என்னும் கருத்தைப் பிரதிபலிக்கச் செய்தார். யாழ்ப்பாண கலாசாரம் கந்த புராண கலாசாரமே என்னும் கருத்தைப் பரப்பிய முன்னோடிகளில இவரும் ஒருவர். தென்னிந்திய கலாச்சாரத்திலும் யாழ்ப்பாணக் கலாசாரத்திலும் கந்த புராண வாழ்வியல் சைவநெறியுடனும் சைவசித்தாந்த நெறியுடனும் தொடர்புடையது. சைவவேதாந்தம் என்னும் இவரது நூல் 13 அத்தியாயங்களை உடையது. மாயாவாத வேதாந்தத்தை கண்டித்து வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்னும் பொருளை இந்நூல் வலியுறுத்துகின்றது. அகச் சமயக் கொள்கையில இருந்து அகப்புறச் சமயத்தையும் புறச் சமயங்களையும் கண்டனம் செய்த பெருமை இவரைச் சேரும்.

புறச்சமய கண்டன முறைகள் சைவசமய, சைவசித்தாந்த பாரம்பரியத்தில் மிகப்பரவலாக வளர்ச்சியடைந்த வடிவங்களை அவதானிக்க முடியும். இதன் மூலமாக சைவசமயிகளின் கண்டன முறை, அறிவு நெறி, தத்துவ ஆளுமை என்பவற்றை விரிவாக நோக்க முடிகின்றது. தேவாரத் திருமுறைப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு பிரசங்கம் செய்வது செந்திநாதையரது பணிகளுள் தலையானதாகும். ‘‘ஞானத்தின் திருஉருவை’’ என்னும் பெரியபுராணப் பாடலை முன்வைத்து உபதேசமும் பிரசங்கமும் செய்தார் தமிழ்நாட்டில் ‘‘சுஜன மனோரஞ்சனி’’ என்றும் பத்திரிகையில் இவரது பிரசங்கங்கள் வெளிவந்தன. பெரிய புராணப் பாடல்களை முன்வைத்து சைவ உபநியாசம் செய்வது இவரது பணிகளில் தலையானதாக அமைந்தது.

காசிவாசி அவர்களால் வெளியிடப்பட்ட ஞான போத விளக்க சூறாவளி என்னும் நூல் பெரியபுராண சைவநெறியையும் சைவசித்தாந்தத்தையும் மேலும் விபரித்து கூறும் ஓர் படைப்பாக அமைந்தது. சிவஞான சித்தியார் உரை பல காணப்பட்டாலும் காசிவாசி செந்திநாதையர் ஞானப் பிரகாசருரையையே தாரக மந்திரமாகக் கொண்டார். அத்துடன் தனது உபநியா சங்களை விளக்க அமிர்த போதினி என்னும் வார வெளியீட்டையும் தமிழ்நாட்டில் நடாத்தினார்.

1888ல் கிறிஸ்தவ பாதிரிமார் ‘‘சிவனுமத்தேவனா’’ என்னும் தலைப்பில் பிரசுரமொன்றை வெளியிட காசிவாசியவர்கள் ‘‘சிவனுத்தேவனா’’ என்னம் தீயநாவினுக்கு ஆப்பு’’ என்னும் கண்டன நூலையும் வெளியிட்டார் இவ்விரு கண்டனங்களும் ‘‘கிறிஸ்து மத கானன குடாரி’’ என்னும் பெயருடன் வெளியிடப்பட்டது.

அந்த நூலின் பெயரே இவரது பட்டமாகவும் வழங்கப்பட்டது. இவற்றை கருத்திற் கொண்டே சிவாக்கிரக யோக ஞான சிவாச்சாரியார் ஆதீனம் இவரை சித்தாந்த சிகாமணி என்னும் விருதை கொடுத்து கௌரவித்தது.

தமிழ் நாட்டிலே திருப்பரங்குன்றத்துக்கு அண்மையிலே வைதீக சுத்தாத்துவித சைவசித்தாந்த வித்தியாசாலை ஒன்றை அமைத்து சமஸ்கிருதம், தமிழ், ஆங்கில மொழிகளில் சைவசித்தாந்த பொருளை உபதேசம் செய்தார். இவரது எழுத்துக்கள் ''திருப்பாசுரம்'' ''திருச்சிற்றம்பலம்'' கடவுள் என்னும் தலைப்புக்களில் வெளியிடப்பட்டன. இவரது கண்டன கண்டனம் மகாவுக்கிர வீரபத்திரா ஸ்திரம் என்னும் நூல்கள் கண்டனத்துக்கு கண்டனமாகவும் அமைந்துள்ளன. ஈழத்து சைவசித்தாந்த மரபில் கண்டன முறையில் தம் கொள்கைகளைப் பரப்பிய ஒருவராக இவரைக் குறிப்பிடலாம்.

## கைலாசநாதக் குருக்கள் பணிகள்

இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் இந்தியாவில் பூனே பல்கலைக்கழகத்திலும் ஆங்கில மொழி மூலமாக சமஸ்கிருத மொழியைக் கற்றுத் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை எமது நாட்டில் சிறப்பாக யாழ்ப்பாண மாணவர்களுக்கென்றே தம்மை அர்ப்பணித்து உலகளாவிய நிலையில் பிரசித்தி பெற்று விளங்கிய பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் 15.08.1921ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்களுக்கும் சுந்தரம்மாள் என்பவருக்கும் மகனாக யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தார்.

பேராசிரியர் குருக்கள் அவர்கள் பிறப்பிலே அந்தணர். ஆபஸ்தம்ப சூத்திரத்தைப் பின்பற்றியவர். பரந்த சீடர் மரபுகளை உலகில் பல பாகங்களிலும் நிலை நிறுத்தி முத்திரை பதித்தவர். சமஸ்கிருத மொழியின் ஆரம்பக்கல்வியை தமது தந்தையாரிடம் பெற்றதோடு ஆகமக் கல்வியை தமது தந்தையின் மூலம் உரிய நியமங்களோடு கற்றுக் கொண்டார். சமஸ்கிருத மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்று விளங்கினார். சமஸ்கிருத மொழியின் இலக்கியச் சுவையையும் மொழியின் சிறப்பையும் அவசியத்தையும் உணர்ந்து அதற்குரிய அடித்தளத்தை பிறமொழிகளுடன் ஒப்பீட்டடிப்படையில் அறிவதற்கு ஆவலுடையவராக ஆங்கிலம், இலத்தீன், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இலங்கையின் இன்டர் மீடியா பரீட்சையில் 1943ல் சித்தியடைந்தார்.

உயர் படிப்புக்காக கொழும்பு (இலங்கைப்) பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம், தமிழ், பாளி ஆகிய பாடங்களை முதலாமாண்டுக் கலைக் தேர்வுக்காகக் கற்று தேர்ச்சி பெற்றார். தமிழை உபபாடமாகக் கொண்டு சமஸ்கிருத மொழியை சிறப்புக்கலைமாணிப் பட்டத்திற்காக கற்று இரண்டாந்தரம் உயர்பிரிவில் சித்தியடைந்தார். சமஸ்கிருத தொழில் முதுகலைமாணிப் பரீட்சையில் 1949ல் சித்தியடைந்தார். இலண்டன் பல்கலைக் கழகத்தால் கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கென்று அனுப்பி வைக்கப்பட்ட ஜேர்மனிய நாட்டு முதல் சமஸ்கிருத பேராசிரியை Betty Haiman அவர்களின் வழிகாட்டலில் கல்வி கற்ற பெருமை தனித்துவமானது. 1953ஆம் ஆண்டில் பேராதனை இலங்கைப் பல்கலைகழகத்தில் சமஸ்கிருத துறைக்கு நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

சமஸ்கிருதமொழியில் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக இந்தியா பூனே பல்கலைக்கழகத்திற்கு சென்று பேராசிரியர் கலாநிதி R.N.தண்டேகாக் அவர்களின் வழிகாட்டலில் ஈராண்டுகளாக புராண இதிகாச கால சைவசமயமும் அதன் இணைநெறிகளும் சிறப்பாக தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் நிலவும் சமயக்கிரியை மரபுகளுடன் தொடர்புபடுத்திய ஆய்வினைச் செய்து கலாநிதிப் பட்டத்தினை வழங்கியது. கைலாசநாதக்குருக்கள், சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் கனவாக விளங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மொழிகள் மற்றும் கலாசார கற்கை நெறித் துறையின் பதிற் தலைவராக நியமனம் பெற்று 1975இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இந்து நாகரிகத் துறையின் முதற் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் நியமனம் பெற்றார்.

இந்து நாகரிகத் துறையின் புதிய நிலையத்தின் உருவாக்கத்திற்காக உழைத்த பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் யாழ்.பல்கலைக்கழகத்திலேயே இத்துறையினூடாக முதல் கலைமாணிப் பட்டதாரியையும் முதற் கலாநிதிப் பட்டதாரியையும் குறுகிய காலத்தில் உருவாக்கிய பெருமை தனித்துவமானது.

இந்து நாகரிகத் துறையின் பொது, சிறப்புக்கலைக் கற்கைநெறிகளோடு பட்டபின் படிப்பின் டிப்ளோமா கற்கைநெறியில் இந்து நாகரிகத்தையும் ஒரு பாடமாகக் கற்பிப்பதற்குரிய பாடத்திட்டத்தை உருவாக்கிய பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், இராமநாதன் நுண்கலைக்கழக நுண்கலைத்துறையின் தலைவராகவும் விளங்கி அக்கற்கை நெறிகளை வளம்படுத்தினார். இந்து நாகரிக பாடச் சான்றிதழ்க் கற்கை நெறியினை முதன்முதலாக அறிமுகப்படுத்திய பெருமை இவரைச்சாரும்.

இதன் மூலம் இந்துநாகரிகம் கற்றவர்கள் மட்டுமே இந்துசமய ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். தாம் ஆய்விற்கென பயன்படுத்தி வந்த சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அமைந்தபல நூல்களையும் யாழ் பல்கலைக்கழக நூல் நிலையத்திற்கு வழங்கிய பேராசிரியர் குருக்கள் 1986இல் பல்கலைக்கழக 39 வருட கால ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுத் தொடர்ந்து 1987 -1989 வரையான காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் இந்து நாகரிகப் பேராசிரியராக விளங்கினார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை, சமஸ்கிருதத்துறை, உயர்பட்ட ஆய்வுகளுக்கும் இலங்கையில் விளங்கும் பல்கலைக்கழகங்களினது சமஸ்கிருத மொழியைப் பற்றிய உயர்பட்ட ஆய்வுகளுக்கும் ஆலோசகராகவும் பரீட்சகராகவும் இருந்து வாழ்நாட் பேராசிரியர் என்ற தகுதியைப் பெற்றுள்ளார். இலங்கை கல்வி உயர்கல்வி அமைச்சின் இந்துசமய பாட ஆலோசனைக் குழுவில் 1976- 1985 வரையில் அங்கம் வகித்த பேராசிரியர் குருக்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். சைவ சித்தாந்தங்கள் - இந்து நாகரிகத் துறையின் ஊடாக யாழ் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்தினை விசேடமாக கற்பதற்கு கால்கோளாக இருந்தவர் போராசிரியர் குருக்கள் அவர்கள் சிறந்த குருத்துவப் பாரம்பரியத்தினை உரிய அடித்தளங்களுடன் உருவாக்கியவர் இவராவார்.

**கைலாசநாதக் குருக்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள்**

சமஸ்கிருத மொழியில் கவிதை ரூபமாக எழுதிய ஸ்ரீநிவாம்பிகா பஞ்சரத்தினம் - 1971 ஸ்ரீ கன்யாகுமாரி பஞ்சரத்தினம் - 1972 காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திய சரஸ்வதி சுவாமிகளுக்கு பஞ்சரத்தினத்தை 1972இலும் சமர்ப்பித்து ஆச்சார்யா பொன்னாடை போத்திக் கௌரவிக்கப்பட்டதை வாழ்வின் உயர்பேறாகப் பெற்றவர்.

**தமிழ்மொழி மூலமாக சமஸ்கிருத மொழிப் பயிற்சிக்காக இயற்றப்பட்டவை**

- சமஸ்கிருத இலகு போதம் 1 11 1960,1962
- வடமொழி இலக்கிய வரலாறு - வைதிக இலக்கியம் 1962 இது இலங்கை சாஹித்ய அக்கடமி பரிசினைப் பெற்றது.
- சைவத் திருக்கோவிற் கிரியை நெறி 1963
- இந்துப்பண்பாடு சில நிந்தனைகள் 1985
- விஷேட திரவ்யஹோம மந்திரங்கள், தீபாராதனை வேதமந்திரங்கள், வேதமந்திரங்களின் தொகுப்பு 1988
- ஸ்ரீசக்ரபூஜை தொகுப்பு, கிரந்லிபி 1995
- சமஸ்கிருத கிரந்தாட்சர லகு போதம் 1997

**பத்ததி நூல்கள்**

- ஶ்ரீ சண்டீஹோம பத்ததி, ஶ்ரீ கணபதி ஹோம பத்ததி
- விக்கினேஸ்வரர், சுப்பிரமண்யர். சிவன், தேவி, வைரவர், மஹாவிஸ்ணு ஆகிய முர்த்திகளுக்குரிய பிரதிஸ்டை உற்சவ பத்ததி
- ஆங்கில மொழியில் விரிவு படுத்தி மொழி பெயர்த்த நூல் - சைவத் திருக்கோயிற் கிரியை நெறி
- யசூர் வேத சந்தியா வந்தனம், சிவஹோமத்சவ பத்ததி, விக்னேஸ்வர பிரதிஷ்டாவிதி,
- நவக்கிரக ஸ்தோத்திர மஞ்சரி ஆகிய நூல்களைப் பரிசீலித்து சிறந்த முறையில் சமூகத்திடம் அர்ப்பணித்துள்ளார்.

**பிரசுரங்கள்**

- புராணக்கதைகள் தென்னாட்டின் சமயக் கருவூலம்-1960
- கோள்களால் விளையும்துயர் களைய கோடியர்ச்சனை -25.02.1962
- கோள் வினைதீர்க்கும் கோடியர்ச்சனை - 1962
- எல்லோரும் செல்லும் ஆலயத்தின் கும்பாபிஷேகச் சிறப்பு- 1963
- வேதங்கள், பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக இந்து தருமத்தில் கும்பாபிஷேகம் -1968
- எங்கள் குருநாதர்- 1971
- இந்து நாகரிகம் பேணிய சைவப்பெரியார் - 1978
- நாவலர் பணியின் வைதிக அறப்படைகள் - 1979
- மீமாம்சா தரிசனம் - 1985
- வைதிக மரபும் ஆகம மரபும் - 1989
- பூஜையில் உபசாரங்கள் - 1989
- பண்டிதமணியின் தத்துவங்கள் - 1989
- திருக்கோயில் வழிபாடு வேதமெனப்போற்றுவோமாக - 24.03.1997
- மிருதயுஞ்ஜய மந்திரம்
- வேதமாகிய தேவார திருவாசகங்கள்

1960களில் சமஸ்கிருத இலக்கியங்கள் பற்றி இலங்கை வானொலியில் தொடர்ச்சியாக உரை நிகழ்த்தினார். 1978ல் உலக இந்து மகாநாட்டின் இலங்கைக்கான செயலாளராகவும் இருந்துள்ளார். இலங்கை கல்வி உயர்கல்வி அமைச்சின் இந்து சமய பாட ஆலோசனைக் குழுவில் 1976- 1985வரை அங்கம் வகித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலும் அளப்பரிய சேவைகள் பலவற்றை வழங்கி வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இந்துக் கலைக்கூடம் ஒன்று மிகவிரைவில் அமைக்கப்பட வேண்டும் என தமது மனதுட் கிடந்த செயற்திட்டத்தையும் அபிலாசையையும் வெளிப்படுத்த இவர்களின் கனவை நனவாக்கும் பணியாக இவர்களின் மாணவர்களும் ஐக்கிய இராச்சியத்தில் இந்து ஆலய அறங்காவலர்களாக இருப்பவர்களும் சைவ அபிமானிகளும் இணைத்து இந்து நூதனசாலையுடன் கூடிய கலைக்கூடத்தினை இலண்டன் மாநகரில் அமைப்பதற்கு செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றனர்.

# இலங்கையில் சிவாலயங்களின் வரலாறும் பண்பாடும் திருக்கோணேச்சரம்

இலங்கையின் கீழ்த் திசையில் அமைந்துள்ள இயற்கை எழில் மிக்க நகரம் திருக்கோணமலை. இலங்கையின் மிகப்பெரிய நதியாகிய மகாவலிகங்கை அவ்விடத்திற் கடலுடன் கலப்பதால் அப்பிரதேசம் நீர் வளமும் நில வளமும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இங்கு சுவாமிமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்று கொட்டியார விரிகுடாவை நோக்கியவாறு அமைந்துள்ளது. அதன் உச்சியிலேதிருக்கோணேச்சரக் கோயில் உள்ளது. அது அண்மைக் காலத்தில் எழுப்பப்பட்ட புதிய கோயிலாகும்.

**பண்டைய வரலாறு**

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட கோயில் ஒன்று சமுத்திர ஓரத்தில் அந்த மலையின் அடிவாரத்தில் இருந்ததென நம்பப்படுகின்றது. அது கி.மு.306இல் நிகழ்ந்த கடல் கோளினாற் சமுத்திரத்தினுள் மூழ்கிவிட்டதுதென்று என்னும் வரலாற்றாசிரியர் எழுதிய இலங்கைச் சரித்திரம் என்னும் நூல் இவ்வாறு நிகழ்ந்ததெனக் கூறுகின்றது. ஆழ்கடலில் அமர்ந்திருக்குங் கோணேச்சரப் பெருமானுக்கு இன்றும் மலைப் பூசை ஒன்று செய்யப்படுவதை நாம் காணலாம். மலையின் அடியில் , ஆழ்கடலுக்கு எதிரே, மலைக்குகை போன்று பண்டைக் கோயிலின் மூலத்தான்த்தின் ஒருபகுதி இன்னமும் எஞ்சியிருக்கின்றது. அது பல்லவர் காலக் குகைக் கோயில் போன்றது. அக்கோயிலின் மிகுதி சமுத்திரத்தின் அடியில் உள்ளதென 1961இல் ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மைக்வில்சன் என்பவர் கூறியுள்ளார்.

நகுலேச்சரத் தலவரலாற்றிற் குறிப்பிட்டுள்ள மாருதப்புரவீகவல்லி என்பவளுக்கு நரசிங்கன் என்னும் மகன் ஒருவன் இருந்தான் . அவன் சீர்பாததேவியைத் திருமணஞ் செய்தான். இவர்கள் இருவரும் தம் சுற்றத்தாருடன் இலங்கைக்கு வருவதற்கச் சோழநாட்டிலிருந்து கப்பலிற் புறப்பட்டனர். அப்பொழுது சீர்பாததேவி இலங்கையின் நாட்டு வளத்தைப் பார்க்க விரும்பினாள். எனவே, கப்பல் இலங்கையின் கிழ்ககுக் கரையோரமாகப் பயணஞ் செய்தது.

கப்பல் திருக்கோணமலையை அண்மித்த பொழுது திருக்கோணேச்சரம் தென்பட்டது. அரசி அவ்விறைவரை வணங்கினாள். அதே நேரம் கப்பலும் நங்கூரம் இட்டது போன்று நிலையாய் நின்றது. அரசி மிகவுந் துயரடைந்து விக்கினங்களை அகற்றுபவரான் விநாயகரைத் தொழுதாள். பின்னர் படகோட்டியைக் கப்பலின் கீழே சென்று பார்க்குமாறு பணித்தாள். கப்பல் தரையிற் பட்டு விட்டதென்றே அவள் கருதினாள். எனினும், அங்கு தரை இருக்கவில்லை. ஆயின், கடலில் மிருந்த ஆழத்தில் விநாயகர் விக்கிரகம் ஒன்று இருந்தது. அதனை அவள் கப்பலுக்குள் எடுப்பித்த பின்னர் கப்பல் மீண்டும் ஓடத்தொடங்கியது. இவ்வாறாகக் கடல் கோளற் கீழே சென்ற புராதன ஆலயத்தின் விநாயகர் விக்கிரகம் இவ்வளவு மகிமை உடையதென்றாற் கோணேச்சரப் பெருமானின் மகிமையைக் கூறவும் வேண்டுமா?

திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவுக்கு எழுந்தருளிய பின்னரே போர்த்துக்கேயர் கோயிலினுட் புகுந்தனர் என்று முன்னர் கூறப்பட்டது. எனவே, விக்கிரகங்கள் காப்பாற்றப்பட்டிருத்தல் வேண்டும். அவை எப்பொழுது கண்டெடுக்கப்பட்டன என்பது அக்கல்வெட்டு குளக்கோட்டனின் திருப்பணியால் அமைந்த இவ்வாலயத்தைப் பறங்கியர் உடைப்பார்கள். பின்னர் அரசர்கள் இதனைப் பேணமாட்டார்கள் என்று இதன் எதிர் காலம் பற்றி இங்கு குறிப்பிட்டிருத்தல் வியப்புக்குரியது.

இக்காலத்திற் சிவராத்திரி தினத்திற் கோணேச்சரப் பெருமான் சித்திரைப் புத்தாண்டுக்கு நகர்வலம்வருதல் என்னுந் திருவிழா ஒன்று சிறப்பாக நடைபெறுகின்றது. அக்காலத்திலும் இத்தகைய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்வாறாக 1624 ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு நாளில் நகர்வலம் வருந் திருவிழா ஒன்று நடைபெற்றது. இதற்காக மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவாக அடியார்களுடன் கோயிலிலிருந்து நகருக்கு எழுந்தருளினார். அவ்வேளையிற போர்த்துக்கேயப படைவீரர் பிராமணர்கள் போல வேடந்தாங்கிக் கும்பிடப்போவது போன்று கோயிலினுட் புகுந்தனர். அந்நேரத்திற் கோயிலின் உள்ளே பூசகர்கள் சிலரும் வேலையாளரும் மட்டுமே எஞ்சியிருந்தனர். கொன்ஸ்ரன்ரயின் டீசா என்பவனுடைய தலைமையிற் சென்ற இப்போர்வீரர் எதிர்த்தவர்களை வெட்டிக் கொன்றுவிட்டுக் கோயிலிலிருந்த தங்க, வெள்ளி நகைகளையும், விலைமதிப்புமிக்க பிற பொருள்களையும் சூறையாடிக்கொண்டு சென்றனர். அதன் பின்னர் அடியார்கள் சில விக்கிரகங்களை அகற்றி மறைத்து வைத்தனர். போர்த்துக்கேயர் பீரங்கிகளுடன் மீண்டும் வந்து கோயிலை முற்றாக அழித்தனர். போர்த்துக்கேயர் அழித்த கோயிலில் ஆயிரங்கால மண்டபமும் பெரியதொரு தீர்த்தக்கேணியும் பிற மண்டபங்களும் இருந்தன என்பது அவர்கள் வரலாற்றுச் சான்றாக வரைந்து வைத்த படம் ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது. கொன்ஸ்ரன்ரயின்டீசா செய்த சிவத்துரோகத்துக்காக அவன் 1630 ஆம் ஆண்டு வேறு சிலர் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக கொல்லப்பட்டான்.

## புதிய கோயிலின் வரலாறு

1944ஆம் ஆண்டு திருகோணமலைக் கோட்டையினுள்ளே நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்கு அகழ்வு வேலை செய்த பொழுது விஷ்ணு, மகாலட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன. 1950 ஆம் ஆண்டு ஆடி மாததததிற் சுவாமிமலைக்கு அண்மையிற் கடற்கரை வீதியருகே கிணறு ஒன்று வெட்டப்பட்ட பொழுது மூன்று விக்கிரகங்கள் கிடைத்தன. வேறோர் இடத்தில் அகழ்ந்தபொழுது மேலும் இரண்டு விக்கிரகங்கள் கிடைத்தன. இந்த விக்கிரகங்கள் எல்லாம் 1952ஆம் ஆண்டிற் பிரதிட்டை செய்யப்பட்டன.

1950.07.03 அன்று கலாநிதி பாலேந்திரா அவர்களின் தலைமையிலே திருக்கோணேச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஆரம்பமானது. இச்சபையின் பெருமுயற்சியாற் பழைய கோயில் இருந்த இடத்தில் மீண்டுந் திருக்கோணேச்சரர் ஆலயம் அமைக்கப்பட்டு 1963.03.03 அன்று மகா கும்பாபிடேகம் நிறைவெய்தியது. பழைய கோயிலுடன் ஒப்பிடும் பொழுது இது சிறிய கோயிலாகவே இருக்கின்றது.

## மூர்த்திச் சிறப்பு

இக்கோயிலின் இறைவன் பெயர் திருக்கோணேச்சரர், இறைவி பெயர் மாதுமை அம்பாள். தலவிருட்சம் கல் ஆலமரம். இப்பொழுதுள்ள கோயிலை அடுத்து இம்மலையின் வடமுனையிற்பாறையினுள் வேர் வைத்து இந்த ஆலமரம் செழிப்பாக வளர்ந்து நிற்கின்றது.

சோழ நாட்டிலே பழையாறை என்பது கி.பி.831இல் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. அங்கு குமராங்குசன் என்னும் அரசன் அப்பொழுது ஆட்சி செலுத்தினான். இவனுடைய மகள் சீர்பாததேவி.

**தலச் சிறப்பு**

இந்தத் தலத்தின் சிறப்புக் காரணமாகவே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கோணேச்சரப் பெருமான் மீது தேவாராத் திருப்பதிகம் பாடினார் இத்தலத்தின் மகிமையை அடியார்கள் சொல்லக் கேட்டு அவர் இப்பதிகத்தைப் பாடினார். அருணகிரிநாதர் தாம்பாடிய திருப்புகழ் ஒன்றிலே

"நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக் கொணாமலை தலத்தாறு கோபுர என்று இத்தலத்தை வருணித்துள்ளார்"

குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் இத்தலம் அமைந்துள்ளது திருக்குணமலை, திருக்குணாமலை, திருமலை, தென்கைலாயம், கோகர்ணம், திரிகூடம், மச்சேஸ்வரம் என்பன இத்தலத்தின் பிற பெயர்கள்

**தீர்த்தச் சிறப்பு**

இக்கோயிலின் தீர்த்தம் பாவநாசம் எனப்படும். இந்தச் சொல்லின் பொருளை நோக்கும் போது இக்கோயிலின் தீர்த்தச் சிறப்புப் புலப்படும். இங்கு தீர்த்தமாடுபவர்களின் பாவம் தொலைந்து விடும் என்பது இதன் கருத்து.

சுவாமி மலையின் தென் பக்கத்தில் ஆழமான ஒரு கிணறாகப் பாவநாசத் தீர்த்தம் இப்பொழுது இருக்கின்றது. இதனைச் சுனை என்று கூறமுடியாத அளவுக்குப் போர்த்துக்கேயர் பழைய கோயிலை இடித்து அங்கிருந்த தீர்த்தக்கேணியையும் சுனையுந் தூர்த்துவிட்டனர் இப்பொழுதுள்ள கேணியுந் தீர்த்தக் கிணறுஞ் சேர்ந்த பெரிய கேணி ஒன்று முன்பு இருந்ததென ஊகிக்கப்படுகின்றது. அற்புதமான இந்தத் தீர்த்தத்தின் ஒரு சிறு பகுதியையாயினும் பாவநாசத் தீர்த்தக் கிணற்றின் மூலம் திருக்கோணேசச்சரர் தம் அடியார்களாகிய நமக்குத் தந்தருளினாரே என்பது தீர்த்தத்தின் சிறப்பு.

**பூசைகள் விழாக்கள்**

இங்கு ஆறுகாலப் பூசைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. சிவராத்திரி காலத்திலே திருக்கோணேச்சரப் பொருமான் நகரத்தினுள்ளே திருவுலாவாக எழுந்தருளுதல் கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கோயிலின் மகோற்சவம் பங்குனி உத்தரத்திலே தொடங்கிப் பதினெட்டு நாட்களுக்கு நடைபெற்று வருகின்றது.

**நூல்கள்**

கோணேசர் கல்வெட்டு இக்கோயிலின் சரித்திரத்தை உரைநடையிலுங் கவிதையிலுங் கூறுகின்றது. சீர்பாதகுல வரலாற்று, மட்டக்களப்பு மான்மியம், ராஜாவளிய, மச்சபுருாணம், திருக்கோணேசலப் புராணம், இலங்கைச் சரித்திரம்( தெனன்று) தட்சிண கைலாய புராணம், திருகோணமலைத் திருவுருவங்கள், குடுமியா மலைச் சாசனம், திருக்கோணமலைக் கோட்டை வாயிற் கல்வெட்டு முதலிய இக்கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை தருகின்றன.
திருக்கோணேச்சரத் தேவாரத் திருப்பதிகம், கோணேஸ்வரர் குறவஞ்சி, திருக்கோணேஸ்வரர் அகவல். திருகோணமலை அந்தாதி முதலியன இக்கோயில்மேல் எழுந்த இலக்கியங்களாகும்.

# திருக்கேதீச்சரம்

**தல வரலாறு**

கேது வழிபட்டதால், இப் பெயர் பெற்றது. சுந்தரர், சம்பந்தர் இருவரும் இராமேசுரத்தில் இருந்தவாறு, இப் பதியைப் பாடினர். சிறப்புமிக்க இத் தலம் ஈழ நாட்டில் மாதோட்ட நகரில் பாலாவி ஆற்றங்கரையில் உள்ளது.

**அமைவிடம்**

திருமூலர் சிவபூமி என்று சிறப்பித்துக்கூறும் இலங்கையின் வடமேல் பாகத்தில் மன்னார் மாவட்டம் உள்ளது. அங்கு மாந்தை என்னும் பிரிவிலே பாலாவித் தீர்த்தக் கரையிலே திருக்கேதீச்சரம் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. புராதன காலத்திலே திருக்கேதீச்சரம் என்பது ஆலயத்தையும் மாதோட்டம் என்பது அது அமைந்துள்ள இடத்தையும் குறித்தன. இக்காலத்திலே திருக்கேதீச்சரம் என்பது கோயிலுக்கும் அது அமைந்துள்ள இடத்துக்கும் பொதுவான பெயராக இருக்கின்றது. கேது ஈசனை வழிபட்ட தலம் என்னும் காரணம் பற்றி இக்கோயில் திரு என்னும் அடைமொழியோடு திருக்கேதீச்சரம் என்ற பெயரைப் பெற்றது.

இலங்கையிலே திருக்கேதீச்சரம் திருக்கோணேச்சரம் என்னும் இரண்டு தலங்கள் மட்டுமே தேவாரப் பாடல் பெற்ற சிறப்பினை உடையன. திருக்கேதீச்சரநாதர் மீது திருஞானசம்பந்தரும் தேவாரத் திருப்பதிகம் பாடியுள்ளார். இராமேச்சரத்தை வழிபடச்செல்லும் அடியார்கள் ஒரு காலத்திற் கடலின் அக்கரையில் நின்று திருக்கேதீச்சரத்து அண்ணலைத் தொழுதனர். அதற்குச் சான்றாகத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும் சுந்தரமூர்த்தி நாயனாரையும் கூறலாம்.

பண்டைய வரலாறு மயன் என்பவன் தேவதச்சன். மகாதுவட்டா என்பவன் அவனுடைய தமையன். இவர்கள் நிருமாணித்த தலம் திருக்கேதீச்சரம் என்பது மரபுக் கதை. மயனின் மகளும் இராவணனின் மனைவியுமாகிய மண்டோதரி இத்தலத்தை வழிபட்டாள். தீர்த்த யாத்திரை செய்த அருச்சுனன் இதனை வழிபட்டானெனத் தட்சிணகைலாய புராணம் கூறுகின்றது. விசயனுடன் இலங்கைக்கு வந்த உபதிஸ்ஸன் என்னும் பிராமணன் திருக்கேதீச்சரத்திற் பூசை செய்தான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

இயக்கர்களும் நாகர்களும் இலங்கையின் பூர்வீகக் குடிகள். இராவணன் இயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவன். அவன் சிவபக்தன் என்பது வரலாறு. நாகர்களும் திருக்கேதீச்சரத்தை வழிபட்டதற்குச் சான்றாக நாகநாதர் என்றொரு பெயர் திருக்கேதீச்சரநாதருக்கு இன்னமும் வழங்குகின்றது.

தொலமி என்னும் புவியியலறிஞர் கி பி 2ம் நூற்றாண்டில் மாதோட்டம் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். உரோமர், பாரசீகர், அராபியர், சீனர், இந்தியர் முதலிய பல தேசத்தவர்களுடன் மாதோட்டத்துக்கு வணிகத் தொடர்புகள் இருந்தனவென்பது அங்கு கண்டெடுத்த பண்டைய நாணயங்களால் அறியப்படும். கி.பி. 4ம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட சிறீமேகவண்ணன் என்னுஞ் சிங்கள அரசனின் காலத்தில் மாதோட்டத்திற் சைவக் கோயில் ஒன்று இருந்ததெனத் தாதுவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. இது புத்தரின் புனித தந்த வரலாறு பற்றிய நூலாகும்.

ஏறத்தாழ இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தைத்துறைமுகம் இருந்தது என்பதையும் அங்கிருந்து அக்காலத்தில் இந்தியாவுக்குச் செம்பு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும் இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ் யூ தேரணியகலை என்பவர் 1997 இல் ஆராய்ச்சி முடிபாக வெளியிட்டுள்ளார். எனவே மொகெஞ்சோதாரோ, ஹரப்பாக் காலத்திலும் மாந்தை நிலவியது என்பது ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

“வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்” என்று கூறப்பட்டதனால் இது கேந்திர முக்கியத்துவமுள்ள ஒரு வணிகப் பட்டினமாகத் திகழ்ந்தது என்பது புலனாகும். பிற்காலச் சோழர்களினால் முதலாம் இராசேந்திரன், இடைக்காலப் பாண்டியர்களில் முதலாஞ் சுந்தரபாண்டியன் முதலியோர் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இதன் காரணமாகக் கி.பி.11ம் நூற்றாண்டிலும் அதனை அடுத்த காலத்திலும் திருக்கேதீச்சரம் திருவரங்கக் கோயிலுக்கு இணையான ஏழு பிரகாரங்கள் சூழ்ந்த பெருங் கோயிலாகத் திகழ்ந்தது என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உண்டு. சோழரின் ஆட்சிக் காலத்தில் இது இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தது. இக்கோயிலை இலங்கை அரசர்கள் பலர் ஆதரித்தனர்.

புத்தகோயில்களுக்குக் கொடுக்கும் நன்கொடைகளுக்கான சட்டங்களை மீறுவோர் மாதோட்டத்திற் பசுக் கொலை செய்ததை ஒத்த பாவத்தைப் பெறுவாரென்ற எச்சரிக்கை 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்களக் கல்வெட்டுச் சாசனம் ஒன்றிற் காணப்படுகின்றது. இதனால் அவர்கள் திருக்கேதீச்சரக் கோயில் மீது வைத்திருந்த மதிப்புப் புலப்படும்.

இத்தகைய சிறப்புடைய பண்டைக் கோயில் 1960ம் ஆண்டு போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டது. பின்னர் கடற் பெருக்கால் இருந்த இடமும் மறைந்தது. ஏறத்தாழ 200 ஆண்டுகள் கழிந்த பின் 1894ம் ஆண்டு பண்டைக்கோயில் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான அகழ்வு ஆராய்ச்சி ஆரம்பமானது. அதன் விளைவாக புராதன கோயில் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றும் ஒரு கோயிலுக்கு மகிமை தருகின்ற முக்கியமான அம்சங்கள் என்று தாயுமானவரின் பாடல் ஒன்று கூறுகின்றது. எனவே திருக்கேதீச்சரக் கோயிலின் இந்த மூன்று அம்சங்களும் எத்தகையன என்பதனை ஈண்டு நாம் நோக்குவோம்.

### மூர்த்திச் சிறப்பு

இக்கோயிலின் இறைவன் பெயர் திருக்கேதீச்சரநாதன். இறைவி பெயர் கௌரிஅம்பாள். தலவிருட்சம் வன்னிமரம். திருக்கேதீச்சரப் பெருமானை “மாதோட்டத்து அண்ணல் அந்தணர் அடிகள் எந்தை” என்றிவ்வாறு போற்றித் திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியுள்ளார். சுந்தரர் தம் தேவாரத்தில் இவரை அட்டன் என்கிறார். ஆகாயம், நிலம், நீர், வளி, அக்கினி, சூரியன், சந்திரன், இயமானன் என்னும் எட்டு மூர்த்தங்களும் ஒன்று சேர்ந்த மூர்த்தி அட்டன் எனப்படும். வேறொரு தேவாரத்தில் அவர் “மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி” என்றார். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுத் திருக்கேதீச்சரநாதன் அயன்,அரி,அரன் என்னும் மூவராயும் அம்மை அப்பன் என இருவராயும் இருக்கிறார் என்பது அதன் கருத்து. இருவர் என்று கூறும்பொழுது ஈசன் சத்தி பின்னம் இல்லாதவன் என்னுந் தத்துவப் பொருளும் பெறப்படுகின்றது. இவ்வாறாகத் தேவாதி தேவனாக விளங்குந் திருக்கேதீச்சரநாதன் மேலானவன் என்பதனை உணர்த்தும் வகையிற் சிரேட்டன் என்னுஞ் சொல்லைச் சுருக்கிச் சிட்டன் என்றும் அவர் பாடியுள்ளார். திருவெண்ணை நல்லூரிலே தம்மைத் தடுத்தாட்கொண்ட பெருமானும் திருக்கேதீச்சரநாதனும் ஒருவரே என்னுங் கருத்தில் அவர் தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே என்றார்.

ஞானசம்பந்தர் தமக்கு ஞானப்பால் ஊட்டிய எம்பெருமாட்டிக்கு நன்றியுணர்வு உடையவராய் அவரை முதற்கண் குறிப்பிட்டு தேவி தன்னொடுந் திருக்கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே என்று போற்றித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையை சிவபூமி என்கின்றார் திருமூல நாயனார். சிறப்புமிகு இச் சிவபூமியின் கண் பழமையும் பெருமையும் புகழும் உடைய சிவத்தலங்கள் பலவிருந்தமை வரலாறு. இவ்வரலாற்றுண்மையினை கி.மு.1800 வரையில் நடந்த இராம இராவண யுத்தத்தின் தரவுகளிலறியலாம்.

இப்பெருமையுடைய ஈழத்திருநாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தமாய் மூன்றுஞ் சிறப்பாமையப் பெற்ற திருத்தலம் அருள் மிகு திருக்கேதீச்சரத் திருத்தலமாம். பெருந்தவமுடையோராய கேது, மயன், மாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் முதலிய தவமுடையோர் வழிபாடாற்றி தங்குறை தீர்த்து மீண்ட வரலாறு கொண்ட தலம் இத்திருத்தலம்.

“விருதுகுன்றமா மேருவி நாணரா வாவன லெரியம்பாப் பொருதுமூவெயில் செற்றவன்பற்றி நின்றுறைபதி எந்நாளும் கருதுகின்ற ஊர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங் கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினையடையாவே” -நாளும் தமிழ்வளர்த்த ஞானசம்பந்தன்

கேது பூசித்த தலமாதலால் திருக்கேதிச்சரமாயிற்றென ஆய்வாளர்கள் கூறா நிற்பர். இக்கோயில் மாதோட்ட நன்னகரில் அமைந்துள்ளது. இத் தலத்திலமைந்துள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோர்க்குக் காயாவில் கடனாற்றும் புண்ணியம் கிட்டுமெனவும், இத் தீர்த்தத்தில் நீராடுவோர்க்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் இத்தீர்த்ததின் மகிமையும் சிறப்புமாகும்.

“நத்தார் படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய் மத்தம் மத யானையுரி போர்த்த மணவாளன் பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல் செத்தாரெலும்பணிவான் திருக் கேதீச்சரத்தானே” - சுந்தரமூர்த்தி நாயனார்-

இந்நாட்டுப் பழங்குடியினராய் நாகர்களது முக்கியமான வழிபாட்டுத் தலமாதலால் இத்திருக்கோயிலிற்கு நாகநாதர் எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது போதரும் இச்செய்தியால் சைவசமயிகளின் தொன்மையையும் பெருமையையும் இத்திருக்கோயில் இயம்புகின்றது. சோழ, பாண்டிய மன்னர்கள் பல திருப்பணிகளை இத்திருக்கோயிலிற்காற்றிய பெருமையும், வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையுங் கொண்ட திருத்தலமிதுவாகும்.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவத்தின் ஒளிவிளக்காம் தவக்கொழுந்தினராய அருளடியார்கள் என உலகினரால் போற்றப்படும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயானாராலும், சுந்தர மூர்த்தி நாயனாராலும் போற்றிப் புகழ்ந்து திருப்பதிகம் பாடப் பெற்ற சிறப்புடைய தலமிதுவாகும்

அருள்மிகு திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களின் திருதாண்டகத்திலும், சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருப்பது வெள்ளிடைமலை இத்தகு சீர்பூத்த திருத்தலம் காலவெள்ளத்தில் சிக்கிச் சிதைந்து சின்னாபின்னமடைந்து மண்மேடானமை வரலாற்று உண்மையாகும்.

இத்திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்களிருந்தமையை அகழ்வாய்வுத் தரவுகள் மூலமறிய முடிகின்றது. அன்றியும் இத்திருவிடம் உலகப் புகழ்பெற்ற பெருநகரமாகவும் பல்துறைத் தொழில் வல்லவர்கள் வாழ்ந்த நகரமாகவும் சிற்பம் கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றல் மிக்க கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் மிளிர்ந்தமை ஆய்வாளர்தம் துணிவாகும்

திருக்கேதீச்சரத் திருதலத்திற்கணித்தாய் வங்காலையென்னும் நகரமிருந்தமையும், பண்டங்கள் ஏற்றியிறக்கும் துறைமுகமாகவும் வங்கமெனும் பெருங்கப்பல்கள் கட்டுமிடமாக இருந்துள்ளமையயும், வேறு மாளிகைத் திடல் என்றும் பாப்பாமோட்டையென்றும் இன்றும் அழைக்கப்படும் ஊர்கள் இருப்பதையும் நாளுங்காண முடிகின்றது. அந்தணர்கள் வாழ்விடமாய் இருந்தமையால் அது பாப்பாமோட்டையெனவும் மாடமாளிகைகள் மிளிர்ந்தமையால் மாளிகைத் திடலெனவும் அமைந்திருந்தன.

ஆர்வலர் ஒருவர் பகைவரால் கவரப்படாதிருத்தற் பொருட்டு கலிங்க தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட புத்த தந்தத்துடன் மாதோட்டத்தின் கண்ணிறங்கி அன்று இரவினை அங்கேயே கழித்ததாகவும் வரலாறுண்டு. பத்தாம், பதினோராம் நூற்றாண்டில் இக் கோயில் சோழமன்னர்களால் இராசராசேஸ்வர மாகாதேவன் கோயிலென அழைக்கப்பட்டது.

போத்துக்கீசரால் தகர்க்கப்பட்ட இவ்வாலயக் கற்களையுஞ் சிற்பங்களையும் கொண்டு மாதோட்டத்தில் கட்டப்பட்ட முதலாவது தேவாலயத்திற்கு அடிக்கல்லாகப் பயன்படுத்தப்பட்ட உண்மையைத் துலக்கி நிற்கின்றது. அழித்துச் சிதைக்கப்பட்டிருந்த இத் திருவிடத்தை விடிவெள்ளியின் அவதாரம் செய்த திருப்பெருந்திரு அருள்மிகு யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் ஐயா அவர்கள் அந்நிலத்தை வாங்கி சைவசமயிகளின் பெருமையும் புகழும் நிலைக்கவேண்டுமென்னும் பேரவாவினால் தூண்டுதல் செய்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்த பெருமை ஐயா அவர்களையே சாரும். ஐயா அவர்களின் ஆசையை நிறைவுசெய்ய முயன்ற பெரியார்கள் கொழும்பு தம்பையா முதலியார், சுபைதார் வைத்திலிங்கம், புகையிரத தபால் ஒப்பந்தக்காரர், மாத்தளை ஆசைப்பிள்ளை ஆகியோரின் அருமுயற்சி அரசினரின் அடாத்தன்மையால் நிறைவுபெறவியலாது போயிற்று. தொடர்ந்து 1890இல் தகைசான்ற சைவப்பெரியார்களின் பெருமுயற்சியால் அக்காலத்து அரச அதிபர் அந்நிலத்தை சைவர்கட்கே வழங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்குத் தள்ளப்பட்டார்.

காலப்போக்கில் இத்திருகோயிலிற்கென ஓர் சபை உருவாக்கப்பட்டு அதன் முதலாவது தலைவராக சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களும் பொதுச் செயலாளராக நீராவியடி பண்டிதர் அ.சிற்றம்பலம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு உயர்ந்த பல குறிக்கோளுடன் சபை செயற்பட யாப்பு அமைக்கப்பட்டது சைவக் கொள்கைக்கு அமைய மறுசீரமைக்கப்படுதல். ஆலயத்தையுஞ் சொத்துக்களையும் யாதொரு குறையுமின்றிப் பாதுகாத்தல்.

மேற்கூறிய கொள்கை கோட்பாடு வரையறைகட்கு மாறில்லாத வகையில் செயற்படுதல். ஏனைய இறை வணக்கத் தலங்களை உருவாக்குதலும் துணைபுரிதலும் மக்கள் தங்குமடங்கள், கல்விக் கூடங்கள், சமூக நிலையங்கள் போன்ற அன்றாட வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்தல போன்ற பல அரிய செயல்களைப் புரியச் சபையைத் தயார்படுத்தல் போன்ற உயரிய செயல்களை விரைந்து நடைமுறைப்படுத்த முயற்சிப்பதென உறுதி பூணப்பட்டது. 10 பெப்ரவரி 1951இல் பொது உடமைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சபையாகத் திகழ்ந்தது. சபையாகப் பதிவுசெய்யப்பட்டதன் பின்பும் கோயில் உரிமைகள் நாட்டுக்கோட்டை நகரப் பெரியார்களிடமே இருந்து வந்தது. காலப்போக்கில் 14 செப்ரம்பர் 1951இல் நாட்டுக்கோட்டை நகரத்தார் உளமகிழ்வுடனும் நல் இணக்கத்துடனும் திருப்பணிச் சபையாரிடம் பரிபாலனம் கைமாற்றப்பட்டது.

பொறுப்புக்கள் கையேற்கப்பட்ட காலம் முதல் அரிய பெரிய திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கொழும்பு பழைய, புதிய கதிரேசன் கோயில் திருப்பணிச் சபையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர் அறங்காவலர்களாகவும் (ஐவர்) பஞ்சாயத்தவர்களாகவும் நியமனம் பெற்று சபையை நடாத்திவரத் திருக்கேதீச்சரத் திருப்பணிப் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியது.

இச்சபையின் தீர்மானப்படி காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம், கட்டடக்கலைஞர் வி.நரசிம்மன் ஆகியோரின் ஆகம விதிகளுக்கமைவான அறிவுறுத்தல்களுடன் தமிழ்நாடு திருவாளர்கள் செல்லக்கண்ணு ஸ்தபதியார், மு.வைத்தியநாத ஸ்தபதியார் ஆகியவர்களால் முறைப்படி சுவாமி, அம்பாள் கருவறைகள் கருங்கல்லாலும், சுதை, காரைகளாலும் விமான வேலைகளும் கோபுரங்களும் உலக சைவப்பெருமக்களின் பேருதவி கொண்டு அமைக்கப்பட்டன. இத்திருத்தலம் உருவாக அருள்வாக்கு நல்கிய நல்லூர் திருப்பெருந்திரு ஆறுமுகநாவர் ஐயா அவர்கள் ‘‘திருக்கேதீச்சரம் எனுந் தேன்பொந்து ஒன்று உளது. அங்கு மருந்தொன்று மறைந்துள்ளது. அதனைச் சென்றடையுங்கள்’’ என அருள்ஞானசம்பந்தர் சுட்டிக்காட்டியது போல அறிவுறுத்தியருளினார்.

ஐயா அவர்களின் அறிவுறுத்தல் மேற்கொண்டு விடத்தல்தீவு வேலுப்பிள்ளை அவர்களும், முதல் குரல் கொடுத்த சைவபரிபாலன சபையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். முன்பு ஆலயமிருக்கும் திருவிடத்தை சைவசமயத்தவர்கள் கையகப்படுத்த விரும்பாதநிலை மாறி மாவட்ட அதிபரின் முன்மொழிவுக்கமைய ஏலத்தில் விடப்பட்டு காடுமண்டிய நிலத்துடன் 43 ஏக்கர் 3 றூட் 33 பேச் காணி நாட்டுக்கோட்டை நகரத்துச் செம்மல் சைவச் சான்றாளர் ராம அரு.அரு.பழனியப்பச் செட்டியாரான பெருமகனாரால் யாழ் செயலகத்தில் 3,100/= ரூபாவிற்கு கொள்முதல் செய்யப்பட்டமை சைவர்களின் பெருமைக்குரியதொன்றாயிற்று.

1984ஆம் ஆண்டு வண்ணைச் சைவப்பெரியார் சி.த.மு.பசுபதிச் செட்டியார், திருவாளர்கள் இ.இராமுப்பிள்ளை வைத்தியர் வை.ஆறுமுகம் பிள்ளை, தா.இராகவப்பிள்ளை ஆகியோரின் அயராத முயற்சியினால் 13 ஜூன் 1894 அன்று பழைய ஆலயம் இருந்த திருவிடமும், தீர்த்தக் கிணறும் முன் நிறுவப்பட்டிருந்த லிங்கம் ஒன்றும் திருநந்தி சோமாஸ்கந்தர், கணேசர் ஆகிய மூர்த்திகளின் சிலைகள் கண்டெடுக்கப் பட்டன. இவற்றை நிறுவிப் பூசை அர்சனை அபிடேகங்கள் இயற்ற வேண்டி இன்றுள்ள கோயிலிருக்குமிடத்தில் சிறு கோயிலமைத்து கண்டெடுக்கப்பட்ட மூர்த்திகளை உரிய இடங்களில் நிறுவி 28 ஜூன் 1903 ஆம் ஆண்டில் நல்வேளையில் முதலாவது குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுச் சிறப்பாகச் செய்யப்பட்டது.

மூலக் கருவறையில் எழுந்தருள வைக்கப் பெற்ற சிவலிங்கம் காசியிலிருந்து வருவிக்கப்பட்டதென திரு இராமேச்சர வரலாற்றுத் தரவினாலறிய முடிகின்றது இதனைத் தொடர்ந்து பல திருப்பணிகளாற்றப்பட்டு 1920ஆம் ஆண்டிலும் மற்றோர் திருக்குடமுழுக்கு விழாச் செய்யப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயம் காடடர்ந்து அழிந்த நிலைகண்டு நாட்டின் சைவப் பெருமக்களின் உள்ளத்தை விழிப்படையவும் பழைய உயர் நிலைக்குத் திருக்கோயில் வளரவும் வேண்டுமென்ற நினைப்பினாலும் உந்துதலினாலும் 1948 ஆம் ஆண்டு இத்திருவிடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் சைவப் பெரு மாநாடொன்று கூட்டப்பட்டது. இம் மாநாட்டைக் கூட்ட முன்னின்று உழைத்த பெருமக்கள் வரிசையில் வேலணையூர் வி.கே. செல்லப்பாச் சுவாமியார், திருவாசக முதல்வர் சி.சரவணமுத்து அடிகள், சட்டத்தரணி சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கூடிய சைவப்பெருமாநாடு ஆலயத்தை மறுசீரமைத்து வளம்பல பெற வைக்க வேண்டுமென்ற சிந்தனையை உருவாக்கத் தவறவில்லை. இம்மகாநாட்டைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் ஆலயத்தில் உருவாக்கப்பட்ட சபையே இன்றுலகளாவிய பெருமையுடன் திகழ்கின்ற திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை கருங்கல்லால் கட்டப்பட்டதாகும் கௌரியம்பாள் கோயில் மலேசியா திருப்பணிச்சபைக் கிளையினரால் அமைக்கப்பட்டதாகும். இத்திருக்கோயிலில் நிறுவப்பெற்றுள்ள கருங்கல் திருப்படிகங்களில் பெரும்பாலான படிமங்கள் மாமல்லபுரம் அரசினர் சிற்பக்கலைக் கல்லூரியில் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்திருக்கோயிலில் 1952லும் 1960 ஆண்டிலும் திருவுருவப்படங்கள் நிறுவப்பட்டு இருமுறை குடமுழுக்காட்டப் பெற்றது. அதனைத் தொடர்ந்து முடிந்தவரை பல்வகைத் தொல்லைகட்காளாகிய நிலமையையும் பொருட்டாக நினைக்காது முயன்று தம்மையே ஈசற்கீந்து அரும்பாடுபட்டு இத்திருக்கோயிலை எடுத்த பெருமை சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களையும் மண்மேடாகவும் சேறாகவுமிருந்த பாலாவித் தீர்த்தக் குளத்தை வெட்டி அணையிட்டு செம்மையுறச் செய்திட்ட நீர்ப்பான பொறியியலாளர் அருளாளர் எஸ்.ஆறுமுகப் பெருந்தகையையும் சைவ உலகு என்றும் மறவாது

திருக்கேதீச்சரத்திற்குச் செல்லும் அடியவர்களின் வசதிகளை உளத்தில் கொண்ட அருளுள்ளத்தினர் பெருந்தனவந்தர்கள், அரச நிறுவனங்கள் ஆலயச் சூழலில் திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நகரத்தார் மடம், நாவலர் மடம், அம்மா சத்திரம், திருப்பதி மடம், திருவாசக மடம், மகாசிவராத்திரி மடம், பொன்னாவெளி உடையார் மடம், நாதன் சத்திரம், மலேசியா மடம், கதிர்காமத் தொண்டர் மடம், மகாதுவட்டா மடம், பூனகரி மடம், அடியார் மடம், நீர்பாசன மடம், சிவபூசை மடம், நரசிங்கர் மடம், கட்டடத்திணைகள மடம் என பல்வேறு திருமடங்களை நிறுவி அடியார்கட்காறுதலளித்த பெருமைகளாயின.

அது மட்டுமா? ஒரு நகரத்தை அழகுசெய்வதற்குரிய மருந்தகம், மக்கள் நலம் பேணகம், ப.நோ.கூ. சங்கம், கி.மு.சங்கம், கி.அ.சங்கம், கிராமோதய சபை, நீர்வழங்கல் சபை, அஞ்சலகம், அங்காடிகள் போன்ற மிகமிக அவசியமான அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தமை கண்கூடு.

ஏதுங் குறைவின்றி எல்லாமமைந்து தன்னிறைவு பெற்றிருந்த திருக்கோயிற் திருமடம் திருக்கோயிலைத் தவிர்ந்த அனைத்து வளங்களும் அழிந்து போய் பழைமை நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளமை உள நோவைத் தாராதிருக்கின்றது. 1976ஆம் ஆண்டு வெகு சிறப்புடன் திருக்கோயில் திருக்குடத் திருமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா நிகழ்த்தப் பெற்று 1990ஆம் ஆண்டுவரை நித்திய நைமித்திய பெருவிழாக்கள் நடைபெற்று வந்தன

1990க்குப் பின் பூசையோ பெருவிழாக்களோ நடைபெறமுடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுக் காடு மண்டிக் களையிழந்து காட்சிதருவது கண்கூடு

இக்கால எல்லையில் ஐந்து திருத்தேர்கள் முயன்று உருவாக்கப்பட்டு வீதிவலம் வந்தகாட்சிதனை அருளடியார்கள் மறந்திருக்கமுடியாது. முதற்பெருந் தேரில் உலாவர உலகிலேயே பெரிய சோமாஸ்கந்த தெய்வத்திருவுருவம் வடிக்கப்பட்டு உலாவந்த காட்சி அருளாளர்களால் என்றும் மறக்க முடியாத காட்சியாகும். புதுமையான சிற்பங்களைக் கொண்ட திருக்கோயிலையுந் திருத்தேர்களையும் அமைத்த பெருமை தமிழ்நாடு மாமல்லபுரம் அரசினர் சிற்பக் கலைக் கல்லூரி வினைஞர்களையும் பழனி சிற்பக்கலாவல்லுனர்களையும் யாழ் திருநெல்வேலி ஆறுமுகம் சீவரத்தினம் எனும் சிற்பக்கலா வல்லுனர்களையும் சார்ந்ததென்றால் அது மிகையாகாது.

இத்துணை சிறப்புக்கள் அமைந்ததாகவும், எந்தக்குறையுமில்லாத எல்லாமடங்கிய தன்னிறைவு பெற்ற பெருங்கோயிலாக அமைக்க வேண்டுமென்ற ஆர்வங்கொண்டு அல்லும் பகலும் கோயிலே தன் சிந்தையாகக் கொண்டு கோயில் பற்றிய தரவுகளைக் காட்டும் நூல்களை நுணுகி ஆராய்ந்து சிவாகம நடைமுறை பிழையாது அமைத்திட நாளும் பொழுதும் சிந்தித்துச் செயலாற்றிய ஆற்றி வருகின்ற சட்ட வல்லுனர் சைவப் பெரியார் இ.நமசிவாயம் அவர்தம் சேவையையும் அவருடன் உறுதுணையாய் பணியாற்றும் அன்பர்களின் பணிகளையும் நன்றியுள்ள சைவ உலகம் என்றும் மறாவதிருக்குமென நம்புவதில் தவறேது.

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

ஈழத்தின் பழைமை மிக்க சிவாலயங்களில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரமும் ஒன்று. கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோயில்களில் சிறப்புமிக்க பாரம்பரியங்களைக் கொண்டது. வீரசைவ மரபினை விளக்கி நிற்கும் ஆலயம்.

மட்டுமாநகருக்கு தெற்கே மண்முனைப் பாலத்தினூடாக சுமார் 13 கி.மீ தொலைவில் செழிப்பும் வனப்பும் மிக்க பழம்பதியாக விளங்குவது கொக்கட்டிச்சோலை. காடும் வயலும் சூழ்ந்து விளங்குவது.

மன்னர்கள்,வன்னியர்கள் போன்றோர் இச் சிவாலயத்திற்குப் பல அற நன்கொடைகளைக் கொடுத்துள்ளனர். கோயில் தொடர்பான வழக்காறுகளையும் குடிமரபுகளையும் விளக்கும் பாடல்கள் திருப்படைப்பத்ததியில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் ஆண்டு தோறும் வேட்டைத்திருவிழாவன்று படிக்கப்பட்டு வருகின்றன.

கோயில் வரலாற்றினைக் கொக்கட்டியார் மரபோடு திருவேட்டைக் காவியம் தொடர்புபடுத்திக் கூறுகின்றது. அதில் “கதிரமலையைத் தரிசிக்க முத்துலிங்கர், கொக்கட்டியர் என்ற இரு தபோதனர் புறப்பட்டனர். கொக்கட்டியார் சிவபதமடைய, அவரைச் சமாதியிருத்தி, முத்துலிங்கர் கதிரமலையைத் தரிசிக்கச் சென்றார். அச்சமாதியிலிருந்து ஒரு லிங்கம் உண்டாகி, கொக்கு நெட்டி மரம் ஒன்றினால் மறைக்கப்பட்டிருந்தது. தேன்பெறச் சென்ற வேடர் அம்மரத்தை வெட்ட இரத்தம் சிந்தியது. இதை சொப்பனத்திலறிந்த கதிர்காமயாத்திரிகரில் ஒருவரான செட்டியார் கோயில் திருப்பணியைப் பூர்த்தி செய்தார். இவ்வாலயமே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் என அழைக்கப்படுகின்றது. இங்கு வேடர் பூசையே நிகழ்ந்தது.” எனக் கூறப்பட்டிருந்தது.

மற்றொரு செய்தி உலக நாயகியோடு தொடர்புடையது. “குணசிங்கன் மட்டக்களப்பினை ஆண்ட காலத்தில் கலிங்கதேசத்து குகசேனனுடைய புத்திரி உலகநாயகி புத்தரின் சின்னத்தையும், முன்னோர்கள் கைலாயத்திலிருந்து எடுத்துப்பேணிய சிவலிங்கத்தையும் கொண்டு தன் சகோதரன் உலகநாதனுடன் இலங்கை வந்தாள். மேகவர்ணனிடம் புத்தசின்னத்தைக் கொடுத்து தனக்கு குடிகளில்லாத காட்டுப் பிரதேசமொன்றினைத் தரவேண்டும் என அரசனிடம் கேட்டாள். மேகவர்ணன் மட்டக்களப்பு அதிபதியாகிய குணசிங்கனுக்கு திருமுகம் எழுதிக் கொடுத்து அனுப்பி வைத்தான். குணசிங்கன் அவளுக்கு மண்முனையை நிந்தமாகக் கொடுத்து, குடிகளை இருத்தி, அவள் வாழ்வதற்கு மாளிகை ஒன்றினையும் அமைத்துக் கொடுத்தான். உலகநாயகி அங்கு தன் வாழ்வினை அமைத்துக்கொண்டதன் பின், இந்தியாவிலிருந்து 106 குகக் குடும்பங்களையும், 30 சிறைக் குடும்பங்களையும் வரவழைத்து குடியமர்த்தினாள். மக்களின் வழிபாட்டிற்காக மண்முனையில் கோயில் ஒன்றினைக் கட்டுவித்து சிவலிங்கத்தின் திருவடிவினைத் திருநிலைப்படுத்தினாள்.

திகடன் என்னும் வேடர் தலைவன் களப்பு முனைக் காட்டில் தென்புறத்தில் காடுவெட்டும் போது கொக்கு நெட்டி மரத்தினை வெட்டினான். அவ்வெட்டுத் தழும்பிலிருந்து இரத்தம் பெருகியது. அதனைக் கண்ட வேடன் துணியினால் வெட்டுவாயைக் கட்டியபின் உலகநாயகிக்கு அறிவித்தான். உலகநாயகி அங்கு சென்று பார்த்தபோது அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்று தோன்றியிருந்ததனைக் கண்டனள். அதனால் அவ்விடத்தைத் துப்பரவு செய்து கோயில் கட்டி, குடிகளை அமர்த்தினாள்." என்பது மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்படும் செய்தி ஆகும்.

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரருக்கு இரு சுற்று மதில்களும் 4 மூலைகளிலும் 4 மடங்களும் பிரதான ஆலயத்தைச் சூழ பார்வதியம்மன், விக்னேஸ்வரர், முருகன், வள்ளியம்மன், தெய்வயானை, மகாவிஷ்ணு, வைரவர், நாகதம்பிரான், நவக்கிரகங்கள் என்பவற்றிற்கு சிறு சிறு ஆலயங்களும், கொடித்தம்பத்தொடு கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், நிருத்தமண்டபம், மகாமண்டபம் என மண்டபங்களோடு கூடிய ஆலயம் அழகாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வாலயத்திற்கென வயல் நிலங்கள் குளக்கோட்டன், கலிங்கமகான், விமலதர்மசூரியன், விக்கிரமசிங்கன் போன்ற மன்னர்களால் மானியங்களாக வழங்கப்பட்டிருந்தன.

மூன்று வண்ணக்குமாரின் தலைமைச் செயற்பாட்டினைக் கொண்ட பரிபாலனசபையே இவ்வாலயத்தை நிருவகித்து வருகின்றது. இச்சபையின் கலிங்கா குடியைச் சேர்ந்தவர் தலைமைப் பொறுப்பினை ஏற்க, உலகிப்போடி குடியினைச் சார்ந்தவர் நிதி அலுவல்களைக் கவனிக்க, படையாண்ட குடியைச் சேர்ந்தவர்கள் நிருவாகச் செயற்பாட்டினைப் பார்த்துக் கொள்வர். தேசத்துக் கோயிலுக்குரிய தனித்துவமும் இங்கு பேணப்பட்டே வந்தது.

இங்கு தினந்தோறும் 3 காலப்பூசை நடைபெறுகின்றது. தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைப் பிறப்பு, வைகாசிப் பௌர்ணமி, ஆடிஅமாவாசை, தீபாவளி, கந்தசஷ்டி, கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் அபிஷேகங்களும், பூசைகளும் நடைபெற்று வருகின்றன. சிவராத்திரி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை என்பவை பெருவிழாவாகக் கொண்டாடப்படும்.

இவ்வாலயத்தில் சங்கமர் என்னும் வீரசைவர்களே பூசைகளை நிறைவேற்றி வருகின்றார்கள். பொதுவாக திருப்படைக் கோயில்களில் இவ்வழிமுறை நீண்டகாலமாக கைக் கொள்ளப்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றி கிழக்கில் தமது நிலைகளை வலுப்படுத்தியதோடு சிறப்புமிக்க ஆலயங்களையும் அழித்தனர். இந்நிலையில் ஒரு நாள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தை முற்றுகையிட்டனர். ஆலயத்தைச்சுற்றிப் பார்த்த போர்த்துக்கேய தளபதி கல்லில் செதுக்கிய மாட்டைக் கண்டு திகைப்புற்று,''கல்லாலான இம்மாடு புல் தின்னுமா?'' எனக் கேட்டான். அதற்கு குருக்கள் ''இம்மாடு ஒரு நாளைக்கு ஒரு தடவை தான் புல்லுத் தின்னும்'' எனக் கூறினார். நாளை தான் வருவதாகக் கூறிச் சென்ற தளபதி, அடுத்த நாட்காலை வந்து புல்லைத் தின்னக் கொடுக்குமாறு கட்டளையிடுகின்றான். குருக்களும் புல்லை மாட்டுக்குக் கொடுக்க கல்மாடு எழுந்து நின்று அசைபோட்டு புல்லைத் தின்று சாணத்தையும் போட்டது. பின்னர் அப்படியே கால்களை மடித்து மெதுவாகப் படுத்து விட்டது. இதனைக் கண்ணுற்ற தளபதி கரங்களைக் கூப்பிய வண்ணம் குருக்களை வணங்கி தனது தவறுக்காக மன்னிப்பு கோரியதாகவும், அதன்பின் எந்தச் சைவக்கோயில்களிலும் கை வைக்கவில்லை என செவிவழி வரலாறுகள் உணர்த்துகின்றன. இதை நினைவு கூரத்தக்க வகையில் கல்லாலான மாடு இன்றும் சாட்சியாக காட்சி தருகின்றது.

இவ்வாலய மகோற்சவம் ஆவணி முதற் பிறையில் கொடியேறி பூரணைக்கு அடுத்துவரும் திங்களில் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுறும். கொடியேற்றம் தொடக்கம் தேரோட்டம் வரையும் 18 திருவிழாக்கள் இடம்பெறும். தேர்த்திருவிழாவிற்கு மறுதினம் அதிகாலை 'திருவேட்டைத் திருவிழா'' தொடங்கி தீர்த்தத் திருவிழாவிற்கு முன்னதாக முடிவுறும். இதனை அடுத்து 'குடுக்கை கூறல்'' இடம்பெறும் மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் பல்வேறு வகுப்பினரும் இவ்வாலயத்தில் தொண்டுழியம் புரிய வரையறுக்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பாகும். இதனடிப்படையிலேயே 'குடுக்கை கூறல்' என்னும் கௌரவிப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது,

இவ் இறைவன் மீது தான்தோன்றீஸ்வரர் ஊஞ்சல், காவடிச் சிந்து, திருப்பதிகம், கும்மி, சின்னவப்புலவரின் தான்தோன்றீசுரர் பதிகம் என்பன பாடப்பட்டுள்ளன.

# முன்னேஸ்வரம்

இலங்கையின் புகழ்பெற்ற தொன்மை வாய்ந்த சிவாலயங்களில் முன்னேஸ்வரமும் ஒன்று. இது வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்த புத்தளம் மாவட்டத்தில் நீர்வளம், நிலவளம் இயற்கை எழில் மிக்க சிலாபம் எனுமிடத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் பல்வேறு சமயத்தவர்களும் போற்றும் புனித தலமாக பிரபல்ய தலமாக இத்தலம் திகழ்கின்றது.

வியாசர், இராமர் முதலியோர் வழிபட்ட தலமாகவும் இது போற்றப்படுகின்றது. இங்கு முனிவர்கள் சிவபிரானை வழிபட்டதால் இது முனீஸ்வரம் என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இராமபிரான் இத்தலத்திலே சிவபிரானை வழிபட்டுத் தம்மைப் பீடித்த பிரம்மஹத்தியினின்று விடுதலை பெற்றார் எனக் கூறப்படுகின்றது.

இத்தலம் முற்காலம் தொட்டு நிலவும் ஈஸ்வரம் சிவாலயம் என விளக்கப்படுவதே இதன் தொன்மையை எமக்கு விளக்குகிறது. தொன்மைக்கேற்ப இறைவன் முன்னைநாத சுவாமி எனவும், அம்பாள் தலைசிறந்த அழகியாக வடிவாம்பிகை என அழைக்கப்படுகின்றார். 51 சக்தி பீடங்களில் மிகச் சிறந்ததொன்றாகப் போற்றப்படுகின்றது. மூலமூர்த்தியாக வடிவாம்பிகை சமேத முன்னைநாத சுவாமி போற்றப்படுகின்றார்.

குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்திற்கும் பெரிய திருப்பணிகள் செய்ததாக முன்னேஸ்வரமான்மியத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இவன் சிதைந்த நிலையில் இருந்த ஆலயத்தை மீள அமைத்து மகா கும்பாபிஷேகத்தைச் செய்ததாகவும், இவ்வாலயத்தில் பணிபரிவதற்காக சோழ நாட்டிலிருந்து பலதிறப்பட்டவர்களைக் கொண்டு வந்து ஆலயப் பணிகளில் ஈடுபடுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

கி.பி 15ம், 16ம் நூற்றாண்டுகளிலே முன்னேச்சரம் மிகச் சிறப்பாக விளங்கியது. கோட்டை அரசனான 6ம் பராக்கிரமபாகு பௌத்த சமயத்தவனாயினும் இந்து சமயத்தில் ஈடுபாடு கொண்டவனாகக் காணப்பட்டான். கோயிலுக்கும் பூசகர்களுக்கும் இவன் நன்கொடைகள் வழங்கியதாக இக் கோயிலில் காணப்படும் தமிழ்க்கல்வெட்டுக் குறிப்பிடப்படுகின்றது.

ஒன்பதாம் பராக்கிரமபாகு (கலிகால சர்வக்ஞ பண்டிதன் என்பது இவனது விருதுப் பெயர்) இவ்வாலயத்திற்கு வந்து வழிபாடு செய்து, கோயிலுக்கு பல கிராமங்களை மானியமாக வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் கி.பி 1578 இல் முன்னேஸ்வர ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டது. இவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயம் கண்டியரசனும் நாயக்க வம்சத்தவனுமாகிய கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனால் (கி.பி 1747 – 1782) மீளப் புனரமைத்து 1757 இல் மகா கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடத்தினான். இவன் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகளைச் செய்து சிவாச்சாரியார்களுக்கு நெல்விளை நிலங்களைக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது.

மூன்று வீதிகளைக் கொண்ட இக்கோயிலின் திருக்குளத்தின் கரையில் அமைந்த அரசமரம் தலவிருட்சமாகப் போற்றப்படுகின்றது. மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்கள் உள்ளன. மாயவனாறு எனப்படும் தெதுரு ஓயா ஆறு இவ்வாலயத்தின் தீர்த்தமாகும்.

பிரதான கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கர்ப்பக்கிரகமும் ஸ்தூபியும் இலங்கையிலுள்ள கோயில்களில் மிகப்பெரியவை. விமானம் 46 அடி உயரமுள்ளது. மூன்று தளம் கொண்ட விமானம் கண்டியரசன் காலத்தில் அமைக்கப்பட்டது.

கர்ப்பக்கிரகத்திலே சுயம்புலிங்க வடிவில் மூல மூர்த்தி ஆகிய முன்னைநாதரும் வடிவாம்பிகையும் விளங்குகின்றனர்.

பிள்ளையார், சுப்பிரமணிய சுவாமி சந்நிதானங்களிலே கற்குத்துவிளக்குகளே இன்றும் நாடோறும் பயன்படுத்தப்படுகின்றன.

விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், நடராஜர் முதலிய விக்கிரகங்கள் மிகவும் கலையழகுடன் விளங்குகின்றன. இவை இன்றும் இக்கோயிலிலே வைத்து பூசிக்கப்படுகின்றன.

சைவ சமய மரபிற்கேற்ப கோயிலில் நடைபெற வேண்டிய பூசைகள், உற்சவங்கள், கிரியைகள் யாவும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் ஒழுங்காக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று நடைபெறும் விசேட ஸ்ரீ சக்கரபூசை பர்வயந்திர பூசை எனப்படும். சிவசக்தி ஐக்கிய ரூபமாகவுள்ள ஸ்ரீ சக்கரத்தினை இலங்கையில் முதன்முதலிலே வழிபாடு செய்யும் முறையினைத் தொடக்கிய தனிச் சிறப்பு இத்தலத்திற்குரியது.

மகோற்சவம் ஆண்டுதோறும் 28 நாட்களுக்கு நடைபெற்று ஆவணிப் பௌர்ணமியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். இத்திருவிழாக்களிலே பக்தோற்சவம், பிஷாடணோற்சவம், நடராஜ உற்சவம், வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பன குறிப்பிடத்தக்கன.

திருவிழாவின்போது நாள்தோறும் விநாயகர், சுப்ரமணியர்,ஆறுமுகர், சோமாஸ்கந்தர் ஆகியோர் உடைய திருவுலாக்காட்சி இடம்பெறும். பக்தோற்சவம் அன்று 63 நாயன்மார்களுடைய திருவுருவங்களும் வழக்கமாக வரும் திருவுருவங்களுடன் சேர்ந்து வலம் வரும் திருவுருவக் காட்சி தனிச்சிறப்பு வாய்ந்தது. இத்தகைய உற்சவம் முன்னேஸ்வரத்திற்கே தனிச்சிறப்பானது.

பிரதோஷம், வெள்ளிக்கிழமை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருஷம், நடேசருக்குரிய ஆறு அபிஷேகங்கள், நவராத்திரிகள் (வசந்த , சாரதா) கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை என்பனவற்றிற்கான விசேட பூஜை, அபிஷேகங்கள், நடைபெற்று வருகின்றன.

தைமாத பூச நட்சத்திரத்தினை இறுதியாகக் கொண்டு இலட்சார்ச்சனை நடத்தப்படுகின்றது. சரத் நவராத்திரி, வசந்த நவராத்திரி என்பன சண்டிஹோமம், ஸ்ரீசக்கரபூசை முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இக் கோயிலின் மகிமையைப் பற்றிப் பல பிரசுரங்கள் வெளிவந்துள்ளன. ஸ்ரீமுன்னேஸ்வர மான்மியம், ஸ்ரீமுன்னை நாத சுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல், முனீசுரர் நவமணிமாலை, முனீஸ்வரர் ஊஞ்சல், முன்னை நாதேஸ்வரர் திருவூஞ்சல், முனீஸ்வரரந்தாதி, முனீஸ்வர வடிவழகி பதிகம், முனீஸ்வரன் கப்பல், முனீஸ்வரக்கும்மி, ஸ்ரீமுன்னேஸ்வரம் வடிவழகியம்மன் திருவிருத்தம், ஸ்ரீவடிவாம்பிகை பஞ்சரத்தினம்,முன்னேஸ்வரம் கும்பாபிஷேகமலர் (1963), முன்னேஸ்வரம் கோடி அர்ச்சனை மலர் (1961) என்பனவும் குறிப்பிடத்தக்கன.

# நகுலேஸ்வரம்

இலங்கையிலுள்ள புராதன சிவாலயங்களுள் கீரிமலைச் சிவன் கோயிலும் ஒன்று. யாழ்ப்பாணத்துச் சிவன் கோயில்களில் அதுவே மிகப்பழைமையானது. நகுலேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம் என்னும் பெயர்களால் இது வழங்கி வருகின்றது. தலயாத்திரைகளுக்குப் பிரசித்தமான தலமாகவும், சமுத்திரத் தீர்த்தத்தின் காரணமாக சிறப்புடையதாகவும் நகுலேஸ்வரம் விளங்குகின்றது. சபிண்டீகரணம், அஸ்திசஞ்ஜனம் முதலிய கிரியைகளுக்குச் சிறப்பாகவுள்ள புண்ணிய ஷேத்திரமாகவும் நெடுங்காலமாக விளங்கி வருகின்றது.

நகுலேஸ்வரம் பற்றிய சில ஐதீகங்களும் வரலாற்றுக் குறிப்புகளும் யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பெற்றுள்ளன. விஜயராசன் தனது அரசாட்சியை ஆரம்பிக்கும் போது நான்கு திசைகளிலும் இருந்த ஆலயங்களை புனருத்தாரணம் செய்ததாகக் கூறப்படுகின்றது. அதில் வடதிசையில் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலை என்னும் பதியில் திருத்தம்பலேஸ்வரன், திருத்தம்பலேஸ்வரி கோயில்களையும். அதற்குப் பக்கத்தில் கதிரையாண்டவர் கோயிலையும் கட்டுவித்து, பூசனைபுரிய வாமதேவாச்சாரியார் என்னும் பிராமணனையும் காசியிலிருந்து வரவழைத்ததாகக் கூறப்படுகின்றது.

இக் கோயிலின் தலச் சிறப்பினை விளக்கும் வண்ணம் புராணக்கதைகள் பல உள்ளன. இதில் நகுலமுனிவரின் கதையும் ஒன்று. நகுலமுனி என்னும் முனிவர் அங்குள்ள மலைச் சாரலில் தங்கியிருந்து தீர்த்தமாடி வந்தபோது அவரின் கீரிமுகம் மாறிய காரணத்தினால் அம்மலை கீரிமலை என்னும் பெயர் பெற்றது. திருத்தம்பலேஸ்வரம் கோயில் நகுலேஸ்வரம் கோயில் என்றும் திருத்தம்பலேஸ்வரியம்மன் கோயில் நகுலாம்பிகையம்மன் கோயில் என்றும் வழங்கி வந்தார்கள்.

கீரிமலைத் தலத்தின் சிறப்பினை விளக்கும் அம்சங்களுள் மாருதப்புரவல்லி பற்றிய கதையும் காணப்படுகின்றன. சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிரசோழன் மகள் மாருதப்புரவல்லி என்பவள் தனது குன்மவியாதியை வைத்தியத்தினால் நீக்கமுடியாமல் தீர்த்தயாத்திரை செய்யக் கிளம்பினாள். சாந்தலிங்கம் என்னும் சந்நியாசி இலங்கையின் வடமுனையில் கீரிமலை என்றொரு மலையுள்ளது என்றும் அது சமுத்திரத்திலுள்ளது. அங்கே சுத்த தீர்த்தமும் மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தம் ஒன்றுண்டு. அதில் தீர்த்தமாடி சிலகாலம் அங்கு தங்கியிருந்தால் சுகமடைவாய் எனக் கூறினார். அதைக் கேட்டு, மாருதப்புரவல்லி கீரிமலைச் சாரலில் வந்து இறங்கி, நகுலமுனிவரைக் கண்டு வணங்கி, ஆசீர்வாதம் பெற்று, அவரின் கீரிமுகம் மாறிய செய்தியையும் கேட்டு சந்தோஷத்துடன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனம் செய்து வந்தாள். சிலகாலத்தில் அவளுக்கிருந்த குன்மவலியும் தீர்ந்து குதிரை முகமும் மாறிற்று. தீராத நோய் தீர்க்கவல்ல அற்புதமான தலம் கீரிமலை என்ற கருத்தை வலியுறுத்தும் பாங்கில் அமைந்ததே மாருதப்புரவல்லியின் கதை.

யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் நகுலேஸ்வரம் அரசர்களின் ஆதரவுக்கும், அபிமானத்திற்கும் உரிய தலமாக விளங்கியது. நல்லூரில் இராசதானி அமைத்த சிங்கையாரியன், கீரிமலையோடு தொடர்பு கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வாலயம் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், நிருத்தமண்டபம், கோபுரவாயில், பரிவாரதேவர் கோயில்கள், பிரகாரம் என்னும் அமைப்புக்களுடன் விளங்குகின்றது.

சிவாகம விதிப்படி நித்திய நைமித்திய உற்சவங்கள் நடைபெறுவது வழக்கம். திருப்பள்ளி எழுச்சி தொடக்கம் அர்த்தசாமப்பூசை ஈறாக நாள்தோறும் ஆறுகாலப்பூசை நடைபெறும்.

மாதப்பிறப்பு, வருஷப்பிறப்பு, சித்திராபௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆவணி மூலம், மானம்பூ, புரட்டாதிச்சனி, மார்கழித் திருவெம்பாவை, திருவாதிரை, மாசிமகம், பங்குனி உத்தரம், சோமவார விழாக்கள் நடைபெறும். மார்கழி மாத ஏகாதசியில் புராணபடனமும் நடைபெறும்.

சிவன்கோயிலில் வருடாந்த மகோற்சவம் மாசி மாதத்தில் நடைபெற்று வருகின்றது. சிவராத்திரி அமாவாசையன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. அம்மன் கோயிலில் பங்குனி மாதத்தில் கொடியேற்றத் திருவிழா நடைபெறும். சித்திரை வருடப்பிறப்பில் தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறும். அடியார்கள் தங்கி வழிபாடு செய்வதற்கு வசதியாக மடங்கள் உள்ளன.

கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்பன இங்கு புராணபடனம் செய்யப்படுகின்றன. இவற்றோடு நகுலாசல புராணம், ஏகாதசிப்புராணம் என்பனவும் படிப்பார்கள். மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணத்தைப் படித்துப் பயன் சொல்லுவது வழக்கம். சிவாச்சாரியர்கள் புராணபடனத்தைத் தொடக்கி வைப்பது இவ்வாலய வழக்கம். அவர்களோடு பிறருங் கலந்து கொள்வர். ஏரம்பையர் அப்பாசாமி ஐயர், வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, த.கைலாசப்பிள்ளை முதலிய வித்துவான்களும் புராணபடனம் செய்தனர். அவர்களின் காலத்திற்குப்பின் கருகம்பானை செய்தனர். சங்கரப்பிள்ளை பண்டிதர்களான கதிரிப்பிள்ளை, சங்கரப்பிள்ளை, நமசிவாயம் என்போர் அதனை நடாத்திச் சென்றனர்.

கோயில்களின் மரபுவழியான ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டு பல பிரபந்தங்கள் தோன்றின. அவ்வகையில் நகுலேஸ்வரம் பற்றிய நூல்களாக நாம் குறிப்பிடக்கூடியவைகள் :- நகுலாசல புராணம்- ஏரம்பையர், செ. சுப்ரமணியம் - நகுலாசல புராணத்திற்கு எழுதிய உரை, நீர்வேலிப்பண்டிதர், ச. சிவப்பிரகாசம் சமஸ்கிருத மொழியில் பாடிய நகுலேஸ்வர மான்மியம்.இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர், அ.குமாரசாமிப்புலவர், அராலியூர் விஸ்வநாத சாத்திரியாரின் நகுலமலைக் குறவஞ்சி, குமாரசாமிப் புலவரின் நகுலேசர் ஊஞ்சல், பண்டிதர். இ. நமசிவாயத்தின் நகுலேசர் சதகம் என்னும் பிரபந்தம், செ. சுப்ரமணியம் என்பவர் நகுலேஸ்வரம் மீது பாடிய பல பக்திரசக் கீர்த்தனைகள். மயில்வாகனப் புலவரின் நகுலேசுவரர் விநோத விசித்திர கவிப்பூங்கொத்துஎன்பன குறிப்பிடத்தக்கன.

# பொலனறுவைக் கோயில்கள்

பழந்தமிழ் நூல்கள் எழுந்தகாலத்திலேயே சோழர்கள் பற்றியகுறிப்புக்கள் பாடல்களில் காணப்படுகின்றன. நளன்கிள்ளி, நெடுங்கிள்ளி, கோர்ச்செங்கணான் முதலான சோழமன்னர்கள் பற்றியகுறிப்புக்கள் புறநானூறு முதலானசெய்யுள்களில் காணப்படுகின்றன. முத்தரையர்கள் என்னும் குறுநிலமன்னர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து தஞ்சையை மீட்டுதரணியை ஆண்ட பெருமை விஜயாலய சோழனையேசாரும். முதலாம் இராஜராஜசோழன், அவன் மகன் இராஜேந்திரசோழன் ஆகியோரதுஆட்சியிலே சோழராட்சி எட்டுத்திக்கிலும் பரவி விரிந்து நானிலம் போற்றும் பெருமைபெற்றது. தென்னிந்தியாமட்டுமன்றி அருகிலுள்ள இராச்சியங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றியதோடு கடல் கடந்து கடாரம் வென்று யாவா, மலாயா, ஒரிசா, மாலைதீவு, லட்சதீவு,ஈழம் போன்றவற்றிலும் வெற்றிக்கொடிநாட்டி பாரிய ஆதிக்க விஸ்தரிப்புக்களை ஏற்படுத்தி உலகம் போற்றும் உன்னதமானவர்களாக வரலாற்றில் பேசப்படுபவர்களாக சோழர்கள் விளங்குகின்றார்கள். இலங்கைமீது படையெடுத்துவந்து தமிழர் சிறப்புக் கூற ஆட்சியமைத்தும் இந்துசமயம் தழைத்தோங்க கோயிலமைத்தும் அன்றும், இன்றும், என்றும் தமிழர் தம் புகழ் கூறும் வரலாற்றுத் தடயங்களை இலங்கையில் விட்டுச் சென்ற பெருமை சோழர்களையே சாரும்.

முதலாம் இராஜராஜசோழன் (கி.பி 985-1016) முதலாம் இராஜேந்திரன் (கி.பி 1012-1044) ஆகியோரின் ஆட்சியில் தமிழகத்தைப் போலவே ஈழத்திலும் அரசியல், சமூக சமயவளர்ச்சிகள் மேலோங்கி இருந்தன. இவர்களுடைய ஆட்சியில் இலங்கையில் இந்தசமயம் சிறப்பிடம் பெற்றது. தங்களுடைய ஆட்சியின் கீழமைந்த பிரதேசங்களில் இந்துசமயத்தை வளர்க்க மிகுந்த பிரயத்தனங்களில் ஈடுபட்டனர். தாம் கைப்பற்றி இருந்த இலங்கையின் பகுதியினை ஈழமான மும்முடிச் சோழமண்டலம் என சோழர் குறிப்பிட்டிருந்தனர். இராஜராஜனின் ஆட்சியில் ஈழம் மும்முடிச் சோழமண்டலம் வளநாடு என்றபிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றிலே நிருவாகப் பொறுப்புக்களை மேற்கொண்டிருந்த சோழப்பிரதானிகளும் வணிகரும் படையாரும் கோயில்களை அமைத்து நிவந்தங்களை வழங்கி சமயம் வளர்த்தனர்.

சோழர்கள் இலங்கையில் தாம் கைப்பற்றிய பகுதிகளிலே இந்துசமயத்தை வளர்ப்பதற்காகப் பலகோவில்களை அமைத்தனர். அக் கோயில்கள் இன்றல்ல என்றும் சோழர்கால சிறப்புக் கூறும் என்றால் மிகையாகாது. சோழராட்சியில் ஈழத்தில் ஆலயவளர்ச்சியால் இந்துசமயம் தழைத்தோங்கியது. ஆலயங்கள் கட்டப்பட்டதோடு அவற்றிற்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டன. நாள்தோறும் பூசைநடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சோழராட்சியிலே அருண்மொழித்தேவ வளநாடு என்று வழங்கப்பட்ட மாதோட்டமான இராஜராஜபுரத்தில் இராஜராஜ ஈஸ்வரம், திருவாமீஸ்வரம் என்னும் இருகோயில்கள் அக்காலத்தில் அமைக்கப்பட்டன. இலங்கையில் இருந்த சோழப்பிரதானிகளுள் ஒருவனான சோழ மண்டலத்து ஷத்திரிய சிகாமணி வளநாட்டுவேளார் நாட்டுச் சிறுகூற்ற நல்லூர்க் கிழவன் தாழிக்குமரன் என்பனால் இராஜராஜ ஈஸ்வரம் அமைக்கப்பட்டது. அதற்கு இறையிலி தேவதானமாக மாதோட்டதிதல் நிலம் வழங்கப்பட்டது. அத்தோடு அரசாங்கத்தின் வருமானமும் கோயிலுக்கு நிவந்தமாகவழங்கப்பட்டது. அத்துடன் வைகாசிவிசாகம் ஏழு நாளும் விழா எடுத்து தீர்த்தம் ஆட்டு விக்கவேண்டும் எனவும் தாழிக்குமரன் அறக்கட்டளை ஏற்படுத்தியிருந்தான். இவற்றைக் கூறுகின்ற சாசனம் திருக்கேதீஸ்வரத்தில் காணப்படுகின்றது. திருவாமீஸ்வரம் என்னும் இரண்டாவதுகோயிலில் இராஜேந்திரசோழனின் பெருந்தனத்துப் பணிமகன் சிறுகுளத்தூருடையான் தேவன் சந்திவிளக்கெரிப்பதற்கு ஏற்பாடுகளை செய்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

.

உத்தமசோழஈஸ்வரம் என்னும் சிவாலயத்தைப் பற்றி வடமத்திய மாகாணத்துக் கடவக்கோறளையிலுள்ள ஆதகட என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டினால் அறியமுடிகின்றது. இக்கோயிலை 11 ஆம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்த தமிழ்ப்பிரதானிகள் அமைத்தனர். அரங்கன் இராமேசன் என்பான் இந்தக் கோயிலுக்கு ஒரு வேலி நிலமும் நந்தா விளக்கேற்ற 20 பசுக்களையும் வழங்கினான் என்று கூறப்படுகிறது. மண்டல கிரியான நித்த வினோதபுரத்தில் பண்டித சோழ ஈஸ்வரம் என்னும் சிவாலயம் ஒன்று இருந்ததாக இராஜேந்திர சோழன் காலத்துச்சாசனம் மூலமாக அறியமுடிகிறது.

சோழராட்சியில் புலத்திநகரமான பொலநறுவை ஜனநாதமங்களம் என்னும் புனர்நாமம் பெற்றுத் தலைமை நிருவாக நிலையமாக விளங்கியது. அங்கு இந்துகலாசாரத்தின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவிலே ஏற்பட்டது. தென்னிந்தியாவில் இருந்து வந்த நிருவாக அதிகாரிகளும் படையினரும் நானாதேசிவணிகரும் தொழில்வினைஞரும் அந்தணரும் வேறு பல சமூகப்பிரிவினரும் அங்குவாழ்ந்தனர். அத்தகையோரின் வழிபாட்டுத் தேவைக்கேற்ப பலகோயில்கள் அமைக்கப்பட்டன. பதினாறுக்கும் மேற்பட்ட சைவ, வைணவ ஆலயங்கள் பொலன்நறுவையில் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில சோழராட்சிக்குரியவை ஏனையவை பிற்காலத்தவை.

தொல்லியல் வரலாற்று ஆய்வாளர்களால் இரண்டாம் சிவாலயம், ஐந்தாம் சிவாலயம், ஆறாம் சிவாலயம் என்று கூறப்பட்ட கட்டடங்களில் சோழர் கால தொல்பொருட் சின்னங்கள் கிடைக்கின்றன. இரண்டாம் சிவாலயமான வானவன் மாதேவி ஈஸ்வரம் அழிவுறாது இன்றும் சீரான நிலையில் உள்ளது. இலங்கையில் இன்றுவரை நிலைத்துள்ள கோயில்களில் இதுவே பழைமையானது. சோழர் கலைப்பாணியின் சிறந்த பண்புகளுக்கு கற்றளியான இரண்டாம் சிவாலயம் சிறந்த உதாரணம். சுந்தரசோழனுடைய பட்டத்தரசியின் நினைவாக அதாவது இராஜராஜசோழனின் தாயின் நினைவாக இந்தஆலயம் அமைக்கப்பட்டிருக்கலாம். இக்கோயிலிலுள்ள அதிராஜேந்திர சோழனுடைய கல்வெட்டு சோழர்களின் கோயில் நிருவாக முறையினை சிறப்பாகக் கூறுகிறது. பன்மாகேஸ்வரர் என்றசிவனடியார் கூட்டம் பற்றி அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. பதிபாலமூலப் பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள் என்றகுழுவினர் வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் இருந்தனர். கோயில் பணிகளைச் செய்கின்ற ‘‘பரிசாரகர் ’’ பணிமக்களும் கோயிலில் இருந்தனர். ‘‘மாணிக்கம்’’ என்றபட்டம் பெற்ற தேவரடியார்கள் பலரும் இருந்தனர். கங்கை கொண்ட சோழமாணிக்கம், தேவன் காமியான இராஜேந்திர சோழ மாணிக்கம், தேவன் உய்யவந்தானான முடிகொண்ட சோழ மாணிக்கம் முதலான தேவரடியாரை அங்குள்ள சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

பொலநறுவையில் சோழர் அமைத்த பிற கோயில்களின் பெயர்கள் தெரியவில்லை. அங்குள்ள ஐந்தாம் சிவாலயத்தின் அழிபாடுகளின் இடையே சோழப் பிரதானிகளின் பெயர்களைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அதன் மூலமாக அக்கோயில்கள் சோழராட்சிக்குரியது என்பது தெளிவாகிறது. இந்த ஐந்தாம் சிவாலயமே பொலனறுவை இந்துக் கோயில்களில் மிகவும் பெரியது. அதன் அழிபாடுகளிலும் சுற்றுப்புற அகழ்வாராய்ச்சியின் போதும் கற்களாலான எட்டுப் படிமங்களும் பத்தொன்பது வெண்கலப் படிமங்களும் கிடைத்துள்ளன. தட்சிணாமூர்த்தி, கணேசர், விஸ்னு, காளி, நடராஜர் ஆகியோரின் படிமங்கள் அவற்றிடையே காணப்படுகின்றன. இந்தச் சான்றுகளினூடாக சோழராட்சியில் இந்துசமயம் பெற்ற வளர்ச்சியை உணரலாம்.

இலங்கையின் வடகிழக்குப் பகுதியிலே திருகோணமலை, கந்தளாய், பதவியா என்பவற்றை உள்ளடக்கிய சோழரின் ஆட்சிப் பிரதேசங்களில் சோழரின் பெரும்பாலான சாசனங்களும் தொல்பொருள் சான்றுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றிலே சோழரின் கோயில் கட்டுமானம், புனர்நிருமாணம், சமயப்பணிகள் என்பவற்றைத் தெளிவாக அறியக் கூடியதாய் உள்ளது.

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தினர் பதவியாவில் ஐந்து சிவாலயங்களின் அழிபாடுகளை அடையாளம் கண்டுள்ளனர். அவற்றிடையே சோழரின் ஐந்து கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. ஒருகோயிலின் பெயர் இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்று சாசனம் கூறுகின்றது. இந்த ஆலயம் இராஜராஜனது காலத்திலே பதவியிலிருந்த நானாதேசி வணிகராலும் நிருவாக அதிகாரிகளினாலும் அமைக்கப்பட்டது என்பது அதன் அழிபாடுகளிடையே காணப்படும் சாசனங்களினால் உணரப்படுகிறது.

சோழ இலங்கேஸ்வரனின் ஆட்சியாண்டுகளில் திருகோணமலை மச்சகேஸ்வரத்து மூலஸ்தானமும், அதே இராஜேந்திர சோழவள நாட்டிலுள்ள வேறொரு சிவாலயமும் தொடர்பாக சோழமண்டலத்து இராஜேந்திர சோழவளநாட்டுப் பிரதானிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்வதாக மானாங்கேணிச் சாசனம் அமைந்திருக்கிறது. மச்சகேஸ்வரம் எனப்படுகின்ற திருக்கோணேஸ்வர மூலஸ்தானத்தை சோழர்கள் புனர்நிருமாணம் செய்தனர். இந்தக் கோயிலுக்கு நாள் வழிபாட்டுத் தேவைக்காக நிலம் கொடுக்கப்பட்டதுடன் சோழராட்சியில் மச்சகேஸ்வரத்தில் சிறப்பாக பூசைவிழாக்கள் நடைபெற்றன. இது தொடர்பான விரிவான விபரங்களை நிலாவெளிக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. எனவே சோழர்களுடைய சிறப்பான ஆட்சியிலே தென்னிந்தியாவில் மட்டுமன்றி ஈழத்திலும் இந்துசமயம் சார்ந்த ஆலயங்கள் வளர்ச்சி பெற்றமை சிறப்பானது.

தமிழகவரலாற்றில் வேறெந்தக் காலத்திலும் இல்லாதவாறு மிகச்சிறப்பான ஆட்சி விஸ்த்தரிப்பினையும், சமுதாய முன்னேற்றத்தையும், சமய வளர்ச்சியையும், கலைகட்டுமானங்களையும் ஏற்படுத்திய பெருமை சோழர் காலத்தையே சாரும். இந்திய வரலாற்றில் எத்தனையோ மன்னர்கள் இடம்பிடித்திருக்கிறார்கள் ஆனால் அரசதர்மத்தின் வழி ஆட்சிசெலுத்திதாமும் வாழ்ந்துகாட்டி மக்களை நல்வழிப்படுத்தி நாடும் வளர்த்து சமயத்தோடு கலைவளர்த்து நானிலம் போற்றும் உத்தமர்களாக தமிழக வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் சிறப்பிடம் பிடித்தவர்களாக சோழ மன்னர்கள் திகழ்கிறார்கள். இவர்களுடைய இலங்கை வருகையால் நம் இனத்தின் புகழ் சொல்லுகின்ற வரலாற்றுச் சான்றுகளும் இந்துசமயத்தின் புகழ் கூறும் கோயில்களும் அன்றும், இன்றும், என்றும் தமிழ் இனத்தின் புகழ் பரப்பும் சான்றுகளாய் வரலாற்றில் தடம் பதித்துவிட்டதை யாராலும் மறுத்து விடமுடியாது. இவற்றை அழியவிடாமலும், அழிக்கப்படாமலும் பாதுகாப்பது தமிழராகிய எம் ஒவ்வொருவரினதும் கடமை. அத்துடன் ஆராய்ச்சியின் மூலமாக புதிய விடயங்களை கண்டறிவதும் தமிழரின் தொன்மையையும் புகழையும் அனைவருக்கும் புரியவைப்பதும் வரலாற்று மாணவர்களதும் வரலாற்றாசிரியர்களதும் பொறுப்பு.

# பொன்னம்பலவாணேச்சரம்

இலங்கையின் தலைநகர் **கொழும்பில் கொச்சிக்கடைப்பகுதியில்** முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரே ஆலயம் கொழும்பு பொன்னம்பலவாணேச்சரம் ஆகும்.

## கோவில் வரலாறு

இவ்வாலயம் **1856ம் ஆண்டு அருணாசலம் பொன்னம்பல முதலியார்** என்பரால் கட்டப்பட்டது. அவர் வாழ்ந்த காலத்தில் கொழும்பில் சைவாகம முறைப்படி அமைந்த கோயில் எதுவும் இல்லாத குறை காணப்பட்டது. இதனால் அங்கு வாழ்ந்த சைவ மக்களுக்கென சிற்ப சாஸ்திர ஆகம முறைப்படி அமைந்த கோயில் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் பொன்னம்பலமுதலியாரின் மனதில் குடிகொண்டது. இவ்வெண்ணத்தை நிறைவேற்றும் நோக்குடன் இருந்த முதலியாரின் கனவில் ஒருநாள் தெய்வ அங்கீகாரம் கிடைத்தது. ஆதன் பின் அவரின் கோவில் கட்டும் எண்ணம் பேரார்வமாய் மாறியது.

சைவசமயப் பற்றுமிகுந்த முதலியார் கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் கோயில் கட்டுவதற்கென ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்கிக் கோயில் பணியை ஆரம்பித்தார். தென்னிந்தியக் கோயில்களுக்கு நிகரான கோயிலாக அமைய வேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக இந்தியாவிலிருந்தே கட்டடக்கலைஞர்களை வரவழைத்துக் கோயில் வேலைகளைத் தொடங்கினார்.

பொன்னம்பலவாணேச்சரர் கோயிலை இரண்டு வருடங்களில் கட்டிமுடித்ததோடு அதன் இடதுபக்கத்தில் அம்மனுக்கும் ஒரு கோயில் அமைப்பித்தார். ஆரம்பகாலக் கோயிலின் மூலஸ்தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது.

பொன்னம்பல முதலியார் அவர்களால் கட்டப்பட்ட இத்தலம் பின் அவரின் மைந்தன் சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் புதிதாக நிருமாணிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் பல்லவர், சோழர், நாயக்கர்களினால் கட்டப்பட்ட கோயில்களைப் பார்த்த இராமநாதன் அவர்கள், அவற்றுக்கு நிகராக இக்கோயிலையும் அமைக்க அவாவுற்றார். எனவே தென்னிந்தியாவிலிருந்து வருவித்த சிற்பக் கலைஞர்களைக் கொண்டு கோயிற்பணிகளை மேற்கொண்டார்.

கற்கோயில் கட்டும் பேரார்வமுள்ள இராமநாதன் அவர்கள் 1907 இல் கருங்கற்கட்டட வேலைகளை ஆரம்பித்தார். கட்டுமானப் பணிகளைத் தாமே நேரில் நின்று தொழிலாளரோடு தொழிலாளராக செயற்பட்ட சிவப்பணி அவரின் எண்ணத்தை உயர்த்தியது எனலாம். இவர் ஆரம்பித்த கருங்கல்லால் கோவில் கட்டும் பணி ஆறு வருடங்களின் பின்னே அதாவது 1912 இல் முற்றுப்பெற்றது. வியாங்கொடையிலிருந்து தருவிக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு இன்று நாம் காணும் அழகிய கோயில் நிருமாணிக்கப்பட்டது.

## கோயிலின் அமைப்பு

கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசுவரர் ஆலயம் ஆகம விதி தவறாத முறையில் அமைக்கப்பட்ட ஓர் ஆலயமாகும். கருவறையில் சிவலிங்கம் (பொன்னம்பலவாணேசுவரர்) பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கருவறைக்கு முன்புறம் அர்த்த மண்டபமும் அதற்கு முன்பாக மகாமண்டபமும் உள்ளன. கருவகறையிலுள்ள சிவலிங்கத்திற்கு நேர்கோட்டில் மகாமண்டபத்திற்கு முற்புறமாக நந்தி, பலிபீடம், கொடித்தம்பம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

ஐயன் ஆலயத்திற்கு தெற்குப்புறமாக அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்திற்கு மூன்று தளம் கொண்ட கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் அம்மன் சிவகாமசுந்தரி எனப்படுவார். சுவாமிக்கு அமைக்கப்பட்ட ஆலயமும் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்னும் ஒழுங்கில் அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

சிவகாமி ஆலயத்திற்கு அருகில் பள்ளி அறையும் அதனருகே கல்யாண மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் கிழக்கு வாசலில் இறைவன் சந்நிதிக்கு நேரே முன் பக்கமாக ஐந்து அடுக்கு இராச கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோபுரத்தில் சிவனின் திருவிளையாடலும், அடியவர் பக்தியும் கலைநுட்பத்துடன் செதுக்கப்பட்டுள்ளமை கண்கொள்ளாக் காட்சியாகும். இராச கோபுரத்தைத் தாண்டி முன்பக்கம் முன் பிரகாரத்தில் பன்னிரு இராசிகளும் செதுக்கப்பட்டுள்ளன.

பொன்னம்பலவாணேசுவரர் கோயிலின் உட்பிரகாரத்தில் கணேசர், சோமாஸ்கந்தர், பெருமாள், விஷ்ணு, பஞ்சலிங்கம், சுப்பிரமணியர், சண்முகர், ஞானவைரவர், சுவர்ணவைரவர், நவக்கிரகங்கள், சனிபகவான் ஆகியோருக்கு தனிக் கோயில்கள் உள்ளன. இவ்வாலயத்தின் தல விருடசமாக மாதுளை மரம் விளங்குகின்றது.

## பூசைகளும் விழாக்களும்

இங்கு தினமும் ஆறுகாலப்பூசை நடைபெறுகின்றது. அத்துடன் தினமும் காலையும் மாலையும் பூசைகளும், நித்தியாக்கினி வளர்க்கப்பட்டு நித்திய உற்சவமும் நடைபெறுகின்றன. நித்தியாக்கினி என்பது இக்கோவிலின் அக்கினி குண்டத்தில் எப்போதும் நெருப்பு இருக்கச் செய்வதனால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. நித்திய உற்சவத்தின் போது சுவாமி அம்பாளோடு சிறிய தேரில் உலா வருவார். மாதப்பிறப்பன்று மாதச்சங்கராந்தித் தீரத்தமும், பௌர்ணமி தினத்தில் ஸ்ரீசக்கர பூசையும் நடைபெற்று திருவிழாவும் இடம்பெறுகின்றன.

நித்தியோற்சவம், மாதோற்சவம், வருடோற்சவம், மகோற்சவம் ஆகியன இங்கு ஆகம முறைப்படி சிறப்புற நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இக்கோவிலின் வருடாந்த மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் தீர்த்தம் வரக்கூடியதாக அதற்கு ஒன்பது நாடகளுக்கு முன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறுகிறது. இங்கு ஐந்து இரதங்கள் பவனி வருகின்றன. இவ்வாலயத்தீர்த்தம் ஸ்ரீ சுவர்ண புஷ்கரணி ஆகும். ஆம்பாள் உற்சவம் ஆடிப்பூரத்திற்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி பூரத்தினத்திலன்று முடிவடையும்.

மணவாளக் கோலத் தினமான தைப்பூசத்தினத்தன்று சிவன், அம்பாள் ஆகியோருக்கு தனித்தனி 1008 சங்குகளால் சங்காபிஷேகமும் மாலையில் உற்சவமும் நடைபெறும். கார்த்திகைக் கடைசி சோமவாரத்தினத்தன்று சிவனுக்கு 1008 சங்குகளால் சங்காபிஷேகமும் சுவாமி அம்பாள் உற்சவம் என்பனவும் நடைபெறும். நடேசர் அபிஷேக நாட்களில் ஆருத்திரா உற்சவம் சிறப்பானது.

கந்தசஷ்டி விரத காலத்தில் தினமும் அபிஷேகம், பூஜை, யாகபூஜை, திருவுலா நடைபெறும். நவராத்திரி விரத காலத்தில் இடம்பெறும் யந்திர பூஜை, கொலு பூஜை என்பனவும் குறிப்பிடத்தக்கன. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும். கடைசிச்சனி, கிருஷ்ண ஜெயந்தி உற்சவம், வைகுண்ட ஏகாதசி நாட்களில் மகாவிஷ்ணு உற்சவம் நடைபெறும்.

ஆகம சாஸ்திர ரீதியிலான கிரியைகள் கொண்ட இவ்வாலயம் இனமத பேதமின்றி அடியார்கள் வழிபடும் பொக்கிஷம் என்பது மறுப்பதற்கில்லை. அத்துடன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி புகட்டப்பட்டி வருவதும் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஏனைய மதத்தவர்களுக்கு மத்தியில் பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தின் பணி போற்றத்தக்கது7.

## 4.1 உலக நாடுகளில் இந்து நாகரிகம்

இந்துப்பண்பாடு இந்திய நாட்டில் சிறப்பாக உடையதாயினும் இன்று உலகளாவிய நிலையில் பரந்து வருவதைக் காணமுடிகின்றது. ஆரம்பகால உலக நாகரிகங்களில் பாரசீக நாகரிக அமைப்பு கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்டது. இன்றைய இந்துப்பண்பாட்டிற்குரிய சமய நெறி, மொழி, பண்பாடு என்பவற்றின் மூலாதாரச் செய்திகளை புராதன பாரசீக நாகரிகங்களில் அவதானிக்க முடிகின்றது. இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் மூலங்களை ஆய்வு செய்யும் போது சமஸ்கிருத - லத்தீன் மொழிகளிடையிலான ஒப்பீடுகள் பூர்வீக காலம் தொடக்கம் இந்துப் பண்பாட்டின் மூலாதாரச் செய்திகளை அவதானிக்க முடிகின்றது. உலக நாடுகளில் இந்து நாகரிகச் செய்திகள் பற்றி நோக்கும் போது அதன் பல்வகை பிரதேச அமைப்புகளை பின்வருமாறு அவதானிக்கலாம்.

1. கிறிஸ்து சகாப்தங்களுக்கு முந்திய மத்திய ஆசியப் பண்பாடு இதுவே பாரசீக நாகரிம் எனக் குறிப்பிடப்பட்டது.
2. இந்தோ ஆரிய மொழிகள் இந்திய மொழிகளில் ஏற்படுத்திய செல்வாக்கு
3. இந்தியாவில் சமஸ்கிருத - தமிழ் மொழியின் செல்வாக்கும் பண்பாடும் கலந்தமை.
4. தமிழக கலாசாரம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவியமை.
5. இந்திய, இலங்கை, தென்கிழக்காசியப் பண்பாடுகள் மேற்கைரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் பரவியமை என்பனவாகும்.

இவற்றுக்கும் மேலாக பழையயான கலாச்சாரப் பண்பாடு நிலவியமையால் ஜேர்மனி, சுவிற்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற பல பிரதேசங்களிலும் இந்துப் பண்பாட்டுப் பரவல் வளர்ச்சி பெற்று வந்திருப்பதனையும் நோக்க முடிகின்றது. ஆசிய நாடுகள் மத்திய ஆசியா, தென்னாசியா, தென்கிழக்கு ஆசியா என விரிவுபடுகின்றன. மத்திய ஆசியாவை நோக்கும் போது அதன் எல்லையாக இன்றைய ஈரான் நாட்டின் கிழக்குப் பகுதியும் மேற்கில் மெசப்பத்தேமியாவும் இந்தியாவில் மேற்குப்பர்சஸ் மாநிலமும் முக்கியமான பிரதேசமாக அமையும். இப்பிரதேச பூர்வீக காலங்களில் லிங்க வழிபாட்டின் அடையாளங்கள் காணப்பட்டமைக்கான சான்றுகளைக் காண முடிகின்றது. பூர்வீக காலத்தில் இப்பிரதேச மொழிகளுக்கும் வேதங்களின் மொழியமைப்புக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இந்தியாவின் பூர்வீக மொழிகள் கலந்தமையினால் புதிய பண்பாடுகள் தோற்றம் பெற வழிகாட்டியது.

### தென்கிழக்காசிய நாட்டுப் பண்பாட்டுப் பரவல்.

தென்கிழக்காசிய நாடுகள் ஆசிய நிலப்பரப்பை சேர்ந்தனவாகவும், தீவுக் கூட்டமாகவும் விளங்கின. நிலப்பரப்பு சார்ந்ததாக பர்மா, சம்பா, தாய்லாந்து, கம்போடியா, மலேசியா முதலியனவும் இந்தோனீசியா, யாவா, பாலித்தீவு, சுவர்ணதீபம் என்பவை தீவுக் கூட்டங்களாகவும் காணப்படுகின்றன. தமிழ் நாட்டின் சங்க காலம் தொடக்கம் இந்தியப் பண்பாடுகள் தென்கிழக்காசிய நாடுகளில் பரவலாயின. வடமொழி, தமிழ், கோயிற்கட்டடக்கலை, திருவுருவ வழிபாடு பிராமணிய நெறி, வாழ்வியல் முறைகள், கிரியைகள் ஆகியன பரவலாயின.

## பாரசீக நாடுகளின் இந்துப்பண்பாடு

பல்வேறு அரசியல், சமூக பொருளாதார, வணிக காரணங்களால் இலங்கை, இந்திய நாடுகளில் இருந்து இந்து நாகரிகம் மேலை நாடுகளில் பரவிச் சென்றது. பல்லவ சோழர் காலங்களில் தென்கிழக்காசியா நாடுகளுக்கு இந்துப் பண்பாடுகள் பரவின. அவற்றில மலேசியா, கம்போடியா நாடுகள் பிரதானமானவை. ஆயினும் கிறிஸ்து சகாப்தத்தின் முன்பே பாரசீக நாடுகளில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி சஞ்சரிக்கும் அதற்கான தொல் பொருட் சின்னங்களும் சான்றாக இருப்பதனை நோக்க முடிகின்றது. மேற்குலக நாடுகளில் ஐக்கிய இராய்ச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இந்துப் பண்பாட்டம்சம் விரிவாக எழுச்சி பெற்றிருப்பதனை நோக்க முடிகின்றது.

உலக நாகரிகங்களில் எகிப்து நாகரிகம் பாபிலோனிய நாகரிகம் என்பன ஆரம்ப காலப் பண்பாட்பை பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. பாரசீகம் கிரேக்க உரோம நாகரிக வளர்ச்சிக் காலங்களுடனும் தொடர்புபட்டதாகும். பாரசீக நாடு என்பது பாரசீகத் துறை குடாவை அண்டிய பிரதேசத்தில் காணப்படுகின்றது. இன்றைய ஈரான் பிரதேசம் பூர்வீக பாரசீக நாடுகளைக் குறிக்கும். பாரசீகம் ஆரியரின் ஆதிப் பிரதேசமாகக் கொள்ளப்படுகிறது. இந்தியாவின் மேற்குப் பகுதியில் உள்ள சின்னாசியா என அழைக்கப்பட்ட இடமே பாரசீகம் ஆகும். பாரசீகம் என்பது வட இந்தியாவின் மேற்குப் பகுதியை குறிப்பிடுவதாகும். ஆரியர்கள் ஆரம்பத்தில் மேற்காசிய பகுதியிலே வாழ்ந்து பிற்காலம் வட இந்தியாவிலும் தென்கிழக்காசியா, வட இந்தியா குடியேற்றங்களிலும் வாக்கு பெற்றார்.

பாரசீக மக்கள் போகோஸ்கோஸ் என்னுமிடத்திலும் அதனை அண்டிய இடங்களிலும் வாழ்ந்திருந்தனர். அம்மக்கள் கி.மு1400 வருடங்களுக்கு முன் இந்திர மித்திர முதலிய பெயர்களை உடைய தேவர்களை வழிபட்டார்கள். பாரசீக நாட்டில் வாழ்ந்த மக்கள் இந்து குல வம்சங்களுடன் தொடர்பு பட்டவர்களாவர். யதுகுல வம்சம் துர்வாச குலவம்சம் என்னும் இருவகைக் குலக் குழுக்கள் வாழ்ந்ததாக அறியப்படுகின்றது. பாரசீக நாட்டில் இருந்தே அக்குலங்கள் தமிழ் நாட்டில் பரவியதாகக் கூறப்படுகின்றது. யதுகுல வம்சம் என்பது வைணவ நெறிக்கு மூலாதாரமான விடயங்களை எமக்குத் தருகின்றது. பாரசீக நாட்டுப் பண்பாடுகள் உடனடியாக இந்தியாவை வந்தடையவில்லை படிப்படியாகவே பரவி வந்தமை பற்றியும் கூறப்படுகின்றது.

## மலேசியா

தென்கிழக்காசியாவையும் அதிலுள்ள நாடுகளையும் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பெயர்களால் அழைத்தனர். அந்த வகையில் மலேசியாவையும் இந்தோனேசியாவையும் இணைத்து மலேசியா என்று அழைத்தனர். மலேசியா எனும் பெயரை முதன் முதலில் எமேர்சன் என்பவர் 1937இல் மலாய் மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசத்திற்கு வழங்கினார்.

மலேசியாவில் பிரசித்தி பெற்று விளங்கும் தெய்வங்களுள் பாதாரகுரு என்னும் தெய்வம் சிவபெருமானுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சிவன் நடராசப் பெருமானாக மலாய்த்தோல் பொம்மலாட்டத்தின் பாடகருக்கு அறிமுகமாகியிருந்தார். மலாய் மாயவித்தைக் காரர்கள் சிவனை மகாகாலன் என அழைத்தனர். சக்தி என்னும் சொல்லும் தென்கிழக்காசியாவில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற சொற்களில் ஒன்று. சக்தி என்பதைப் பெற்றவர்கள் தோல்வியே காணாதவர்களாகவும் பிறர் கண்ணுக்குத் தெரியாதவர்களாகவும் விளங்க முடியும் என்னும் நம்பிக்கையும் உள்ளது.

மலேசிய நாட்டிலே அமைந்துள்ள இந்துக் கோயில்களுள் சோர்ட்டு மலை - கணேசர் கோயில், மலாக்கா - பொய்யாத விநாயகர் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன. கோட்டு மலை கணேசர் கோயில் கோலாம் பூரின் பாட்டாளி மக்களுடைய நன்கொடையில் இருந்து கட்டப்பட்டது. இந்நாட்டில் அமைந்துள்ள பொய்யாத விநாயகர் கோயிலில் கணேசர், சுப்பிரமணியர், மாரியம்மன், இராமர் முதலிய இந்து தெய்வங்களின் விக்கிரகங்கள் வழிபாட்டுத் தெய்வங்களாக உள்ளன. நகரத்துச் செட்டி மார்கள் அக்கோயிலில் மீனாட்சி சுந்தரேசுவரரை எழுந்தருளச் செய்துள்ளனர். 3 பெருந் தேர்கள் இக்கோயிலில் உள்ளன. நவராத்திரி, கந்தசஷ்டி என்பன மிகச் சிறப்பாக இங்கு கொண்டாடப்படுகின்றன.

மலேசியா நாட்டில் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் இயற்றப்பட்டதற்கான விளங்குகின்றன. இந்நாட்டிலே அமைந்துள்ள இந்துக் கோயில்களில் கோலாலம்பூர் - தண்டாயுத பாணி கோயில், ஸ்காட்சாலை கந்தசுவாமி கோயில் வைர தெரு - மகா மாரியம்மன் கோயில், கோர்டு மலை - கணேசர் கோயில், பத்தாய் - முத்துமாரியம்மன் கோயில், கோலாலம்பூர் - இராஜ ராஜேஸ்வரி கோயில் , பத்துமலைக் குகைக்கோயில்கள் , மாக்கா - பொய்யாத விநாயகர் கோயில் , சந்நாசி மலை - கயிலாய நாதர் கோயில், ஐயனார் கோயில், திரௌபதை அம்மன் கோயில் ஆகியன முக்கியம் வாய்ந்தன.

# கம்போடியாவில் இந்துசமயம்

கம்போடியா - கம்பூச்சியா இங்கு 14 - மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கிமர்,கம்போடியர் எனல் கம்போடியாவில் 'பூனாக்' எனும் இராச்சியம் இந்தியர்களின் ஆரம்பகால குடியேற்றம். கி.பி 1ம் நூற்றாண்டிலிருந்து கம்போடியாவில் இந்துப் பண்பாட்டின் பரம்பல் கிமர் பேரரசு உதாரணம் -யசோவருமன், சூரியவர்மன், ஈஸ்வரவர்மன், பவவர்மன். இவர்களின் ஆட்சியில் சைவ, வைணவ சமயங்கள் பெருவளர்ச்சி பெற்றன. கௌதன்யன் ஆட்சியைத் தொடக்கியவன் பிராமணன் சத்திரிய முறையில் ஆண்டவன்.

**பவவர்மன்**

அவன் நான்னு சிவாலயங்களை நிர்மாணித்தான். சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்தல் இதிகாச புராணங்களைப் பாராயணம் செய்தல் பவவர்மனின் குருவாகிய சோமவர்மசிவன், சூரியன் கோயில்கள் அமைத்தான். கோயில்கள் - அங்கோர்வாட், அங்கோர்வேதி, பயோன். அங்கோர்வாட் - கருவறை, முன்மண்டபம், திருச்சுற்று, நூல் நிலையம், கோயிற்பூங்கா, பணி, தங்குமிடம், கிழக்கு நோக்கி, மலைகளில் அமைத்தல். லிங்கம் - படிகம், கல்,பொன் என்பன மூலப் பொருளாக அமைதல்.

**அங்கோர்வாட்**

கி.பி.12ம் நூற்றாண்டில் சூரியவர்மன். ஆனந்தகுமாரசுவாமி பனை மலை சிவன் கோயில் போன்றது எனல். மேருமலையைக் குறிப்பதாகஅமையும் இவ்வாலயத்தின் மத்தியகோபுரங்கள் மேருமலையின் ஐந்துகோபுரங்களையும் குறிக்கின்றன. ஆலயத்தின் மூன்று சதுரக் கூடங்கள் மத்திய கோபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முதல் மண்டபம் வெளிப்புறச் சதுரத் தூண்களையும், உட்புறம் மூடிய தூண்களையும் கொண்டுள்ளது. 2008ல் இவ்வவாலயம் சர்வதேச கலாசார பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து இதன் புகழ் இன்னும் உயர்ந்தது. Henri Mouhotv எனும் பிரஞ்சு எழுத்தாளர் அங்கோர்வாட்டின் பெருமையை உலக மக்களுக்கு வெளிப்படுத்தினார். அரசன் இறைவடிவம் எனல். தேவராஜ வழிபாடு வர்மன் - பேயோன் கோயில் தேவராஜ லிங்கம் நிறுவவுதல் இந்திரபுரம் - ஜயவர்மன் - சிவனுருவில், அங்கோர்வேதி - சூரியவர்மன்- விஷ்ணுவுருவில், அங்கோர்வாட் ஏழாம் ஜயவர்மன் - புத்தஉருவில்

**இந்துநுண்கலைகள்**

அங்கோர்வாட் கோயில் மாகாபாரத ராமாயணக் காட்சிகள் சிற்பங்களாகவுண்டு.**பயோன்** மாகாபாரத ராமாயணக் காட்சிகள் - ராமன் மானைவிரட்டுதல் - வாலி சுக்கிரிவன் வதம், சீதைதீயில் இறங்குதல், கண்ணன் மலையைத் தூக்குதல் தூண்களுக்கு இடைப்பட்ட **விதானம் தாமரை** வடிவஅலங்காரங்களைக் கொண்டுள்ளது. சுவர் நடனவடிவங்கள், அப்சரஸ்களின் வடிவங்கள்,மண்டபங்ளின் இருபுறமும் சிங்கவுருவங்கள்

**அடியவர் வழிபாடு**

கி.பி.7 –மகேந்திரவர்மன் - காரை–பாடல் பாட அறக்கட்டளை: இந்திரவர்மன் கி.பி.9 அகத்தியர் வழி வந்தவர் எனல். வடமொழி **இலக்கிய** மொழியாகவும், கடவுளையும், அரசர்களையும் போற்றும் மொழியாகவும் விளங்கியது. சமஸ்கிருதமொழிக் கல்வெட்டுக்களில் கி.பி.7ம், 8ம் நூற்றாண்டுக்குரிய இந்து, பௌத்த ஆலயங்கள் பற்றியகுறிப்புக்களுண்டு. இராமாயணம் இராமகீர்த்தஷி என்ற பெயரில் படிக்கப்பட்டது.கல்வெட்டு–'அதர்வவேத நிஷ்தோ"–அதர்வண வேதத்தில் மூழ்கி எழுந்தவன். ஈசானவருமனின் தங்கையை மணந்த சோமசர்மா அந்தணன் 'வேதத்தில் கரைகண்டவன்" ஆங்கோர்வேதில் - சிவசாத்திரம், சப்தசாத்திரம், சோதிடம், சிவவியாகரணம் பற்றியுண்டு. இயற்கை அம்சங்களை 'அணங்குடா' என்ற பெயரில்

# ஐக்கிய இராச்சியத்தில் இந்துப்பண்பாடு

புலம் பெயர் நாடுகளில் ஐக்கிய இராச்சியம், அமெரிக்க நாடுகளில் இந்துப்பண்பாடு பரவிய முறைமை பிரதானமானது. ஐக்கிய இராச்சியத்தைப் பொறுத்தவரை லண்டன் மாநகர பிரதேசத்தில் மாத்திரம் 10க்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. சண்மத நெறியிலும் நாட்டார் வழிபாட்டின் அடிப்படையிலும் கோயில்கள் அமைக்கப்பட்டிருப்பது இந்துப் பண்பாட்டின் பல்பண்பாட்டம்சங்களை எடுத்துக்காட்டுகின்றது. இலண்டன் மாநகரின் பிரதான ஆலயம் 1960 காலகட்டத்தில் அமைக்கப்பட்டது. பிரித்தானிய இந்து மாமன்றம் இவ்வாலயத்தை பரிபாலனம் செய்கின்றது. லண்டன் மாநகர ஆலயங்கள் பின்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| 1. | அர்ச்வே | முருகன் ஆலயம் |
| 2. | கரோ | முருகன் ஆலயம் |
| 3. | வொல் தமேஸ்ர | முருகன் ஆலயம் |
| 4. | லண்டன் லூர்சியன் | சிவாலயம் |
| 5. | வெம்பிளி | சிவாலயம் |
| 6. | விம்பின்டன் | விநாயகர் ஆலயம் |
| 7. | கரைடன் | விநாயகர் ஆலயம் |
| 8. | ரூட்டின் | முத்துமாரியம்மன் ஆலயம் |
| 9. | ஈலிங் | துர்க்கை கோயில் |
| 10. | ஸ்ரோன்வி | இராசராசேஸ்வரி அம்மன் ஆலயம் |
| 11. | லண்டன் | ஐயப்பன் ஆலயம் என்பன பிரதானமானவை. |

இலங்கைச் சைவமக்கள் இந்திய இந்துக்கள், தென்கிழக்காசிய இந்துக்கள் இணைந்து இக் கோயில் கலாசாரம் வளர்ந்துள்ளது. அதேவேளை மேலைத்தேயத்தவர்கள் இந்து நாகரிக நம்பிக்கையிலும், இந்து ஆச்சிரம வாழ்விலும், இந்துக்களின் கோயிற் கிரியை வழிபாட்டிலும் ஈடுபாடு காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. இலங்கை, தமிழ்நாட்டு சைவமக்களின் ஆதிக்கம் காணப்படுவதன் மூலம் சைவநெறி சைவசித்தாந்தம் என்னும் நெறிகளில் இந்துப்பண்பாடு வளர்ச்சியடைந்துள்ளது. லண்டன் சைவசிந்தாந்த கழகம் பிரித்தானிய சைவக் கோயில் ஒன்றியம் என்பவை இந்து சமயப்பணியாற்றும் நிறுவனங்களாக விளங்குகின்றன.

இலங்கைத் தமிழர்களின் ஆக்கத்தில் அமைக்கப்பட்ட கூடுதலான இந்து ஆலயங்கள் ஐக்கிய இராச்சியத்தில் காணப்படுகின்றன. இதில் தர்ச்வே முருகன் கோயில் பிரதான மானது. அதனைத் தொடாந்து பல ஆலயங்கள் நிததிய கிரியை வழிபாட்டிற்கு உட்பட்டதாக அமைந்துள்ளன. சொற்பொழிவுகள் , நாட்டிய நாடகங்கள் மூர்த்த உற்சவங்கள் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. சித்திரா பௌர்ணமி நாளில் விஷேட உற்சவம் நடைபெறும். சிவயோகம் அறக்கட்டளை நிலையம் சிறப்பான அறப்பணி இடம் பெறுகின்றது. இலண்டன் சைவ சித்தாந்த மையம் சைவ சித்தாந்தக் கருத்தை பரவச் செய்கிறது. பல்கலைக் கழக மட்டத்தில் இந்துக் கல்வி மரபு பரப்பப்பட்டுள்ளது. Oxford University of Hindu studies என்றும் பெரும் பங்களிப்பு செய்கின்றது.

## ஐக்கிய அமெரிக்காவில் இந்துப்பண்பாடு

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உலக சமயங்களின் மகாநாடு கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் சுவாமி விவேகானந்தர் இந்து சமய விளக்கவுரை செய்து அமெரிக்க நாட்டவரை இந்து சமயம் பற்றி அறியச் செய்ய ஆர்வமூட்டினார். அவரைத் தொடர்ந்து பல வருடங்களுக்கு பின் பரம கம்ச யோகானந்தர் கிரியா யோக விளக்கம் மூலம் மேலை நாட்டவரை பேச்சு வன்மையாலும் பிரசார நெறியாலும் கவர்ந்தார்.

இந்தப் பின்னணியில் வடஅமெரிக்காவில் இந்து சமய நெறியில் சைவமும், சிவவழிபாடும் முக்கியத்துவம் பெற்றன. அமெரிக்காவின் இலத்திரன் ஊடகங்களிலும் இந்துமதக் கோட்பாடுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் கார்ஸ்சகான் என்பவரது ‘‘அண்டம்’’ என்னும் தொலைக்காட்சித் தொடரில் இந்து சமய பிரபஞ்சப் படைப்புத் தத்துவம், சக்தித் தொடர்பு ஆகிய விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நடராச தத்துவத்தின் பிரபஞ்ச தோற்றம், பிரபஞ்ச இயக்கம் என்பன முக்கியமானவை. இந்து சமயத்திற்கும் இலத்திரன் கோட்பாட்டிற்கும் இடையிலான தொடர்பை இது புலப்படுத்துகின்றது.

அமெரிக்கா நாட்டின் பிரதான நகரமாகிய பென்சில்வேனியாவில் இந்து சமய சார்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சிவன், விநாயகர் முதலிய இந்து சமய தெய்வங்ளின் அற்புதம் அருள் நிலை ஆகியன முதன்மைப் படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின் வரவாய நகரில் சைவ சித்தாந்தமையமும் இந்துக் கோயில் ஹதுள ஆதீனமும் செயற்படுகின்றன. Hindusm today என்னும் பிரசுரமும் அமெரிக்க நாட்டில் இருந்து வெளிவருகின்றது.

1970களைத் தொடர்ந்து அமெரிக்கா நாட்டில் பல ஆலய ஸ்தாபனங்களும் அறக்கட்டளை நிலையங்களும் செயற்பட்டு வருவதைக்காண முடிகின்றது. வட அமெரிக்காவில் இந்து ஆலயசபை செயற்படுகின்றது. விநாயகர் ஆலயம் ஒன்று தனியான கருங்கற்களை கொண்ட விமானத்துடன் மிளிர்கின்றது. இன்றைய உலகில் கருங்கல்லால் ஆன இந்து கோயில்களில் மூன்றாவது ஆலயமாக மிளிர்கின்றது.

ஹவாய் நிலைய ஆதீனம் சிவநடராசர் கோயிலையும் நிருமாணித்தள்ளது. சைவ சமயப் பிரசாரங்களை இமாலய அக்கடமி மேற்கொள்ள சருவதேச கிருஸ்ண பக்தி கழகம் (Iskon) வைணவம், கிருஷ்ண பக்தியை வெளிப்படுத்துகின்றது.

வெங்கடேஸ்வரப் பெருமான் கோயில் கலிபோர்ணியா, பென்சில்வேனியா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. சிக்காக்கோ நகரில் ஸ்ரீ ராம ஆலயம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே ஆலயத்தில் கணேசர், சிவன், துர்க்கை, இலக்குமி ஆகிய தெய்வங்களுக்கான நான்கு கர்ப்பக்கிரகங்கள் காணப்படுகின்றன. ரோச்சஸ்டர் இராஜ இராஜேஸ்வரி கோயிலும் பக்தி பூர்வமும் கலை பூர்வமான ஆலயமாகும். அமெரிக்கர்கள் வைணவ பக்தி, வைணவ கீர்த்தனம், கோயில் நுண்கலை சிற்பம் வேதாந்தம் முதலிய இந்து சமய கூடங்களில் மிகுந்த ஆர்வமுடையவராக விளங்குகின்றனர். ஆகம விதிப்படி கோயில் கலைகளை அமைக்கும் மரபும் பின்பற்றப்பட்டது.

சிற்ப சாத்திர விதிப்படி பல்லவர்க் கால கோயிற் கலையை தழுவியும் மகாவல்லப கணபதி ஆலயம் நியூயோக் நகரில் அமைத்து இந்திய இலங்கையருக்கும் அமெரிக்கர்களுக்கும் பக்தி பூர்வ உணர்வை தருவது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் இந்துப் பல்கலைக்கழகம், சர்வதேச வேத மரபக் பல்கலைக்கழக அமைப்பும் குறிப்பிடத்தக்கது.

கனடா தேசத்தைப் பொறுத்தவரை அங்கு பல்கலாசாரப் பண்பாட்டை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இங்குள்ள ஆலயங்களில் கந்த புராண படனம், கந்த புராண கலாச்சாரம் பின் பற்றப்படுவதைக் காண்கிறோம். சூரன் போரும் கனடாவில் உள்ள இந்து ஆலயத்தில் நடைபெறுகின்றது. கனடாவில் இந்து ஆரிய சபை கோயில் தொண்டு செய்வதை முதன்மைப்படுத்துகின்றது. 1948இல் கனடாவில் விநாயகர் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டுமே 15 இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. கந்தசுவாமி,துர்க்கை ஐயப்பசுவாமி கோயில் ஆகியன பிரபல்யமானவை. மொன்றியல் நகரில் கற்பகப் பிள்ளையார் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கோயில்களுடன் இணைந்த சமூக சேவைகளும் இடம்பெற்றுள்ளன. சிறுவர் பாடசாலை, தமிழ் சைவ கல்வி மரபு கலைஞர் பாடசாலை, குருபூசை, தமிழ் விழாக்கள் என்பன நடாத்தப்படுகின்றன. கனடா இந்து கலாசார மன்றம், வேதாந்த ஞான மன்றம், கனடா சைவ சித்தாந்த மன்றம், கனடா சிவ தொண்டன் நிலையம் என்பவை பிரதானமானவை. உலக சைவ மகாநாடு, உலக சைவ சித்தாந்த மகாநாடு என்பவற்றையும் நடாத்தி அமெரிக்க நாடு இந்துப் பணியில் பெருமை பெறுகின்றது. கனடாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் கொந்கோடியா பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் இந்துக் கல்வி மரபிற் பணி செய்கின்றது எனலாம். அமெரிக்காவில் விவேகாநந்தர் யோகாப் பல்கலைக்கழக மொன்று இயங்கி வருவதும் அறியப்படுகின்றது.

அமெரிக்க நாடுகளில் கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஹவாய் தீவுகள் ஆகியன இந்துப் பண்பாட்டுப் பரவலுக்குரியன. ஐக்கிய அமெரிக்காவில் ஹரேராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தினர் பகவத் கீதை தழுவிய இந்துப் பண்பாட்டினைப் பரப்பியுள்ளனர். இராமகிருஷ்ணமிசனின் சேவைகளும் பரவலாக்கம் பெற்றுள்ளன. இதற்கமைய ஐக்கிய அமெரிக்காவில் விவேகானந்த ஆச்சிரமம் இந்து சமயப் பணியை ஆற்றுகின்றது. ஹவாய் நாட்டில் யோகர் சுவாமி ஆச்சிரமம் இந்துப் பணியை மேற்கொள்கின்றது. நடைமுறை வேதாந்த சிந்தனையை அடிப்படையாக கொண்டும் பஜனை, பிரார்த்தனை என்பவற்றுடன் இறை வழிபாட்டில் ஈடுபடுதல் முதலியன இடம் பெறுகின்றன. அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ நகரம் சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுக்குரியது. அவரது சொற்பொழிவு நடைபெற்ற இடம் விவேகானந்த அவன்யூ (வீதி) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கனடா நாட்டைப் பொறுத்தவரை:
ரொரண்டோ நகரில் ஐந்து இந்துக் கோயில்களும்
மொன்றியல் நகரில் மூன்று இந்துக் கோயில்களும்
வன்கூவரில் இரண்டு இந்துக்கோயில்களும்,ரிச்மன்கில் விநாயகர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

கனடா நாட்டின் இந்து மாமன்றம் சைவநீதி சஞ்சிகையை வெளியிடுகின்றது. அவற்றுடன் கனடா இந்துப்பேரவை, கனடா இந்து அருள்நெறிமன்றம், கனடா சைவசித்தாந்த மன்றம் என்பவை பிரதானமானவை. பரத நாட்டிய கல்லூரிகள், பண்ணிசை மன்றம் என்பவற்றினூடாக பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

## 5.1 : இந்துக் கோயிற் கலைகள் - அறிமுகம்

இந்துக்கோயில்களில் நுண்கலைகள் சிறப்பு பெற்று வருகின்றன. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் இருந்து இந்து மதம் செல்வாக்கு எம்மூதாதையோரிடம் இருந்து வருவது உண்மையே. எம்முன்னோரின் வழிபாட்டிற்குரிய இடமாக கோயில் திகழ்ந்தது. ஆன்மா முத்தி அடையும் பொருட்டு இறைவன் எழுந்தருளி இருக்கம் இடம் கோயில். இக்கோயில்களில் கலை என்பது நகமும் சதையும் பிணைந்து இருப்பது போல் திகழ்வது பெருமைக்குரிய சிறப்பாகும்.

கலை என்பது கலா எனும் சமஸ்கிருத சொல்லின் தமிழ்வடிவமாகும். கட்டட சிற்ப ஓவியங்கள் கட்புலக் கலையாகவும் இசைநடன இலக்கியங்கள் அவைகாற்றுக்கலைகளாகவும் கட்புல வடிவங்களாகவும் காணப்படுகின்றன. இவைகளின் சமுதாயத்தில் மக்கள் மத்தியில் சிறப்புக்குரியனவாகத் திகழ்கின்றன.

இந்நுண்கலைகளில் இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, இலக்கியம் என்பன சிறப்புக்குரியன இவற்றுள் கோயில்களின் சுவர்கள் தூண்கள், கோபுரங்கள், விமானங்கள் என்பவற்றில் இதன் சிறப்பிணை உணர்ந்து கொள்ளலாம்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்க இணங்க கலைகளும் மக்கள் வாழ் பிரதேசங்களில் ஊடுருவிக் காணப்படுகின்றது.

கோயில்களின் அமைப்பினைக் கொண்ட கட்டடக்கலையை நோக்குமிடத்து அங்கு கர்ப்பக்கிரகம் இதன் மேற்கூரை, விமானம், ஸ்தூபி இதற்கு முன் கிழக்கு நோக்கி வாசல் முன் மகா மண்டபம், கருவைறயையும் மகா மண்டபத்தையும் இணைத்து அர்த்த மண்டபம் கோயிலைச் சுற்றி பல அறைகள் இவ்வறைகளின் வரிசைச் சுவர்கள் கோயிலுக்கும், சுவருக்கம் இடையில் வீதி, கோபரம் இவற்றை விட பல மண்டபங்களும் இடம்பெறுகின்றன. கி.பி 8 நூற்றாண்டில் இருந்தே கற்கோயில்கள் தோற்றம் பெற்றன. ஆனால் தொன்றுதொட்டு கட்டடக்கலை சிறப்பு பெற்றமைக்குப் பல ஆதாரங்கள் சான்று பகருகின்றன.

இந்துக் கலை இந்து தத்துவம் ஆக்கத்திறன், அழகியல், மனமகிழ்ச்சி வெளிப்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காணப்படுவதனால் கோயில் மண்டபங்களில் காணப்படுகின்றன தூண்களும் தூண்களின் எண்ணிக்கைகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இதில் தூண்களின் சிற்ப வேலைகளில் சிங்க உருவங்கள் தாமரைகள் என்பன செதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் சதுர வடிவமாகவோ, ஐங்கோண, பதினாறுகோண, (அறுகோண) வடிவினதகவோ அமைக்கப்படுவது சிறப்புக்குரியது.

கலை அனுபவமும் ஆத்மீக அனுபவமும் ஒரே அனுபவத்தின் வெளிப்பாடாடுகள் என்பதனை உணர்த்த இறைவனின் உருவத்திருமேனிகளைத் திருவுரு அமைத்து கோயில்களில் வைத்து வழிபாடு செய்வது சைவ ஆகமங்களில் கூறப்படுவது சிறப்புக்குரிய அம்சம். இத் திருவுருவங்கள் மரத்தினாலும், சாந்தினாலும் வெண்கலத்தினாலும் கற்களினாலும் அமைக்கப்படுகின்றன. இது கலையின் சிறப்பம்சத்தினையே உணர்த்துகின்றது எனலாம்.

மேலும் சிவனின் பல்வேறு மூர்த்தங்கள் இலிங்கோற்பவர், சந்திரசேகரர், நடராசர், பிச்சாடனர், தட்சணாமூர்த்தி, கல்யாண சுந்தரர் போன்றோர் வழிபடப்படுவது கலையின் சிறப்பை வெளிக்காட்டுகிறது.

இவற்றை விட விமானங்களிலும் கோபுரங்களிலும் இறைவனது அற்புதங்கள் திருவிளையாடல்களை சித்திரிக்கும் பல சிற்பங்கள் இடம் பெறுகின்றன. மேலும் சோழர்கள் கோவில்களில் வெண்கலத்தினாலும் கல்லாலும் அமைக்கப்பட்ட பல சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் சிறப்புப் பெறுவது நடராசரின் வடிவமாகும். உதாரணமாக சிதம்பர கும்பகோணம் கோயிலில் காணப்படும் சிற்பங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை ஆகும். கோயில்களில் இறைவனின் வடிவங்கள் நின்று அமர்ந்த கிடந்த நிலையில் அமைக்கப்படும் வடிவங்கள் கோயிகளின் சிற்பக்கலைக்குரிய சிறப்பம்சமாகும்.

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் "கலை உருவாக்கம் என்பது தூய உளச்செயற்பாடு" எனச் சமயத்திற்கும் கலைக்கும் இடையிலான தொடர்பை வெளிக்காட்டியமை கோயில்களில் வளர்ச்சி பெற்ற ஓவியக்கலைகளில் இருந்து தெரியவருகின்றது. சிற்பத்தினை ஆதாரமாகக் கொண்டு ஓவியம் வளர்ச்சி பெற்றமை சிறப்புக்குரியது.

சிற்ப நூல்களும் ஆகமங்களும் திருவுருவங்களுக்குத் தீட்ட வேண்டிய நிறங்களை கூறியுள்ளன. கோயிற் கூரைகளிலும் சுவர்களிலும் தூண்களிலும் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. காஞ்சி கைலாசநாதர் கோயில்', தஞ்சைப் பெருங்யோயில் சுவர்களில் பழைய சுவரோவியங்களும் தஞ்சப் பெரிய கோயிற் கருவறையின் பின்புறச் சுவர்களில் காணப்படும் ஓவியங்களும் சிறப்புக்குரியவை. மேலும் சிவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட நிகழ்ச்சி ஓவியமாக தீட்டப்பட்டமையும் சிறப்பு பெற்ற விடயமே.

திருநாவுக்கரசர் "உயிராவணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக்கிளியில் உருவெழுதி" என்று பாடுவது கலைகள் உள ஒருமைப்பாட்டையும் பூரண அமைதியையும் ஆன்மீக இன்பத்தையும் தருவதைக் காட்டுகின்றது. இந்த வகையில இசைக்கலையும் நடனக்கலையும் சிறப்புப் பெறுகின்றன.

ஆகமம் கூறும் வழிபாட்டில் கீதம் வாத்தியம், நிருத்தியம் எனும் மூன்றும் இடம்பெறுகின்றன. இவை மூன்றும் இறைவனை வழிபட வகுக்கப்பட்ட முறைகள். நுண்கலைகளைப் பேணத் திருக்கோயில் வழிபாடு உறுதுணையாகக் காணப்படுவது கலையின் சிறப்புக்கு முக்கியமான காரணம்.

அபிஷேகங்களின் போதும் ஆராதனைகளின் போதும் மத்தளம், மேளம், தாளம், சங்கு, குழல், நாதசுரம் முதலிய வாத்தியக் கருவிகள் மீட்டப்பட்டன. இவை கடவுளர் திருவுருவங்களோடு கோயில்களில் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளன. இதில் சிவன் உடுக்கையும் நாரதர் தம்புராவும், சரஸ்வதி வீணையும், கண்ணன் புல்லாங்குழல் சங்கு கொண்டு விளங்குவது இசைக்கலையின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

குப்தர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களில் இசைக்கலை சிறப்புற்று இருந்ததை அறிய முடிகின்றது. அங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சமுத்திர குப்தன் வீற்றிருந்து வீணைவாசிப்பது போன்ற நிலை இக்காலத்தில் கோயில்களில் இசைக்கலையின் சிறப்பினை உணர முடியக் கூடியதாகும். மேலும் நாயன்மார்கள் பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தினை இசை மூலம் கோயில்களில் வளர்த்துச் சென்றனர். இதில் சுந்தரர் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்றும் அப்பர் "ஓசைஒலி எலாம் ஆனாய்" எனவும் பாடியுள்ளமை இக்கலையின் சிறப்பினை வலியுறுத்துகிறது.

மனித உள்ளத்தைக் தன்வயமாக்கி இறைசிந்தனையில் செல்வதே கலை என்றும் கலை ஒரு யோக சாதனம் என்றும் கலை தன்னலமில்லாத உலககத்திற்கு ஒருவரை அழைத்துச் செல்கின்றது. இந்த வகையில் திருவாவுக்கரசர் அரிய தேனினும் இனிய தேவாரங்களை தலங்கள் தோறும் பாடிக்களித்தார் என்றும் சம்பந்தரும் இசைப் புலவராகி மிளிர்ந்தார். இவர் பாடிய பாக்களை யாழில் அமைத்துத் தலங்கள் தோறும் பாடி வந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்" என்று ஞான சம்பந்தர் பாடியமையும் பல்லவ அரசர் காலத்திலிருந்தே தென்னிந்திய கோவில்களில் தேவாரம் பாடப்பட்டிருப்பதும் இசைக் கலையின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது. இவைபற்றி மூன்றாம் நந்திவர்மன் காலத்து திருவல்லம் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சோழப் பெருமன்னர் காலத்திலும் கோயில்களில் இசைக் கலை சிறப்புற்றுக் காணப்பட்டது. தேவாரத் திருப்பதிகங்கள், திருவாய்மொழி, திருவெம்பாவை, திருப்பாவை, திருத்தாண்டகம் ஆகியன கோயில்களில் பாடப்பட்டதாக கல்வெட்டுக்கள் சான்று பகருகின்றன.

பிரபஞ்சப் படைப்பு நாதாந்த நடனத்தின் மூலம் வெளிப்படுகின்றது. நடனம் ஐந்தொழில் தத்துவமாகும். இசை மனதை இசைவிக்கும் தன்மை உடையது. இசையால் வழிபடுவது இறைஞானத்திற்கு அடிப்படையாக அமைகின்றது.

இந்த வகையில் சோழர் காலத்திலும் முதலாம் இராசராசன் கோயில்களில் திருப்பதிகம் ஓதும் வழக்கத்தையும் முறைப்படுத்தினான் என்றும் இராசராசேச்சரம் கோவிலில் திருப்பதிகம் ஓத ஐம்பதின்மாரை நியமித்தான் என்றும் மேலும் சோழர் கால கல்வெட்டின் படி தேவாரம் ஓதுபவர்களை மேற்பார்வை செய்ய தேவார நாயகர் எனும் அலுவலா நியமிக்கப் பெற்றிருந்தமையும் இசைக் கலையின் சிறப்பினை உணர்த்துகின்றன.

நாயக்கர் காலத்திலும் அருணகிரிநாதர் இயற்றிய பாடல்களும் இசைக்கலைக்குரிய ஆதாரங்களாக உள்ளன. இக்காலத்தின் கோயில்களில் அமைக்கப்பட்ட தூண்கள் கருங்காலி போல் கருமை நிறமானவை. எண்ணெய் பூசினால் போல் பளபளப்பு தன்மை உடையவை உயரமான தூண்கள் இக்காலத்தில் அமைக்கப்பட்டதாகவும் கூறுப்படுகின்றது. இக்காலத்தில் யாழி, குதிரை போன்ற விலங்குகளின் வடிவம் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கால தூண்களின் உயரம் 18 அடி உயரம் வரையும் அமைந்து இருப்பது இக்காலக் கோயில் கலை சிறப்புப் பெறும் வகையினை அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறாக நுண்கலைகளின் செல்வாக்கு பல்லவ, சோழ, நாயக்கர் காலங்களின் இடம் பெற்று வருவதனையும் அவைபற்றிய அறிமுக உரையினையும் மேல் உள்ளவாறு கூறலாம்.

# - தமிழகத்தில் கட்டடக் கலை

## பல்லவர் காலக் கட்டடக் கலை

தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக் காலம், பக்தி இயக்ககாலம் என்று பலவாறு அழைக்கப்படுகிறது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற் றாண்டு வரையான பகுதியில் தமிழகத்தில் பல்லவ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி நடைபெற்றது. இக்காலப் பகுதியில் ஆழ்வார்கள், நாயன்மார்களால் பக்தி இயக்கத்தினூடாக சைவ வைணவ சமயங்கள் பெருவளர்ச்சி அடைந்தன. சைவ, வைணவ சமயங்களின் மறுமலர்ச்சியில் கோயில்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. அவ்வாறு அமைக்கப்பட்ட ஆலயங்கள் தமிழகத்தில் வளர்ச்சியடைந்த திராவிடக் கட்டடக்கலை பற்றி அறிவதற்குப் பெரிதும் உதவுகின்றன.

பல்லவர்கால மன்னர்களால் அமைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட ஆலயங்கள் திராவிட கட்டடக்கலை மரபு தோன்றி, வளர்ச்சியடைந்தமையைக் காட்டுகின்றன. இக்கால கட்டடக்கலை வளர்ச்சியை அவற்றை அமைத்த அரசர்களின் அடிப்படையிலும், அவற்றின் அமைப்பின் அடிப்படையிலும் வகைப்படுத்தும் வழக்கம் இருந்து வருகிறது. ஆலயங்களை அமைத்த அரசர்களின் அடிப்படையில்,

1. மகேந்திரவர்மன் பாணி - கி.பி.600 - கி.பி. 650 வரை
3. இராஜசிம்மன் பாணி - கி.பி.650 - கி.பி. 700 வரை
2. நரசிம்மன் பாணி - கி.பி.700 - கி.பி. 800 வரை
4. நந்திவர்மன் பாணி - கி.பி.800 - கி.பி. 900 வரை

பல்லவர் காலக் கட்டடக்கலை வளர்ச்சியை ஆலயங்களின் அமைப்பின் அடிப்படையிலும் வகையில் குடைதளிகள், மலைதளிகள், கட்டுத்தளிகள் எனவும் வகைப்படுத்துவர்.

## குடைதளிகள்

பல்லவர்கால கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டமாக அமைவது குடைவரைக் கோயில்கள். மலைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலை ஆரம்பித்து வைத்தவர் மகேந்திரவர்மன். மண்டகப்பட்டுச் சாசனம் இதனை உறுதி செய்கிறது. அக்கல்வெட்டில் 'செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலானவற்றைப் பயன்படுத்தாது பிரம்மா, விஷ்ணு ஆகிய கடவுளர்களுக்கு இந்தக் கோயிலை விசித்திரசித்தன் உருவாக் கினான்' என்று கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து மகேந்திரவாடியம், மாமண்டூர், வல்லம், பல்லாவரம் முதலான குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, தளவானூர் போன்ற இடங்களில் உள்ள குடைதளிகள் சற்றுப் பிற்பட்டவை.

குடைவரைக் கோயில்கள் கருவறை, அர்த்தமண்டபம், முகப்பு மண்டபம் என்பனவற்றையும் பிரதான வாயிலையும் கொண்டுள்ளன. ஆரம்பகாலக் குடைவரைகளின் முகப்பு மண்டபத்தில் 7 அடி உயரமும் 2 அடி அகலமுங்கொண்ட தூண்கள் இடம் பெறுகின்றன. இக்குடை வரைகளில் உள்ள கருவறைகளில் இறைவடிவங்களைக் காணமுடிய வில்லை. இறைவடிவங்கள் சுதை அல்லது மரத்தால் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர்.

பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களின் அடுத்த கட்டட வளர்ச்சியைக் காட்டுவன. மண்டபங்கள். மண்டபங்களுள் அதிகமானவை முதலாம் நரசிம்மன் காலத்தில் அமைக்கப்பட்டவை. திரிமூர்த்தி மண்டபம், ஆதிவராக மண்டபம், மகிஷாசுரமர்த்தினி மண்டபம், தர்மராஜமண்டபம், மாமல்லபுரம் போன்றவை உதாரணங்கள். மண்டபக் கோயில்கள் குடைவரைகள் போல கருவறை, முகப்பு மண்டபம் என்பனவற்றைப் பிரதான பகுதிகளாக உடையன. மண்டபக் கோயில்களில் கருவறையின் எண்ணிக்கை வாயில்களின் அமைப்பு, காவற் சிற்பங்கள் அமைப்பு என்பனவற்றில் மாற்றங்களைக் காணலாம். மண்டப கோயில்களுள் சில மண்டபங்கள் இறை வடிவங்களை உடைய கருவறைகளைக் கொண்டிருக்க, வேறு மண்டபங்களின் கருவறைகள் வெறுமையாகவுள்ளன. சிவன், விஷ்ணு, பிரமா ஆகியவர்களுக்குரிய திரிமூர்த்தி மண்டபம் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது. இங்கு திருமாலின் திருவடியில் இருவர் அமர்ந்திருப்பதுபோல செதுக்கப்பட்டுள்ளது. சிவனின் கருவறைக்கு முன்னுள்ள துவாரபாலகர்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றனர். மகிடாசூர மண்டபத்தில் மகிடாசூரமர்த்தனி மகிடாசூரனை வதம் செய்யும் கதை சிற்பக்கோலமாகக் காணப்படுகிறது. கொடிக்கால் மண்டபத்தின் கருவறையின் இருபுறமும் காவற்பெண்கள் காணப்படுவதால் கொற்றவைக்குரிய கோயிலாக இருக்கலாம் என்பர்.

மண்டபக் கோயில்களில் பொதுவாக 7 அடி உயரமுள்ள தூண் நிரைகள் காணப்ப டுகின்றன. இதன் மேற்புறமும், அடிப்புறமும் சதுர வடிவமைப்பையும், நடுப்பகுதி எண் கோண அமைப்பையும் கொண்டவை. மேற்பகுதியில் கும்பமும், தாமரை மொட்டும் தொங்கு வது போல் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களின் அடியில் காணப்படும் சிங்கங்கள், தூண்களின் பாரத்தை அவை தாங்கிக் கொள்வதுபோல் அமைக்கப்பட்டிருப்பது நயத்தற்குரியது. மேலும் தூண்கள் கலசம், கும்பம், பலகை, கிரீவம், தாமரைஇதழ் முதலான உறுப்புக்களைக் கொண்டுள்ளன. மண்டபங்களின் கூரைப்பகுதியில் விமான அமைப்புகளின் செதுக்கல்களைக் காணலாம்.

## மலை தளிகள்

பல்லவர் கால கட்டடக்கலையின் 2ஆம் கட்ட வளர்ச்சியைக் காட்டுபவை மலை தளிகளாகும். முதலாம் மகேந்திரவருமனின் மகன் முதலாம் நரசிம்மனால் அமைக்கப்பட்ட இம்மலைதளிகளை ரதக்கோயில்கள், பாறைக்கோயில்கள், செதுக்குத்தளிகள், ஒற்றைக் கோயில்கள் எனவும் கூறுவர். மரத்தில் இரதத்தைச் செதுக்குவதுபோல பாறைகளைக் மேல் இருந்து கீழாக செதுக்கி அமைக்கப்பட்ட கோயில்களாக மலைதளிகள் உள்ளன. மாமல்ல புரத்தில் அமைக்கப்பட்டுள்ள மலைதளிகள், மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களாலும் கிராமியத் தெய்வங்களின் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. மாமல்லபுர மலை தளிகள், தரும ரதம், வீம ரதம், கணேச ரதம், சகாதேவ ரதம், அர்ச்சுன ரதம், கொற்றவை ரதம், வடக்குப் பிடாரி ரதம், தெற்குப் பிடாரி ரதம், வலையான் குட்டை ரதம் எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

மலைதளிகளின் விமானங்கள் வெவ்வேறு கலைப்பாணிகளைப் பிரதிபலிக்கின்றன. தரும ரதம், அர்ச்சுன ரதம், தெற்குப்பிடாரி ரதம் என்பனவற்றின் விமானம் திராவிட கலைப்பாணியைப் பிரதிபலிக்கின்றன. வடக்குப் பிடாரி ரதம், வலையான் குட்டை ரதம், கொற்றவை ரதம் என்பன நாகர கலைப்பாணியில் அமைந்தவை. கணேச ரதம், வீம ரதம் என்பன சாலை விமான அமைப்பையுடையன. சகாதேவ ரதம் தூங்கானை மாட கலைப்பாணியில் அமைந்துள்ளது.

மாமல்லபுரக் கோயில்களுள் தர்மராஜ ரதம் ஏனையவற்றைவிட அளவிற் பெரியது. 'அவனிபஜான பல்லவேஸ்வரம்' என்று அழைக்கப்பட்ட இவ்வாலயம் 42 அடி நீளம், 32 அடி அகலம், 40 அடி உயரம் உடையது. இவ் ரதம் மூன்று தளங்களையும், அதன்மேல் எட்டுப் பட்டைகளையுடைய கிரீடத்தையும், சிகரத்தையும் கொண்டுள்ளது. தருமராஜ ரதத்தின் மூன்று தளங்களிலும் இந்து சமயச் சார்புடைய சிற்பங்கள் காணப்படுகின்றன. இதனால் "சிற்பக்கலைக் களஞ்சியம்" என்று போற்றப்படும் தருமராஜ ரதம், காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தின் அமைப்பிற்கு முன்னோடியாக அமைந்தது.

## கட்டுத்தளிகள்

கற்களைச் சீராகப் பொழிந்தெடுத்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து கட்டுகின்ற கட்டுமானக் கட்டடக்கலையே கட்டுத்தளியாகும். கட்டுத்தளிக் கலைமரபு இராஜசிம்ம பல்லவ மன்னனது கலைமரபு. உதாரணமாக மாமல்லபுரக் கடற்கரைக்கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில்,தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பனைமலைக் கோயில், காஞ்சி புரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில். மாமல்லபுர கடற்கரைக் கோயில் பாதுகாப்பற்ற திறந்தவெளியில் அமைந்துள்ள இக்கோயில் கடல் நீரிலிருந்துவரும் உப்புக் காற்றாலும், காற்றில் வரும் மணலாலும் இன்னும் சிதைவடையாது இருப்பது பல்லவர்கால கட்டுமான வேலையின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. மாமல்லபுர கடற் கரைக் கோயிலை "ஜலசயனம்" என தற்போது அழைக்கின்றனர்.

இராஜசிம்மனால் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் கலை வனப்புடையது. பெரிய கற்றளி என பிற்கால சாசனங்கள் கூறுகின்றன. காஞ்சி கைலாசநாதர் கோயில் தமிழக திராவிடக் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களான விமானம், மண்டபங்கள், பரிவாரத் தேவகோட்டம், சுற்றாலை, கோபுரம், பிரகாரம் முதலானவற்றைக் கொண்டுள்ளது. காஞ்சி கைலாசநாதர் கோயில் கருவறையில் 16 பட்டை கொண்ட இலிங்கம் உள்ளது. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி வருவதற்கு பாதை அமைப்பு உண்டு.கர்ப்பக்கிரகத்தின் கிழக்குப் பக்கம் தவிர்ந்த ஏனைய மூன்று திசைகளிலும் உள்ள பக்கச் சுவர்களின் நடுவிலும் தேவ கோட்டம் இணைந்திருப்பது சிறப்பம்சம். விமானம் பல தள அமைப்பும் அது உள்நோக்கிய சரிவுடன் மேலே ஓங்கியெழும் பாங்கில் கலைவனப்புடன்

அமைக்கப்பட்டுள்ளது. நாற்சதுர வடிவிலான அதன் தளங்களில் மாடங்களும் புராணக்கதையை விளக்கும் சிற்பங்களும் சிகரத்தின் மேலே தூபியும் உள்ளன. திருச் சுற்றாலையைச் சுற்றி 58 சிறிய தேவகோட்டங்கள் உள்ளன.

காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப்பெருமாள் கோயிலே பல்லவர் காலக் கட்டடக் கலையின் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு எனக் கூறலாம். அது கைலாசநாதர் கோயிலைக் காட்டிலும் ஓரளவு பெரியது. சுற்றாலை மண்டபம், கருவறை, முக மண்டபம் என்பன அக் கோயிலின் முக்கியமான உறுப்புக்களாகும். கருவறை ஏறக்குறைய 90 அடி நீளமுள்ள பக்கங்களைக் கொண்டதாக சதுர வடிவில் அமைந்துள்ளது. சுற்றாலை மண்டபத்தில் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள தூண் வரிசையும், பல்லவ அரச மரபினது முக்கிய மானநிகழ்ச்சிகளைக் கூறும் செய்திகள் பொறிக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன. முக மண்டபம் கருவறையைப் போல சதுர வடிவமுடையது.

கருவறையின் மேலுள்ள விமானம் சதுர வடிவிலானது. அதனது உயரம் தரை மட்டத்திலிருந்து 60 அடிஆகும். விமானம் நான்கு தளங்களைக் கொண்டுள்ளது. அதைச் சுற்றிலும் நடைவழியும் உள்ளது. விமானத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் பார்ப்போரைக் கவர்வதாக உள்ளது. ஆலயத்திலே பிரகாரத்தின் உட்புறத்திலுள்ள திருச்சுற்று கூடங்கள் பொருந்திய சாலைகளுடன் காணப்படுகின்றது. சாலை நெடுகிலும் யாழித்தூண் நிரைகள் உண்டு. தூணின் பாரத்தை யாழிதாங்குவது போல் மிகத் தத்துவரூபமாக சிற்பி தன் கைவினைத் திறனைக் காட்டியுள்ளான். பல்லவர் கால கட்டடக்கலையிலும் கலை வேலைப்பாடுகளிலும் மிக உயர்ந்த வளர்ச்சிக் காலம் இராஜ சிம்மனது ஆட்சிக்காலம் எனக் கூறலாம்.

பல்லவர் காலத்தில் வளர்ச்சியடைந்த கட்டுத்தளி அமைப்பின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டுவன பல்லவர் காலத்தின் இறுதிக்கட்டத்தில் ஆட்சி புரிந்த நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்கள். இம்மன்னன் கி.பி. 800 - கி.பி. 900 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் அமைத்த ஆலயங்கள் இதனுள் அடங்கும். இவ்வாலயங்கள் அளவிலே சிறியனவாக இருப்பதுடன், கலைப் பண்புகளிலும் இராஜசிம்மன் காலத்தைக் காட்டிலும் வளர்ச்சியுடையவை என்று கூறமுடியாது. உதாரணமாக காஞ்சியிலுள்ள முத்தீஸ்வரர் கோயில், மதங்கேஸ்வரர் கோயில், செங்கற்பட்டிற்கு அருகிலுள்ள ஓரகடத்திலுள்ள வாடாமல்லீஸ்வரர் கோயில், திருத்தணியிலுள்ள வீரட்டானேஸ்வரர் கோயில் முதலானவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் காஞ்சியிலுள்ள முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர் கோயில்கள் முதலில் கட்டப்பட்டவை. அவற்றின் நுழைவாயிலில் இரு தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கும் முகமண்டபம் இருக்கிறது. இப்பிரிவைச் சேர்ந்த ஏனைய நான்கு கோயில்களும் அரைவட்ட வடிவில் அமைந்துள்ளன. அவை மாமல்லபுரத்திலுள்ள சகாதேவ ரதத்தை முன்மாதிரியாகக் கொண்டன.

# சோழர் காலக் கட்டடக்கலை

தமிழக வரலாற்றில் கி.பி. 850 - 1270 வரையான காலம் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலம். இந்து சமயம் கோயில் வழிபாடு, கலை, இலக்கியம், தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டது. இக்கால இந்து சமய வளர்ச்சி என்பது கோயில்களை மையமாகக் கொண்டே காணப்பட்டது. சோழ மன்னர்கள் போரில் பெற்ற வெற்றிகளுக்காகவும், மக்களின் ஆன்மீகத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் பல கோயில்களை அமைத்தனர். அவ்வாறு சோழ மன்னர்கள் அமைத்த கோயில்கள் அக்காலக் கட்டடக்கலை வளர்ச்சியைக் காட்டுவனவாய் உள்ளன.

சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியை வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களாக இனங் காண்பர். இக்காலத்தில்ஆட்சி புரிந்த அரசர்களையும் அவர்கள் அமைத்த ஆலயங்களின் தன்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு இப்பகுப்பு அமைகிறது.

(அ) முற்காலச் சோழர் பாணி - கி.பி. 850 - 985
விஜயாலயன் தொடக்கம் பராந்தகன் வரையான கோயில்கள்

(ஆ) இடைக்காலச் சோழர் பாணி - கி.பி. 985 - 1070
ராஜராஜன் தொடக்கம் ராஜேந்திரன் வரையான காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்.

(இ) பிற்காலச் சோழர் பாணி - கி.பி. 1070 - 1270
1 ஆம் குலோத்துங்கன் தொடக்கம் 3 ஆம் ராஜேந்திரன் வரையான காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்.

இவ்வாலயங்களுள் முற்காலச் சோழர்களின் கோயில்கள் பல்லவர் கால திராவிட கட்டடக்கலை வளர்ச்சியின் தொடர்ச்சியைக் காட்டுகின்றன. அதேநேரத்தில் அக்காலக் கோயில்களைப் போலவே அளவில் சிறியனவாகவும் உள்ளன. நார்த்தா மலை விஜயாலய சோழேஸ்வரம், புதுக்கோட்டை மூவர் கோயில் போன்றன முற்கால சோழர் கோயில்களுள் சில. சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சநிலையைக் காட்டுவன இடைக்காலச் சோழர்களின் கோயில்கள். தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழேஸ்வரம் என்பன அவற்றுள் முக்கியமானவை. பிற்காலச் சோழர் கோயில்கள் சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் முதிர்ச்சியை காட்டுவதுடன், விஜயநகர கால கட்டடக்கலை வளர்ச்சிக்கு முன்னோடியாகவும் அமைவன. பிற்காலச் சோழர் கோயில்களுள் சிதம்பரம், ஐராவதேஸ்வரம், திரிபுவனம் என்பன சில.

## கட்டடக்கலையின் வளர்ச்சி

சோழர் கால கட்டடக்கலையின் தொடக்கத்தைக் காட்டுவது விஜயாலய சோழேஸ்வரம். கருவறை, விமானம், முன்மண்டபம், பரிவாரக் கோயில்கள் எனும் பகுதிகளைக் கொண்டதாக இவ்வாலயம் உள்ளது. நான்கு தளங்களைக் கொண்ட விமானம் மேல் நோக்கி கூம்பிய வண்ணம் செல்கிறது. விமானத்தின் முதல் மூன்று தளங்கள் சதுரமாகவும், நான்காவது தளம் வட்டமாகவும் அமைந்துள்ளன. புதுக்கோட்டையில் உள்ள மூவர் கோயில் மூன்று பிரதான கோயில்களை கொண்ட ஒரு கோயிலாக உள்ளது. மூன்று மையக் கோயில்களுக்கும் மகா மண்டபம், நந்தி மண்டபம் என்பன பொதுவாக அமைந்துள்ளன.

ஒவ்வொரு மையக்கோயிலும் கருவறை, அர்த்த மண்டபம் எனும் பகுதிகளை உடையன. மையக்கோயில் ஒவ்வொன்றும் 21 அடி நீளமும், மகா மண்டபம் 91 அடி நீளமும், நந்தி மண்டபம் 11 சதுர அடி நீளமும் உடையன. ஆலயத்தின் ஒவ்வொரு திசையிலும் துணைக் கோயில்கள் உள்ளன.

சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சநிலையை வெளிப்படுத்துவதாக தஞ்சைப் பெருங்கோயில் உள்ளது. சாளுக்கிய மன்னனை ராஜராஜன் வெற்றி கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்டதே தஞ்சைப் பெருங்கோயில். 500 அடி நீளமும் 250 அடி அகலமுடையதாக இக்கோயில் உள்ளது. தென்திசைமேரு, பெரிய கோயில், பெருவுடையார் போன்ற பெயர்கள் தஞ்சைப் பெருங்கோயிலின் கட்டடக்கலைச் சிறப்பை உணர்த்துவன. பிரதான கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி மண்டபம், நர்த்தன மண்டபம், வாச்சிய மண்டபம் என்று 6 பகுதிகளைக் கொண்டுள்ளது. ஆலயத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஆகம விதிப்படி நிருமாணிக்கப்பட்டுள்ளன. 45 அடி நீளமும் 9 அடி அகலமும் கொண்ட கருவறையின் நாற்புறமும் நான்கு வாயில்கள் உள்ளன.

தஞ்சைக் கோயிலின் பிரதான பகுதியாக அமைவது பிரமிட் வடிவில் அமைந்த அதன் விமானம் என்பர். ஆலயத்தின் விமானம் 216 அடி உயரத்தை கொண்டிருப்பதுடன், 15 அடுக்குகளையும் உடையது. தஞ்சைக்கோயிலின் மதில் வாயில் விமானம் 3 கோபுரங்களும் கேரளந்தகன் வாயில், ராஜராஜன் வாயில், திருவணுக்கன் வாயில் எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

ராஜேந்திரன் கங்கையை வெற்றி கொண்டதன் நினைவாக அமைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழேஸ்வரம் தஞ்சைக் கோயிலின் மறுபதிப்பு என்று கொள்ளப்படுகிறது. இவ்வாலயம் 567 அடி நீளமும் 318 அடி அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந்துள்ளது. ஆலயத்தின் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய பிரதான பகுதிகள் ஒரு பொதுவான பிரமாண்டமான அதிட்டானத்தின் மேல் அமைந்துள்ளன. கங்கை கொண்ட சோழேஸ்வரத்தின் பிரதான பகுதியாக அமைவது விமானம். தஞ்சைப் பெருங் கோயிலின் விமானத்தின் தளங்கள் நாற்புறமும் நேராக அமைந்திருக்க, கங்கை கொண்ட சோழேஸ்வரத்தின் விமானம் வில் வளைவாகக் காட்சியளிக்கின்றது. விமானத்தில் ஐந்து பக்க வடிவிலும், நாற்சதுர வடிவிலும் அமைந்த மாடங்கள் தளங்களை அலங்கரிக்கின்றன. கருவறையின் இருபுறமும் வட கைலாயம், தென் கைலாயம் எனும் இரு சிவாலயங்கள் உள்ளன.

**பிற்கால சோழர் கலைப் பாணி**

பிற்கால சோழ மன்னர்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் இடைக்கால சோழ கட்டடக் கலைப்பாணியின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டுவன. இக்கோயில்கள் சோழர் கால கட்டடக் கலையின் முதிர்ச்சியைக் காட்டுவன. அதேநேரம் சோழப் பேரரசின் வீழ்ச்சியையும் வெளிப்படுத்துவன. முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்ற அரசர்களால் அமைக்கப்பட்ட கோயில்களாக இவை உள்ளன. சிதம்பரம், திரிபுவனேஸ்வரம், ஐராவதேஸ்வரம் போன்ற கோயில்கள் பிற்கால சோழர்கால கலைப்பாணியை பிரதிபலிப்பன. விக்கிரம சோழன் போன்ற அரசர்கள் - சிதம்பரத்தில் நிருத்த சபை, கோபுரங்கள், நூறுகால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற கட்டட அம்சங்களை நிருமாணித்தனர். சிதம்பரத்தின் திருச்சுற்று மாளிகையின் சுவர்கள் முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் முதலியவர்களின் காலங்களில் நிருமாணிக்கப்பட்டவை.

இடைக்காலக் கோயில்களின் விமானங்கள் உயரமாக அமைய, பிற்கால சோழர் கோயில்களின் கோபுரங்கள் உயரமாக இருந்தமை இக்கால கட்டடக்கலை வளர்ச்சியில் காணப்படும் முக்கியமான அம்சம். சிதம்பரத்தின் ஏழு வாயில்களிலும் ஏழு உயரமான கோபுரங்கள் உள்ளன. இரண்டாம் ராஜராஜனால் நிருமாணிக்கப்பட்ட ஐராவதேஸ்வரம், இராஜஇராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது. இவ்வாலயம் கருவறை, அர்த்த மண்டபம், பெரு மண்டபம் என்பனவற்றைப் பிரதான பகுதிகளாகக் உள்ளது. ஐராவதேஸ்வரத்தின் விமானம், தேவகோட்டம், சுவர் போன்ற பகுதிகளில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் பல சிற்பங்களைக் கொண்டுள்ளதனால் “சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்” என்று வருணிக்கப்படுகிறது. எனவே சோழர்களின் பிற்காலக் கோயில்கள் விஜயநகர நாயக்கர் கால கட்டடக் கலை வளர்ச்சிக்கு முன்னோடி என்பர்.

# விஜயநகர நாயக்கர் கால கட்டடக்கலை

## பின்னணியும் சூழலும்

தென்னிந்திய இந்துப் பண்பாட்டு வரலாற்றில் கி.பி 14ம் நூற்றாண்டிற்கும் 18ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் விஜயநகர நாயக்கர் காலம். சோழர் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில சோழர் ஆட்சி வீழ்ச்சியுற்றதும் அதனைச் சாதகமாக பயன்படுத்திய இஸ்லாமியர்கள் படையெடுப்பினை மேற்கொண்டு மதம் பரப்ப முற்பட்டனர். இதனால் இந்து ஆலயங்கள் பலவற்றை இடித்தழித்தும் அங்கிருந்து கலைச் செல்வங்களைக் களவாடியும் சென்றனர். இதனால் இந்து மதம் வீழ்ச்சி அடைந்தது. இவ்வேளையில் கரிகரன், புக்கன் போன்றோர் வடக்கே ஒரு அரசையும் தெற்கே ஒரு அரசையும் தோற்றினர். வடக்கில் தோன்றிய அரசு இஸ்லாமியருக்கும் தெற்கில் தோன்றிய அரசு விஜயநகர பேரரசாகவும் காணப்பட்டது. இவ்வரசியல் வரலாற்றில் விஜயநகரத்தை தோற்றுவித்த ஒருவராக கிருஷ்ண தேவராயர்காணப்பட்டார். அது தோன்றுவதற்கு பல பணிகளை செய்த ஒருவராக திகழ்பவர் வித்யாரண்யர். இவ்வாறு இக்காலத்தில் நிலவிய சமய மறுமலர்ச்சி விஜய நகர நாயக்கர் கால கட்டடக்கலையில் புதியதோர் பரிமாணத்தினை ஏற்படுத்தியது. பிற மதங்களுக்கு எதிரானது எனப் புறக் கலை வடிவங்களை உறுதிப்படுத்தினர்.

## விஜய நகரரின் கட்டடக்கலைச் சிறப்பும் நாயக்கர் காலக் கலையும்

தமிழ் நாட்டில் பல்லவர் காலத்திலும் சோழர்காலத்திலும் ஏற்பட்ட கோயில் கட்டடக்கலை வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு விஜய நகர மன்னர்கள் ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களிலும் புதிய புதிய கலைப் பண்புகளுடன் புதிய புதிய கோயில்களை அமைத்தும் பழைய கோயில்களை புனர்நிருமாணம் செய்தும் கலைப்பணி புரிந்தனர். இவர்களின் கலைவளர்ச்சியில் கோயில்களின் உள்ளக வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டது. கலை செழிப்புற்ற காலம் இக்காலம் எனவும் கலை அறிஞர் கூறுவர்.

இவர்களின் கலைப் பண்பில் கல்யாண மண்டபம், ஆயிரம் கால் மண்டபம், சுற்றுப் பிரகாரம், கோபுரம், தூண்கள் என்பன முக்கியமான இடத்தை வகித்து இருந்தன.

## தூண்கள்

விஜய நகர நாயக்கர் காலத்தில் மூன்று வகை சார்ந்த தூண்கள் கோயில் மண்டபங்களிலே அமைக்கப்பட்டதை அறியக் கூடியதாக உள்ளது.

1. பிரதானமான தூணை ஒட்டிய வண்ணம் அதன் பக்கங்களில் கடவுள் படிமம், யாழி, குதிரை போன்ற வடிவங்கள் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளன.

2. இன்னொரு வகை சார்ந்த தூண்களில் கோயில் மாதிரியான சிறிய உருவங்கள் கீழ் இருந்து மேலாக செதுக்கப்பட்டுள்ளன. சில தூண்களில் கோபுரம், சிகரம் போன்ற வடிவங்கள் சிற்பமாக்கப்பட்டுள்ளன.

3. இன்னொரு வகை சார்ந்த தூண்கள் நடுவிலுள்ள பிரதான தூணைச் சுற்றி அதன் பக்கங்களில் கம்பங்கள் போன்ற தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளன.
4. நாயக்கர் கால சிற்பிகள் மிகுந்த பளபளப்புடன் ஒளிரும் கருமை நிறத்தூண்களை பயன்படுத்தினர். இதனால் இற்றைவரை ஒளிகுன்றாத நிலை காணப்படுகின்றது.

**கல்யாண மண்டபம்**

தென்னிந்திய கட்டடக் கலையில் கல்யாண மண்டபம் எனும் புதிய அமைப்பைத் தோற்றுவித்தவர்கள் விஜய நகர மன்னர்கள். இது பல்லவ, சோழ காலங்களில் அமைக்கப்படாத ஒன்று. இதை அமைத்ததில் விஜயநகரர் மேன்மை அடைகின்றனர். பதிய கோயில்களிலும் இவர்கள் புனர்நிருமாணம் செய்த கோயில்களிலும் இம்மண்டபங்கள் அமைக்கப்பட்டன. ஆலயத்தின் கிழக்கு வாயிலின் இடப்புறபமாகவே இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்மண்டபம் அழகிய சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக விட்டலா சுவாமி கல்யாண மண்டபம், காஞ்சிபுர வரதராஜ கல்யாண மண்டபம் என்பவற்றை கூறலாம்.

காஞ்சி புர கல்யாண மண்டபம் கோயிலை நோக்கி உயரமான இடத்தில் உள்ளது. அம் மண்டபத்தின் நடுமேடையை ஆமை ஒன்று தாங்கி நிற்பது சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. அம் மண்டபத்தில் உலகியல் சார்ந்த லௌகீகக் காட்சி சிற்பமாக உள்ளது. இம் மண்டபத்தின் தூண்களில் விஸ்ணு, (நரசிம்மனது) இரணியனின் குடலை மாலையாகப் போடுவது என்னும் நரசிம்ம அவதாரம் சிற்பமாக உள்ளது.

**சுற்றுப்பிரகாரம்**

விஜயநகர மன்னர் அந்நியரிடம் இருந்து கோயில்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு கோயிலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சுற்றுப் பிரகாரங்களை அமைத்தனர். சுற்றுப் பிரகாரத்தினுள்ளே மக்கள் குடியிருப்புக்கள், கடைத்தெருக்கள், அங்காடிகள் என பலவற்றையும் அமைத்து கோயிலை ஒரு நகரமாக மாற்றிய பெருமை விஜயநகர மன்னரைச் சாரும் என்பர். உதாரணமாக ஸ்ரீரங்கத்தின் சுற்றுப்பிரகாரம் உண்டு. அதில் ஆலயத்தில் உள்ள மூன்று சுற்றுப்பிரகாரங்கள் விஜயநகரரால் அமைக்கப்பட்டுள்ளன.

**ராஜகோபுரங்கள்**

விஜய நகர காலத்தில் சிறந்து விளங்கியவர் கிருஸ்ண தேவராயர். இவர் அமைத்த கோபுரங்கள் குறிப்பிடத்தக்கவை.

1. திருவண்ணாமலையில் இவர் அமைத்த உயர் கோபுரம்
2. வரதராஜப் பெருமாள் கோயில் உயர் கோபுரம்
3. காஞ்சி ஏகாம்பர நாதர் கோயில் உயர் கோபுரம்
4. சிதம்பரக் கோயிலின் வடக்குக் கோபுரத்தை இவர் புதுப்பித்தார்.

**கல்தேர் (கற்றேர்)**

தமிழ்நாட்டு கட்டடக்கலையில் பல்லவ மன்னர்களே மலையை செதுக்கி தேர் போன்ற ரதக் கோயிலை அமைத்தனர். அதன் தொடர்ச்சியான வளர்ச்சி ஆலயத்தினுள் ரதக் கோயிலை அமைத்த பெருமை விஜய நகரரைச் சாரும். உதாரணமாக விட்டலா சுவாமி கோயில் கல்தேர் குறிப்பிடலாம். இதில் சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.இக் கட்டடக்கலையே இதன் பின் வந்த நாயக்கர் மன்னர்களின் கட்டடக் கலை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது.

மேலும் தமிழ் நாட்டில் பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் ஏற்பட்ட கோயில் கட்டடக்கலை வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு விஜயநகர காலத்தில் எற்பட்ட வளர்ச்சியின் தொடர்ச்சியாக நாயக்கர் காலத்தில் கட்டடக்கலை அமைந்தது. 16ம் நூற்றாண்டின் மத்தியில் காஞ்சி, தஞ்சை , மதுரை ஆகிய மூன்று இடங்களிலும் நாயக்கர்கள் விஜய நகர அரசர்களின் பிரதிநிதிகளாக ஆட்சி புரிந்தனர். நாயக்கர் கால கலையின் சிறப்பிற்கு இவர்களே வித்திட்டனர்.

17ம் நூற்றாண்டில் தோன்றிய கட்டடங்களும் ஏனைய கலைகளும் நாயக்கர் கால கலை மரபை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு தோன்றிய கலைமரபு விளங்கும் இடங்களாக திருவண்ணாமலை, காஞ்சிபுரம், விருஞ்சி புரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை, இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் திகழ்கின்றன.

### கோபுரங்கள்

விஜயநகரரால் உருவாக்கப்பட்ட கோபுரம் இராஜகோபுர அமைப்பில் இக்காலத்திலே புதியதோர் பரிமாண வளர்ச்சியை ஏற்படுத்தியது. விமானங்களைக் காட்டிலும் கோபுரங்கள் உயரம் கூடியனவாக அமைவு பெற்றிருப்பதால் இக்காலம் கோபுர வளர்ச்சிக்காலம் எனவும் அழைக்கப்படுகின்றது. இவையன்றி மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்களின் மண்டபங்களும் திருச்சுற்றும் கோபரங்களும் புதியனவாக கட்டிச் சேர்க்கப்பட்டன. கட்டடக்கலைக்கு அணி சேர்க்கும் நாயக்கர் கால சிற்பங்கள் பேரூர், தாராமங்கலம், மதுரை, அழகர்கோயில், கிருஸ்ணபுரம், திருநெல்வேலி, திருவைகுண்டம், திருக்குறுங்குடி, தென்காசி, கும்பகோணம் ஆகிய இடங்களில் உள்ளன.

### கிருஸ்ண வீரப்ப நாயக்கர்

மதுரை விசுவ நாத நாயக்கர் கி.பி 1529 - 1564 மதுரை சொக்கநாதருக்கு அழகிய கோயில் அமைத்தார். இவரது வழிவந்தவர் தான் இவராவார். இவர் சிறப்புமிக்க பல கட்டடங்களை உருவாக்கினார். அவற்றில மதுரை ஆயிரங்கால் மண்டபம், சொக்கநாதர் கோயில் மண்டபம் என்பன குறிப்பிடத்தக்கன. இவனே விஜய நகர காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புகழ்பூத்த சக்தி ஆலயமான மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்தவன்.

### மதுரை மீனாட்சி அம்மன் கோயில்.

நாயக்கரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாலயம் திராவிடக் கட்டடக்கலை வளர்ச்சியின் பூரணத்துவ வளர்ச்சியைக் காட்டுகின்றது. இது கோபுரங்களால் வனப்பு பெறும் கோயிலாக உள்ளது. பாண்டியர் காலம் தொடக்கம் நாயக்கர் காலம் வரை பல கட்டுமானங்களைக் கொண்டுள்ளது. அம்மன் கோயிலும் சுந்தரேஸ்வரர் கோயிலும் அருகருகே அமைந்துள்ளன. இவ்வாலயம் மண்டபங்கள் தெப்பக்குளம், சுற்றாலை மண்டபம், பிரகாரங்கள் போன்ற பல பகுதிகளை உடையது. தூண்களில் விஜய நகர நாயக்க சிற்பங்கள் பல இடம் பெற்றுள்ளன.

இத்தகைய சிறப்பான அம்சங்கள் விஜய நகர நாயக்கர் கால கட்டடக்கலையின் சிறப்பினையும் கோயில் கட்டடக்கலை வளர்ச்சியின் பரிமாணத்தையம் சுட்டி நிற்கின்றன.

கீழ்ப்பகுதியில் சுந்தரர் வெள்ளானை மீது இருந்து போதிலும் அவருக்குப் பின் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீது செல்வதும் சித்திரிக்கப்பட்டுள்ளன. யானையுங் குதிரையும் பலவகை அணிகளுடன் காணப்படுகின்றன. கையில் தாளத்துடன் திருப்பதிகம் பாடிக் கொண்டே கயிலை நோக்கிச் செல்வதாகச் சுந்தரர் உருவம் தீட்டப்பட்டுள்ளது. யானையை விடக் குதிரை மிக்க வேகமாகச் செல்கின்றது. ஓவியங்களில் சுந்தரரும் சேரமானும் தாடி வைத்துள்ளனர் மயிர் முடிப்பு கொண்டுள்ளனர். பலகை அணிகளை அணிந்துள்ளனர்.

தென்னிந்தியக் கட்டடக்கலை சார்ந்த அறிவியலைத் தொடக்கி வைத்த பு.யோவியு டுப்றியஸ் என்பார் கூறுவது

பல்லவர் சிற்பத்திறனிலே கைதேர்ந்தவர். சோழரோ கட்டடக்கலையில் அனைத்துச்சிற்பிகளிலும் மேலானவர். அவர்களின் பணி கம்பீரமும் தனிமையும் வாய்ந்தது. ஆனால் சோழரின் கட்டடக் கலைக்கு எவ்வகையிலும் குறைவற்றது. அவர்களின் சிற்பக்கலை என்பதும் அக்கலையிற் பல்லவரிலும் அவர்கள் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பதும் நீலகண்ட சாஸ்திரியாரின் கணிப்பு.

இதில் இருந்து மற்றக் காலங்களை விட எல்லாக் கலைகளிலும் அதியுன்னத வளர்ச்சியைக் காட்டும் காலமாக சோழர் காலம் திகழ்கின்றது.

இக்காலத்தில் உருவான தஞ்சைப் பெருங்கோயிலின் ஓவிய வேலைப் பாட்டினை மேலும் நோக்கின் கோமகள் ஒருத்தி அவளைச் சேர்ந்த பணிப் பெண்கள் ஓவியமாக காணப்படுகின்றது. இவை அக்காலப் பெண்களின் உடை விசேடங்களையும் அணி விசேடங்களையும் நமக்கு உணர்த்துகின்றன. மற்றொரு பால் தீட்டப்பட்டுள்ள ஆடல் பாடல்களில் மகளிர் ஓவியங்கள் இன்புறுத்துவனவாகும். அம்மகளிர்களும் அணிகளும்அவர்தம் இசைக்கருவிகளும் புலப்படும் வகையில் தீட்டப்பட்டுள்ளன.இவ்வாறான ஓவியங்கள் சோழர்கால மக்களின் உடல் அமைப்பு, உடை விசேடம், அணிச்சிறப்பு என்பவற்றை நன்கு புலகப்படுத்தக்கூடியனவாக உள்ளன.

தஞ்சைப் பெருங்கோயில் இராஜராஜேஸ்வர பிருகதீஸ்வரர் கோயில் எனவும் அழைக்கப்படும். இவ்வாலயத்தின் முடியின் நிழல் ஒரு போதும் நிலத்தில் படிவதில்லை. அத்தகைய நுட்பத்துடன் அமைந்து காணப்படுகின்றது. மேலும்இவ்வாலயத்தில் சிவன் முப்புரங்களை எரித்தமை, நடன மகளிர் உருவங்கள் என்பன சிறப்பாக வரையப்பட்டுள்ளன. இவ்வாலயத்தின் இசையும் நடனமும் கலந்த வழிபாடு முதன்மையடைந்து காணப்படுகிறது.

இவ்வாறாக தஞ்சைப பெருங்கோயில் எல்லாக் கலைகளிலும் தனித்துவம்மிக்க கலையாக திகழ்வது இதன் சிறப்பினை காட்டுகின்றது.

# விக்கிரகக் கலை

இந்துப் பண்பாட்டின் பிரதான அம்சங்களுள் நுண்கலையும் ஒன்று இது. ஆன்மீக ஊடகமாகவும், பக்திச் சாதனமாகவும் விளங்குகின்றது. இதனால் இந்து நுண்கலைகள் சமய தத்துவ மூலங்களாக் குறிப்பிடப்படுகின்றன. கலை, கலைக்காகவே என்னும் கோட்பாட்டுடனும் கலை, சமூகத்திற்காகவே என்னும் கோட்பாட்டுடனும் தொடர்புபட்டு நிற்பதனைக் காணலாம்.

இந்து நுண்கலைகளாக கட்டடம், சிற்பம், இசை, நடனம், ஓவியம் ஆகியன குறிப்பிடப் படுகின்றன. கலாரசனை வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொள்வதன் மூலம் இலக்கியமும் கலை வடிவத்தில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாறான கலை வடிவங்களுள் சிற்பக்கலையுடன் இணைந்ததாகவே விக்கிரக்ககலை கொள்ளப்படுகிறது. கட்புலக்கலைகளுள் ஒன்றாகவே விக்கிரகக்கலை அமைகிறது. கலை வடிவங்களை வாஸ்து கலை, மூர்த்திக் கலை என்று இரு பிரிவுகளாக சிற்ப சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. வாஸ்து கலை கோயிற் கட்டடக்கலையாகவும், மூர்த்தி கலை சிற்ப விக்கிரகக் கலையாகவும் அமைகிறது. எனினும் கோயிற் கட்டடக்கலையுடன் இணைந்ததாகவே சிற்ப விக்கிரகக் கலைகள் நோக்கப்படுகின்றன.

இந்துசமயம் திருவுருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது. கோயில்கள் தெய்வங்களின் திருவுருவங்களை பிரதிட்டை செய்யும் இடங்களாக அமைகின்றன. இவ்விக்கிரகங்களை அமைப்பதற்குரிய மூலப்பொருட்களாக கருங்கல், மரம், உலோகம், சுதை என்பன குறிப்பிடப்படுகின்றன. எனினும் விக்கிரகங்களை உலோகங்களில் வார்க்கும் மரபு காணப்படுவதனால் விக்கிரகக்கலையை வார்ப்புக்கலை எனவும் அழைப்பர். புராணங்களிலும், சிற்ப சாத்திரங்களிலும் உலோகங்களில் விக்கிரகங்களை வார்ப்பது தொடர்பாகக் கூறப்படும் விடயங்கள் தொழில் நுட்பத்திறன் வாய்ந்தவையாகவுள்ளன.

விக்கிரகங்களை உலோகங்களில் வார்க்கும் முறைமை இருவகையாக அமைகின்றன.

- உட்புழைவு முறையில் வார்க்கப்படும் விக்கிரகம்
- கனமான முறையில் உள் இடைவெளியின்றி வார்க்கப்படும் விக்கிரகம்

என்பனவாகும். சிற்ப சாத்திரங்களில் விக்கிரகங்ளை அமைக்கும் முறைகள் சிற்பவியல், சிற்ப அளவையியல், சிற்ப வார்ப்பியல் என்ற ஒழுங்கில் விபரிக்கப்பட்டுள்ளது. விக்கிரகங்களை அமைப்பதற்கான நியமங்கள் விக்கிரகங்களின் அழகையும், பக்தி வெளிப்பாட்டிற்கான தோற்றப்பாட்டினையும் எடுத்துக்காட்டுவன அவையாவன:

- அளவைப்பிரமாணம்
- இலட்சண விதி
- பங்கஅமைதி
- ஹஸ்த அபிநயம்
- ஆடைகள் ஆபரணங்கள்
- ஆயுதங்கள்

என்பனவாகும். விக்கிரகங்கள் கொண்டிருக்கும் இவ்விடயங்கள் வழிபடுபவர்களது உள்ளத்திலும் உணர்விலும் ரசோபானுபவங்களை ஏற்படுத்தும் தன்மை கொண்டனவாக அமைகின்றன.

விக்கிரகத்திற்குரிய பங்க அமைதியானது சமபங்கம், அபங்கம், அதிபங்கம் (திரிபங்கம்) என அமைகின்றன.

சமபங்கம் - நேராக நிற்கும் விக்கிரகங்கள்.
அபங்கம் - ஒரு வளைவையுடைய வடிவங்கள்.
அதிபங்கம் - ஒன்றுக்கு மேற்பட்ட வளைவுகளை உடையவை.

இவற்றுள் நடராஜ வடிவம் அதிபங்க (திரிபங்க) அமைதியில் அமைந்திருக்கிறது. திரிபங்க அமைதியில் அமைந்த நடராஜ வடிவங்கள் பல சோழர் காலத்தில் வார்க்கப்பட்டன. அதேபோல் விக்கிரகங்களை ஸ்தானக (நின்ற) வடிவம், ஆசன (அமர்ந்த) வடிவம், சயன (படுத்திருக்கும்) வடிவம் எனவும் வகைப்படுத்தும் வழக்கம் உள்ளது. இவற்றுள் சயன வடிவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு விஷ்ணுவின் அநந்த சயன வடிவம். எனவே நடராஜ வடிவம், அநந்த சயன வடிவம் என்பன சைவ வைணவ மரபில் மிகவும் முக்கியத்துவம் உடைய விக்கிரகங்களாக விளங்குகின்றன.

இந்து விக்கிரகங்களை சித்திரம், சித்திராபாசம், சித்தார்த்தம் என்ற நிலையிலும் வகைப்படுத்துகின்றனர். இவற்றுள் சித்திரா பாசம், சித்தார்த்தம் என்பன உலோக படிமங்களுக்கு ஆதாரமானவை. சித்திராபாசம் என்பது உட்புழைவு நிலையிலும் சித்தார்த்தம் என்பது உட்புழைவு அற்ற நிலையிலும் அமையும் விக்கிரகங்களைக் குறிப்பிடுவன.

விக்கிரக அளவைகளை குறிப்பிடும் போது தாலம் என்னும் அளவை பிரதான இடத்தைப் பெறுகிறது.

வாமன உருவங்கள் - சப்த தால அமைப்பிலும்
சிவனடியார் வடிவங்கள் - அட்ட தால அமைப்பிலும்
தெய்வீக வடிவங்கள் - நவதால அமைப்பிலும்
சிவ வடிவங்கள் - உத்தம தசதால அமைப்பிலும்

வார்க்கப்படுதல் வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. இந்தவகையில் நடராஜ வடிவம் உத்தம தசதால அமைப்பிலும், அநந்த சயன வடிவம் நவ தால அமைப்பிலும் அமைக்கப்படுதல் வேண்டும்.

# நடராஜர்

சைவசமய மரபில் சிவனுக்கு 25 மூர்த்தி பேதங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் சோமாஸ்கந்தர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், அர்த்தநாரீஸ்வரர், நடராஜர் முதலான மூர்த்தி பேதங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்வடிவங்களை விக்கிரகங்களாக அமைக்கும் மரபு காணப்படுவதனால் விக்கிரகக் கலை வளர்ச்சியில் இவ்வடிவங்கள் அதிக பங்களிப்புச் செய்துள்ளன. இவற்றுள் சைவ சமய, சைவசித்தாந்த, கலைத்துவ ரீதியில் முக்கியத்துவம் பெறும் நடராஜ வடிவம் வரலாற்று ரீதியில் தொல்பொருட்களிலும், இலக்கியங்களிலும் புகழப்பட்ட வடிவமாக விளங்குகின்றது.

நடராஜ வடிவம் நாட்டிய கலா தத்துவத்துடன் இணைந்தது மட்டுமன்றி, ஐந்தொழில் தத்துவத்துடனும் தொடர்புடையதாக விளங்குகிறது. தேவாரப் பாடல்களிலும், சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் காணப்படும் நடராஜப் பெருமானின் பிரதிமாலட்சண வருணனைகளும், தத்துவார்த்த சிந்தனைகளும் 25 சிவ மூர்த்தங்களுள் நடராஜ வடிவத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

இந்து சமய சாத்திர நூல்களுள் சிவனின் பலவகைத் தாண்டவங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான சிவ தாண்டவங்களாக:

காளிகா தாண்டவம் - படைத்தலையும்<br>
கௌரி தாண்டவம் - காத்தலையும்<br>
சங்கார தாண்டவம் - அழித்தலையும்<br>
ஊர்த்துவ தாண்டவம் - அருளலையும்

உணர்த்துவதாக தத்துவ விளக்கம் கூறப்படுகிறது. இவற்றுக்கு அப்பால் சிவனது ஐந்தொழில் தத்துவத்தின் விளக்கமாக அமைவதே சிவனின் ஆனந்தத் தாண்டவமாகும். இதனால் ஆனந்தத் தாண்டவத்தை பஞ்ச கிருத்திய நடனம் எனவும் கூறுவர்.

திருநாவுக்கரசர் நடராசரின் தோற்றப் பொலிவு பற்றிப்பாடிய பாசுரம் நடராச வடிவத்தின் பிரதிமா லட்சண கலாதத்துவக் கோட்பாட்டினை எடுத்தக்காட்டுவதாக அமைகிறது.

குனித்த புருவமும் கொவ்வைச்<br>
  செவ்வாயில் குமிண் சிரிப்பும்<br>
பனித்த சடையும் பவளம் போல்<br>
  மேனியில் பால் வெண்ணீறும்<br>
இனித்த முடைய எடுத்த பொற்பாதம்<br>
  காணப் பெற்றால்<br>
மனித்தப் பிறவியும் வேண்டுவதே<br>
  இந்த மாநிலத்தே

எனும் பாடல் நடராச வடிவத்தின் வருணனையாக அமைவதனைக் காணலாம்.

## நடராஜரின் பிரதிமாலட்சணம்

ஆகமங்கள், சிற்ப சாத்திரங்கள், புராணங்கள் முதலான நூல்களில் நடராஜரின் பிரதிமாலட்சணம் தொடர்பான விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல்களில் நடராஜ வடிவத்தின் பங்க அமைதிகள், அளவைப் பிரமாணங்கள், அங்கலட்சணங்கள், ஆடைஅணிகலன்கள், ஆயுதங்கள் அவை உணர்த்தும் தத்துவார்த்த உண்மைகள் முதலான விடங்கள் கூறப்பட்டுள்ளன. சமபங்கம், அபங்கம், அதிபங்கம் எனும் மூவகைப் பங்க அமைதிகளுள் பல வளைவுகளையுடைய அதிபங்க (திரிபங்கம்) அமைதியில் நடராஜ வடிவத்தை அமைக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

இறை வழிபாட்டிற்குரிய விக்கிரகங்களை அமைப்பதற்குரிய அளவுப்பிரமாணங்கள் பற்றி சிற்ப சாத்திரங்கள் கூறுகின்றன. அவை அங்குலப் பிரமாணங்களாகக கூறப்படுகின்றன. அந்தவகையில் நடராஜ வடிவம் உத்தம தசதால பிரமாணத்திற்கமையவும், முயலகன் சதுர்தாலப் பிரமாணத்திற்கமையவும் அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வளவுப் பிரமாணங்களுக்கமைய கல்லில் வரையப்படும் கோடுகள் சூத்திரங்கள் எனப்படுகின்றன.

நடராஜ வடிவம் ஏனைய சிவ மூர்த்தங்களைப் போலன்றி நர்த்தன நிலைக்குரிய அங்க லட்சணங்களை கொண்டதாக அமையும். நடராஜரின் திருமுடி சடாபாரமாக அமைந்து இருபுறமும் திருவாசியுடன் இணைந்தவாறு அமைந்திருக்கும். திருமுகம் புன்முறுவலுடன் காட்சியளிக்கும். நான்கு கரங்களுள் இடது மேற்கரம் அக்கினியை ஏந்தியவாறு இருக்க, இடது கீழ்க்கரம் அபய கரமாகக் காணப்படும். வலது மேற்கரத்தில் உடுக்கையும் இடம்பெறும். வலது கால் பீடத்தின் மீது முயலகன் மீது ஊன்றியவாறு இருக்க, இடது கால் வலப்புறம் நோக்கி உயர்த்தியபடி குஞ்சித பாதமாகக் காட்சியளிக்க வேண்டும். நடராஜரின் திருவடியின் கீழ் இடம்பெறும் முயலகன் இரு கரங்கள் பாம்பு மாலையுடன் அமைய வேண்டும். நடராஜரைச் சூழ தீச்சுடருடன் கூடிய திருவாசி அமையுமென்று விதிக்கப்பட்டுள்ளது.

நடராஜ வடிவத்தில் காணப்படும் ஆடைகள், அணிகலன்கள் தொடர்பான விடயங்களும் சாத்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன. தலையில் பிறைச்சந்திரன், பெண் உருவில் கங்கை முதலானவும், கழுத்தில் பாம்பு மாலை, முத்து மாலை, எருக்கம்பூ மாலை முதலானவும், காதுகளில் குண்டலங்களும், மார்பில் பூணூலும் ஆபரணமாக அமையும். புலித்தோலை ஆடையாகக் கொண்ட நடராஜரின் கால்களை வீரக்கழல்கள் அலங்கரிக்கும்.

## நடராஜ வடிவம் உணர்த்தும் தத்துவங்கள்

சிவ வடிவங்களுள் ஒன்றாகிய நடராஜ வடிவம் சைவ சித்தாந்த, அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் பதி, பசு, பாசம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பல சிந்தனைகளை தன்னகத்தே கொண்ட வடிவமாக அது விளங்குகிறது. மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகிய உண்மை விளக்கம்

‘தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு’

எனும் பாடலில் நடராஜ வடிவம் பதியுடன் தொடர்புடைய ஐந்தொழில் தத்துவத்தின் குறியீடாக அமையும் விதம் விளக்கப்பட்டுள்ளது. அதாவது நடராஜ வடிவத்திலுள்ள

| | | |
|---|---|---|
| உடுக்கை ஏந்திய கரம் | - | (சிருஷ்டி) படைத்தலையும் |
| அபயகரம | - | (திதி ) காத்தலையும் |
| தீ ஏந்திய கரம் | - | (சங்காரம்) அழித்தலையும் |
| ஊன்றிய திருவடி | - | (திரோபவம்) மறைத்தலையும் |
| தூக்கிய திருவடி | - | (அநுக்கிரகம்) அருளலையும் |

உணர்த்துவதாகத் தத்துவத் தொடர்பு கூறப்படுகிறது. குறிப்பாக சைவ சித்தாந்த சாத்திரங்களில் கூறப்படும் ‘தாடலைபோல் கூடியவை...’ என்பதும், ‘அயரா அன்பின் அரன்கழல் செலுமே’ எனும் பாடலும் இறைவனின் அருளல் தொழில் மூலம் ஆன்மா இறைவனின் திருவடியில் இணைதலுடன் தொடர்புபடுவதனைக் காணலாம்

சைவ சித்தாந்தத்தில் ஆன்ம விடுதலைக்குரிய சாதனமாக கூறப்படுவனவற்றுள் நம சிவாய மந்திரம் பிரதானமானது திருவருட்பயன் ஐந்தெழுத்தருள்நிலை எனும் அதிகாரத் தில் திருவைந்தெழுத்தின் பெருமையைப் பேசுகிறது. திருவருட்பயனில் 'தோற்றம் துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்............' எனும் பாடலில் நடராஜ வடிவம் சூக்கும பஞ்சாட்சர மாகிய சிவாயநம எனும் சிகராதி பஞ்சாட்சரத்தின் அடையாளமாக அமைகின்றமை கூறப்பட்டுள்ளது. அதேபோல் ஸ்தூல பஞ்சாட்சரமாகிய நமசிவாய எனும் நகராதி பஞ்சாட்சர மந்திர உபாசனையுடன் தொடர்புடையதாக அமைகின்றது. அதாவது

ந - திருவடி
ம - திருவயிறு
சி - திருத்தோள்
வா - திருமுகம்
ய - திருமுடி

என்று நடராஜ வடிவத்திற்கும் சைவ சித்தாந்தம் கூறும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு கூறப்படுவதனைக் காணலாம்.

நடராஜ வடிவத்தில் சிவன் அணிந்திருக்கும் ஆடைகள், ஆபரணங்கள், அவர் ஏந்தியுள்ள ஆயுதங்கள் முதலான அம்சங்களும் பல உண்மைகளை உணர்த்துகின்றன.
அந்தவகையில்

முயலகன் - ஆணவத்தால் கட்டுண்ட ஆன்மாவையும்
பாம்பு - ஆணவத்தையும்
புலித்தோல் - கோபத்தைக் கட்டுப்படுத்துபவன் என்பதையும்
முக்கண்கள் - இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தியையும்
வீரக்கழல் - பல வினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதையும்
பவளநிற மேனி - சிவனின் தூய்மைப்படுத்தும் தன்மையையும்
நான்கு திருக்கரம் - எல்லையில்லா ஆற்றலையும்
நெற்றிக்கண் - உயிர்களின் துன்பங்களைப் புன்முறுவலால் நீக்குவதையும்
சடாமுடி - ஞானத்தையும்
பிறை - பேரழகையும்
திருநீறு - பராசக்தியையும்
சூலம் - முச்சக்தியையும்
கோடரி - பேராற்றலையும்

உணர்த்துவதாக அத்தகைய தத்துவ விளக்கங்கள் அமைகின்றன. நடராஜரைச் சூழவுள்ள திருவாசி ஓங்காரத்தைக் குறிப்பதாகவும், அத்திருவாசியில் இடம்பெறும் சுடர்கள் நமசிவாயம் என்பதிலுள்ள எழுத்துக்களைச் சுட்டுவதாகவும் குறிப்பிடுவர். இத்திருவாசி ஆன்மா பாச ஞானத்தை விட்டு பதி ஞானத்தை அடைவதன் மூலமே முத்தியைப் பெறமுடியும் என்பதை சுட்டுவதாகவும் கூறப்படுகிறது. உண்மை விளக்கம்

'ஓங்கரமே நற்றிருவாசி உற்றஅதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம்' என்பதன் மூலம் திருவாசி திருவைந்தெழுத்தினதும், அதன் சுடர்கள் அதன் அட்சரங்களினது அடையாளமாக அமைகின்றமை கூறப்பட்டுள்ளது.

## நடராஜ வடிவம் - வராற்றுச் சான்றுகள்

தமிழகத்தின் சைவ சமய வராற்றில் நடராஜ வடிவத்திற்குப் பிரதான இடமுண்டு. சங்ககால இலக்கியங்களில் சிவன் ஆடிய கொடுகொட்டி, பாண்டுரங்கம், கபாலம் முதலான நடனங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் சங்கமருவிய கால இலக்கியங்களிலேயே சிவனின் நடனம் தொடர்பான தெளிவான சான்றுகள் கிடைக்கின்றன. காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் இந்நடனம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. காரைக்கால் அம்மையார்

'காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணும் சூழ அனல் கையேந்தி ஆடும் அரவம்
புயங்கன் எங்கள் அப்பன் இடம்
திருவாலங்காடே'

என்று அகில அண்ட சராசரங்களும் இணைய சிவன் நடனம் புரிந்தமையைப் பாடுகிறார்.

தமிழகத்தில் முதலாவது நடராஜ வடிவம் தருமராஜ ரதத்தில் சிற்பமாக இடம்பெறுகிறது. வாதபிச் சாளுக்கியர் காலத்து வாதபிக் குகைக் கோயிலில் 16 கரங்களுடன் கூடிய நடராஜ வடிவம் சிற்பமாகவுண்டு. இவை கற்சிற்பங்களாக அமைய சோழர் காலத்திலேயே உலோகங்களிலும் மண்ணிலும் நடராஜ வடிவங்கள் அமைக்கப்பட்டன. இவை வெண்கலப் (உலோகப்) படிமங்களாகவும், மட்கலப் படிமங்களாகவும் அமைந்தன. சோழ அரசர்களின் அரச சின்னமாகவும், சமய சின்னமாகவும் நடராஜ வடிவம் விளங்கியது. சோழர்கால சாசனம் ஒன்றில்

'பாதாதி கேசாந்தம் ஒரு முழமே நால்விரல்
அரை உசரத்து இரண்டு திருக்கை உடையவராக
கனமாக எழுந்தருளிவித்த பெரிய பெருமாள்...'

என்று நடராஜரின் உலோக வார்ப்புமுறையின் பிரதிமாலட்சணம் கூறப்பட்டுள்ளது. தஞ்சை, கங்கைகொண்ட சோழேஸ்வரம், சிதம்பரம் முதலான இடத்து நடராஜ வெண்கலப் படிமங்கள் குறிப்பிடத்தக்கவை. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் கால்மாறி ஆடும் நிலையிலான நடராஜர் வடிவத்தைக் காணலாம்.

நடராஜ வடிவத்தின் கலை, தத்துவ, அறிவியல் தொடர்புகள் பற்றி பல அறிஞர்களும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி பிரபஞ்ச இயக்கத்திற்கும் நடராஜ நடனத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு பற்றி அறிவியல்பூர்வமாக விளக்கியுள்ளார். நடராஜ வடிவம் உணர்த்தும் தத்துவம் கால தேச வர்த்தமானங்களைக் கடந்தது என்று அவர் கூறுகிறார். மேல்நாட்டினராகிய **கமில் அபிலவெல்** என்பவர் நடராஜ வடிவத்தின் சிறப்பை வியந்து கூறியுள்ளார். H.C.பெல் என்பவர் பொலநறுவைக்கால நடராஜ படிமங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளார். பொலநறுவையில் அருகில் சிவகாமசுந்தரி அமையும் வண்ணமான நடராஜ படிமம் கண்டுபிடிக்கப்பட்டது. திருவாசியுடனும், அவ்வாறு அமையாத வகையிலுமான நடராஜ வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆலயங்களில் நடைபெறும நடேச அபிசேகம் இறை வழிபாட்டில் பிரதானமானது. வருடத்தில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இப்பூசையில் நடராஜருக்கு விசேட கிரியைகள் இடம்பெறும் வழக்கம் உள்ளது. சிறப்பாக சிதம்பரத்தில் திருவெம்பாவையின்போது நடைபெறும் 'ஆரூத்ரா தரிசனம்' மிகவும் பக்தி பூர்வமானது.

# அனந்தசயனர் வடிவம்

இறை வழிபாட்டிற்குரிய விஷ்ணுவின் திருவடிவங்களுள் அனந்த சயன வடிவமும் ஒன்று.

இந்து புராணங்களில் திருப்பாற்கடலில் ஆதிசேடன் என்னும் பாம்பணையின் மேல் விஷ்ணு பள்ளிகொண்ட காட்சியே அனந்தசயன வடிவமாகவுள்ளது. விக்கிரகக்கலையில் சயன (படுத்த) நிலையிலமைந்த திருவுருவமாக விளங்கும் அனந்த சயன வடிவம் யோக நித்திரை வடிவம் எனவும் கூறப்படுகிறது. 'யோக நித்திரை என்பது வலது கையை ஊன்றி அதில் தலையை வைத்து வலது பக்கமாகச் சாய்ந்து கால்களை நீட்டி, கண்கள் முக்கால் பங்கு மூடியவாறு, இறைசிந்தனையில் மூழ்கி, மனதைக் கட்டுப்படுத்தி உறங்கும் நிலை' என்று கூறப்படுகிறது. இவ்வாறு செய்வோர் இறை ஐக்கியம் பெறுவர். இந்த யோக நித்திரைக் காட்சியே அனந்த சயன வடிவத்தின் பிரதிமா லட்சணமாகக் கூறப்படுகிறது. அதாவது வலது பக்கம் ஒருக்களித்து படுத்த நிலையில் கால்களை நீட்டி, வலது கையை தலைக்குக் கொடுத்து இமைகள் முக்கால் பங்கு மூடியவாறு மேற்பார்வையுடன் விளங்குவது அனந்த சயன வடிவம் என்று கூறப்படுகிறது.

யோக நித்திரை வடிவம் என்பது அறிதுயில் நிலை. இது முக்காலத்திற்கும் பொருந்தும் நிலையாகும். அறிதுயில் நிலையென்பது அறிந்த துயில், அறிகின்ற துயில், அறியும் துயில் என விரிவு பெறுகின்றது. இறைவன் முக்காலமும் உணர்ந்தவர் என்பதை இக்குறிப்பு உணர்த்துகிறது.

அனந்த சயன வடிவம் காத்தல் தொழிலுடன் தொடர்புடையது. அனந்த சயனம் என்பது பின்வருமாறு விரிவடைகின்றது. அனந்த என்பது அஷ்ட நாகங்களுள் ஒன்று. அதுவே ஆதிசேடன் எனும் பாம்பு. அதன் படம் குடையாக விளங்க அதன் கீழ் பாம்பணையில் பெருமாள் பள்ளி கொள்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்து விக்கிரகக் கலையில் படுத்திருக்கும் சயனக் கோலமாகிய அனந்த சயன வடிவம் சிறப்புப் பெறும் வடிவமாக விளங்குகின்றது. திருவரங்கத்து அரங்கநாதர் யோகசயன மூர்த்தி எனவும் அழைக்கப்படுகிறார்.

இறைவன் பள்ளி கொள்ளும் அனந்த சயனக் கோலம் என்பது எட்டு வகையாகக கூறப்படுகிறது.

| | |
|---|---|
| உத்தான சயனக் கோலம் | தருப்ப சயனக் கோலம் |
| தல சயனக் கோலம் | போல சயனக் கோலம் |
| மாணிக்க சயனக்கோலம் | வடபத்திர சயனக் கோலம் |
| வீரபத்திர சயனக் கோலம் | புஜங்க சயனக் கோலம் |

என்பனவே அவை.

அனந்தசயனம் என்பது அறிதுயில் நிலை எனத் தமிழில் உரைப்பர்.அறிந்த துயில் - அறிகின்ற துயில், அறியும் துயில் என முக்காலமும் தொக்கவரும் அதாவது இறைவன் முக்காலமும் உணர்ந்தவனாய் துயிலும் நிலை என்பர். ஆன்மாவைப் பொறுத்தவரையில் துயில் நலையில் சொர்ப்பனத்தைத்தவிர பிறிதொன்றையும் உணராது. ஆனால் பரமான்மா முக்காலமும் உணர்ந்து காத்தல் தொழிலைச் செய்கிறது என்பதனை இவ்வனந்த சயனம் உணர்த்துகிறது.

அனந்த சயன வடிவம் யோக நித்திரை வடிவமாகும். வலது கால் நீண்டு கிடக்க, இடது கால் சற்று மடக்கி வளைந்திருக்கும். கிரீடம் மகுடம் மணிமுடியாகும். இதுவே விஷ்ணுவின் அனந்த சயன வடிவத்தின் அலங்கார முடியாகின்றது. வலது கை தலையைத் தாங்க இடது கரம் கடக முத்திரையுடன் காட்சியளிக்கும்.

**பிரதிமாலட்சணங்கள்**

- சங்குபோல் வெண்மையான அனந்தசயனத்திலே யோக நித்திரையில் காணப்படுகின்றார்.
- வலது கால் நீண்டு கிடக்க, இடதுகால் சிறிது மடக்கி வளைந்திருக்கும்
- தலை சற்றுத் தூக்கியபடி இருக்க உடம்பு படுக்கை மீது நீண்டு கிடக்கின்றது.
- இருகரங்கள் காணப்படும்
- வலது கை தலையணையாகக் கிரீட மகுடத்தை தழுவியிருக்கும் கிரீட மகுடம் என்பது மணிமுடியாகும். இதனது தோற்றம் கண்டாமணி அல்லது பூசை மணியை ஒத்திருக்கும் கிரீட மகுடம் விஸ்ணு படிமத்திற்கு மிகவும் உரியதாகும்.
- இடது கை உடலோடு சமமாக அல்லது முழங்கை மடிந்து கடக முத்திரை தரித்திருக்கும்
- கைத்தலத்திலிருந்து பெருவிரலை நீட்டி உள்முகமாகச் சிறிது வளைந்து நடுவிரலையும் அணிவிரலையும் ஒன்றோடு ஒன்று இணைத்து முன்னோக்கி வளைந்து சுட்டுவிரலையும் சிறுவிரலையும் தனது இடங்களில் நிறுத்தி மேற் கணுக்களை சிறிது வளைத்துப் பிடிக்கும் கை கடக முத்திரை எனப்படும்.
- முந்தமாக திருக்கண்களைத் திறந்து நோக்குபவர்.
- கருமையும் மஞ்சளும் கலந்த வண்ணமுடையவர் குறிப்பாக நீல வண்ணத்திருமேனியுடையவரும் மஞ்சள் வஸ்திரம் உடுத்தியவருமாக விளங்குகின்றார்.
- காலடியில் மகாலட்சுமி திருவடிவக் கொப்புழிலிருந்து வெளிவந்து நீண்டுள்ள மலர்த்தாமரையில் பிரமதேவன் வீற்றிருப்பார்.
- இத் திருவுருவத்திற்கென்றே திருக்கோயில்கள் காணப்படுகின்றன. மாமல்லபுரம், காஞ்சி கொள்ளவண்ணம் செய்த பெருமாள், திருவாரூர்மலை ஆகியவை போன்ற இடங்களில் பள்ளி கொண்ட பெருமானுக்கே திருக்கோயில்கள் உள்ளன.
- செங்கற்பட்டு மாவட்டத்தில் தேவதானம் எனும் ஊரில் அமைந்துள்ள அரங்கர் வடிவம் மிகப் பெரியதாய் கூறப்படுகின்றது.
- இது 7மீ நீளமும் 3மீ உயரமும் உடையது பொன்னாலை வரதராஜப் பொருமாள் ஆலயம்,யாழ்ப்பாணம் பெருமாள் ஆலயம் என்பவற்றிலும் இவ்வடிவம் காணப்படுகின்றது.

# இசைக் கலை

## ஆலயங்களில் இசைக் கலை

- திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைகளில் இசைக்கலை முக்கியமானது. இசை இயைபுபடுத்தும் சாதனம்.
- இறைவனே இசை வடிவினன் (நாதப் பிரம்மம்) என்பது இந்துமத நம்பிக்கை
- இசை செவிக்கு இன்பம் ஊட்டுவதோடு மட்டுமல்லாது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி உள்ளத்தைப் பண்படுத்திப் பேரின்பப் பேற்றையும் தரவல்லது.
- இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலை மிக உன்னதக் கலையாக மிளிர்கின்றது.

இந்துப்பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலை மிக உயர்ந்த உன்னத கலையாக அமைகின்றது. இசை என்பது ஒரு கலைவடிவம் அதேவேளை வழிபடுபவரை இறைவன் மீது இசைவுபடுத்தும் சாதனமாகவும் விளங்குகின்றது. திருக்கோயில்கள் ஊடாகக் கட்டட அமைப்பு சிற்பபொலிவு, விக்கிரககலை நடனம், இசை முதலிய கலை வடிவங்கள் வளர்ச்சி பெற்றன. அவற்றில் இசைக்கலையே முதன்மையானது. இறைவனே இசைவடிவினனாக விளங்கினான் என்று கூறப்படும் ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் இறைவன் விளங்குகிறான் என இந்து இசைப் பாரம்பரியம் எடுத்துக் கூறுகின்றது. இறைவழிபாட்டுக்குரிய சாதனமாகவும் பக்திக்கான வழிமுறையாகவும் இசைப்பாடல்கள் விளங்குகின்றன. நாமசங்கீர்த்தனமே இறை வழிபாட்டிற்குரிய பிரதான சாதனம் என்பதையும் ஸ்ரீமத் பாகவதம் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

இந்து இசைமரபிற்கான மூலாதாரங்களை நோக்கும் போது வேத இலக்கியங்களில் சாமவேதம் இசைவேதமாக குறிப்பிடப்படுகின்றது. சாமகானம் பாடுதல் என்பது இசைக்கலையின் பிரதான அமைப்பாக கூறப்படுகின்றது. சாமவேதத்தை அடிப்படையாக கொண்டே பிற்கால இசைக்கலை வளர்ச்சி ஏற்பட்டது. புராணக் கதைகள் ஆகம இலக்கியங்கள் தெய்வீக பிரதிமா லட்சணங்களை இசைக்கலை, இசைக்கருவி என்பவற்றுடன் இணைத்து வழிபடும் நிலை காணப்பட்டது. இறைதிருவுருவங்களை இசைக் கருவிகளுடன் சித்தரிக்கும் நிலை காணப்பட்டது.

சிவபெருமான் - டமருகம்
திருநந்தி தேவர் - மத்தளம்
நாரதர் - தம்புரா
சரஸ்வதி - வீணை
கண்ணன் - சங்கு புல்லாங்குழல்

என்பவற்றோடு காணப்படுவதும் இசைக்கலை வளர்ச்சிக்கும் தெய்வீக பிரதி காணப்படுவதும் இசைக்கலை வளர்ச்சிக்கும் தெய்வீக பக்தி மாலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பைக் காட்டுகின்றது. இராமாயணத்தில் இராவணன் சாமகானம் வாசிப்பதில் வல்லவனாக சித்திரிக்கப்படுகின்றான். குப்தர் ஆட்சிக்கால நாணயங்களில் இசைக்கருவிகள் காணப்படுவதும் குப்த அரசர்கள் இசைக் கலைஞர்கள் என வருணிக்கப்படுவதும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது. சந்திர குப்தர் வீணை வாசிக்கும் காட்சியும் குப்தர் கால நாணயங்களில் வெளிப்படுகின்றது. பரத முனிவரின் பரதநாட்டிய சாத்திரத்திலும் நாட்டியக் கலையுடன் இணைந்த இசைக்கருவிகள், இசைக் கலைஞர்கள் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. இந்துப் பண்பாட்டின் உள்ளடக்கங்களில் ஒன்றாகிய கலைவடிவம் கோயிற் பண்பாட்டின் முக்கியமான அம்சமாக அமைகின்றது.

## பல்லவர் கோயிலும் இந்து இசைமரபும்

பல்லவர் ஆட்சியில் பௌத்தம் பரவிய அதே வேளை வடமொழிக் காலசார மரபும் பரவிக் காணப்பட்டது. அவ்வேளையில பரத முனிவரின் நாட்டிய சாத்திரச் செய்திகளும் தமிழகத்தில் பரவலாயின. பல்லவ அரசர்களில் ஒருவராகிய இராஜசிம்மன் வாத்ய வித்யாதரன் என அழைக்கப்பட்டான். அரசர்கள் சங்கீர்ணஜாதிதரன் என்னும் விருதுடனும் அழைக்கப்பட்டனர்.

பல்லவர் கால கோயில் சாசனமொன்றிலே திருப்பதிகம் பாடுபவர்க்கும் திருப்பள்ளித் தாமம் பதிப்பார்க்கும் நெல் தானமாக வழங்கப்பட்ட செய்தி கூறப்படுகின்றது. கல்வெட்டுச் செய்திகளில எட்டிற்கும் ஏழிற்கும் உரியதாக இசைக்கலை வலியுறுத்தப்பட்டது. எண்சுவையும் ஏழிசையும் குறிப்பிடும் கல்வெட்டாக இக்கல்வெட்டு அமைகின்றது.

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட பாணர் மரபு தொடர்ந்து பல்லவ இசைக்குழுக்களிடையே பரவி வந்துள்ளமையையும் அறிகின்றோம். நீலகண்ட யாழ்ப்பாண மரபினர்,பாணபத்திரர் ஆரை நாயனார் ஆகியோர் சிவணத்யாராகவும் அதேவேளை இசைக கலைஞர்களாகவும் விளங்குவதைக் காண முடிகின்றது.

தேவாரப் பாடல்களிலே ''சலம்பூவொடு தூப மறந்தறியேன் தமிழோடிசைப்பாடல் மறந்தறியேன்'' என்பதன் மூலம் தமிழும் இசையும் கலந்த பாடல்களை நாயன்மார்கள் பக்திபூர்வமாக பாடிச் சென்றார்கள் என அறிய முடிகின்றது. திருஞானசம்பந்தரைப் புகழும் போது நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் என்றும் புகழப்படுவதைக் கான்கிறோம். சம்பந்தர் பதிகங்கள் இசைப்பாடல் வடிவங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை ஏழிசையாயும், இசைப்பயனாகவும் வருணித்துப் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சிப் பாடலை பூபாள இசையில் பாடுவதை அவதானிக்க முடிகின்றது. மாணிக்கவாசகர் பாடல்களில் திருவாசகம் மனதை உருக்கும் இசைப்பாடலாகும். அவற்றோடு நாட்டாரிசைப் பாடலும் காணப்படுகின்றது. திருவம்மானை, திருச்சாழல் என்பவை நாட்டாரிய இசைப் பண்புடையனவாக விளங்கின.

தேவாரப் பதிகங்களை ஓதுவார்கள் பாடினார்கள் என்பதற்கும் சான்றுகள் உண்டு. ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்நெறிக்குய்ப்பது.....'' எனும் பாடலடி பல்லவர் காலப் பதிகங்கள் தோன்றிய அதே காலத்திலேயே ஓதுவார்களால் பதிகம் பாடும் மரபும் பின்பற்றப்பட்டமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தேவாரப் பதிகங்களில் பல்வகை இசைக்கருவிகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, முரசு முதலிய இசைக்கருவிகளும் முத்துப்பொற்றாளம் (சல்லரி) முதலிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டமையை அறிய முடிகின்றது. தேவாரப்பாடல்களில் பண்கள் பற்றிய கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

> ''காந்தாரம் இசை அமைத்து காரிகையார்
> பண்பாட கவினார் வீதி
> தேம், தாம் என்று அரங்கேறிசேயிழையார்
> நடமாடும் திருவையாறே''

என பண்பற்றிய பாடல்கள் தேவாரங்களில் வெளிப்படுதலைக் காண முடிகின்றது.
''மண்ணார் முழவும் குழலும் இயம்ப மடவார் நடமாடும் மணியரங்கும்........'' எனச் சுந்தரர் பாடிய பாடலிலும் பாடப்படுகின்றது.

## சோழர் காலக் கோயில்களும் இசைமரபும்

பல்லவர் காலத் தெழுந்த பதிகங்களின் தொகுப்பு சோழர் காலத்தில் ஏற்பட்டதைத் தொடர்ந்து பன்னிரு சைவத் திருமுறை வளர்ச்சி உருவாகியது. பன்னிரு சைவத்திருமுறை வளச்ச்சியை அடிப்படையாகக் கொண்டே திருமுறை இசை மரபு மேலோங்கியது, கோயில்களை அடிப்படையாகக் கொண்ட இசைமரபு சோழர் ஆட்சிக்காலத்திலேயே உன்னத நிலை பெற்றது. திருமுறைப்பாடல்களை கோயில்களிலே விண்ணப்பம் செய்ய ஓதுவார்கள் நியமிக்கப்பட்டனர். ஓதுவார்களை பிடாரர்கள் என்றும் அழைப்பர். தஞ்சைக் கோயிலில் 48 பிடாரர்களும் உடுக்கை, மத்தளம் வாசிப்பவராக ஐம்பது பேர் நியமிக்கப்பட்டனர். திருவொற்றியூர் கோயிலில் பதினாறு இசைப் பெண்கள் நியமிக்கப்பட்டதாகவும் திருவாமாத்தூர் கோயிலில் பதினாறு பார்வையற்றோர் கோயில் கிரியைகளின் போது பண்ணோடு பதிகம் பாட நியமிக்கப்பட்டனர்.

ஆலயங்களில் பல்வகை இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டன. தக்கை, தண்ணுமை தாளம், வீணை என்பவற்றுடன் உடுக்கை, மத்தளம், முழவு (குடமுழா)என்பனவும் முக்கியமானவை. வீணை வாசிக்கும் மரபும் கோயிலில் நிகழ்ந்தது. வீணைக்காணி என்னும் நிபந்தம் சோழர்காலக் கோயிலுக்குரியதாக விளங்கியது. சோழர்காலக் கோயிலுக்கு அண்மையில் காந்தர்வ தெருகாணப்பட்டது. அங்கு இசைக் கலைஞர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

வீணைக்காணி, உவச்சகாணி, திருப்பதிக்காணி என்பவை இசைக் கலைஞர்களுக்காக சோழ அரசர்கள் வழங்கிய நிபந்தங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. குலோதுங்க சோழனின் அரசியாராகிய கோப்பெரும்தேவி ஏழிசை வல்லவி என அழைக்கப்பட்டார். கீதம், வாத்தியம், நிருத்தியம் ஆகிய மூன்றுக்கும் உரிய வளர்ச்சிக் காலமாக சோழர்காலம் விளங்கியது. சோழர் காலத்தில் எழுந்த இசைப் பதிகமாகிய திருவிசைப்பா பாடலிலே “இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொரு தோத்திரம் இயம்பினர் ஒருபால்” என்பது சோழர் கலை கோயிலில் கீதமும் வாத்தியமும் முதன்மை பெற்றமை எடுத்துக்காட்டப்பட்டள்ளது.

தேவாரப் பண்ணிசை கோயிலில் வளர்ச்சி பெற்றமை மற்றொரு வளர்ச்சி அம்சமாகும். ஓதுவார் மரபு திருக்கோயிலின் தேவாசிரிய மண்டபத்துடன் இணைந்து காணப்பட்டது. தேவார சுற்றுக்கல்லூரிகள் தனியாக அமைக்கப்பட்டன. திருப்பதியகாணி, திருக்கைகேட்டிப்புறம் என்னும் நிபந்தங்கள் கோயிலுக்குரியதாக அமைந்தன. தேவாரநாயகம் என்னும் ஓதுவார் முதன்மை பெற்றார். இவ்வாறு பல்வகை இசைமுறைமைகள் திருக்கோயிலுடன் இணைந்து வளர்ச்சி பெற்றிருப்பதை காண்கிறோம்.

## சோழராட்சிக்குப் பிந்திய இசைக் கலை

சோழராட்சியைத் தொடர்ந்து நாயக்கர் காலத்திலே இசைத் தமிழுடன் இணைந்ததாக நாடகத் தமிழும் வளர்ச்சி பெற்றது. பண்ணிசையின் தொடர்ச்சியான வளர்ச்சியை அவதானிக்கலாம். அருணகிரிநாதரின் சந்தக்கவிதை தாள அமைதியுடைய பாடல்கள் விளங்கின. திருப்புகழ் ஏழுதாள அடைவுகளைக் கொண்ட இசைப்படாடலாக அமைகின்றன. திருப்புகழ் பாடல் அமைப்பும் பல்வகை பணி அமைப்பைக் கொண்டதாக அமைகின்றது. தமிழிசைக் கீர்த்தனைகளில் எழுச்சி ஏற்பட்டது. கீர்த்தனைப் பாடலகள் இறை கீர்த்தியைப் பாடிப் பரவுவன. இத்தகைய பாடல்கள் பக்திக் கீர்த்தனைகள் எனக் குறிப்பிடப்பட்டன.

பக்திப்பாடல்கள் பன்னிரு பாடல்களாகவும் குறவஞ்சிப் பாடல்களாகவும் நாடக கீர்த்தனைகளாகவும் விளங்குகின்றன. முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோர் கீர்த்தனை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தனர் தமிழிசை இயக்கமும் உதவியது. கீர்த்தனை என்பது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் வடிவில் பாடுதலை அடிப்படையாகக் கொண்டது..

கீர்த்தனைப் பாடல்கள் கர்நாடக சங்கீதத்திற்கு முன்னோடியானவை. இராக தாள அமைப்புடையதாக கீர்த்தனைப் பாடல்கள் அமைகின்றன. இராக, தாள பாவ லயம் சேர இசை நாட்டியப் பாடல்கள் எழுச்சி பெற்றன. கர்நாடக இசை வளர்ச்சிக்கு பண்ணிசை பங்களிப்பு செய்தது அதனைத் தொடர்ந்து கீதம், கீர்த்தனை என்னும் வடிவில் இசைப்பாடல்களில் வளர்ச்சி ஏற்பட்டது. கர்நாடக இசை வளர்ச்சியில் புதிய இராகக் கண்டுபிடிப்பு, பதிய பண்ணிசை வளர்ச்சி, கீர்த்தனைப் பாடல் வளர்ச்சி தெலுங்குக் கீர்த்தனைக் கலப்பு என்பன முக்கியமானவை. புரந்தரதாசர் தெலுங்கு கீர்த்தனைக்கு முன்னோடியாக அமைந்தார்.

தமிழிசைக் கீர்த்தனை வளர்ச்சியில் முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்துப்பிள்ளை, பாவநாசம்சிவன் ஆகியோர் பங்களிப்புச் செய்தனர். தலபுராணங்கள் தலக் கீர்த்தனைகள் இவர்கள் பாடினார்கள். இவர்களுடன் தியாகராசர், முத்துசுவாமிதீட்சிதர், சியாம சாஸ்திரிகளும் சங்கீத மும்மூர்த்திகளாகப் பணி செய்தார்கள். தமிழிசையே கர்நாடக இசைவடிவமாக வளர்ச்சியடைந்தது. பள்ளு, கீர்த்தனை, குறவஞ்சிப் பாடல்களும் கோயில்களை அடிப்படையாகக் கொண்டவை. திருவாரூர் கோயிலில் ஆடப்பட்ட இசை நாடகமாகவே திருவாரூர்ப் பள்ளு விளங்குகின்றது.